
www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# விமர்சனங்கள்

சி. சிவசேகரம்



படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

படிப்பகம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# விமர்சனங்கள்

சி. சிவசேகரம்

தேசிய கலை இலக்கியப் பேரவை

சவுத் ஏசியன் புக்ஸ்

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Vimarsanangal
S. Sivasegaram
First Published : September 1995
Printed at : Surya Achagam, Madras-41.
Published in Association with
National Art & Literary Associati
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane
Madras - 600 002.
Rs. 45.00

Published and Distributed in Sri Lanka by
Tamil Publication and Distribution Network
44, 3rd Floor, C.C.S.M. Complex Colombo-11
Tp. 335844 Fax. 94 - 1 - 333279

விமர்சனங்கள்
சி. சிவசேகரம்
முதற்பதிப்பு : செப்டம்பர் 1995
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை.
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2ஆவது சந்து,
சென்னை - 600 002.
ரூ. 45.00

## பதிப்புரை

சிவசேகரத்தின் இந்நூல் தமிழுக்கு புதிய வரவு மட்டுமல்ல ஆரோக்கியமான இலக்கிய விமர்சனத்திற்கு ஒரு முன்னுதாரணமாகவும் அமைந்துள்ளது.

'மௌனம்' பேசாமல் இருப்பது மட்டுமல்ல பேசும்பொழுதும் உண்மைகளை வசதியாக பேசாமல் விடுவதும் ஆகும். 'மௌனம்' பலர் கையில் மிக வசதியான கருவியாகவே உள்ளது. விவாதத்துக்கான களம் மிகவும் சுருக்கப்பட்டு தகவல் பரிவர்தனையே இன்று பாதிப்புக் குள்ளாகியிருக்கிறது. தமிழில் பல உயர் தளங்களை எட்டுவதற்கு 'சவுத் ஏசியன் புக்ஸ்' மற்றும் தேசிய கலை இலக்கிய பேரவையும் எடுத்து வரும் பல முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் நண்பர்களுக்கு நன்றி கூறுவதுடன் தங்கள் கருத்துக்களை எழுத மறக்கவேண்டாம் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறோம்

15. 9. 95

தேசிய கலை இலக்கிய பேரவை

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# உள்ளே


முன்னுரை : தேவதைகள் கால் பதிக்க அஞ்சும் இடம் 9
ஒரு பழம் புதுக் கவிஞர் 21
மரணத்துள் வாழ்வோம் 29
இலுப்பந் தோப்புக் காவற்காரருக்கு 41
மரணத்துள் வாழ்வோம் சேரனின் பதில் 46
முருகையனின் ''அது அவர்கள்'' 49
கல்வயல் குமாரசாமியின் மரண நனவுகள் 54
எலும்புக் கூடுகளின் ஊர்வலம்
கவிதைத் தொகுதி ஒரு விமர்சனம் 59
சிவரமணியின் கவிதைகள் : விமர்சனத்தின் தற்கொலை 65
மறையாத மறு பாதி : புகலிடப் பெண்கள் கவிதைகள் 71
அரவிந்தனின் முகம் கொள்ளல் 81
சுந்தர ராமசாமி : சில சந்தேகங்கள் 89
காகம் கலைத்த கனவு 94
ஒரு தொடர்கதை நாவலாகிறபோது 101
தமிழில் உலாவரும் உன்னதமான சிறுகதைத் தொகுதி 105
நீண்ட இடைவெளிக்குப் பின் எஸ்பொவின் கதைகள் 113
காசி ஆனந்தன் கதை எழுதுகிறார் 117
இருத்தலியல் வாதம் என்கிற
எக்சிஸ்டென்ஷியலிசம் தொடர்பாக 121
'எக்சிஸ்டென்ஷியலிசமும்' சிவசேகரத்தின்
மார்க்ஸியமும் 138
மனோஹர மாக்ஸிஸ்டென்ஷலிஸம் 153
பாரதியின் மொழிச் சிந்தனைகள் பற்றி 160
அல்தூஸர் — ஒரு அறிமுகம் 165
அமைப்பியல்வாதமும் தமிழ் இலக்கியமும் 169
யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் 181
பெண்ணியப் பார்வைகள் மூன்று தொடர்பாக 183
செல்வி திருச்சந்திரனுடைய பதில் 192
செல்வி திருச்சந்திரனுக்கு சி. சிவசேகரத்தின் பதில் 195
தீபங்கள் எரிகின்றன... 199
முறிந்த பனை 202


படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

முன்னுரை

# தேவதைகள் கால் பதிக்க அஞ்சும் இடம்

விமர்சனம் அல்லது திறனாய்வு பற்றித் தமிழில் கடந்த இருபது முப்பது வருட காலமாக நிறைய எழுதவும் பேசவும் பட்டுள்ளது. விமர்சனம் என்பது கலையா விஞ்ஞானமா என்று மிகவும் விவாதிக்கப் பட்டு வருகிறது. விஞ்ஞானம் என்பது வாய்ப்பாட்டு மட்டைகளும் யாந்திரிகமான விதிகளும் சூத்திரங்களுமே என்று யாரும் கருதினால், விமர்சனம் கலையாக இருப்பது நல்லது. முற்றிலும் உணர்வு சார்ந்து எந்தவிதமான பகுப்பாய்வுக்கும் இடமளியாததாக இருப்பதே கலை என்றால், விமர்சனம் விஞ்ஞானமாக இருப்பது நல்லது. முற்றாகவே அகச்சார்பற்ற எழுத்து என்று எதுவும் இல்லை. மனித இருப்பே மனிதச் சிந்தனையையும் நடைமுறையையும் நிர்ணயிக்கிற வரையில் மனித அறிவு மனித நடைமுறைக்கும் அப்பாற்சென்று பூரண உண்மை என்ற ஒன்றைக் கண்டறிவது அசாத்தியமானது. அந்த உண்மை மனித விருப்பு வெறுப்பால் ஆளப்படாதது. அது பற்றிய மனித அறிவு மனிதரது சிந்தனையின் குறைநிறைகட்கு உட்பட்டே இருக்கும். விஞ்ஞானத்தின் விருத்தி இது வரை மனிதரது அகச்சார்பான சிந்தனைகளினின்று முற்றிலும் சுயாதீனமானதாக இருக்கவில்லை. ஆயினும் புறநிலை யதார்த்தமான விஷயங்களுக்கு விஞ்ஞானம் முக்கியத்துவம் வழங்க முனைகிறது. இதனாலே தான் எந்த ஒரு விஞ்ஞானக் கொள்கையின் வீழ்ச்சியும் விஞ்ஞானத்தின் வீழ்ச்சியாகி விடுவதில்லை. கலைகள் முற்றிலும் உணர்வு சார்ந்தவை என்ற கருத்து அறிவியல் நிராகரிப்பின் அடிப்படையில் எழுகிறது. படைப்பு முறைகள் அழகியற் கோட்பாடுகள் போன்றவற்றில் ஒரு விஞ்ஞானப் பாங்கு உண்டு. கலைகளின் அழகியல், ரசனை போன்ற வற்றைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது அதானவிலேயே அவற்றின் கலைத் தன்மையை நிராகரிக்கும் காரியமல்ல. தனிமனித அளவிலும் சமுதாய அளவிலும் மனிதரது இருப்பும் உணர்வும் உறவுகளும் காலத்திற்கும் இடத்திற்கும் சூழலுக்கும் சார்பாகக் கணிப்பில் எடுக்கப்படாமல் எந்தவொரு கலைப் படைப்பையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்த இயலாது. இந்த வகையிற், கலை – விஞ்ஞானம் என்ற முரண்பாடு பகைமையானதுமல்ல, கலையும் விஞ்ஞானமும் எது



படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



விதமான பொதுமையும் அற்றவையுமல்ல. தமிழ் விமர்சகர்கள் மத்தியில் முற்குறிப்பிட்ட விவாதங்கள் நடைபெறுவது ஆரோக்கிய மானது தான். ஆனாலும், விமர்சன நெறிமுறைகள் பற்றிய அக்கறைகள் ஒரு யோக்கியமான விமர்சன மரபுக்கு வழிகாட்டாத வரை, அவை பயனற்றே போகின்றன.

என்னுடைய விமர்சனங்களிற் தவறுகள் இருக்கும் விமர்சன அளவுகோல்களில் வேறுபாடுகள் இருக்கும் – ஏனெனில் நான் இந்த விமர்சனங்களை எழுதிய தேவைகளும் சூழ்நிலைகளும் வேறுபடு கின்றன. ஆயினும் நான் உண்மையாகவே உணராத விதமாக விமர்சனங்களில் எதையுமே எழுதுவதில்லை. என்னை விமர்சனத் துறைக்குள் இழுத்து வந்தது, நமது விமர்சகர்கள், தமக்குச் சரி என்று தோன்றுவதைச் சொல்வதிற் காட்டிய தயக்கமே தான். சமூகவியல், அழகியல், மொழி போன்று பல துறைகளிலும் ஒருவரது புலமையும் வேறுபட்ட ஆய்வுமுறைகளிலும் அணுகுமுறைகளிலும் அவரது ஆர்வமும் சராசரியான புத்தியுள்ள ஒருவருக்கு அப்பட்டமாகவே தெரியக்கூடிய உண்மைகளை முன்னவர் காண முடியாதவாறு மறைக்குமேயானால், இத் துறைகளுடன் அவரது பரிச்சயத்தின் மூலம் அவர் சாதிப்பது என்ன? பல நிபுணர்களைப் பொறுத்தவரை, அவர்களது நிபுணத்துவம் திறனாய்வுக் கருவியாகப் பயன்படுவதை விடத் தற்காப்பு ஆயுதமாகவே பயன்படுவது போலவே எனக்குத் தெரிகிறது. நிபுணத்துவம் காணத் தவறுகிற விஷயங்கள் சாதாரண வாசகர்கட்குத் தெரியக்கூடும். நிதானமான பட்டறிவுக்கு முரணாக நிற்கிற நிபுணத்துவத்தில் ஏதாவது கோளாறு இருக்கலாம். அது பற்றி இங்கே நான் கவலைப்படவில்லை. என்னுடைய விமர்சனங் களில் என்னுடைய சமூக நோக்குடன் எழுதுபவருடைய நோக்கிற்கு உடன்பாடின்மை இருக்கிறதா என்பதைவிட எழுதுபவரது பிரகடனப் படுத்தப்பட்ட நோக்கிற்கும் அவரது எழுத்துக்கும் முரண்பாடு இருக்கிறதா என்பதையே அதிகம் கவனிக்கிறேன். இது சிலருக்கு எரிச்சலூட்டும் விஷயமாக இருக்கலாம். என்னுடைய எழுத்தில் அடிக்கடி தலை நீட்டும் அங்கதப் பண்பையோ ஏளனங்கலந்த நகைச்சுவையையோ எந்த நூலாசிரியரும் அவரது பரம ரசிகர்களும் விரும்ப அவசியமில்லை. சமீபகால விமர்சனங்களில் நான் முன் போல கடுமையாக எழுவதில்லை என்று நினைக்கிறேன். எனினும் மிகுந்த விளம்பரத்துடன் வரும் சராசரியான எழுத்து என்னை மிகுந்த எரிச்சலூட்டுவது உண்மை. இந்த இடங்களிற் கிண்டலைவிட வலிய ஆயுதம் அகப்படாததாலோ என்னவோ, அதைப் பிரயோகித்து விடுகிறேன். கிண்டலுக்கு ஆளாவது எழுதப்பட்ட விஷயமே யொழிய எழுதிய நபரல்ல என்பது இங்கு முக்கியமானது.



உருவமா உள்ளடக்கமா என்று கொஞ்சப்பேர் ஒரு காலம் மண்டையை உடைத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் இன்னமும் உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். உருவத்துக்கும் உள்ளடக் கத்துக்கு மிடையே உள்ள உறவு ஏதோ பகைமையானது என்றும் ஒன்றை வலியுறுத்துவது மற்றதை மறுப்பது ஆகிவிடும் என்றும் யாராவது நினைத்தால் அதற்கு யாரும் என்ன செய்ய முடியும்? கலை – இலக்கியங்களின் சமுதாயத்தன்மையை நாம் ஏற்றுக் கொள்ளுமளவில் உள்ளடக்கம் அடிப்படையான விஷயமாகிறது. வெறும் உள்ளடக்கம் மட்டுமே கலைத்தன்மைக்கு ஈடு செய்து விடாது என்பதை எந்த மாக்ஸியவாதியும் மறுக்க இடமில்லை. மறுபுறம், உள்ளடக்கத்திற்கும் அப்பாலான ஒரு கலைத் தன்மையை வலியுறுத்துகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களது சமுதாய நோக்குடன் எனது முரண்பாடு மிக அடிப்படையானது. அவர்கள் கலை இலக்கியங்களுக்கும் மனித வாழ்வுக்குமான உறவை இரண்டாம்பட்சமான ஒன்றாகக் கருதுகிறார்கள்.

என்னளவில் விமர்சனத்தின் பணிகளில் ஒரு படைப்பின் தன்மையை அடையாளங் காண்பது முக்கியமானது. ஒரு படைப் பாளி தன் படைப்பின் மூலம் கூற முனைவது என்ன, அதை அவர் எவ்வளவு செய்நேர்த்தியுடன் கூறுகிறார் என்பவற்றை அடையாளங் காண்பதற்காக தேவை மிகவும் இருக்கிறது. இவற்றைப் புறக் கணித்து ஒரு படைப்பைக் கூறு போடுவதன் மூலம் நாம் அடிப்படை யான விஷயத்தைத் தவற விட நேருகிறது. கலை இலக்கியங்களின் மிகைபடக் கூறுதல் கலையம்சத்துடன் சேர்ந்த ஒன்றாக இருந்து வந்துள்ளது. இது யதார்த்தவாதத்தின் நிராகரிப்பல்ல. அதே வேளை பம்மாத்தும் வார்த்தை ஜாலங்கள் மூலம் மழுப்புவதும் தேர்ந்த வாசகனுக்கு அருவருப்பூட்டும். வலிந்து திணிக்கப்படும் கருத்துக்கள் சமுதாயப் பார்வையையும் அரசியல் முனைப்பையும் கொண்ட படைப்புக்களில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதே வேளை, சமுதாய உணர்வையும் அரசியலையும் நிராகரிப்ப தால் மட்டுமே ஒரு படைப்பில் வலிந்து, திணிக்கப்படும் கருத்துக்கள் இல்லாமற் போய் விடுவதுமில்லை. ‘கலை கலைக்காக’ என்ற கோஷம் எத்தனையோ மாறு வேஷங்களில் வந்து போய் இன்னமும் தொடர்ந்து வருகிறது. யதார்த்த வாதம் என்று ஒரு பிரதிமையை உருவாக்கி அதற்குக் கல்லெறியும் நோக்கில் சமூகப் பிரக்ஞையுள்ள எழுத்தையும் விமர்சனத்தையும் தாக்குகிற போக்கும் இன்னும் தொடர்கிறது. எனவே இத்தகைய கலை இலக்கியப் பார்வையும் விமர்சிக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது.

இக்கட்டுரைத் தொகுதியில் நான் இதுவரை எழுதிய நூல் விமர்சனங்களிற் பெரும்பாலானவை உள்ளன. அவற்றைத் தொடு

படிப்பகம்

முன் பின் வரும் குறிப்புக்கள் நமது விமர்சனத் துறையின் சூழ்நிலையைச் சுட்டிக் காட்ட உதவக் கூடும்.

கே. டானியலின் பஞ்சமர் 1974 மட்டில் வெளிவந்த போது பேராதனையில் நடந்த விமர்சனக் கூட்டமொன்றில் டானியல் இந்த தகவல் மாக்ஸிய லெனினிசக் கண்ணோட்டத்தில் அமைந்தது என்று கூறிய போது, டானியலின் அணுகுமுறையில் சாதி முரண்பாட்டை அவர் வலியுறுத்தியுள்ளவிதம் மாக்ஸியத்துக்கு உடன்பாடற்றது என்று அவர் முன்னிலையிலேயே சொன்னேன். அவர் அதற்குப் பதிலேதுங் கூற வில்லை. அதே கூட்டத்திற் பேசிய கா. சிவத்தம்பி, அ. சிவராஜா கா. இந்திரபாலா ஆகியோரில் எவருமே இந்தப் பிரச்சனையிற் கருத்தேதுங் கூறாமல் ஒதுங்கி விட்டார்கள். டானியல் பின்னர் எழுதிய 'கோவிந்தன்' நாவல் என்று நினைவு - 1982இல் 'செம்பதாகை'யில் புனை பேரில் கிண்டலான தொனியில் விமர்சனம் ஒன்றை எழுதினேன். டானியல் சாதி முரண்பாட்டை வலியுறுத்தும் முனைப்பிற் கதையுட் புகுத்திய சில பாத்திரங்களும் சம்பவங்களும் செயற்கையாக இருந்தமை பற்றியே கிண்டல் செய்திருந்தேன். அதை எழுதியது யாரென டானியல் தீவிரமாக விசாரித்து அறிந்தாரென்று கேள்விப்பட்ட இரண்டு மூன்றுவாரங்களில், என்னைப்பற்றிய அரை குறையான தகவல்களைத் தவறாக விளங்கிக் கொண்டு மிகவும் கடுமையான தனிப்பட்ட தாக்குதலொன்று, அவரது நண்பர் ஒருவர் நடத்திய பத்திரிகையில், என் பேர் குறிப்பிடாமல், வெளிவந்தது. எனது விமர்சனத்தின் பிரதி கைவசமில்லாமையால் அதை இத் தொகுப்பில் உள்ளடக்கும் வாய்ப்பு இல்லாது போகலாம்.

மேற்கூறிய விமர்சனத்துடன் ஒப்பிடத் தக்க இன்னுமொரு சம்பவம், க. இந்திரகுமார் எழுதிய மண்ணிலிருந்து விண்ணுக்கு என்ற விண்வெளிப் பயணம் பற்றிய நூல் தொடர்பானது. நூலாசிரியர், நூலின் பிரதியொன்றை என் நண்பரும் அப்போது பேராதனைப் பல்கலைக்கழக எந்தெரியல் விரிவுரையாளராக இருந்த வருமான ராஜேந்திரனிடம் கொடுத்திருந்தார். ராஜேந்திரன் அதை விமர்சித்து எழுத அவகாசமில்லாததால் என்னிடம் தந்நார் அந்த நூல் முற்றிலும் சோவியத் தூதரகத்தினின்று பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. சோவியத் – அமெரிக்க விண்வெளிப் போட்டியில் சோவியத் தரப்பின் மேம்பாட்டை வலியுறுத்தும் நோக்கிலேயே அமைந்த அந்த நூலில் இயல்பாகவே இருந்த ஒரு பக்கச் சார்பையும் விஞ்ஞானத் தகவல்களைத் தர முனையும் நூலுக்கு இசையாத எழுத்து நடையையும் விமர்சித்து எழுதினேன். இவை ஒரு நல்ல நூலுக்குத் தீமை செய்கின்றன என்பதே



என் நிலைப்பாடாக இருந்தது. இது ஆங்கிலத் தினசரியான 'டெய்லி நியூஸ்' ஏட்டில் 1975 மட்டில் வந்ததாக நினைவு. உடனேயே புவியியல் பேராசிரியர் குலரத்தினம் தொடர்பு கொள்ளப் பட்டார் என் விமர்சனத்தின் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை மறுக்கும் விதமாக அமைந்த அவரது விமர்சனம் இரண்டு மூன்று வாரங்கள் பின்னர் அதே நாளேட்டிற் பிரசுரமானது. விமர்சகனிடமிருந்து நூலாசிரியரால் எதிர்பார்க்கப்படுவது என்னவென்று பேராசிரியர் குலரத்தினம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். வேறு தமிழ் நூல்கள் பற்றி அவரது விமர்சனம் எதையும் நான் வாசித்ததில்லை.

மேற் கூறியதை அச்சொட்டாகப் பின்பற்றிய இன்னொரு அனுபவம் லண்டனிற் கிட்டியது. மூன்று வருடங்கட்கு முன்னர், ஒரு நாட்டிய நாடக நிகழ்ச்சி லண்டனில் நிகழ்ந்தது. லண்டன் உள்ளூராட்சி நிறுவனமொன்றன் உதவியுடன், லண்டனில் உள்ள ஒரு பரத நாட்டிய பயிற்சி கூடத்தினரின் மாணவ மாணவியர் பங்கு பற்றியது. அதன் பேர் குறவஞ்சி ஒரு குறவஞ்சிப் பாட்டோ மெட்டோ கூட இல்லாமல் நடந்தேறிய அந்த நிகழ்ச்சி பற்றிய எனது விமர்சனம் நிகழ்ச்சியளவு கடுமையாக இருக்கவில்லை இளம் மாணவ மாணவியரை ஊக்குவிக்கும் விதமாகவும் சிறிது எழுதியிருந்தேன். இது லண்டன் ஆங்கில மாசிகையான தமிழ் டைம்ஸில் வந்தது. விடுவார்களா? அடுத்து வந்த தமிழ் டைம்ஸில் என் விமர்சன கருத்துக்களை எல்லாம் மறுக்கும் விதமாக விமல் சொக்கநாதன் என்பவர் எழுதியதைக் காசு கொடுத்துப் பிரசுரித்திருந்தார்கள். இந்த 'விமர்சகர்' லண்டனில் நடக்கும் இசை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளராக மேடையிற் தோன்றுபவர் என்பதைக் குறிப்பிடுவது முக்கியம். இவர் ஒரு பகுதி நேர வானொலி அறிவிப்பாளர் எனவும் அறிகிறேன்.

என்னிடம் புத்தகங்களுக்கு முன்னுரை கேட்டோர் சிலரே. அவர்களில் ஒருசிலருக்கு மறுத்திருக்கின்றேன். முதல் முதலாக எழுதிய முன்னுரை, 1970களின் முற்பகுதியில் பெனடிக்ற் பாலனுடைய குட்டிக் கதைத் தொகுதிக்குரியது. அவர் கேட்ட விதமாக, விமர்சனம் பாங்காக, ஓரளவு கடுமையாகவே குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி எழுதினேன். ஒரு வார்த்தையைக் கூட நீக்காமலும் மாற்றாமலும் பிரசுரித்த பெனடிக்ற் பாலனுடைய நேர்மையும் விமர்சனத்தை ஏற்கும் மன வலிமையும் போற்றத்தக்கன. இது போலவே ந. இரவீந்திரனின் பாரதி மெய்ஞ்ஞானம் நூலுக்கும் வாசீசனின் சிறுகதைத் தொகுதியான 'ஏன்' என்ற நூலுக்கும் எழுதிய விமர்சனப்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



பாங்கான முன்னுரைகள் மனமுவந்து ஏற்றுக் கொள்ளப்பட்டன, இப்படியான மனப்பக்குவம் எல்லாருக்கும் அமைவதில்லை.

இவற்றுடன் இன்னொரு விமர்சனத் தொடர்பான விவாதம் பற்றியும் குறிப்பிடுவது அவசியம். தமிழ் நாடகத்துறையில் பாலேந்திராவின் பங்களிப்பு எழுச்சி பெறத் தொடங்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு நாடகங்கள் தொடர்பான விவாதமும் எழுந்தது. மொழி பெயர்ப்புக்கள் தொடர்பாக மன வெறுப்புத் தெரிவித்தோரில் அப்போது பேராதனையிற் தமிழ்ப் பேராசிரியராக இருந்த வித்தியானந்தன் உள்ளடங்குவார். கைலாசபதியும் இந்த விஷயத்திற் தவறாகவே நடந்திருக்கிறார். பாலேந்திராவின் நாடகங்கள் பற்றிய தாக்குதல்கள் மு போ. எ. ச. தொடர்புடைய வட்டாரங்களில் இருந்தே எழுந்ததாக நினைக்கிறேன். 1980க்குச் சற்று முன்பின்னாகச் சூடு பிடிக்கத் தொடங்கிய ஒரு விவாதம் தமிழ்த் தினசரிகளின் வார மலர்களில் நடந்ததாக நினைவு இது நா. சுந்தரலிங்கம் பாலேந்திராவின் நாடகங்களைத் தாக்கி எழுதிய தன் தொடர்ச்சியான விவாதம் என ஊகிக்கிறேன். விவரங்கள் நிச்சயமில்லை எவ்வாறோ விவாதம் ஆங்கில அரசியல்—சமூகவியல் மாசிகையான லங்கா காடியனுக்குள் வழிந்து விழுந்துவிட்டது. சமுத்திரன் என்பவரது ஒரு கட்டுரையில், நவீன தமிழ் நாடகத்திற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தொடர்பான சிலரது பங்களிப்பே முக்கியமானது எனவும் பாலேந்திராவின் பங்களிப்புக் குறைபாடானது எனவும் கூறப்பட்டிருந்தது. இதற்கு நான் ஒரு மறுப்பு எழுதியதாக நினைவு. நிச்சயமில்லை. எனினும் விவாதத்தை அதற்குரிய களமான தமிழ் ஏடுகட்டு மீட்டும் திருப்பும் நோக்கில் 'நீ சொன்னால் காவியம்' என்ற தலைப்பில் 'அலை' சஞ்சிகைக்கு எழுதினேன்.

என் எழுத்திற் கிண்டல் மிகுதியாகவே இருந்தது. அதற்கான காரணம் பாலேந்திராவின் நாடகங்கள் மீதான தாக்குதல்களின் நியாயமின்மையும் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் மட்டுமே நல்ல நாடகங்கள் விருத்திபெற்றதாகக் காட்டும் வரலாற்றுத் திரிப்பும் பற்றிய எனது கோப உணர்வு என்றுதான் நினைக்கிறேன். இதை விட, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்கிற அமைப்பில் 1960களின் நடுப்பகுதி முதலாக ஆதிக்கம் செலுத்திய ஒரு தவறான அரசியற் போக்குப் பற்றியும் கொஞ்சம் குறிப்பிட வேண்டி வந்தது. இதற்கு எதிர்வினையாக அன்று எழுதியவர் எம். ஏ. நுஃமான். எனது கருத்துக்களை மறுத்து, ஏளனம், கலந்த, ரசிக்கத் தக்க நடையில் 'நீங்களாவது காவியம் பாடலாம்' என்ற தலைப்பில் அவர் எழுதியது



அடுத்த 'அலை' இதழில் வந்தது. அதற்கு நான் எழுதிய 'மு. போ. இலக்கியம் என்றொரு யானை இருந்ததாம்' என்ற பதிலுடன் விவாதம் நின்று விட்டது. விவாதத்தின் சூட்டில் மு போ. இலக்கிய முகாமின் சார்புடையோரது நாடகங்களைப் பற்றிக் கடுமையாகவே எழுதினேன். அந்தளவு கடுமையாக எதையும் அதற்கு முன்போ பின்போ விமர்சித்து எழுதிய நினைவில்லை. என் கட்டுரைகளை விரும்பிய எல்லோருமே எனக்குச் சரியாகப்படும் காரணங்கட்காக விரும்பினார்களோ என நிச்சயமில்லை. எனினும் என் கட்டுரையொன்றில் மிகவும் முக்கியமான ஒரு தவறு நேர்ந்துவிட்டது என்று யாருமே அப்போது சுட்டிக்காட்டவில்லை.

பாலேந்திராவின் தழுவல், மொழி பெயர்ப்பு நாடகங்கள் தொடர்பாக சமுத்திரன் போன்றோரால் அவர் மீது ஒரு வகையான திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டிருத்தது. இதற்குப் பதிலளிக்கும் போது, 'மேற்கிலிருந்து நேரடியாக எடுத்தாற் திருட்டு, சிங்கள வாயிலாக எடுத்தால் திருட்டு இல்லை' என்றவாறு கிண்டல் செய்து, தாஸீஸயஸின் 'பொறுத்தது போதும்' நாடகத்திற் பயன்படுத்தப் பட்ட பல உத்திகளும் குறியீடுகளும் முன்னர் சிங்கள நாடகங்களில் நான் கண்டவையே என்றும் எழுதியிருந்தேன் இது தாஸீஸயஸின் நாடக அரங்க நண்பர்களை மனம் வருத்தியது. அப்போது தாஸீஸயஸ் நைஜீரியாவில் இருந்தார். ஏனோ எவருமே இதுபற்றிய உண்மையை விரிவாக எழுதவில்லை.

தாஸீஸயஸூம் நவீன ஸைமன் நாவகத்தேகம போன்ற நவீன சிங்கள நாடகத் துறையினர் பலரும் ஒரே நாடகப் பயிற்சிக் கூடத்திற் சேர்ந்து செயற்பட்ட காலத்திற் கூத்துப்பட்டறைகளின் விருத்தி செய்த உத்திகளும் குறியீடுகளுமே சிங்கள நாடகங்களின் பயன் பட்டன. இவற்றிற் பலவற்றிற்குத் தாஸீஸயஸ் முக்கிய பங்களித்திருந்தார். ஆயினும் தாஸீஸயஸ் இவற்றுட் சிலவற்றைப் பயன் படுத்தித் தயாரித்த 'பொறுத்தது போதும்' நாலைந்து வருடங்கள் பின்னரே மேடையேறியது. என்னிடம் இந்த விஷயம் பற்றி 1990 மட்டில் லண்டனில் ஒரு தற்செயலான சத்திப்பின்போது தாஸீஸயஸ் குறிப்பிட்டார். எனது மனவருத்தத்தை அவருக்கு நேரிலேயே தெரியப்படுத்தினேன் அத்தவற்றை அவரது நண்பர்கள் எப்போதோ சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். எவ்வாறோ எழுத்தில் அதைத் திருத்தும் வாய்ப்பு, இப்போது, பதின்மூன்று வருடங்களின் பின்பு, கிடைத்திருக்கிறது. மனமறியாது செய்த பிழையை நான் ஏற்க முன்னரும் பின்னரும் என்னுடன் பகைமை பாராட்டாத தாஸீஸயஸின் நற்பண்பு மனதை நெகிழ்த்தியது.

படிப்பகம்

www.padippakam.com 



மேற்கூறியனவும் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய பிற நாடக விமர்சனங்களும் சாந்தி சச்சிதானந்தன் எழுதிய 'பெண்களின் சுவடுகளில்' என்ற நூலுக்குரிய ஆங்கில மொழியிலான விமர்சனமும் இத் தொகுதியில் உள்ளடங்கவில்லை. வேறு ஒரு சில பிரதிகள் கைவசமில்லாது தவறியிருக்கலாம். தொகுதியில் உள்ளடங்குவன பற்றி எழுது முன், தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகத்தில் வெளிவந்து, என் மரபும் மாக்ஸியமும் என்ற தொகுப்பில் இடம் பெற்றதான மு. தளையசிங்கத்தின் எழுத்துப் பற்றிய விமர்சனம் ஏற்படுத்திய பிரச்சனை பற்றியும் எழுதுவது அவசியம்.

இந்த விமர்சனம் 1993 முற்பகுதியில் தாயகத்திற் பிரசுரமானது. இதற்கு முன், கைலாசபதி தளையசிங்கம் பற்றி எழுதப் போக, அதையிட்டுக் கோபமுற்ற தளையசிங்கத்தின் ஆதரவாளர்களுள் ஒருவர் கீழ்த்தரமான முறையில் எழுதிய ஒரு பதில் அலையிற் பிரசுரமானதாக நினைவு. என் விமர்சனம் தலையசிங்கத்தின் வாதங்களில் இருந்த அப்பட்டமான பிழைகளையும் உண்மைக்கு மாறான கருத்துக்களையும் புற்றியதாகவே இருந்தது. எனக்குத் தளையசிங்கத்துடனோ கைலாசபதியுடனோ தனிப்பட்ட முறையில் எந்த உறவுமிருக்கவில்லை. கைலாசபதியை 1975க்குப் பின்னரே முதன் முறை சந்தித்தேன் என நினைவு. எல்லாமாக மூன்று நான்கு தடவைகட்கு மேல் சந்தித்திருக்க மாட்டேன். தளையசிங்கத்தின் அன்பர்கட்கும் அலைக்கும் பொதுவாக இருந்த விஷயங்கள் அதிகமில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் இடதுசாரிக் கட்சிகள் மீதான குரோதம் நிச்சயமாக அவற்றுள் ஒன்று எனது தாயகம் கட்டுரையின் நீளம் பத்துப் பக்கத்துக்குள் இருந்திருக்கும். அதற்கான ஒரு மிக நீளமான பதிலை எழுதித் தாயகத்தில் பிரசுரிக்குமாறு மு. பொன்னம்பலம் (மு. தளையசிங்கத்தின் சகோதரரென அறிகிறேன்) கொடுத்தார். அதில் என் கட்டுரையுடன் சம்பந்தமில்லாத விஷயங்களைப் பற்றி அதிகம் எழுதியிருந்ததாலும் சஞ்சிகையின் பெரும் பகுதியைப் பிடிக்குமளவு நீளமாயிருந்ததாலும் விஷயத்திற்குத் தொடர்பாகச் சுருக்கி எழுதுமாறு தே. க. இ. பே. அவரைக் கேட்டதாகவும் அறிந்தேன். பின் அது 1980களின் நடுவில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த செய்திப் பத்திரிகை ஒன்றிற் பிரசுரமானது என்று அறிந்தேன். விஷயச் சார்பாகப் பதில் எழுத இயலாமை இவர்கள் பலரது பலவீனமாகி விட்டது. என் விமர்சனம் பற்றிய கோபம், என் வேறு ஒரு விமர்சனம் தொடர்பாக அலையில் ஒருவர் எழுதிய கட்டுரையிலும் வெளிக்காட்டப்பட்டது.

1982–83 அளவில் வெளியான இரண்டு நாவல்களை விமர்சிக்குமாறு இ. பத்பநாப ஐயர் மூலம் அலை ஆசிரியர் யேசுராசா, கேட்



டிருந்தார். ஒன்று செ. யோகநாதனின் 'இரவல் தாய்நாடு'. மற்றது, அலை வெளியீடாக வந்த, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'ஒரு கோடை விடுமுறை'. இரண்டுமே வெகு சராசரியான நாவல்கள், முதலாவதிற் பம்மாத்து அதிகம். இரண்டாவதில் எழுத்து நடை படுமோசம். இரண்டும் தேசிய இனப் பிரச்சனை தொடர்பானவை என்பதால் இரண்டையுமே ஒரு கட்டுரையில் விமர்சித்து எழுதினேன். ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிப் பிரசுரிக்காமல் விட்ட யேசுராசா. கட்டுரையில் ராஜேஸ்வரியின் நாவல் பற்றி நான் எழுதிய சில கடுமையான விமர்சனக் கருத்துக்களைத் தனிப்பட்ட முறையில் ராஜேஸ்வரியிடம் தெரிவித்திருக்கிறார் என்ற விஷயம் சில காலம் பின்னரே தெரிய வந்தது. என் விமர்சனக் கட்டுரைப் பிரதி எனக்குத் திருப்பித்தரப்படவில்லை. இது அவர்களது பத்திரிகா தருமம்.

1982–84 காலகட்டத்தில் நான் எழுதி அலையிற் பிரசுமான புத்தக விமர்சனங்கள் இரண்டு. ஒன்று சுந்தர ராமசாமியின் 'ஜே. ஜே. — சில குறிப்புகள் என்ற நாவல், வந்த புதிதில், தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல் என்று நாலைந்து பேர் கொண்டாடிக் கூச்சலிட்ட இந்த நாவலிற் தமிழுக்குப் புதிதாக இருந்தது கதை சொல்லும் முறை. ஆயினும் நாவல் என்ற முறையில் இது வெகு சராசரிதான் என்று பல விமர்சகர்கள் எழுதியுள்ளனர், நாவலின் பாத்திரப் படைப்புக் கோளாறுகளும் ஆசிரியரது பார்வையின் சமனின்மையும் பம்மாத்துக்களும் பற்றி எனது சுருக்கமான விமர்சனம் அமைந்திருந்தது. இந்த விமர்சனம் பிரசுரமாகி ஒரு வருடத்திற்குப் பின்னர், அலையில் இந்த நூல்—பற்றிய ஒரு விரிவான விமர்சனக் கட்டுரை வந்தது. அதில் இந்த நாவல்—ஆஹா, ஓஹோ என்று புகழப்பட்டதோடு என் மீது, இந்த நாவலின் குறைபாடுகள் என கூறியது தொடர்பாகக், கீழ்த்தரமான தாக்குதல் தொகுக்கப்பட்டது. எழுதியவர் தளைய சிங்கத்தின் பக்தர்களில் ஒருவர்தான். இதுவும் என் பார்வைக்குக் கிடைக்க மிகத் தாமதமாகி விட்டது. இதற்கெல்லாம் பதில் எழுதி இந்த மாதிரி எழுத்தைக் கௌரவிக்கும் நிலையை நான் கடந்து விட்டேனென்று தான் நம்புகிறேன்.

அடுத்து அலையிற் பிரசுரமான விமர்சனம், எஸ்.வி. ராஜதுரை என்ற தமிழ்நாட்டு எழுத்தாளரின் ''எக்ஸிஸ்டென்ஷலிஸம்'' என்ற நூல் பற்றியது. ராஜதுரையை எனக்கு முன்பின் தெரியாது. பத்மநாதஐயர் ஏற்படுத்திய தொடர்பால் ஓரிரு கடிதங்கள் பரிமாறியிருக்கிறேன் அந்த அடிப்படையில், அவரது நூலுக்கு எழுதிய விமர்சனத்தை அலைக்கு அனுப்பும்போது, ராஜதுரைக்கும் ஒரு பிரதி அனுப்பினேன். தமிழிற் புதிதாக ஒன்றை அறிமுகப்படுத்துகிறார்

என்ற வகையில் அந்த முயற்சிக்கு மதிப்பளித்தே எனது கருத்து வேறுபாடுகளை அதிகம் முக்கியப்படுத்தாமல் ஓரளவு தணிவாக எழுதினேன். ஆயினும், ராஜதுரையின் நூலில் நான் கண்ட குறை பாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தேன். ராஜதுரை எழுதிய பதில், அலையில் என் கட்டுரையின் இரண்டாம் பகுதி வெளிவந்த இதழி லேயே ஒரு பகுதி பிரசுரமாயிற்று. மறுபகுதி அடுத்த இதழில் வந்தது. என்கட்டுரையில் ஒரு பிசகு இருந்தது. மற்றப்படி, மிகவும் கவனமாகவே விமர்சித்து எழுதியிருந்தேன். ராஜதுரையின் பதிலிற் கணிசமான தனிப்பட்ட தாக்குதல் இருந்தது. என்ன செய்வது! இது தமிழ்நாட்டு விமர்சன மரபு. எனினும், கொஞ்சம் கிண்டலாக 'மனோஹர மாக்ஸிஸ்டான்ஷலிஸம்' என்ற தலைப்பில் சுருக்கமாக என் பதில்களை உடனுக்குடன் எழுதி அனுப்பி வைத்தேன். (மனோ கரன் என்றும் ராஜதுரைக்கு ஒரு பேருண்டு). ஒரு விதமான விளக்கமு மின்றி அலை என் பதிலைப் பிரசுரிக்காது விட்டுவிட்டது. இது பற்றிய எனது ஆட்சேபனையை, அலைக்கு எழுதுவதை நிறுத்து வதன் மூலம் தெரிவித்துக் கொண்டேன். ராஜதுரையின் பதிலும் இத்தொகுப்பில் உள்ளடங்குவன.

தாயகத்தில் எழுதிய விமர்சனங்களில், மு. தளையசிங்கம் தொடர்பானதைப் போலவே, தாயகத்தில் மறுபிரசுரமான 'மரணத் துள் வாழ்வோம்' கவிதைத் தொகுதி பற்றியதும் கடுமை யான சீற்றத்தைக் கிளறியது. பல வேறு ஈழத்துக் கவிஞர் களது கவிதைகளைக் கொண்ட இத்தொகுதியின் உள்ளடக்கம் தேசிய இன ஒடுக்கல் தொடர்பானது. இங்கு, என், விமர்சனங்கள் கவிதைகளின் தெரிவு தொடர்பாகவும் சில 'முதிர்ந்த' கவிஞர்களது படைப்புக்களில் இருந்த கோளாறுகள் தொடர்பாகவும் கவித்துவம் தொடர்பாகவும் இருந்தது. அதிகம் அறியப்படாத கவிஞர் களைப்பற்றி ஓரளவு தணிவாகவே எழுதியிருந்தேன். 1985ல் ஈழமுரசில் வெளியான என் கட்டுரையை நூலின் தொகுப்பாளர்களில் ஒருவரான சேரன் கடுமையாக ஆட்சே பித்து எழுதிய பதில் ஈழமுரசில் வந்தது. பதிற்கட்டுரையிற் கோபம் இருந்தளவுக்கு விஷயம் இருக்கவில்லை. இதற்கு நான் எழுதிய பதில் ஈழமுரசில் மீண்டும் வெளியானது. சேரன் திரும்பவும் எழுதினார். அதற்குப் பதில் எழுத நான் விரும்பவில்லை. இதே சமயம் தே. க இ. பேரவையின் முக்கிய எழுத்தாளர்களில் ஒருவரான தணிகாசலமும் சேரனுடைய கருத்துக்களை மறுத்து எழுதினார். அவருக்குச் சேரன் எழுதிய பதிலும் ஈழமுரசில் வந்தது. தணிகாசலம் அதற்குப் பதில் எழுத முற்படவில்லை. சேரன் முதலில் எழுதிய பதிலின் பிரதி என் கைவசமில்லாததால் அதை இத்தொகுதியில் உள்ளடக்க முடியாது போகலாம். அவரது இரண்டாவது பதில்



சேர்க்கப்பட்டுள்ளது. தணிகாசலம் எழுதியதும் சேரனது பதிலும் சேர்க்கப்படவில்லை.

மேரி பஸ்தியான் எனும் இளம் பாதிரியார் பற்றிய நூலையும் கல்வயல் குமாரசாமியின் கவிதைத் தொகுப்பையும் பற்றித் தாயகத்தில் எழுதியவை சர்ச்சைக்கு இடமளிக்கவில்லை. இன்று பிரமிள் என அறியப்படும் தர்மு சிவராமு கவிதைகள் பற்றித் தாயகத்தில் எழுதிய விமர்சனத்தையிட்டுத் தமிழ்நாட்டு எழுத்தாளர் ஒருவர் பத்மநாப ஐயரிடம் ஏதோ மறுப்புத் தெரிவித்தாரென்று அறிந்தேன். எழுத்தில் எதுவும் வரவில்லை.

வடக்கின் யுத்தச் சூழ்நிலை காரணமாகத் தாயகம் ஒழுங்காக வராது போன நிலையில் என் எழுத்து வேலை சிறிது குறைந் திருந்தது 1989 டிஸெம்பரில் ஜேர்மனியில் நடந்த இலக்கியச் சந்திப்பின் மூலம் ஏற்பட்ட புதிய தொடர்புகளின் விளைவாக, மீண்டுஞ் சற்றே அதிகம் எழுத நேரிட்டது. விமர்சனங்கள் என்று குறிப்பாக அதிகம் எழுதியது கடந்த இரண்டு மூன்று வருட இடை வெளியிலே தான். சுவிற்சர்லாந்திலிருந்து வரும் மனிதன் சஞ்சிகையினரது விருப்பத்திற்கிணங்கி எஸ். வி ராஜதுரையும் வ. கீதாவும் எழுதிய 'அல்தூசர்: ஒரு அறிமுகம்' நூலைப் பற்றி எழுதினேன். அதிகமான அண்மைக்கால விமர்சனங்கள் பாரிஸிலிருந்து வரும் ஓசையிலும் நோர்வீஜிய ஏடான சுவடுகளிலும் எழுதப் பட்டவை. சோலைக்கிளியின் கவிதைகள் பற்றியது சரிநிகரில் வெளி வந்தது. சிவத்தம்பியின் ஒரு சிறு பிரசுரம் பற்றிய குறிப்பும் அதிலேயே பிரசுரமானது.

சிவரமணியின் கவிதைத் தொகுதி வெளிவருமுன், அதை வெளி யிட்டவர்களுள் ஒருவரான சித்திரலேகா சுவடுகளில் எழுதிய கட்டுரையில் சிவரமணியின் தற்கொலை தொடர்பாக மிகுதியாகவே தனது ஊகங்களைப் புகுத்தி எழுதியதையொட்டியே சிவரமணி கவிதைகள் பற்றிய எனது விமர்சனக் குறிப்பு எழுதப்பட்டது. சித்திரலேகா, இப்போது, சிவரமணி கவிதைகளின் முன்னுரையில், சிவரமணியின் பேரில் ஓசையிற் பிரசுரமான ஒரு கவிதை அவர் எழுதியதல்ல என்றும் நான் எனது வாதங் களை ஆதரிக்க அதைப் பயன்படுத்தியது தவறென்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார். சிவரமணியின் கவிதைகளில் ஒரு இரண்டு வருட கால இடைவெளி உள்ளது. இது பற்றிய விளக்கத்தை யாரும் இதுவரை தரவில்லை. சிவரமணி 1989ஆம் ஆண்டு எழுதியவற்றில் உள்ள நம்பிக்கை இழந்த நிலை எந்த வகையிலும் பல புலம்பெயர்ந்த எழுத்தாளர்களது எழுத்தில் உள்ளவற்றை விட மோசமானதல்ல. ஒரு அரசியல் மார்க்கத்திலோ போராட்டத்திலோ காலூன்றி

நின்றவர்களினளவுக்குப் பல விடுதலை இயக்கங்களின் நடத்தையால் ஏமாற்றமடைந்தவர்கட்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இருந்திருக்க நியாயமில்லை. சிவரமணியின் தற்கொலை பற்றித் தீர்ப்பு வழங்க முனைவோர் சிலரது மதிப்பீட்டை என்னால் ஏற்க முடியவில்லை. சிவரமணியின் அகால மரணத்திற்குரிய சூழல் மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டும். அதற்குப் பொறுப்பான நமது சமுதாயமும் கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டும்.

இதை எழுதிக் கொண்டிருக்கும் போது, சுவடுகளுக்கு அனுப்பப் பட்டவையான தமிழ்நாட்டவரான தமிழவனின் அமைப்பியல்வாதம் தொடர்பான நூலின் விமர்சனமும் எஸ். பொன்னுத்துரையின் அவா பற்றியதும் அச்சேறிவிட்டதாகத் தெரியவில்லை. எவ்வாறோ ஐரோப்பாவில் உள்ள ஏடுகட்கு நிறைய எழுதியும் கடுமையான விவாதம் எழவில்லை. லண்டனிலிருந்து வந்து நின்று போன பனிமலரில் எழுதிய முறிந்தபனை விமர்சனம் பற்றித் தனிப்பட்ட முறையில் நிறையக் கருத்து வேறுபாடுகள் இருந்தன. யாரும் எழுதியதாகத் தெரியவில்லை, சிலர், நான் எழுதியதிற் கடுமை போதாது என்றார்கள். சிலர், மிகவும் கடுமை என்றார்கள். சிலர், முறித்த பனை சாதித்த எதையெதையோ எல்லாம் நான் வலியுறுத்த வில்லை என்றார்கள். அப்போது பனிமலரின் ஆசிரிய குழுவில் இருந்தேன். எழுதுங்கள் பிரசுரிக்கிறோம் என்று சொன்னேன். பல முறை நினைவூட்டியும் யாருமே எழுதவில்லை. இன்னும் விரிவாக விமர்சித்திருக்கலாமோ தெரியாது. அமைப்பியல் பற்றிய என் மதிப் பீட்டில் மட்டும் மாற்றத்துக்கு இன்னும் ஏதும் நியாயம் இல்லை.

காசி ஆனந்தனுடைய குட்டிக் கதைகள், ராஜேஸ்வரி பால சுப்பிரமணியத்தின் உலகமெல்லாம் வியாபாரிகள், தமிழவனின் அமைப்பியல் வாதம் தொடர்பான நூல் ஆகிய மூன்றிற்கும் என் விமர்சனம் கடுமையாக இருக்கத் தெரிந்தாற், காரணத்தை என்னுள் தேடாதீர்கள்.

இறுதியாக இந்த விமர்சனங்களைப் பிரசுரித்த தாயகம், அலை, சரிநிகர், தினகரன், ஈழமுரசு ஆகிய ஈழத்து ஏடுகட்கும், சுவடுகள், ஓசை, அஆஇ, பனிமலர், மனிதம் ஆகிய ஐரோப்பிய ஏடுகட்கும் என் நன்றி. இவற்றுக்கு நூல்வடிவம் தர முன்வந்த தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும் சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்திற்கும் குறிப்பாக நண்பர்கள் தேவராஜாவுக்கும் பாலாஜிக்கும் என் நன்றி.

லண்டன்
27.4.94

**சி. சிவசேகரம்**

# ஒரு பழம் புதுக் கவிஞர்

ஆதியில் த. சிவராமலிங்கம் என்ற பேருக்கு உரிமையாளராக இருந்தவரும் தொடர்ந்து பிரமிள் பானுச்சந்திரன், தர்மு ஔரூப் சிவராமு என்பன உட்படப் பல்வேறு பேர்கட்கு உரிமையாளராக இருந்தவரும் இலங்கையின் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தர்மு சிவராமு என்ற பெயரில் புதுக்கவிதை வட்டங் களில், முக்கியமாக புதுக்கவிதை இயக்கத்தின் எழுச்சிக்காலத்தில், ஒரு பிரதான புதுக்கவிதையாளராகக் கருதப்பட்டவருமான எழுத் தாளரின் கவிதைகள் பற்றிச் சற்றே எழுதலாம் என்று நினைக்கிறேன்.

தர்மு சிவராமுவின் கவிதைகள் பற்றி விமர்சிப்பதில் அவற்றின் உள்ளடக்கம், கவித்துவம் என்பனபற்றியே எழுத விரும்புகிறேன். அவரது இலக்கியக் கொள்கையையும் சமுதாயப் பார்வையையும் முடிந்தவரை அவரது கவிதைகள் மூலமே காணமுனைகிறேன். அவருக்கும் அவரது இலக்கிய வட்டத்துக்குமிடையிலான வாதங்களில் கைவைக்க நான் விரும்பவில்லை. தர்மு சிவராமு தன் கவிதைகட்கு வழங்கிய முன்னுரைகளைக்கூட என் விமர்சனத்தில் நேரடியாகப் பயன்படுத்தாமலிருக்க முயல்கிறேன். அவரது அரசியல், சமுதாயக் கொள்கைகள் தெளிவீனமானவை. அவரிடம், கம்யூனிஸ விரோதமும் வெகுசனங்கள் பற்றிய கீழான மதிப்பீடும் போக, வலிமையான முரண்பாடற்ற அடிப்படை எதுவுமே இல்லை. அவர் தன்னைப் பற்றி வைத்திருக்கிற உயர்வான அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அவரது இலக்கியக் கொள்கையை விவாதிப்பதற்குரிய இடமும் இதுவல்ல. இக்கட்டுரையை அவரது கவிதை பற்றிய ஒரு மறுபரிசீலனை என்று கொள்ளலாம், தமிழ்ப் புத்தி ஜீவி வட்டாரத்தில் ஒரு பரவலான மனோபாவம்: தெளிவாக எழுதுபவனை நல்ல ஆசிரியனாக ஒப்புக்கொள்ளலாம்; ஆனால் எல்லோருக்கும் விளங்கக்கூடியதை எல்லோருக்கும் விளங்கக் கூடு மாறு எழுதுபவன் எப்படி மேதையாக முடியும்?

எனவே புதிர் போடுகிறவன் மேதையாகிறான். புதிர்கூட என்ன வென்று புரியாதவாறு எழுதுபவன் ஞானியாக, யோகியாக, ரிஷியாக உயர்ந்து விடுகிறான். தர்மு சிவராமுவைத் தூக்கிப் பிடித்த கூட்டம்

இப்போது கொஞ்சம் ஓய்ந்துவிட்டது. காரணம் அவர்களது அறிவு தெளிந்து விட்டமையோ, புதிர்போட நிறையப்பேர் முளைத்துத் தமிழ்க் கவிதை பழைய விடுகதையுமல்ல என்ற உண்மை அவர் களுக்குத் தெளிவாகிவிட்டமையோ, புதிர்கவிதையை அவர்களால் மேலும் ஒரு படி உயர்த்தவோ அதன் மூலம் 'உண்மை'யைக் காணவோ காட்டவோ எனக்குத் தெரியாது. ஆனால் 'எழுத்து' பத்திரிகை தொடக்கி வைத்த புதுக் கவிதை இன்று மரித்துப் போன ஒன்று.

தர்மு சிவராமு கவிதைகளில் அவரது படிமங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. வெறும் படிமம் கவிதையாகிவிடாது. ஒரு படிமக் கோவை கூட கவிதையாகிவிடாது.

பூமித் தோலில்
அழகுத் தேமல்.
பரிதி புணர்ந்து
படரும் விந்து
இருளின் சிறகைத்
தின்னும் கிருமி,
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி.

மேற்படி 'கவிதை' விடிவின் சித்தரிப்பு. இதுபோல மேலும் சில உள்ளன, இங்கே படிமங்கள் நான்கு ஒன்றுக்கொன்று உறவற்று நிற்கின்றன. (அர்த்தம் பற்றிய கேள்விக்கே நான் வரவில்லை). இங்கே கவிதை தரக்கூடிய ஒரு அனுபவத்தை என்னாற் பெற முடிய வில்லை. இதை விட ஆழமான அர்த்தத்துடன்,

அணுவின் துகளில்
முளைத்த காளான்.
கூடு பிளந்து
எழுந்த பூதம்.
அறிவின் தகனச்
சுடலை மேகம்.



என்று அணுகுண்டு பற்றி எழுதினாலும் (இது தர்மு சிவராமுவின் கவிதையல்ல அது கவிதைக்குரிய அனுபவ முழுமையைத் தராது.

கல்வீச்சு என்ற தலைப்பில் இன்று (அதாவது இக்கணம்) என்பதே நேற்று நாளை ஆகிய இரண்டுக்கும் காரணமாகின்றது என்று சுட்டிக் காட்டுகிறார்.

காலக் குளத்தே
நாளை நேற்றென்றே
அலையேன் புரள்கிறது?
'இன்று' எனும் கல்த்துளிகள்
வீசி விழுவதனால்.

கல்த்துளி என்பது ஒரு புதுமையான வார்த்தைப் பிரயோகம். ஆனால் அந்த வலிமையான கற்பனையின் வளம் வார்த்தைப் பிரயோகத்துக்குள் மட்டுமே அடங்கி விடுகிறது. இன்று என்பதைக் குறிக்க கற் துணிக்கைகள் போதாது போகின்றன. ஒவ்வொரு அலையுமே நேற்றாகவும் நாளையாகவும் அமைவதோடு அல்லாமல் இன்றாகவும் நின்று இயக்குகிறது. மேலோட்டமாகப் பார்க்கும் போது (சில வேளை) யாருக்கும் பிரமிப்பூட்டக் கூடிய இந்தப் படிமம் நிதானமாக யோசிக்கும் போது தன் போதாமையை வெளிப்படுத்தி விடுகிறது. கவிதை மட்டுமல்ல, ஒரு சிந்தனையாகவே கூட இது ஒரு குறைப் பிரசவம் தான். இவ்விதமான பல கவிதைகளை தர்மு சிவ ராமுவின் ஆரம்பகால எழுத்துமுயற்சிகளின் குறைபாடுகள் என்றே ஒதுக்கிவிட்டாலும் அவரது பிற்காலப் படைப்புக்களிலும் இந்தவித மான ஆழமின்மை (அல்லாதவிடத்துக் கருத்துக் குழப்பம்) தலைநீட் டவே செய்கிறது, குருக்ஷேத்ரம் கவிதையில்,

இன்று வேலை நிறுத்தம்
'கடமையைச் செய்
பலனை எதிர்பார்க்காதே'
என்று சொல்லி விட்டுக்
காரில் நழுவப் பார்த்த
கண்ணபிரானுக்குக்
கல்லடி.
சுவரெங்கும்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



பசிவேத சுலோகங்கள்
அர்ச்சுனன் கிளைத்து
அரக்கனாய்
கர்த்த வீர்யார்ச்சுனனாய்
தலை ஆயிரம்,
கை இரண்டாயிரம்.
கண்ணபிரான் நெற்றியிலே
உதிரத்தின்
நாமக்கோடுகள்
விஸ்வரூபத்துக்காக
முயற்சிக்க வலுவில்லை.
இருந்த கால்களில் எழும்ப
முயன்றான்
கீதையைக் கேட்க
அர்ச்சுனன் இல்லையென்றால்
கூப்பிடு கௌரவரையென்றான்
பறந்தது போன் செய்தி
பொலீசுக்கு.

இங்கே அர்ஜுனன் தொழிலாளிகளைக் குறிக்கிறான். பொலிஸார் கௌரவர் என்றால் கண்ணன் யார்? முதலாளி என்றே தென்படுகிறது. முதலாளி — தொழிலாளி உறவு கிருஷ்ணார்ஜுன உறவா? பொலிஸ், முதலாளிக்கு எப்போது எதிர்த்தரப்பில் இருந்தது? கண்ணபிரான் ஒருவேளை கருங்காலியோ அல்லது தொழிற்சங்கத் தலைமையிலுள்ள துரோகியோ என்றால் கூட கௌரவர் எப்படிப் பொலீசாராக முடியும்? தொழிலாளி போராடுவது முதலாளி வர்க்கத்துக்கு எதிராக அல்லவா? பொலீசார் கௌரவரின் சேனை என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். ஆனால் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பது எங்கே பொருந்துகிறது? கீதோபதேசமோ அதுதானா? தர்மு சிவராவுமுக்கு வெகுஜனங்கள் என்றாலே கும்பல், சிந்திக்கத் தெரியாத முட்டாள்களின் கூட்டம். அதை இழிவுசெய்யும் பணியில் கீதையையும் கொச்சை பண்ணி



விடுகிறார். இங்கே ஒரு சராசரியான கிண்டல் உள்ளதே தவிர கவித்துவமோ முழுமையான ஒரு குறியீட்டு முறையோ உருவாகவில்லை. பூர்ஷுவா, நம்பிக்கை என்ற கவிதைகளும் இத்தகைய குழப்பத்தையே ஊர்ஜிதம் செய்கின்றன.

மாக்ஸியத்தை அறியாமல் மாக்ஸியம் பற்றித் தன் மனதில் ஏற்படுத்திக் கொண்ட ஒரு படிமத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அதைத் தாக்கி அழிப்பது என்று கங்கணங்கட்டி நின்றவர்கள் வரிசையில் இன்னொருவர் என்பதை விட தர்மு சிவராமுவின் சமுதாயப் பார்வைக்கு அதிக முக்கியத்துவம் வழங்க என்னால் இயலவில்லை.

புதுக்கவிதை எனப்படுகிற படைப்புக்களில் பெருவாரியான வற்றுள் கவித்துவம் சாராத அம்சங்களில் புதிர்போடுவதும் வரட்டுத் தத்துவம் பேசுவதும் உள்ளடங்கும். தர்மு சிவராமுவிடம் இவ்விரண்டையும் காணலாம். அவரது குத்தலான நகைச்சுவை உணர்வு காரணமாக அவரது கவிதைகள் சிலவற்றை ரசிக்க முடிகிறது. அவரது கவிதையில் வலிமையான அம்சமே, என்னளவில், அவரது சாதுரியமான குத்தல் தான். அவர் போடுகிற புதிர்கள் சராசரிப் புதுக்கவிதைப் புதிர்களை விட ஒரு படி உயர்வாக இருந்தாலும் அங்கு மனதில் தங்குகிற மாதிரி அதிகம் இல்லை.

தாசி

....................
''குலக்கொடி நான்
ஆனால் இது
பசிக்கொடுமையில்'' என்றாய்
எனவே நான்
பேரம் பேசவில்லை.
....................
....................
விழித்தெழுந்த போது கண்டேன்
உன் கண்களில் ஒரு
மலட்டுத்தனம்.
....................
....................
நேற்றிரவு
பேரம் பேசியிருக்கலாம்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



என்ற பாங்கில் விபச்சாரி ஒருத்தியுடன் ஒருவனது அனுபவத்தின் சித்தரிப்பும் ''நிகழ மறுத்த அற்புதம்'' என்ற கவிதையில் (ராமன் உணர்வு பூர்வமாக மிதிக்கிறான், கல் உயிர்க்க மறுத்தது)

''த்ஸ'' என்றான்
மனிதன் ராமன்.
வழி நடந்தது
அவதாரம்.

என்று வரும் வரிகளும் அவரது குத்தலான கிண்டலுக்கு இரு உதாரணங்கள். இதிலே அவரது ஆழமான தத்துவச் சிந்தனைகளைத் தேடுவோர் இருக்கலாம். அவர்களுள் நான் இல்லை. சில கவிதைகளில் துளியும் ஆழமே இல்லை. இந்தியமரபில் கேட்டுப் புளித்துப்போன தத்துவக் கருத்துகள்கூட தர்மு சிவராமுவின் 'ஞானத்தை' ஒரோரு சமயம் மிஞ்சிவிடுகின்றன. உதாரணமாக, தர்மு சிவராமுவின் ''வழி''யைப் பாருங்கள்.

## வழி

வயிற்றுப்பசி தீர்க்க
வாராதா என்றேங்கி
மழைக்கு அண்ணாந்த
கண்கள்
கண்டு கொண்டன.
வானம்
எல்லையற்றது.

அதே சமயம் இந்திய மரபில் மாயை பற்றியுள்ள பார்வையைப் பயன்படுத்தி அவர் படைத்த கவிதையில் மிக ஆழமாக ஒன்றும் இல்லையென்றாலும் ''அருவுருவம்'' என்ற அக்கவிதையில் ரசிக்க விஷயமுண்டு. செம்பாறையாகத் தோன்றிய களிமண் பாறை என்று அதை உதைத்த போது காலில் குத்த அது பாம்பென்று மனதில் பயமுறுத்துகிறது. பின்பு நெருங்கிப் பார்க்க, அது செம்பாறையே என்று தெரிகிறது.

## காவியம்

சிறகிலிருந்து பிரிந்த / இறகு ஒன்று / காற்றின் தீராத பக்கங்களில் / ஒரு பறவையின் வாழ்வை / எழுதிச் சென்றது.

என்ற கவிதையும் (அவர் இதை முதலில் ஆங்கிலத்தில் எழுதினார்)



''அவனுக்கு ஏழே வயதாய் இருக்கலாம் / ஆனாலும், பார் / அவன் காற்றை அடக்கிவிட்டான் / ஒரு காற்றாடிகொண்டு'' என்பதும் (பின்னையதன் மொழி பெயர்ப்பு எனது) மிகவும் சராசரியான சிந்தனைத் துணுக்குகள்.

கவிதை வட்டத்தில் விஞ்ஞானம் தெரிந்தவர்கள் கொஞ்சம் குறைவு என்பதாலோ என்னவோ E=Mc2 என்னும் தலைப்பில் அவரது கவிதைக் குழறுபடிகள் தப்பிவிடுகின்றன. அஜீரணமான விஷயங்களை வைத்துக்கொண்டு வித்தை காட்டுவதில் அவருக்கு மாக்ஸியம் மட்டுமே அகப்பட்டது என்று யாரும் சொல்லிவிட முடியாது. விஞ்ஞானமும் தான். ''ஊமை'' கவிதையில், ''நட்சத்திரங்களைவிட நிறையவே பேசுவது அவற்றிடையே உள்ள இருள்'' என்று வருகிறது விஞ்ஞான ரீதியான ஒரு உண்மை. ஊமை ''பேச்சுக்கும் அப்பாற் தாண்டிக்'' கண்ட கலையென்று ஊமையின் சமிக்ஞையைக் குறிக்க முற்படும்போது, ஊமையின் சமிக்ஞை பேச்சுக்கு அப்பாற் தாண்டிய விஷயம் இல்லை என்பது ஒருபுறமிருக்க, வலிந்து திணிக்கப்பட்ட விஞ்ஞானத் தகவல் உண்மையில் அவர் கூறவந்த கருத்துடன் நன்கு உடன்படவில்லை.

தர்மு சிவராமுவைத் திறமையற்றவர் என்று ஒதுக்க நான் முயலவில்லை. ஆனால் அவரது சமுதாய உணர்வின் போதாமை, பல விஷயங்களை ஆழமாக அணுக முடியாமல் அவரை மறித்துவிட்டது என்பது என் கருத்து. அவரது கவிதைகள் எதையோ சொல்ல முனைகின்றன. ஆனால் சொல்ல முனைந்தது, அங்கு இல்லாததாலோ அல்லது கவிதை மூலம் ஒரு முழுமையான அனுபவத்தை அவரால் பரிமாறவோ பகிரவோ இயலாது போனதாலோ (கொஞ்சம் சிரமப்பட்டு வாசகனுக்கு ஒருபடி மேலேயே சஞ்சரிக்கும் நிர்ப்பந்தம் காரணமாக?) அகப்படாமல் நழுவிவிடுகிறது. பல புதுக்கவிதையாளர்களிடம் காண முடியாத ஒரு வேகத்தை அவரது கவிதைகளில் (எப்போதும் இல்லாவிட்டாலும்) அடிக்கடி காணலாம்.

''சேற்றில் விழுந்த சொற்கள்
தானியமாயின.
புற்றரைமீது பூக்களாயின.
..........................''

போன்ற வரிகள் பைபிள் வாசகங்களை நினைவூட்டினாலும் அங்கு விகத்துவமான புதுமை இல்லாமல் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



கவிதை பற்றிய அவரது கவிதை அவரது திறமையான எழுத்துக்களில் ஒன்று. ஆயினும் அதன் புதிர்த்தன்மைதான் முதலில் மனதில் படுகிறது.

திமிங்கிலம் பிடிக்கக் / கப்பலேறி/கடல் நீர் குழிபறித்தேன்;/வந்து கல்வி / வசப்படுமென்று / புலிக்கு இரையாய் / தூண்டிற்புழு தொங்க விட்டு / மரத்திலே காத்திருந்தேன் / தூண்டில் துளிர்த்து / இலையிலூர்ந்து / வசமாயிற்று / புயல்; / நீர் சுழன்று குழிந்து / பிடிபட்டது / பிரளயம்.

கவிதையின் தற்செயலான தன்மையை வலியுறுத்தும் இக் கவிதையை எடுத்த எடுப்பில் புரிந்துகொள்வது பெரும்பாலான / வாசகர்கட்குச் சாத்தியமில்லை. (அவர்களைப்பற்றி அவருக்கும் அக்கறையில்லை?)

ஆனால் தர்மு சிவராமு ஒன்றும் பெரிய மேதையும் இல்லை. இன்று புதிர்களும் அரை வேக்காட்டுத் தத்துவங்களும் மலிந்து விட்ட இந்தியத் தமிழ்ப் புதுக் கவிதையில் தர்மு சிவராமுவின் முக்கியத்துவம் அதன் முன்னோடி என்ற அளவில் நிலைக்கும். அந்த அளவை மீறி அவரது கவிதையை நிலைக்கவைக்க அவசியமான ஒரு பரிமாணம் அவரிடம் இல்லை. தர்மு சிவராமு தன் வரட்டுத்தனத்தால் தன் திறமைக்கே வேலியிட்டுக்கொண்ட ஒருவர் என்றுதான் எனக்குப் படுகிறது.

அவரது கம்யூனிஸ எதிர்ப்பும் வக்கிரமான சமுதாயக் கண்ணோட்டமும் எப்போதும் தன்னையே மையமாகக் கொண்டு முழுச் சமுதாயத்தையும் தன் தேவைகளை ஒட்டி அமைந்த ஒன்றாக நோக்கும் ஒரு பார்வையின் வெளிப்பாடுகளே. சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ்ந்த யோகிகளும், ஞானிகளும், சித்தர்களும் காலங்காலமாக இருந்திருக்கிறார்கள். தர்மு சிவராமு அந்த ரகம் இல்லை. நிச்சயமாக அவரது கவிதைகளில் தெரிவது ஞானமே அல்ல—மனித நேயமின்மைதான் ஞானத்தின் அடையாளமென்று யாரும் கருதினாலொழிய!

**தாயகம் 4, 1984**

# மரணத்துள் வாழ்வோம்*

'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுதியின் உறைகளில் உள்ள படத்தைப் பார்த்தேன். அதிலிருந்த பூட்ஸ் சுவடுகளும் அவற்றுக்கு மேலாக முளைத்து விரிந்த மலர்களும் தொகுதியின் உள்ளடக்கத்திற்குப் பொருத்தமானவையாகவே தெரிந்தன. வாசித்து முடிந்தபின் இன்னொருமுறை கவனித்துப் பார்த்தேன். அப்படத்திலிருந்த கற்கள் சுவடுகள் பதிந்தபின் வைக்கப்பட்டவை போல் தெரிந்தன. ஒருவேளை காளான்களோ என்றும் நினைத்தேன்? ஓரொரு நேரத்தில் கவனயீனமும் வேறொரு நேரத்தில் மிகையான சொற்பிரயோகமும் எவ்வாறு கவிதையைத் தெளிவீனப் படுத்தி வலு இழக்கச் செய்து விடுகின்றது என்ற எண்ணம் மனதில் நெருடியது.

தொகுதியில் உள்ள கவிதைகளில் பல, கவிதை என்ற வகையில் மிகவும் பலவீனமானவை, பலவீனமான படைப்புக்கள் எல்லாமே 'புதிய படைப்பாளிகட்கு' உரியன அல்ல. 'தேர்ந்த' கவிஞர்கள் என்று கருதப்படுவோரது சில எழுத்துக்களும் பலவீனமாகவே உள்ளன. எழுந்தாளர்களை உற்சாகப்படுத்துவதும் கவிதைகளில் கவித்துவத்தை வலியுறுத்துவதும் முரண்பாடானவை அல்ல. காலத்தின் தேவை என்ற பேரில் குறைபாடுகளைக் காணாதது போல் விடுவதால் கவிதை வளரப்போவதும் இல்லை. காலத்தின் தேவை நிறைவு செய்யப்படப் போவதும் இல்லை. விமர்சனம் என்பது யாரோ யாரையோ மட்டந்தட்டுகிற காரியமாகத் தெரிந்தால் அது விமர்சனம் பற்றிய அறியாமையின் வெளிப்பாடு. நல்ல விமர்சனம் பயனுள்ள முடிவுகளைக் கூறலாம். சிறந்த விமர்சனம் பயனுள்ள கேள்விகளை எழுப்புகிறது. கேள்விகள் மூலமும் அவை தூண்டிவிடும் தேடல்கள் மூலமும் படைப்பாளிகளும் படைப்புக்களும் உயர முடிகிறது. நமக்கு இலுப்பம் பூவே போதும் என்கிற மனோபாவம் தொடர்ந்தால், மண்ணாங்கட்டியே சர்க்கரை என்கிற நிலை உருவாக

* *'மரணத்துள் வாழ்வோம்' — யாழ்ப்பாணம்: தமிழியல் 1985, X V + 170 ப.*

படிப்பகம்

அதிகம் நாளாகிவிடாது. கவிதைகளின் தெரிவும் தொகுப்பாளர்களுள் ஒருவரான சேரனின் முன்னுரையும் இந்தப் போதுமென்ற மனத்தைப் பிரதிபலித்தாலும், தொகுப்பாளர்களில் ஒருதராவது ஒரு காலத்தில் வானம்பாடியில் வந்தது போன்ற அரசியல் கவிதைகள் அவற்றின் ஸ்லோகத்தனத்திற்காகக் கண்டிக்கப்பட்டதைக் கை கொட்டி வரவேற்றதை நினைவு கூரும்போது, இந்தச் சகிப்புத் தன்மை ஸ்லோகம் வரும் திசையைப் பொறுத்தது என்றே கருத வேண்டி இருக்கிறது. கோஷங்களும் ஸ்லோகங்களும் பயனுள்ள சமுதாயப் பணியாற்றக் கூடிய நிலைமைகளை நான் அங்கீகரிக்கின்றேன் அபத்தமான சினிமாமெட்டில் வந்த இயக்கப்பாடல் கவிதையைவிட அதிகம் பயன்பட்ட சூழ்நிலைகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். வெய்யிலில் தவிக்கிறவனுக்கு தூர இருக்கும் ராஜகோபுரத்தை விட அருகிலிருக்கும் திண்ணை நிழல் அதிக பயன் தருகிறது. அதனால், தெருத்திண்ணை ராஜகோபுரமாகிவிடாது. படைப்பாளிகள் மட்டுமன்றி வாசகர்களும், யாரோ வகுத்த ‘காலத்தின் தேவை’யான ஸ்லோகப் படலைகட்குள்ளேயே நிரந்தர வாசம் செய்ய முடியாது. எனவே தான், கவித்துவத்தைப் பற்றி வலியுறுத்துவது அவசியம் என்கிறேன். அரைவேக்காட்டுக் கவிதையை விடக் கருத்துத் தெளிவனா இயக்கப்பாடலும் கொள்கைப் பிடிப்பான கோஷமும் உயர்ந்தவை. வெற்றுப் புகழ்ச்சி மூலம் உருப்படியான கோஷம் இயற்றும் திறமையைக்கூடச் சாகடித்துவிட முடியும்.

தொகுப்பில் இடம் பெற்றுள்ள முப்பத்தொருவரின் எண்பத்திரண்டு படைப்புகளையும் விமர்சிக்கும் உத்தேசம் எனக்கு இல்லை. விமர்சிக்கும் அவசியமும் இருப்பதாக நான் எண்ணவில்லை. தொகுப்பின் தன்மை தொகுப்பாளர்களின் பார்வை பற்றி நிறையவே சொல்கிறது,சேரனின் முன்னுரையில் அது மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. சமகாலத்தின் தேவை பற்றிய என் பார்வையில் அதன் கோளாறுகளைச் சற்றே தொட்டுக் காட்டும் அவசியம் தெரிகிறது. சில கவிதைகளைப் பற்றிய சில குறிப்புகள் வாசகர்களதும் (என் போன்று) இன்னும் கற்கவேண்டிய படைப்பாளிகளதும் சிந்தனையைக் கிளறும் என்ற எதிர்பார்ப்பில் எழுதப்பட்டுள்ளன.

தொகுப்பு பெரும்பாலும் அலை, புதுசு ஆகிய இரண்டு சஞ்சிகைகளிலும் பிரசுரமான கவிதைகளைக் கொண்டது. பிற ஈழத்துச் சஞ்சிகைகள் அநேகமாகத் தவிர்க்க இயலாமை காரணமாகவோ தயை உணர்வு காரணமாகவோ தம்பங்கைச் செலுத்த அனுமதிக்கப் பட்டுள்ளன. முருகையன் அண்மையில் எழுதிய நல்ல கவிதைகள் (தொகுப்பில் வராதன) தாயகத்தில் பிரசுரமாயின. சிவசேகரத்தின் இரண்டு கவிதைகளும் செம்பதாகைக்காக எழுதப்பட்டவை. அவை



செம்பதாகை/தாயகத்தில் வந்தபின்னரே படிகளில் பிரசுரமாயின. (படிகளில் வந்த வடிவங்கள் தமிழவன் பார்வைக்காக மட்டுமே அனுப்பப்பட்டவை). இருட்டடிப்பு என்கிறார்களே, அதற்கு அர்த்தம் என்னவென்று தெரியுமா?

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை பற்றிய ஒருவரது அக்கறை ஒரு மொழிவாரி / இனவாரி மட்டுமே அதைக் காணச் செய்கிறதென்றால் அது ஆழமற்ற பார்வையின் விளைவான அக்கறை, நேற்று ஒடுக்கப்பட்ட யூதனை இன்றைய ஆக்கிரமிப்பாளனாக மாற்றிய ஸியோனிஸத்தின் அக்கறை அவர்கள் மத்தியில்கூட சோஷலிஸம் பேசியவர்கள் இருந்தார்கள். இஸ்ரேலிய பிரதமர்களாக ‘சோஷலிச’ ஸியோனிஸ்டுகள் இருந்து பலஸ்தீன மக்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்தினார்கள். தமிழ் மக்களது போராட்டம் ஒரே ஒரு முரண்பாட்டைப் பற்றியது என்ற பார்வையை வலியுறுத்தும் விதமாகவே கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தமிழ் சமுதாயத்தின் ஒரு அக முரண்பாட்டை [பெண் விடுதலை பற்றியதை] வலியுறுத்தும்.

‘‘இன்றெமது போராட்டம் / இனவிடுதலைக்கானது / மட்டுமல்ல’’ என்ற வரிகளைக் கொண்ட கவிதை / (‘‘தோழி உனக்குத் தான்’’ அருள், தீப்பொறி) மெலிதான விதிவிலக்கு. நா. சபேசனின் கவிதை ஒன்று பெண்களின் அரசியல் விழிப்புப்பற்றியதாக இருந்தாலும். (அது அருளின் கவிதை கூறும் முரண்பாடு பற்றியதல்ல). ஆதவனின் ‘ஆதரே’ பிரிந்த சிங்களச் சினேகிதியை விளித்து எழுதப்பட்டது. கடைசி வரிகளுள் ‘‘என் நெஞ்சினுள் / மனிதம்— மனித உறவு / சந்தேகமானது என உணர்கிறேன்’’ என்ற சொற்கள் நியாயப்படுத்தப்படாத விதமாக வந்து விழுகின்றன. (அல்லது ஆதவன் மனிதம் பற்றிக்கொண்டுள்ள பார்வையைக் கூறுகின்றன?( வ.ஐ ச. ஜெயபாலனின் நீளமான கவிதையின் இறுதியில் சிங்கள நண்பர்கள் பற்றிய அவரது வார்த்தைகள் முழுமையின் விரக்தியையும் கசப்பையுமே உணர்த்துகின்றன.

சிங்கள மக்களைப்பற்றிய ஒரு குரோதமற்ற பார்வை சேரனுக்குச் சாத்தியம் என்று என்னை எண்ணவைத்ததும், அவரது அண்மைய கவிதைகளில் உணர்வின் ஆழத்திலும் கவித்துவத்திலும் என்னைக் கவர்ந்ததுமான ‘‘ஒரு சிங்களத் தோழிக்கு எழுதியது’’ இத் தொகுப்பில் இடம்பெறவில்லை (இந்த ஒரு கவிதையில் சேரன் தன் ‘தேசிய எல்லைகட்கு’ அப்பால் எட்டிப்பார்த்து விட்டுப் பின்னர் தலையைப் பின்னுக்கிழுத்துக் கொண்டாரோ என்று சந்தேகிக்கிறேன்!). சிங்கள மக்கள் பற்றிய நட்புணர்வு இல்லாமை ஒருபுறமிருக்க, பௌத்த

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



மதத்துக்கும் சிங்கள மொழிக்கும் சிங்கள மக்களுக்கும் எதிரான இனத் துவேஷத்தைப் பிரதிபலிக்கும் சொற்தொடர்கள் பிரயோக மாகும் கவிதைகள் சில (காலத்தின் தேவை கருதி?) இடம்பெற்றுள் ளன.

''மஞ்சள் அங்கிகளுக்கும் / மழித்த தலைகளுக்கும் / புலப் படாது...'' ('அகங்களும் முகங்களும் 1', வில்வரத்தினம்)

'சூழவும் / உடைபடும் கடைகளின் ஒலியும் / வெறிக் கூச்சலும் / வேற்று மொழியும் / விண்ணுயர்ந்த தீச்சுவாலையும்'' ('81. மே 31 இரவு' — புஷ்பராஜன்)

''வேற்று மொழி' வெறிக் கூச்சலுக்கும் தீச்சுவாலைக்கும் நடுவில் வைக்கப்பட்டுள்ளது. வேற்றுமொழியில் வெறியர்கள் கூச்சல் என்று வந்திருந்தால், வேற்றுமொழி வெறியர்களை அடையாளங் காட்டும் வேற்றுமொழி, வெறிக் கூச்சலுக்குச் சமாந்தரமாகப் பயன்படும் போது அதன்பாதிப்பு வேறுவிதமாகவே அமைகிறது.

''தார்மீக உலகில் / கால்கள் பதிக்க / விரும்பாத மனத்துடன்/ உலகை வெறுத்து / போதிமரத்தில் / தூக்குப் போட்டுச் செத்தான் புத்தன் / பரி நிர்வாணமாய்......''

(''புத்தனின் நிர்வாணம்'', ஹம்ஸத்வனி)

இவ்வாறான வார்த்தைகள் இவற்றைவிடப் புத்திசாலித் தன மாகவும் கருத்தாழத்துடனும் அலை / புதிசு முகாங்களைச் சேராத யாராலும் எழுதப்பட்டிருந்தால் அது அபத்தம், கொச்சைத்தனம், என்றாகியிருக்கும். வார்த்தைகளின் அர்த்தமும் அவை ஏற்படுத்தும் பாதிப்பும் பற்றிய அறியாமையால், உணர்வு வேகத்தில் இவை எழுதப்பட்டவை என்று சமாதானப் படுத்திக் கொள்ளலாம்.

மைத்ரேயின் ''கல்லறை நெருஞ்சிகள்'' என்ற கவிதை 'அவர் களைப்' பற்றிக் கூறுகிறது. 'அவர்கள்' முழுச் சிங்கள மக்களுமா அல்லது ஆளும் அதிகார வர்க்கமா என்பது தெளிவாகாதவாறு கவிதை அமைந்துள்ளது. தமிழ் இன விடுதலையை சிங்கள இன விரோதத்துடன் சேர்த்தே பார்த்துப் பழகுவோரது சூழலில் ஏற் கெனவே உள்ள கசப்புணர்வுக்கு உரமூட்டுமாறு அமையும் அளவில் அது வருந்தத் தக்கது.

''சென்று வருகிறேன் ஜென்ம பூமியே'', வண்ணச்சிறகு, ஸிரிமா ஸாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் இந்தியாவுக்குத் திரும்பிய போது எழுதியது. 'நதி' சஞ்சிகையில் பிரசுரமானதாகவோ பிரசுரமாக



இருந்ததாகவோ நினைவு. அந்த வகையில் தொகுதியின் பிற கவிதை களின் கால இடைவெளிக்கும் சூழலுக்கும் வெளியில் நிற்கிறது.

''சிந்தனையின் ஆழமும் படைப்பு வீச்சும் ஒருங்கே இணைந்து வரும் கவிதைகளை உயர்ந்தவை என்றும் ஓசை, உணர்ச்சி சார்ந்து வரும் கவிதைகள் ஒருபடி இறங்கியவை என்றும் ஒரு கருத்து நிலவு கிறது. எங்களுடைய அனுபவம் இது சரியல்ல என்பதையே உணர்த்து கிறது'' என்று சேரன் கூறுகிறார். இது இந்தத் கவிதைத் தொகு தியை நியாயப்படுத்தும் அவருடைய கண்டுபிடிப்பு. (முன்னொரு தடவை 'வானம்பாடி'யில் மரபுவழிக் கவிதைக்கும் புதுக் கவிதைக்கு மிடையிலான வேறுபாட்டை செவிப்புலன் வழி, கட்புலன் வழி வேறுபாடு என்று காட்டும் ஒரு கண்டுபிடிப்பை உதிர்த்தார்!) தொகுப்பில் உள்ள கவிதைகளைக் கவனித்தால் மரபு வழிக் கவிதைகளை எழுதி வந்தவர்கள் பெரும்பாலும் ஓசை நயத் தைப் பேணுவதையும் 'புதுக்கவிதையாளர்' பலர் ஓசை நயம் பற்றிய உணர்வே இல்லாமல் எழுதியிருக்கிறதையும் காணலாம். சாதாரண மனிதனுக்கு சாதாரண கவிதையும் புத்திஜீவிக்கு ஸ்பெஷல் கவிதையும் என்ற விதமான பேச்செல்லாம் கவிதையை உரை நடையினின்றும் சினிமாப் பாட்டினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது என்ன என்ற கேள்வியைத் தவிர்த்ததால் வந்த வினைகள். கவிதையை ஒருவர் விரும்புவதே அவரது இலக்கிய ரசனையை வெறுமே வீரகேசரி செய்தியும் சுஜாதாவின் தொடர்கதையும் வாசிக்கிறவரினது ரசனையினின்று வேறுபடுத்துகிறது. கவிதை பற் றிய ரசனையும் கவியுணர்வும், தரமான கவிதையுடன் பரிச்சயப் படுவதாலே வளர்வன. ஆழமான சிந்தனையின்வெளிப்பாடு சிக்கலான சொல்லடுக்குகளாகக், குவியவேண்டியதில்லை. படைப்பு வீச்சு வாசகனைப் பயமுறுத்தும் விஷயமுமில்லை. படைப்பாளி யாருக்காக எதைப்படைக்கிறான், அவனது (உடனடியான) கருத்துப் பரிமாறும் நோக்கம் எவ்வளவு தூரம் வெற்றிபெற்றுள்ளது என்பன மட்டுமல்லாது அவனது படைப்பு வாசகனது சிந்தனையை எவ்வளவு தூரம் கிளறு கிறது என்பதும் முக்கியமானது. நல்ல கவிஞன் பாதையை உணர்த்து கிறான். அல்லாதவன் தானே முழுப் பிரயாணத்தையும் செய்து காட்டுகிறான். அவனது வாசகன், வெறும் பார்வையாளனாக அனு பவத்தைப் பகிரமுடியாத அந்நியமாகிறான். கவிதையானது ஒரு செய்தியைக் கூறிவிட்டு 'இத்துடன் இலங்கை வானொலியின் செய்தி அறிக்கை முடிவடைகிறது' என்ற விதமாக நின்றுவிட முடியுமா? நிகழ்வுக்கும் அப்பால் பார்க்குமாறு வாசகனது சிந்தனையைக் கிளறி அவனையும் கவிஞனது தேடலில் ஒரு பங்காளியாக்க வேண்டாமா? வெறுமனே தகவலையும் அபிப்பிராயத்தையும் கூறுவதானால் கவி தையைவிடக் கொட்டை எழுத்தில் வசனமாக போஸ்டர் எழுதிச்

படிப்பகம்

சுவரில் ஒட்டுவதில் அதிகம் பயனிருக்கும். ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத நேரத்தில் பலரும் வாசிப்பார்கள்.

இரண்டு கவிதைகளில் உள்ள அச்சுப்பிழைகளைச் சுட்டிக் காட்டிய பிறகு கவிதைகளில் சொற்பிரயோகத்தின் பலவீனங்கள் பற்றிக் கவனத்தைச் செலுத்த எண்ணுகிறேன்.

சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைத் தலைப்பு 'இன்றிலென்கிலும் நாளை' என்றிருக்க வேண்டும் 'அலை'யில் 'இன்றிலெங்கினும் நாளை' என்று பிரசுரமானவாறே மறுபிரசுரமாகியுள்ளது. சிவசேகரத்தின் '52'இல் 'அற்புதங்கள் ஒருக்காலே நடந்தாலோ' என்று 'படிகளில்' வந்தவாறே பிரசுரமாகி உள்ளது இவற்றில் உள்ள அப்பட்டமான தவறுகள் தவிர்க்கக்கூடியவை. அறியாமை காரணமாகவோ அசட்டை காரணமாகவோ நேரும் அச்சுப்பிழைக்கும் எழுத்தாளரின் பிழைக்கும் வேண்டுமென்றே தரப்படும் 'தவறான' பிரயோகத்திற்கும் வேறுபாடு காண்பது படைப்பாளியின் எழுத்துடன் பரிச்சயமுள்ளவர்கட்கு மிகவும் சிரமமானது அல்ல. சில்லரைத் தவறுகள் அர்த்தததையே சீர்குலைத்துவிடும் அபாயம் உரைநடையை விடக் கவிதையில் அதிகம். ஏனெனில், கவிதை, பொதுவாகவே, இறுக்கமானதும் சிக்கனமானதுமான சொல்லமைப்பையுடையது.

முருகையனுடைய இரண்டு கவிதைகளிலும் பத்மநாதனுடைய கவிதையிலும் எளிமையான சொல்லமைப்பும் தெளிவும் சந்த வலிமையுடன் இணைந்து வலிமையான கவிதையாகின்றன. கவிதை என்பது ஜிகினா மினுமினுப்பல்ல. அதிகம் அலட்டிக்கொள்ளாமலே ஆழமான சிந்தனையையும் உணர்வின் தீவிரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் இவை எனக்கு மிகவும் பிடித்திருந்தன. சண்முகம் சிவலிங்கத்தின் தரமான இரண்டு கவிதைகளுள் ஒன்றில் உணர்ச்சியின் தீவிரம் ஓங்கி நிற்கிறது. அவரது கவித்துவத்தின் வழமையான சிறப்பு 'பாடாத பாடல்களில்' வரிக்குவரி வெளியாகிறது. ''...ஆனாலும் / நீ என்னைப் பாடச் சொல்கிறாய் / குருதி உறைந்த பாடல்கள் பிணங்கள் அழுகும் பாடல்கள் / இருள் / கன்னங்கரிய புகையாய் / தலைமேல் கவியும் பாடல் கருச்சிதையாமல் / மூளியாய் / துவாலை இறைத்துக் கட்டி விழாமல் / நெஞ்சைப் பிளந்து / குரல்வளையில் இடறி / நாவில் வெடிக்கின்ற காலம் ஒன்றுவரும் / அப்போது கேள்—/ இப்போதல்ல'' தா. இராமலிங்கத்தின் கவிதைகட்கு அவருக்கே கைவந்த ஒரு சந்த அமைப்பின் சிறப்பு உண்டு. 'நெஞ்சு பதறுகிறது', 'அகால மரணங்கள்', 'சாவிளைச்சல்' ஆகிய மூன்றிலும்



காணப்படும் சந்த வலிமை 'கருத்து ஒன்றுபடுவோம்' கவிதையில் தளர்கிறது. 'கொடியேற்றத்தில்' இல்லாமலே போய்விடுகிறது. அவரது கவிதைகளில், நடுநடுவே, சந்தத்துடன் இணைந்து பிறக்கும் வர்ணனைகளை மிகவும் ரசித்திருக்கிறேன். 'கொடியேற்றம்' அதையும் இழந்து பலவீனமான படிமங்களாலான பிரசாரமாக நிற்கிறது.

கவிதையில் சொற்றொடர்களை அடுத்தடுத்து மீண்டும் சொல்லுவதன் பாதிப்பு அவற்றின் அர்த்தத்தை முக்கியமான வகையில் மாற்றுவதற்கோ அல்லது அழுத்தத்தை உச்சப்படுத்துவதற்கோ பயன்படும். (இது உரைநடையில் கூடப் பயன்படும் உத்தி ''போங்கோ போங்கோ'' என்பது 'போகாதீர்கள்' என்பதைக் கூறுவார் 'போங்கள்' என்பதை வலியுறுத்திக் கூறவோ பயன்படலாம் இங்கு பேச்சின் தொனியும் சந்தர்ப்ப சூழ்நிலையுமே அர்த்தத்தை உணர்த்துகின்றன ) கவிதையில் இவ்வாறான பிரயோகம் கவனமாகச் செய்யப்பட வேண்டும். அல்லாத இடத்தில் அது வெறும் ஜடத்தன்மையாகவே வந்துவிழும். நான் கண்ட சில கவியரங்குகளில், யாந்திரிகமான முறையில் சிலபேர் இவ்வாறு திரும்பக் கூறியமை அவர்களுக்குத் தம் வார்த்தைகளின் வலிமைமீது உள்ள நம்பிக்கையீனத்தையே எனக்கு உணர்த்தியது. யேசுராசாவின்

''உஷ்ண வட்டம் நிதமும் தாக்கையில்
கல்லும் உயிருறும் நாட்களும் வரும்
கல்லும் உயிருறும் நாட்கள் வரும்''

''கற்கள் உயிர்த்துச் சுடரை வீசையில்
அடக்கிய சக்திகள் தப்ப முடியுமா?
அடக்கிய சக்திகள் தப்ப முடியுமா ?''

''கற்கள் உயிர்க்கையில்... கற்கள் உயிர்க்கையில்...
மக்கள் அலையாய்த் திரண்டே எழுவர்!''

''அந்த அலையிற் கரைந்தே போகும்!
அந்த அலையிற் கரைந்தே போகும்!''

என்றவாறு மீண்டும் மீண்டும் வரும் வரிகள் அவற்றில் இல்லாத வேகத்தையும் வீச்சையும் பெறவேண்டித் திரும்பக் கூறப்பட்டு எதிர்பார்த்த அழுத்தம் ஏற்படாமல் துவண்டு விழுகின்றன. இங்கேதான் சந்த வலிமையுடன் எழுதுகிறவர்களும் பேச்சோசையின் வலிமையைக் கிரகித்துக்கொள்கிறவர்களும் பெரும்பாலும் வெற்றிபெறுகிறார்கள். அவருடைய 'சூழலின் யதார்த்தம்' 'உன்னுடையவும் கதி' ஆகிய இரண்டும் ஒப்பிடுகையில் நன்றாக

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



அமைந்துள்ளன. ஆயினும் ''உன்னுடையவும் கதி''யில் முழுவதும் இலக்கண ரீதியான மரபுவழி எழுத்துத் தமிழில் இருந்தாலும், நடுவே ''யாரும் ஒன்றுங் கேட்க ஏலாது'' என்ற வரி, ஓசையிலும் சொல்லமைப்பிலும் துருத்திக்கொண்டு நிற்கிறது. அது பயன் கருதி அவ்வாறு அமைந்ததாக நம்ப இடமில்லை.

வ. ஐ. ச. ஜெயபாலன் ''உயிர்த்தெழுந்த நாட்கள்'' என்ற நீண்ட கவிதையில் 83 ஜூலை வன்முறை நிகழ்வுகளைப் பதிய எடுத்த முயற்சி ஒரு சுயபுராணமாகவும் அவர்தன்பாற்கொண்ட பரிதாப உணர்வை வலியுறுத்துவதாகவுமே அமைந்துள்ளது. அவருடைய கவித்துவம் இடையிடை தலைநீட்டத் தவறாவிட்டாலும் முழுமையில் செயற்கைத் தன்மையான புத்திஜிவித்தனம்தான் ஓங்கி நிற்கிறது.

சேரனுடைய படைப்புக்களில் மலையகச் சூழலில் இனவாத வன்முறையை மையமாகக் கொண்ட 'எல்லாவற்றையும் மறந்துவிடலாம்' சிறந்து நிற்கிறது. கவனயீனமான சொற்பிரயோகம் நல்ல எழுத்தை எவ்வாறு பாழாக்கலாம் என்பதைப் பற்றிச் சேரன் அறிவார் என நம்புகிறேன்.

''கொள்ளையடிக்க வந்த
சிங்களவர் மீது துவக்கால் சுடுவதைப்
புத்தர் கூட அனுமதிக்க மாட்டார்
என்பதை
அரசு அறியும்;''

''அவர்கள் அவனைச் சுட்டுக்கொன்றபோது'' என்ற கவிதையில் வரும் வரிகள் இவை. இவற்றின் அர்த்தம் என்ன? புத்தர் அகிம்சாவாதியில்லையா? அகிம்சாவாதி என்றால் ''புத்தர் கூட'' என்ற சொற்றொடர் உணர்த்துவது என்ன?

''உயிர்ப்பு'' கவிதையில் சரளமாகப் பாய்ந்து கொண்டிருந்த சொல்லோட்டம், ''அடுத்தது மரணம்'' என்று ஒரு உச்சக் கட்டத்தில் வந்து நின்றபின், ''சொல்லாமற் செய்வர் பெரியர்; சொல்லாமற் கொல்வான் கொடியோன்'' என்று தொடரும்போது ஏமாற்ற உணர்வே மிகுகின்றது. இங்கே சேரன் அதிபுத்திசாலித்தனமான வார்த்தை முத்துக்களை உதிர்த்து விட்டதாக நான் எண்ணவில்லை. ''அடுத்தது மரணம்'' என்ற சொற்கள் தரும் அதிர்ச்சியினின்று வாசகனை மீட்டுக் கவிதையைத் தொடர இயலாத தடுமாற்றமே அங்கு புலனாகிறது. இந்த இரண்டு வரிகட்கும்



பதிலாக ஒரு கரிய கோடோ அல்லது பெரிய இடைவெளியோ சாதகமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும்.

மு. பொன்னம்பலத்தின் கருத்துக்களில் ஆன்மீகமும் ஆயுதப் போராட்டமும் சங்கமிப்பது எனக்கு வியப்பளிக்கவில்லை. மு. தளைய சிங்கம் விட்ட இடத்திலின்று தொடர்கிற பயணத்தில் மு.த. வின் குழப்பங்களினின்றும் விடுபடமுடியாமல் மு.த. வாழ்ந்த சூழலை சிக்கலான ஒரு சூழலில் ஆன்மீகத்தையும் குறுகிய அரசியல் பார்வையையும் ஒன்றுபடுத்தும் தத்தளிப்பு சீஷ்யகோடிகளுடையது. புராண இதிகாசங்களிளின்றும் படிமங்களை உருவாக்கிப் பயன்படுத்த முனைவது புதியதல்ல என்றாலும் மற்றக் கவிஞர்களினின்று அது மு. பொவை வேறுபடுத்துகிறது. இவ்வாறான படிமங்களின் பாவனையில் இதிகாச மரபை நேரடியாகவே சமகாலச் சூழலில் பிரயோகிப்பதும் சமகாலச் சூழலின் யதார்த்தத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு மரபில் வேண்டுமென்றே மாற்றங்களைப் புகுத்துவதுமான இரண்டுமே சாத்தியம். ஆனால் வேண்டுமென்றே செய்யப்படும் மாற்றமும் தவறான பிரயோகமும் ஒன்றேயல்ல. ''முன்னிரவின் மோகனம்'' கவிதையில் முன்னிரவின் மங்கும் இருளில் புற உலகு கருமோகினியாக ஓட பஸ்மாசுரன் துரத்துகிறான். சிவபெருமான் தலையிலிருந்து மேற்கில் விழுந்து மறையும் பிறை நாளை மோகினியாய்ப் பொங்கி எழும் எரிகோள் என்று கவிதை முடிகிறது. எது மோகினி என்ற குழப்பம் ஒருபுறம் நிற்க, புராணத்துடனான வேறுபாடு திட்டமிட்டுப் புகுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக, படிமத்தின் பலவீனத்தையே அது உணர்த்துகிறது, 'காலனின் கடைவிரிப்பு' அப்பாவி மக்களின் படுகொலைகள் மூலம் ''எழுச்சி தேரென எழுந்து விடுதலை இலக்கை அடையும்'' என்பதனால், காலன் கடைவிரிப்பைக் கை நீட்டி வரவேற்கிறது. அனாவசிய மரணங்கள் தடுக்கப்படவேண்டும். எனவே, காலனைக் கடையை மூடுமாறு எட்டி உதைப்பதுதான் எனக்கு நியாயமாகப்படுகிறது. மு. பொ. என்னைப் போலன்றி ஆன்மீகவாதி. எனவே நம் பார்வைகள் வேறுபடுகின்றன.

வில்வரத்தினத்தின் 'விடுதலைக்குருவியும் வீட்டு முன்றிலும் மிகவும் சராசரியான ஒரு கவியரங்கு சமாச்சாரம். ''எங்கள் வீதியை எமக்கெனமீ ட்போம்'' பெரிதும் சீரான சந்த வலிமையுடையது மட்டுமன்றிப் பயனுள்ள படிமப்பிரயோகங்களையும் கொண்டது. ஆயினும், 'விதிமுறை உள்ளன விதிமுறை உள்ளன' 'விதிமுறை இருந்தும் விதிமுறை இருந்தும்' 'எக்கணமேனும் எக்கணமேனும்' போன்ற பிரயோகங்களால் அதிகம் பயன் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அவசியமற்ற சொற்களை அகற்றிவிட்டு இதை அவர் மறுபடி

படிப்பகம்

எழுதியிருந்தால் மனதில் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். 'தூது' கவிதையில் ''நண்ப நினக்காக / நெகிழும் என் நெஞ்சு நின்லரிய துணைக்காகவும் தான்'' என்ற இனிய ஓசை நயத்துடன் பழைய ஆனால் எளிய, மரபுசார்ந்த எழுத்துத் தமிழில் தொடங்கி, நடுநடுவே பல சமயம் அந்த ஓசை நயத்தையும் சொல் அழகையும் இழந்து விடுகிறார். மொழிப் பிரயோகத்தில் கவனயீனம் காரணமாக நலிந்துபோன கவிதை இது.

தொகுப்பாளர்களின் பார்வையில் 'முதிர்ந்த' கவிஞர்களது எழுத்துக்களில் உள்ள பலவீனங்களைச் சுட்டிக்காட்டினேன். ஒரு சில படைப்பாளிகள் 'பேர்களை உதிர்க்கும்' அவசியத்தால் இடறிவிழும் சூழ்நிலைகளையும், சுட்டிக் காட்டலாம் என நினைக்கிறேன்.

''பலஸ்தீனமும் எனது மண்ணும்'' (புஷ்பராஜன்) கவிதையில் ''பலஸ்தீனத்தின் பொய்கைக் கரைகளின் ஓரம், சுதந்திரச் சிலையின் ஏந்திய தீபச் சுடரின் ஒளியில், 'சல்பீனிய' விதைகள்'' என்று வருகிறது குழப்பமாக இருக்கிறது.

பீனிக்ஸ் பறவை தன் எரிந்த சாம்பலினின்று மீண்டும் எழுவது. புஷ்பராஜனின் 'பீனிக்ஸ்' நெருப்புச் சூழும்போதே புத்தொளி கொண்டு மீண்டும் மீண்டும் வானில் பறக்குமாம். ஆச்சரியமாக இருக்கிறது.

ஆதவன் 'பேட்டன் ரஸ்ஸலையும்' 'விற்கின்சனையும்' பற்றிக் குறிப்பிடுகிறார். உதிர்க்கிற பேர்களையாவது சரியாக அறிந்து வைத்திருப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

ஊர்வசியின் கவிதைகளின் எளிமையும் தெளிவும் மனத்துக்கு இதமானவை.

''ஐம்பது துவக்குகள் / ஏந்திய கரங்கள் / என்னுள் பதிந்த சுவடுகள் / மிகவும் கனத்தவை. அந்த இரவு / அவர்களுடையது''.

இந்த வரிகள் மனத்திற் பதிக்கும் சுவடுகள் கூடக் கனமானவை தான். ''அவர்களுடைய இரவு'' ''காத்திருப்பு'' இரண்டும் ஆர்ப்பாட்ட மில்லாமலே செல்லும் ஆழ நதிபோன்று ஓட்டமுடையவை. ''நான் எழுதுவது புரிகிறதா உங்களுக்கு'' என்று கவிதை, ஒருவேளை புரியாது போனாலும் என்று, அதிகமாகவே கடைசியில் சொல்லி விட்டாற்போல் படுகிறது.

இளவாலை விஜேந்திரனுடைய 'ஆண்ட பரம்பரை' மிகவும் சரா சரியான ஒரு கிண்டல். ஆனாலும் அவரது கவிதைகளில் வரும்



படிமங்களில் புதுமை இருக்கிறது. நிலாந்தனின் 'கடலம்மா'வில் சந்தமும் வேகமும் முன்பகுதியில் நன்றாகவே இருக்கின்றன. ''கடலம்மா நீ மலடி / ஏனந்தத் தீவுகளை / அனாதரவாய் தனியே விட்டாய்'' என்று மனத்தாங்கலுடன் எழுந்த கேள்விக்குப் பின்னர் வரும் பகுதி கவிதையுடன் ஒட்டாது மேடைப் பிரசங்கம்போல நிற்கிறது. அருளின் கவிதையில் பெண் விடுதலைக் கருத்துமட்டுமன்றி சொல்லமைப்பின் வலிமையும் படிமங்களும் கவனத்தை ஈர்க்கின்றன

''அடைகாத்த / புயல் முட்டை / உடையட்டும் / நம் / கரங்கள் இருந்த இடத்தில் / சிறகு முளைக்கட்டும்!''

கவிதைகள் பற்றிய குறிப்புகள் இதுவரை கவிதையின் உருவ அமைப்புப் பற்றியனவாக இருந்தன. கவிதைகளின் உள்ளடக்கமும் அவற்றின் முழுமையான பாதிப்பையும் கவனிக்கும் போது பெரும் பாலானவை நேரடியான அநுபவமும் சூழ்நிலையின் பாதிப்பால் ஏற்பட்ட உடனடியான உணர்வுகளும் பற்றியவையாகவே உள்ளன. சில உபதேசங்களாகவும் உள்ளன. சொல்லாமலே உணர்த்தவும் சிந்தனையைக் கிளறிவிடவும் கவிதையை மீண்டும் மீண்டும் அசை போட்டு அநுபவிக்கவும் தூண்டுமாறு எத்தனை கவிதைகள் அமைந்திருக்கின்றன? முன்பு ஒரு தடவை ஈழத்துத் தமிழ்க் கவிதையின் எதிர்காலம் பற்றிய என் அச்சங்களைத் தெரிவித்திருந்தேன். சுயதிருப்திக்குள் தமிழ்க் கவிதை முடங்கிவிடும் ஆபத்து இன்னும் இருக்கிறது. மரபின் பிடிப்பை தளர்த்தி ஆயிற்று. ஓசையாற் கவிதை என்றில்லாமல் கவிதைக்காக ஓசை என்றும் ஏற்றுக் கொண்டாயிற்று. இந்த விடுதலையைக் கவிஞர்கள் எவ்வளவு தூரம் கவிதையை மேலும் ஒருபடி உயர்த்தப் பயன்படுத்த இயலும் என்பதே நம் முன் உள்ள சவால்.

முன்னுரையின் சமகால அரசியல், இலக்கிய வரலாறுகள் தொடர்பான கருத்துக்கள் சேரனது அரசியல் நிலைப்பாட்டின் அடிப் படையிலானவை. அவற்றின் முழுமையின்மை பற்றியும் சமமின்மை பற்றியும் இங்கே எழுத அவசியம் இல்லை. ஆனாலும் மரபுதொடர் பாக சேரன் குறிப்பிட்ட ஒரு விஷயம் பற்றி, இலக்கியவாதிகட்கு முக்கியம் என்ற வகையில், ஒரு சிறு விளக்கம் பயன்படும் என நினைக்கிறேன்.

'உணர்ச்சிக் கவிதைகள்' பற்றிக் குறிப்பிடும்போது ''இவற்றிலும் வீரம்'' செங்களம், வாள் (கவனிக்கவும் துப்பாக்கி அல்ல), குருதி, இறப்பு என்பன இடம் பெற்றாலும் அனுபவம், வீச்சு உண்மையற்ற சடங்களாக இருந்தன'' என்கிறார். ''கவனிக்கவும்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



துப்பாக்கி அல்ல'' என்று அடைப்புக்குறிகள் வரும் குறிப்பு ஒரு வேளை சேரனது விகடத் துணுக்காக இருக்கலாம். ஆனாலும் அது மரபின் தன்மையையும் அதன் சிறப்பையும் அவர் சரிவர உணராதையே காட்டுகிறது. வாள் போர்க் கருவியாகவும், வீரத்துக்கு உரியதாகவும், துப்பாக்கி கொலைக்கருவியாகவும் கருதப்படுவதற்கான காரணத்தை நீளமாக விளக்க அவசியம் இல்லை. பண்டைய இந்திய மரபுகளில் வீரம் பற்றிய கருத்துக்கள் அதன் நாகரிகத்தின் மேன்மையினின்று பிரிக்க இயலாதவை. வேலும், வில்லும், வாளும் மறத்தைமட்டுமல்ல அந்த மறத்தினின்று பிரிக்கமுடியாத ஒரு அறப் பார்வையையும் குறிக்கின்றன. சமுதாயம் மாறிவிட்டது எனவே கவிஞர்கள் வேலும், வாளும், புறமுதுகிடாமையும் பற்றியே பாடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனால் அணுகுண்டு யுகத்தில் கூடக் கவிதையில் வாளுக்கு உரிய இடம் இருக்கிறது.

''கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே'' என்ற பாரதிதாசனின் (தமிழ் இனவாத) அறைகூவலிலெனினும்,

''இந்திரசித்தன் இரண்டு துண்டாக எடுத்தவில் யாருடைய வில்?'' என்ற பாரதியின் தேசிய உணர்வின் எழுச்சியிலெனினும், வாளும் வில்லும் கவிதைக்கு தரும் வலிமையை எந்த நவீனப் போர்க் கருவியாலும் தர இயலாது.

மரபு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையொட்டியே அது நவீன சமுதாயத்துக்குச் சேவையாற்றுகிறது.

''மரணத்துள் வாழ்வோம்'' தொகுதியில் சேர்க்கப்படாததும் அதனுட் சேர்க்கப்பட்டவற்றினின்று பார்வையில் வேறுபட்டதும் தரத்தில் ஒப்பிடத்தக்கதும் சில சமயம் உயர்ந்துமான படைப்புக்கள் அண்மையில் அலை, புதுசு அல்லாத சஞ்சிகைகளில், கண்டிருக்கிறேன். கவிதைத் தொகுதியில் அவை சேராமையால் ஏற்படும் இழப்பு அவற்றை ஆக்கிய கவிஞர்கட்கல்ல.

ஈழ முரசு 1986 மாச் 2, 9

# இலுப்பந்தோப்புக் காவற்காரருக்கு

'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுதிக்கு நானெழுதிய விமர்சனத்திற்கு சேரன் எழுதிய பதிலில் (ஈழமுரசு 23, 30 மார்ச் 86) உள்ள உண்மை சாராத கூற்றுக்களையும் வக்கிரமான வியாக்கியானங்களையும் மறுக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சேரன் காட்டமுனைவது போலன்றி, நான் இடது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினனல்ல. அவர்களது நிலைப்பாடு பெருமளவும் எனக்கு உடன்பாடானது. ஆயினும் அவர்கள் என்னைச் 'சார்ந்தவர்கள்' அல்ல.

சீனா பற்றிய சேரனது வார்த்தைகள் அப்பழுக்கற்ற பொய்கள். அவரது அரசியல் ஆரூடம் (லீ ஷியென்நின்னுடைய இலங்கை வருகை ஆயுத உதவிபற்றியதாகவே இருக்கும் என்பது) கெட்டிக்காரன் புளுகு மாதிரி எண்ணி எட்டே நாளில் பொய்யாகி விட்டது. பாவம், அடுத்தமுறை வேறொரு பஞ்சாங்கத்தைப் பார்த்துக் கால பலன் சொல்லுவார் என்று நம்புகிறேன்.

சேரன் 'புதுசு' ஆஸ்தானத்தினின்று 'அலை' மடத்துக்குக் குடி பெயர்ந்ததாக அறிகிறேன். நான் தாயகத்துக்கு எழுதுவது என் தெரிவு. 1981 முதல் '84 வரை நான் எழுதாத ''படிகள்'' எதுவும் வரவில்லை. 1983 முடிவுவரை அலையுடனும் நீண்ட தொடர்பு இருந்தது. அலையுடனான தொடர்பு நின்றமைக்குக் காரணம் அலை என் எழுத்துக்களைக் கையாண்ட விதம் பற்றிய என் கருத்து முரண்பாடு. எங்கேயாவது என் எழுத்து பிரசுரமானாற் போதும் என்ற அவஸ்தை எனக்கில்லை. நான் எழுதாமல் பத்திரிகை வெளியிட இயலாத அவஸ்தை தாயகம் ஆசிரியர் குழுவுக்கு இல்லை,



படிப்பகம்

வில்வரத்தினத்தின் 'மஞ்சள் அங்கிகளுக்கும் மழித்த தலைகளுக்கும்' என்ற சொற்றொடர் மனதில் எழுப்பும் உணர்வுகள் பற்றிய பாசாங்குகட்கு அவசியமில்லை. இத்தகைய சொற்றொடர்கள் சிங்கள மக்கள் பற்றி மேலும் குரோத உணர்வுக்கே உரமூட்டுவன என்று ஆட்சேபித்தேனேயொழிய அக்கவிதைகள் அத்தகைய உணர்வுகளையே அடிப்படையாகக் கொண்டவை என்று எங்கே சொன்னேன்?

ஜெயபாலனின் கவிதையில் அவர் தன்பாற்கொண்ட பரிதாப உணர்வில் வெளிப்பாட்டின் உக்கிரம் சேரன் உணரமுடியாத தென்றால் நான் அதை உணர்த்துவதும் முடியாததுதான். அந்த நீண்ட கவிதையை விடத் திறமையாகவும், ஆழமாகவும் வேறொன் றிரண்டு கவிதைகள் 83 ஜுலை சம்பவங்களின் உக்கிரத்தையும் பாதிப்பையும் தொகுத்துள்ளன. வில்வரத்தினத்தின் 'தூது' பலவீன மடைந்ததே அதன் இறுக்கமற்ற சொல்லமைப்பாற் தான். ''நினக்காக நெகிழும் என் நெஞ்சு, நின்னிய துணைக்காகவும் தான்'' என்பதன் ஓசை நயம் வெறும் மரபுவழிச் சந்தமல்ல. அதன் ஓசை நயத்தையும் சொல் அழகையும் அவர் உணர்ந்ததாலேயே மீண்டும் அவ்வரிகளைக் கவிதை நடுவே பயன்படுத்துகிறார். ஆனால் நடுவே பல இடங்களில் சொற்கள் மீது இங்கே அவருக்கு இருக்கும் ஆளுமை நழுவிவிடுகிறது. ''ஓசை நயம் சமன் மரபு'' என்ற (கட்புலன் — செவிப்புலன்?) சூத்திரத்துக்கு சேரன் தாவவிரும்பினால் தாவட்டும். அதனால் அவரது வாதம் மெய்யாகி விடாது.

கவிதைகளனைத்தையும் விமர்சிக்க அவசியமில்லை என்று விமர்சனத்தின் தொடக்கப்பகுதியிலேயே குறிப்பிட்டேன். நான் குறிப்பிடத் தவறியதாக சேரன் அங்கலாய்க்கும் சில கவிதைகள் உண்மையிலேயே குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு என் மனதிற் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. மரபு சார்ந்த அம்சங்கள் இல்லாமையை முக்கிய குறைபாடாக நான் கொள்வதானால் வேறு சிலருடைய கவிதைகளை ரசித்ததாகவே கூறியிருக்கமாட்டேன்.

கவிதைகளின் அமைப்பைப்பற்றி முதலிலும் உள்ளடக்கம் பற்றிப் பின்னரும் நான் குறிப்பிடுவதால் என் மதிப்பீடும் அந்த வரிசையி லேயே மேற்கொள்ளப்பட்டது என்ற முடிவுக்கு சேரன் வரமுடியு மானால், அவர் நிஜமாகவே ஒரு மகாவிஞ்ஞானியாகத்தான் இருக்க வேண்டும். அவரது விஞ்ஞான ரீதியான இன்னொரு முடிபு



கோஷங்களும் சுலோகங்களும் பயனுள்ள பணியாற்றுவதை நான் ஏற்பதானால் கவிதைகள் சில உபதேசங்களாக அமைவதைப்பற்றிக் குறைப்படுவது பொருந்தாதது. ''தெருத்திண்ணை ராஜகோபுரமாகி விடாது'' என்று சொன்னேனே! அதன் அர்த்தம் சேரனுக்கு விளங்க வில்லையா? பயனுள்ள பணியாற்றும் காரணத்தால் கோஷம் கவிதையாகிவிடாது.

''ஏகாதிபத்தியமும் வலது சந்தர்ப்பவாதமும்'' என்ற கவிதைத் தலைப்பு மட்டுமே எப்படி உபதேசமாகும் என்று சேரனுக்குத்தான் தெரியும். என்னுடைய அந்தக் கவிதை படு சராசரியானதும் வெறும் படிமங்களாளானதும் என்பது வேறு விஷயம் இது போன்று சில வற்றினை 70களின் முற்பகுதியில் எழுதியது பற்றியும் அவற்றின் குறைபாடுபற்றியும் என் (நதிக்கரை மூங்கில்) முன்னுரையிற் கடுமையாகவே விமர்சித்திருக்கிறேன்.

'52' இல், ''ஒருக்காலே நடந்தாலோ ஒப்பார்கள் என்பதனால் இருகால் நடந்தேறும்'' என்பதில் முதற்சொல் ''ஒருக்காலோ'' என்று வந்தமை கவிதை வரிகளை அர்த்தமற்றதாக்கியது. (சேரன் சொல்வது போலன்றிக் கவிதையிற் பாதிப்பை ஏற்படுத்துகிறது).

அது கருதி நான் மேலும் செய்த திருத்தங்களுடனான தாயகம் கவிதையை இங்கு தருகிறேன். இந்த 'ஐம்பத்திருவருக்கு...' கவிதையை மரணத்துள் வாழ்வோமின் '52' உடன் ஒப்பிட்டுப் பாருங்கள். (இங்கு வந்த 'ஒருக்கால்' என்பதை 'ஒருகால்' என மேலும் திருத்தியிருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்).

சற்றே வழி விலகி
நந்தி வழி விட்டாற்போல்
வெலிக்கடையில் சிறைக்கூட
இரும்பு நெடுங்கதவு
தானே திறக்கும்.
அங்கு,
காவலர்கள் அறியாமல்,
கற்சுவர்கள் சூழ்ந்திருக்கும்

அறைக்குட் கொலை நடக்கும்.
பகுத்தறிவு ஆளுகிற
யுகமதனில் அற்புதங்கள்
ஒருக்கால் நிகழுமெனின்
ஒப்பார்கள் என்பதனால்
மறுகால் நிகழும்
கண்டு விறைத்த
சிறைச் சுவர்கள்
மௌனிக்கும்.

என் விமர்சனத்தில் நான் குறிப்பிட்ட வழுக்கள் இவற்றைவிடப் பாரியவை. ''அவனுக்குக் கண் குருடு'' என்று சுட்டிக் காட்டினால், ''உனக்கும் வலது கண் கொஞ்சம் சிறியது தானே'' என்ற விதமான பதிலைத்தான் சேரனிடமிருந்து எதிர்பார்க்கலாம். நான் குறைபாடு களைச் சுட்டிக் காட்டுவது என்னிடம் பிழைகள் இல்லாததாலும் அல்ல, என் பிழைகளை மூடிக்கட்டும் அவசியத்தாலும் அல்ல.

கவிதைகளிடையே உயர்வு தாழ்வு பற்றியும், வாளும் துப்பாக்கி யும் பற்றியும் சேரன் அவசரப் பிரகடனங்களைச் செய்துவிட்டுப் பிறகு பூசிமெழுகும் விளக்கங்கள் எம்.ஜி.ஆரின் 'அண்ணாயிஸத்தையே' அயரவைத்து விடும். இன்றும் நமது கலாசார, இலக்கிய மரபுகளில் வீரத்தைக் குறிக்க வாள் பயன்படுவது போல துப்பாக்கி பயன் படாமை ஏனென்று சேரனுக்கு விளங்காவிட்டால் அவருக்கு மரபின் முக்கியத்துவமே சரிவர விளங்கவில்லை என்றுதான் கருத வேண்டும். அவர் பாட்டன் பரம்பரைக் கவிராயர்களைப் பிய்த்தெடுக்கப் பாவித்த உதாரணத்தில் கோளாறு இருந்ததையே சுட்டிக்காட்டினேன். சேரன் முயலுக்கு, இரண்டும் இரண்டும் மூன்று கால்கள்!

நதிக்கரை மூங்கிலில்' '52', 'ஹீட்லர் டயறிகள்' என்பன எனக்குச் சொல்லாமலே தமிழவன் சேர்த்தவை. எம் முன்னுரை ஜூன் '83இல் எழுதப்பட்டது. அதன்பின் தொகுதி பற்றி நான் எதுவுமே செய்யவில்லை கவிதைகள் ஓகஸ்ட் மாதம் எழுதப்பட்டவை. இலங்கையில் அவை பிரசுரமானமை தமிழவனுக்குத் தெரியாது. எனவே இருட்டடிப்பு என்ற கேள்விக்கே இடமில்லை. அத்தொகுதிக்



கான பதிப்புரை பற்றித் தமிழவனும் பத்மநாப ஐயரும் மனவருத்தம் தெரிவித்திருந்தனர். திரு, யேசுராசாவுக்கும், பத்மநாப ஐயருக்கும், அவை இலங்கையிற் பிரசுரமானவை தெரியும் சேரனுக்கும் தெரிந் திருக்க இடமுண்டு. எனவேதான் இருட்டடிப்பு பற்றிய கேள்வி எழுந்தது.

தாயகத்தில் மட்டுமே தொகுப்பாளர்களது குறுகிய பார்வை யினின்று வேறுபட்ட முறையிலான கவிதைகள் வரவில்லை. உதாரண மாக சுகுமார் என்பவரின் ஒரு நல்ல கவிதை சிற்றேடு ஒன்றில் வந்தது. ('வழி' என்று ஞாபகம்!) இயக்கங்களின் தலைமைகளின் தவறான போக்குகளால் கீழ்மட்டங்களில் ஏற்படும் தவறான போக்கு கள் பற்றிய அக்கவிதையும் வேறொன்றிரண்டும் எனக்குப் பிடித் திருந்தன. தேசிய விடுதலைப் போராட்டம் என்ற பேரில் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள பிரச்சனைகளில் இனப்பகையைப் பிரதான முரண் பாடாக்குவது தீங்கானது. பிரிவினையே தீர்வு என்பவர்கள் அதை மறுப்பவர்களை மக்கள் எதிரிகளாகக் காட்டுவதன் மூலம் தமிழ் மக்களது பிரச்சனையின் அடிப்படையான முரண்பாட்டின் வர்க்கத் தன்மையையே மூடிக்கட்டப் பார்க்கிறார்கள். தாயகம்-11இல் வந்த 'தெருவில் இறங்கினால்' கவிதையில் உள்ள சமனான நோக்கைச் சேரன் ஏற்க மறுப்பது கூட அவ்வியாதியில் ஒரு அறிகுறியே.

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான முரண்பாடு களை நேசமுறையில் தீர்க்க முடியுமென நான் நம்புவது என் மூளையின் குறைபாடாகச் சேரனுக்குத் தெரிகிறது. வேளாளரும் பஞ்சமரும் சுமுகமான முறையில் முரண்பாடுகளைத் தீர்க்க முடியு மென்பது மூளைக்கோளாறாக சிலருக்குத் தெரிகிறது ஆணினமும் பெண்ணினமும் முரண்பாடுகளைச் சமாதானமாகத் தீர்க்க முடியு மென்பது சித்தப்பிரமையாகப் பெண்ணுரிமைத் தீவிரவாதிகட்கு தெரிகிறது. முழு மானுடமும் சமத்துவ அடிப்படையில் ஒன்றுபடலாம், ஒன்றுபட வேண்டும் என்பது சமுதாயப் புல்லுருவிகட்குப் பிதற்ற லாகத் தெரிகிறது. சேரன் முதலாய அறிஞர் வரிசையில் சேராமல், என் மூளைக்குறைபாட்டோடேயே வாழ நினைப்பதல்லால் வேறொன்றறியேன் பராபரமே!

இறுதியாக, அலையில் எனக்குப் பதில் எழுதும் போக்கில் எஸ். வி. ராஜதுரை என்பவர் தொடுத்த அபாண்டமான குற்றச் சாட்டுகட்கு நான் எழுதி ஒன்றரை வருஷமாகியும் வெளிவராத என் பதிலிலிருந்து ஒரு பகுதி இன்னும் பொருந்தும் என்று நம்புகிறேன்:

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



''...கேள்விகட்குப் பதில் சொல்லாமல் கேள்வி எழுப்பியவருக்கு நோக்கம் கற்பிப்பது பலமல்ல — மிகவும் பெரிய பலவீனம். எனவே என் பதிலை இத்துடன் நிறுத்திவிடுகிறேன். பலவகையிலும் என்னைப்பற்றி... சொல்ல முனைவன பற்றி நான் சிரமப்படப் போவதில்லை. அவை என்னைவிட அவரைப் பற்றிய அதிகம் சொல்வன.''

ஈழமுரசு 1986

# மரணத்துள் வாழ்வோம் சேரனின் பதில்

'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுதி தொடர்பாக மறுபடியும் ஒரு சுருக்கமான பதிலை எழுத நான் பேராசிரியர் சிவசேகரத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்.

'சீனா பற்றிய சேரனது வார்த்தைகள் அப்பழுக்கற்ற பொய்கள்' என்றும் 'லீஸியென்-நின்னுடைய இலங்கை வருகை ஆயுத உதவி பற்றியதாகவே இருக்கும்' என்னும் என்னுடைய 'ஆருடம்' எண்ணி எட்டே நாளில் பொய்யாகிவிட்டது என்றும் தயக்கமில்லாமல் எழுதுகிறார்.

இலங்கை அரசுக்கு சீனாவின் ராணுவ உதவி பற்றி நான் எழுதியவற்றில் எது ஐயா பொய்? பீரங்கிப் படகுகளை சீனா இலங்கைக்கு அதிகளவில் கொடுத்திருப்பது பொய்யா மெய்யா? லீ–ஸியென்–நின் (சீன ஜனாதிபதி) இலங்கை வந்தபோது சீனத் தயாரிப்பான, சீனா வழங்கிய புது ஆயுதங்களைத் தாங்கிய வீரர்களே அணிவகுப்பு மரியாதை செய்தனர் என்று மார்ச் 15, 'டெய்லி நியூஸ்' பத்திரிகை முன்பக்கத்தில் எழுதுகிறது

மேலும் பீரங்கிப்படகுகளையும், சிறுவிமானங்களையும் சீனா இலங்கைக்கு வழங்க இருப்பது சிவசேகரத்திற்கு தெரியாமலிருக் கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு அது தெரிகிறது.

''தேசிய விடுதலைப் போராட்டம் என்ற பேரில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினைகளில் இனப்பகையைப் பிரதான முரண்பாடாக்குவது தீங்கானது. பிரிவினையே தீர்வு என்பவர்கள் அதை மறுப்பவர்களை மக்கள் எதிரிகளாகக் காட்டுவதன் மூலம் தமிழ் மக்களது பிரச்சினையின் அடிப்படையான முரண்பாட்டின் வர்க்கத் தன்மையையே மூடிக் கட்டப் பார்க்கிறார்கள்.''

இன்று நடைபெறுவது தேசிய விடுதலைப் போராட்டம் என்று மரணத்துள் வாழ்வோம் தொகுதியின் முன்னுரையில் நான் எழுதும்

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



போது அது இந்தத் தத்துவ சிகாமணியின் கண்ணோட்டத்தில் குறுகிய பார்வையாகிறது.

நான் மறுபடியும், மறுபடியும் 'ஈழமுரசு' இதழ்களில் எழுதியுள்ள பதில்களில் எழுப்பிய அடிப்படையான பிரச்சினை, சிவசேகரம் போன்றவர்கள் இன்றைய எமது போராட்டத்தை ஏற்றுக்கொள்ளாத வர்கள்; இன்றைய போராட்டத்தை 'குறுகிய பார்வைக் கோளாறின்' விளைவாகக் கருதுபவர்கள். தமது நிலைப்பாட்டை நேரடியாகச் சொல்லத் தயங்குபவர்கள். இந்த அடிப்படையிலிருந்தே 'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியை அவர் விமர்சித்ததும் நான் பதிலெழுதியதும்.

''தேசிய விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் இனப் பகையைப் பிரதானமாக்கி தீங்கு விளைவிக்கிறோம் என்று அவர் எழுதுகிறபோது தமிழர்களுக்கு என்ன பிரச்சினை? அவையெல்லாவற்றையும் எப்போதோ தீர்த்துவிட்டோமே என்று ஜே. ஆர். ஜயவர்த்தனா ஒருமுறை சொன்னதே எனக்கு ஞாபகம் வருகிறது!

''குதிரை மேலிருந்து மலர்களைப் பார்ப்பதுபோல'' என்று குறிப்பிடும் வழக்கம் சீன மரபில் உள்ளது. (சிவசேகரத்துக்குப் பிடித்த சீனா; சிவசேகரம் நியாயப்படுத்துகிற சீனா) எனது கட்டுரைகள் தொடர்பாக அதனையே சிவசேகரம் என்கிற தனக்குப் பிடித்தமான போக்குடன் வாழ நினைக்கும் ஒரு பேராசிரியருக்குச் சொல்ல விரும்புகிறேன்

(ஈழ முரசு, ஜூன் 86)

# முருகையனின் "அது அவர்கள்"

நம் தமிழ்ச் சமுதாயம் நவீனத்துவத்தின் வசதிகளை அதிக தயக்கமின்றி ஏற்றுக்கொண்டுள்ளது. ஆயினும் எதிர்காலம் பற்றிய தெளிவுடன் கூடிய விரிந்த சமுதாயப் பார்வையுடைய நவீன சிந்தனையை விருத்தி செய்வது நமக்கு அவ்வளவு எளிதாக இல்லை.

விஞ்ஞானக் கல்வியும் தொழில்நுட்பமும் முற்போக்கான சமுதாயப் பார்வையினின்றும் பிரிந்து நிற்கின்றன. நவீனத்துவத்தின் வலிமை அதிகார வர்க்கத்தின் இரும்புப் பிடியை மேலும் இறுக்கப் பயன்படும் அதே சமயம் நவீன மேலைக் கலாசாரத்தின் பொருத்த மற்ற அம்சங்கள், அவற்றின் பொருந்தாமை காரணமாக மேலும் சமுதாய, கலாசார சீரழிவுக்குத் துணைபோகின்றன.

மரபின் உயரிய அம்சங்களை விருத்தி செய்யவும் அவற்றை நவீன சிந்தனையுடன் இணைக்கவும் ஒரு சிறப்பான எதிர்காலத்தை கட்டியெழுப்பவும் முழு மானுடத்தினதும் உயர்வுக்கும் தமிழ்ச் சமுதாயம் மீண்டும் தன் உரிய பங்களிப்பைச் செய்யவுமான பாரிய கடமை நம்முன் உள்ளது. ஆயினும் சிந்தனையை விருத்தி செய்வதில் நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம். இத் தேக்க நிலையை சமுதாய வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் நாம் காணக் கூடியதாக உள்ளது.

நவீனத்துவத்திற்கான தேவை நமது சமுதாயச் சூழலினின்று எழுகிறது. ஆயினும் அது வெளிப்படும் விதமோ நேரடியாகவே அத்தேவை சார்ந்ததாக அமைவதில்லை. குருட்டுத் தனமாக மேலைநாட்டு நடைமுறைகளைப் பிரதிசெய்யும் போக்கு, நாகரிக நடை உடை பாவனைகளிலும் கல்வி, விஞ்ஞானம் மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் சிந்தனைத் துறையிலும், கலைத்துறையிலும் தன் பாதிப்பை காட்டியுள்ளது.

இவ்வாறான தவறுகள் முற்போக்குச் சக்திகள் மத்தியிலும் முற்போக்கு இயக்கத்தின் பல துறைகளிலும் கூட ஓரளவுக்கு நேர்ந்துள்ளன.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



இன்று நம் மத்தியில் பழமை பேணலை ஒத்த அளவு தவறான ஒரு போலி நவீனத்துவம் வளர்ந்துள்ளது. புதியது என்ற ஒரே காரணத்துக்காக ''புதிய'' அரசியல் சித்தாந்தங்களையும், கலை வடிவங்களையும் தொழில் நுட்பங்களையும் கொண்டாடும் மூடத்தனத்தை விடப் பழமை பேணலில் நிதானம் உண்டு. நமது சமுதாயச் சூழலில் பல நல்ல நவீன கலைவடிவங்கள் வேரூன்றத் தவறியமைக்கான ஒரு முக்கிய காரணம், அவை நமது சமுதாயத் தேவைகளை அனுசரித்து விருத்தி செய்யப்படாமை எனலாம்.

இலக்கியத்தில் உரைநடை எழுச்சி பெற்ற பின்பு, கவிதைத் துறையில் புதுக்கவிதை அதாவது மரபால் வரையறுக்கப்பட்ட சந்த விதிகளையும் பிற கட்டுப்பாடுகளையும் தளர்த்திப் பேச்சின் ஓசை நயங்களைப் பயன்படுத்தும் கவிதை வடிவம் உருவாகி வளரும் தேவையும் சாத்தியக் கூறுகளும் உருவாகின. புதுக்கவிதை மேலும் விருத்திபெற்றுக் கவிதையின் ஓசை நயம் தவிர்ந்த பிற பண்புகட்கு அழுத்தம் செலுத்தும் நிலைமையும் உருவாக இடமுண்டு. ஆயினும் நமது சூழலில் புதுக்கவிதை, பகுதி பரிசார்த்த முறையிலும் பகுதி சமுதாயச் சார்பற்ற முறையிலுமே தன் ஆரம்பத்தைக் கொண்டிருந்தது.

கவித்துவத்தின் வீச்சுக்கு ஒரு வலிய வாகனமாக இல்லாது, தம் இயலாமைக்கு ஒரு சலுகையாகவே இன்றும் பலர் புதுக்கவிதையைப் பயன்படுத்துகின்றனர்.

என் கருத்தில் படைப்பாளியின் ஆக்கத் திறமைக்குப் புதுக் கவிதை வடிவம் அதிக சுதந்திரம் தருகிறது என்று தெரிவதால், அதையே அதிகம் பயன்படுத்த விரும்புகிறேன். ஆயினும் நான் அதிகம் சுவைத்த சமீபகாலக் கவிதைகளில் பல மரபு சார்ந்த வடிவின.

அண்மைக்காலத் தமிழ்க் கவிஞர்களில் மரபுடன் பரிச்சயமுள்ளவர்களே கவிதை உணர்வில் மேலோங்கி நிற்கின்றனர் என்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

புதுக் கவிதையாளர்கள் தங்கள் கவிதை வடிவத்தின் முழு வலிமையையும் விருத்தி செய்து பயன்படுத்த மேலும் தேவை இருக்கின்றது. இது எதிர்காலத்தில் நிறைவேற வேண்டும் என்பது என் அவா.

வெண்பா போன்ற செய்யுள் வடிவங்களின் ஓசைநயம் மரபுக் கவிதையில் ஈடுபாடற்றவர்கட்கு எளிதில் புலப்படாது. சமகாலத்



தமிழ் உரைநடையின் சந்தம் வெண்பாவினதினின்றும் வேறுபட்டது. எனவே, வெண்பா பெரும்பாலும் அதன் சந்தத்தில் மட்டுமன்றி அதன் மரபையொட்டிய மொழி நடையிலும் எழுதப்படுகின்றது. சமகாலச் சொற்களும், சொற்றொடர்களும் வெண்பாவில் இன்று பயன்படுத்தப்பட்டாலும் அதன் வாக்கிய அமைப்பில் மரபின் தாக்கமே ஓங்கி நிற்பதை நாம் காணலாம்.

முருகையன் மரபு வழிக் கவிஞராயினும் அவரது சிந்தனை நவீனத்துவம் சார்ந்தது. அவர் விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் நம்பிக்கை மிகுந்தவர். அவரது கவிதைகளில் அவரது பார்வையின் நவீனத்துவத்தை அடையாளம் காண்பதில் நமக்கு சிரமம் இல்லை. சிந்தனையின் நவீனத்துவம் மரபின் வலிமையுடன் சேர்ந்து செயற்படலாம் என்பதற்கு அவரது கவிதைகள் ஆதாரந்தருவன.

எனினும் குறிப்பிட்ட ஒரு கவிதை வடிவின் தன்மை அதன் மூலம் சொல்லக் கூடியவற்றின் அளவை மட்டுப்படுத்துகிறது. எனவே, அதன் மூலம் சாதிக்கக்கூடியவற்றை விஸ்தரிக்க முற்படும்போது அதன் வரையறைகளை மீறும் நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

புதுக் கவிதையின் தோற்றம் மரபுக் கவிதை விதிகளினின்றும் விடுபடும் தேவை சார்ந்தது. ஆயினும் கவிதையின் வடிவத்தையும் அடிப்படை விதிகளையும் மீறாமல்சொற்பிரயோகத்திலும் கவிதையை கையாளும் நோக்கிலும் முறையிலும் புதுமையைப் புகுத்த முடியும்.

முருகையனது முயற்சி இந்த வகையினது. எனினும் மரபு சார்ந்த உரைநடைத் தமிழிலும் பழந்தமிழ்க் கவிதையிலும் வழங்கும் சொற்களும், சொற்பிரயோகமும் சமகால கவிஞர்களின் (முக்கியமாக நவீன சிந்தனையுடையோரிடையே) பெரும்பாலானவர்களை விட முருகையன் மீது கூடுதலான பிடிப்பையுடையன.

''அது—அவர்கள்'' என்ற கவிதை நூலில் அவர் கூற முயலும் பொருள் நவீன சிந்தனை சார்ந்தது. கதை சொல்லும் பாங்கில் அவர் தன் கருத்துக்களை விருத்தி செய்து கொண்டு போகிறார். அதே சமயம் தமிழ்க் கவிதை மரபில் நீதிகளைக் கூற மிகவும் பயன்பட்டு வந்த வெண்பா வடிவத்தை அவர் தெரிந்தெடுத்தமை அவரது கவிதை நூலின் நோக்கத்தை வலியுறுத்துகிறது என்று நினைக்கிறேன்.

ஆயினும் அவர் வெண்பாக்கள் மூலம் தன் கவிதைப் பொருளை வெளிப்படுத்த முற்பட்டதன் விளைவாக சொற் பிரயோகம் சரளமான

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



தாகவே இருப்பினும் சமகாலத் தமிழ் பேசுவோர்க்கு எளிதானதாக இல்லை.

மறுபுறம் நவீன சிந்தனைகளைக் கூறுவதில் தமிழின் சொல் வளம் தொடர்பான பிரச்சினைகளையும் அவர் கையாள வேண்டியிருக்கிறது. இதை அவர் மிகவும் திறமையாகவே செய்துள்ளார். நமக்குப் பரிச்சயமான கருத்துக்களையும் நமது அன்றாட அனுபவங்களையும் துணையாகக் கொண்டே, தான் கூற விரும்பியதைக் கூறிவிடுகிறார்.

நூலின் பதிப்புரையும் முன்னுரையும் நூலின் உள்ளடக்கம் பற்றிப் போதியளவு தெளிவுபடுத்தியுள்ளன. முதலாவது காண்டத்தில் தமிழர் மெய்யியலில் (இந்திய மெய்யியலின்று வேறுபட்டதாக அல்லாது, தமிழ்ச் சமுதாயத்தின் சூழ்நிலையில் விருத்தி அடைந்த, இந்திய மெய்யியலின் ஒரு கூறாக இதைக் கருதுவது பொருத்தம்) வாழ்வு, சாவு, இன்ப துன்பங்கள், உயிர், ஊழ் என்பன பற்றிய கேள்விகள் நடைமுறையிலின்று எழுவதைக் காட்டுகிறார்.

இரண்டாம் காண்டம் மனிதன் தன் சூழலின் அடிமையாக இல்லாது அதன் மீது ஆளுமை செலுத்த முற்படுவதைச் சித்தரிக்கின்றது மனிதரது உண்மையான பொருள் முதல்வாதத் தன்மையையும் இயங்கியல் அணுகுமுறையையும் அவர் வலியுறுத்துகிறார்.

தான் கூறவந்த கருத்துக்களை மனித அனுபவங்களின் வெளிப்பாடுகளாகவும் அவரது கவிதைகள் வரும் மனிதரின் மன இயக்கத்தின் வழியே பெறும் முடிபுகளாகவும் வெளிப்படுத்தும் முறை மிகவும் சிறப்பானது.

இக்கவிதை நூல் மனித அறிவு இப்படித்தான் விருத்தியடைந்தது என்று கூறும் பாடநூலோ சிந்தனை பற்றிய ஒரு வரலாற்றுச் சித்தரிப்போ அல்ல. கவித்துவமான முறையில் நடைமுறைக்கும் சிந்தனைக்கும் இடையிலான இயங்கியல் உறவை எளிமையாகச் சித்தரிக்கும் ஒரு நல்ல முயற்சி என்பது என் கருத்து.

எனினும் இரண்டு முக்கியமான குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது பயனுள்ளது என்று நினைக்கிறேன். ஆணாதிக்க சமுதாயச் சிந்தனையின் அடிப்படை மறுப்பின்றி ஏற்றுக் கொள்ளப் பட்டு அந்த அடிப்படையிலேயே மனித சமுதாயத்தினதும் மனித சிந்தனையினதும் விருத்தி காணப்பட்டுள்ளது என்பது ஒன்று விஞ்ஞானத்தின் விருத்தி வர்க்க சார்பற்ற ஒரு அறிவு வேட்கையின் விளைவு என்ற கருத்துக்கு இடமேற்பட்டுள்ளது என்பது மற்றது.

இவ்விரு விஷயங்களிலும் முருகையன் கூடிய கவனம் காட்டியிருக்கலாம்.



பெண் விடுதலை பற்றிய தெளிவீனமான சிந்தனைகளைப் பற்றியும், விஞ்ஞானம் பற்றிய அடிப்படையான புதிய பல கேள்விகளைச் சரிவர விளங்காதவர்கள் நம்முள் உருவாக்கும் கருத்துக் குழப்பங்களைப் பற்றியும் அவர் அறிவார் என்பதனாலும், இவற்றில் அவரது நிலைப்பாடு முற்போக்கானது என்ற காரணத்தாலும் இக் குறைபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இயற்கையின் ரசனையை விட மானுட வாழ்க்கை அனுபவத்தின் சுவைப்புக்கே முருகையன் முதன்மை தருகிறார். இயற்கையின் தயவிலன்றி இயற்கையினை அறிந்து தனது சூழலின் மீது ஆளுமை செலுத்தும் மானுடன் தன் சமுதாயத்தை ''ஊரை உறிஞ்சி ஒருவர் கொடுக்காத, நாராய் பலபேர் நலியாத, பங்கமில்லாத, பழி இல்லாத 'ஒன்றாக' உயர்த்த வேண்டும் என்ற வேட்கையை ''அது அவர்கள்'' வெளிப்படுத்துகிறது. ''மங்கலங்கள் மின்னட்டும் வாழ்வு கணீரிடட்டும்/எங்கும் இனிமை இசையட்டும் - பொன்கலந்த வைகறை வேனில் மலரை விரிக்கட்டும் / திவ்வியமாய்ப் பொங்கட்டும் தேன்'' என்பது முருகையன் பிரகடனம் செய்யும் இலக்கு. அவரது கவிதைகளில் தேன் எப்போதுமே திவ்வியமாகப் பொங்குகிறது. அது எல்லோருக்கும் எட்டக் கூடுமாயின் சிறப்பாக இருக்கும். அவரது எழுத்தில் ஓங்கி நிற்கும் பழந்தமிழ் நடை இதற்குச் சிறிது தடையாக இருக்கிறது என்பது என் மனக்குறை.

வீரகேசரி, 11-1-91

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கல்வயல் குமாரசாமியின் மரண நனவுகள் *

இது கல்வயல் குமாரசாமியின் கவிதைகளின் விமர்சனம் என்பதை விட, அடிப்படையில் மரபு சார்ந்த சிந்தனையை உடைய ஒரு படைப்பாளி நவீன சூழலொன்றன் நெருக்கடிகட்கு முகங்கொடுக்குமாறு தன் படைப்புக்களை முன்வைக்கும் போது, மரபு வழியான சிந்தனைக்கும் நவீனத்துவத்துக்கும் இடையிலான முரண்பாடுகள் தம்மை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்று காட்டும் ஒருசிறு முயற்சி என்பதே பொருந்தும்.

1977க்குப் பின் முக்கியமாக 1983ஐ அடுத்து, இலங்கைத் தமிழர் முகங்கொடுக்க நேர்ந்த அடக்குமுறையும் இன ஒடுக்கலும் அவர்களிடையே ஒரு கலாச்சார அதிர்ச்சிக்கு காரணமாகிறது. ஏகாதிபத்திய கலாச்சாரச் சீரழிவை மேல் நாட்டுக் கலாச்சாரம் எனவும் நவீனத்துவம் எனவும் மயங்கும் ஒரு போக்கினால் ஒரு கலாச்சார மரபு சிதைவுக்குட்படும்போது அதனைத் தடுப்பதில் மரபுவாதமும் முற்போக்கான நவீனத்துவமும் தோற்றத்தில் ஒன்றுபடுகின்றன. ஆயினும் நோக்கில் வேறுபடுகின்றன. முன்னது மாற்றங்களை மறுத்து மரபை நிலைநிறுத்த முற்படுகிறது. பின்னது மரபின் நல்ல அம்சங்களை ஒரு நவீன சமுதாயப் பார்வையுடன் இணைந்து முன்னோக்கிச் செல்ல முனைகிறது. அண்மைக்கால மாற்றங்கள் ஒரு புதிய புறநெருக்கடியுடன் தொடர்புடையன. அதன் விளைவுகளைப் பரிச்சயப்பட்ட மரபின் முறைகளால் புரிந்துகொள்ள முடிவதில்லை. பிரச்சனையின் அடிப்படையான முரண்பாடு சரியாக அடையாளங் காணப்படாமையால், வெறுமே புறத்தோற்றத்தின் அடிப்படையிலே பிரதான முரண்பாடு எதுவென்று காணப்பட்டு பேரினவாத அடக்குமுறைக்கு மறுமொழி குறுகிய இனவாதமே என்ற முறையில் தீர்வுகளை முன் வைப்போர் 'சோஷலிஸ தேசியவாதம்', 'நவமாக்ஸியம்' போன்ற அலங்கார முக்காடுகளால் தம் குறுகிய பார்வையை மூடுகின்றனர். குமாரசாமியின் பார்வை மரபு சார்த்ததாயும் முரண்பாட்டின் அடிப்படையைச் சரியாக அடையாளங்

* கல்வயல் குமாரசாமியின் 'மரண நனவுகள்' — யாழ். இலக்கிய வட்டம், ப. 40



காணாததாயும் இருந்த போதும் அவர் சார்ந்து நிற்கும் மரபின் மனிதாபிமானம் அவரைக் குறுகிய இனவாதப்பார்வையினின்று தடுத்து நிற்கிறது சமுதாயத்தில் நியாயத்தையும், கொடுமைகட்கு முடிவையும் வேண்டிநிற்கும் அவருடைய கவிதைகளில் அவரது நகைச்சுவை உணர்வு ஒரு வலிய கருவியாகச் செயற்படுகிறது.

அவரது கவிதைகளிற் பெருவாரியானவை பேச்சுமொழியைச் சார்ந்திருப்பது மரபுடன் அவரது முறிவைக் காட்டுவதாகக் கொள்ள இயலாது. மரபுவழிச் சந்தமே மிகுந்திருக்கும் அவரது கவிதைகளில், அந்தச் சந்தம் தெரியாதவிதமாக வரிகளை மாற்றி அமைத்துள்ளமை ஒரு புதுக்கவிதைத் தோற்றத்தைத் தந்தாலும் அங்கு மரபுச் சந்தத்தை அடையாளம் காண்பதில் சிரமம் இல்லை. மஹாகவியும் முருகையனும் எழுதிய மரபுவழிக் கவிதைகளை பொருட்தெளிவு வேண்டி மரபுசார்ந்த வண்ணம் அமைந்த வரிகளைப் பிரித்து எழுதிய வடிவில் வரக்கண்டிருக்கிறேன். கல்வயல் குமாரசாமியின் கவிதைகள் பிரிக்கப்பட்டுள்ள விதம் இந்த நோக்கையே உடையதென்றால் கூட அதன் அவசியம் பற்றிய ஐயங்கள் எனக்குள்ளன. அதைவிட மரபின் சந்தம் வாசிப்பவரால் அடையாளங் காண முடியாது போவதுடன் மாற்றி அமைக்கப்பட்ட வரிகள் பேச்சோசையின் ஒலி நயத்தைப் பெறாமல் இரு வகையிலும் இழப்பாகிவிடுகிறது என்றே நினைக்கிறேன். மரபுவழிக் கவிதை நடையில் தேர்ந்தவனல்ல. என்னால் மரபின் சந்தத்தை இடையிடை பாவிக்க முடிகிறதே ஒழிய அதன் மீது எனக்கு ஆளுமை குறைவு. ஆயினும் மரபுவழிக் கவிதைக்கு இனி இடமில்லை என்ற வாதம் எனக்கு ஏற்புடையதல்ல. அதற்கு என்றுமே தமிழில் உயர்ந்த இடமுண்டு. அதன் உயர்வு, அது எவ்வளவு சிறப்பான கவித்துவத்துடன் சமகால சமுதாயத்தைச் சார்ந்து நிற்கிறது என்பதிலேயே தங்கியுள்ளது. கர்நாடக சங்கீதத்தையும் பரதத்தையும் சிற்பக்கலை பற்றியும் பெருமைப்பட முடியுமானால் நம் மரபுக் கவிதை பற்றியும் பெருமைப்படலாம். இக்கலைகளில் வல்லவர்கள் ஆற்றக்கூடிய பணி யாதெனில், தம் ஆற்றலை நவீன சிந்தனையுடனும் புதிய சமுதாயத் தேவைகளுடனும் பிணைப்பதே. புதுக்கவிதைக்கு அதிக இடம் இருப்பதால் மரபுக் கவிதை அம்சங்கள் அழிய அவசியமில்லை. இன்றும்கூட பாரதியின் மரபுக் கவிதைகளில் நாம் காணும் கவித்துவத்தையும் சிந்தனையில் நவீனத்துவத்தையும் எத்தனை புதுக் கவிதைகளில் காணமுடிகிறது? மரபுக் கவிதையை அதன் மரபு வடிவிலேயே வழங்கத் தயங்க வேண்டியதில்லை என்றே அபிப்பிராயப்படுகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



உதாரணமாக,

ஆண்மை அற்ற அலிகள்
வெறியர்
பூவை ஏன் கசக்கிப் புழுதியில்
எறிந்தார்? (சத்தியமூச்சின் முற்றுப் புள்ளி)

என்ற வரிகளின் கருத்து மேலும் தெளிவாக வரவேண்டுமாயின்

''புழுதியில் எறிந்தார்''

என்பது ஒரே வரியில் வந்திருக்க வேண்டும். ''எறிந்தார்'' என்ற பதத்திற்கு அதிக அழுத்தம் தருவதே நோக்கமானாலும், ''புழுதியில்'' என்ற பதம் முன்னைய வரியில் வரும் சொற்களுடன் வருவது பொருந்தவில்லை அதே கவிதையின் இறுதி வரிகளான

அமைதியாய்
உறங்கு நீ
அம்மா விடுதலைப் பூக்களால்
வைத்துனை
விடுதலைப் பூக்கள் வைத்து
உனை இறைஞ்சுவோம்

என்ற வரிகள் கூட கவிஞரின் நோக்கம் பற்றியும் அது நிறைவேறியதா என்பது பற்றியும் கேள்விகளை எழுப்புகின்றன.

'நாய்களுக்கு வந்த நடப்பு' கவிதையில்

......
நம்நாட்டில்
தாய், பிள்ளை, தம்பி
சகோதரங்கள்
எல்லாமே
நாய்க்குப் பிறகு தான்
நாங்களும் கூடத்தான்.

என்றவரிகளில் 'சகோதரங்கள்' தம்பி சகோதரம் இல்லையா?) 'தாய், பிள்ளை, தம்பி' என்ற வரிக்குச் சமாந்தரமாக அமைவதற்கு அதிகம் நியாயம் தெரியவில்லை. 'தம்பி சகோதரங்கள்' பேச்சு வழக்கில் வரும் ஒரு சொற்றொடர் என்றால் அது கவிதையில் ஒன்றாகவே வைக்கப்பட்டிருக்கலாம். உண்மையில் மரபுச் சந்தம் சார்ந்து வரும் அரை வரிகளான



''தாய், பிள்ளை, தம்பி
சகோதரங்கள் எல்லாமே
நாய்க்குப் பிறகு தான்
நாங்களும் கூடத்தான்''

என்பன அதிக நியாயமின்றிப் பிரித்து அடுக்கப்பட்டுள்ளன. இதனால் கவிதைக்கு எவ்வகையிலும் வலுவூட்டப்படவில்லை.

மரபினின்றும் கல்வயல் குமாரசாமி வேறுபட்டு நிற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. எதுகை மோனைகளை அவர் எல்லா இடத்திலும் பேணவில்லை. சந்தந்தைக்கூடச் சில இடங்களில் அவர் தளர விடுகிறார். ஆயினும் மரபுடனான அவரது முக்கியமான வேறுபாடு கவிதையில் சமகாலப் பேச்சுமொழியின் பிரயோகம். இது நவீனத்துவம் ஆகிவிடும் என்று நான் கருதவில்லை. (அப்படியானால் நாட்டார் பாடல்கள் எல்லாம் நவீனத்துவமானவையே). பேச்சுமொழியில் மரபுச் சந்தத்தை இணைப்பதில் அவர் பெரிதும் வெற்றி கண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் மரபுத் தமிழ் பொருந்தாமலே சில இடங்களில் வந்துவிடுகிறது.

உதாரணமாக, ''கட்டாயம்'' என்ற கவிதையில் இறுதி வரி :

கட்டாயம் வேண்டும் 'கலை'

'கலை' என்ற சொல்லை மேற்கோட் குறிக்குள் அவர் பாவிப்பது அதன் அர்த்தம் வாசகர்களுக்கு ஒரு வேளை தெரியமாட்டாது என்ற ஐயத்தினைக் குறிக்கிறது. கவிதையில் மிகுதி பெருமளவும் பேச்சு வழக்கிலுள்ள சொற்களாலானது.

'என்னை விடுங்கோ' என்பது வெண்பாக்களாலானது அதில் வெண்பாவின் சீர் விதிகளின் நிர்ப்பந்தம் கவிதையின் சொற்பிரயோகத்தில் சில கோளாறுகளைப் புகுத்திவிடுகிறது. 'நீங்கள்' என்று தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தும் அத்தானைப் பன்மையில் விளிக்கும் கவிதையில் முன்னிலை வினைச்சொல் ஒருமையில் வருகிறது. (வலை விரிப்பதெல்லாம் / தராது பயனை / தவிர்... என்ன வரை / அத்தருமம் காக்கும் / அறி). சீர் ஒழுங்கைப் பேணும் நிர்ப்பந்தம் அடிப்படையான இலக்கண விதிக்கே ஆப்பு வைத்துவிட்டாற் போல் தெரிகிறது இவ்வாறான தவறுகள் தவிர்த்திருக்கக் கூடியன.

குமாரசாமியின் சமுதாயப் பார்வை தமிழர் சமுதாயத்தில் காலங்காலமாக நிலவும் கோட்பாடுகளை அதிகம் கேள்வியின்றி ஏற்கொண்டது என்றே தோன்றுகிறது. கற்பு. ஆண்மை, காதல், வீரம் என்பன பற்றிய அவரது படிமங்கள் கண்ணகி, பரணி படைத்தல், ஆண்மை அற்ற அலிகள் என்ற பழகிப்போன பழைய சூத்திரங்களுக்



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



குள் நின்று வீடுகின்றன. பரிச்சயப்பட்ட ஒரு கடந்த காலத்தின் நினைவுகளில், அந்தப் பழமையின் மீட்சிக்காக ஏங்கும் மனத்தையே 'சேலியில்லை' போன்ற கவிதைகளிற் தரிசிக்க முடிகிறது. சமகால நிலவரங்களை 'மரண நனவுகள்', 'அக்கறை இல்லையோ' போன்ற சில கவிதைகள் சித்தரித்தாலும் அவை பிரச்சனையின் அடிப்படையைத் தொடத் தவறுகின்றன. கவிஞருடைய நகைச்சுவையும் இனக்குரோதமற்ற பார்வையும் கவிதைகளின் நல்ல அம்சங்கள். இடையிடை மிகவும் நயமான சொல்லமைப்பைக் காணக் கூடியதாக உள்ளது.

''ஒட்டைக் குடத்துக்குள்
ஒரு சிறங்கை தண்ணிவிட்டு
மூண்டெழும்பும்
தீயை அணைக்கிறம்பார் எண்டு
சொன்னார் போட்டுவிட்டு
ஓடுகின்றார் குடத்தைக்
கரையோரம்''. (அக்கறை இல்லையோ)

இங்கே (வரிபிரிப்பின் கோளாற்றையும் மீறி) ஊர்நிலவரத்தைச் சித்தரிக்கும் சொற்கள் சிறப்பாக உள்ளன. ஆயினும் முழுக்கவிதையும் இதே விதமான இறுக்கத்தைக் காட்டத் தவறி விடுகிறது. எனினும் வடக்கின் நிலைபற்றிய ஒரு நல்ல சித்தரிப்பு என்றே கருதுகிறேன்.

குமாரசாமியின் அரசியல் பார்வையின் குறைபாடு இந்திரா காந்தியைச் சத்திய மூச்சாகக் காணும் இடத்திற்தான் அப்படியே புலனாகிறது. (இந்திரா காந்திக்கும் சத்தியத்துக்கும் என்ன தொடர்பென்று எனக்குத் தெரியவே தெரியாது ) இந்திரா காந்தியின் கொலை மிகவும் கண்டிக்கத்தக்கதும் அருவருப்பானதும் என்பது முக்கியமான விடயம். ஆனால் இந்திராவின் அரசியல் மோசடிகளே அவரது அழிவுக்கும் வழிகோலின என்பது பற்றி பலருக்கும் தெரியும். இந்திராவையும் இந்தியாவையும் தமிழினத்தின் ரட்சகர்களாகப் பார்த்துப் பழகிவிட்ட இலங்கைத் தமிழ் நடுத்தர வர்க்கத்தின் பார்வையே குமாரசாமியிலும் தெரிகிறது.

கல்வயல் குமாரசாமியின் மாபுவழிக் கவிதை புனையும் சொல்லாற்றலும் அவரது சரளமான மொழிப் பிரயோகமும் நவீன சிந்தனையுடனும் புதிய சமுதாயப் பார்வையுடனும் எதிர்காலத்தில் இணைய வேண்டும் என்பதே என் எதிர்பார்ப்பு.

தாயகம் 1987

# 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்'* கவிதைத் தொகுதி ஒரு விமர்சனம்

சமகால ஈழத் தமிழ்க் கவிதைகளின் வளர்ச்சிக்கு சேரனின் பங்களிப்பு முக்கியமானது என்பதை விடத் தமிழ்க் கவிதையின் புதிய சகாப்தத்தின் முக்கியமான ஒரு கவிஞர் சேரன் என்பது கூடப் பொருந்தும். அவரது கவிதைத் தொகுதிகளான இரண்டாவது சூரியோதயத்தையும் யமனையும் கவிதைபற்றி அறிவோர் அறிவர் அவரது கவிதைகள் ஒன்றிரண்டு பற்றி விமர்சனப் பாங்காக நான் எழுதியிருக்கிறேன். ஆயினும், அவரது கவிதைத் தொகுதியொன்றின் விமர்சனம் என்ற வகையில் இதுவே முதலாவது. சேரன் கவிதைகளை முன்னர் கா. சிவத்தம்பி அவர்கள் விமர்சித்து எழுதியதும், அதனையொட்டிப்புதுசு (யாழ்ப்பாணம்) பத்திரிகையில் வந்த மறுவிமர்சனமும் கவிதை விமர்சனம் எவ்வளவு தூரம் அகநிலைச் சார்புடையது என்பதை உணர்த்தக்கூடும். என் விமர்சனத்திலும் அகநிலைச் சார்பு இருக்கும் என்பது மறுக்கமுடியாதது. ஆயினும் அது சேரனுடைய சமுதாய, அரசியல், இலக்கியப் பார்வைகளின் வெளிப்பாட்டுடன் என் விமர்சன விழுமியங்கள் முரண்படுவதை மட்டுமே பிரதிபலிக்கும் என்பது என் எதிர்பார்ப்பு.

தமிழில் புதுக்கவிதையின் விருத்தி, யாப்பிலக்கண விதிகளின் மறுதலிப்பாக மட்டுமன்றிப் பலரது புதுக்கவிதைகளிலும் கவித்துவத்தின் மறுதலிப்பாகவும் அமைந்துவிட்டது. இதன் விளைவாகப் புதுக் கவிதையே இலக்கிய விமர்சகர்கள் பலரது கடுந் தாக்குதலுக்கு உள்ளானது. தமிழுக்குப் புதுக்கவிதையோ அதன் பல்வேறு வடிவங்களோ அவசியமா என்ற விவாதத்துக்கு இங்கு அவசியம் இல்லை. எந்தக் கவிதை வடிவமாயினும் அது கவிதையின் வாகனமாக உள்ள அளவிற் பயனுள்ளதே. கவிதை எழுதுவோர் அந்த வாகனத்தைச் சரியாக அறிந்து பயன்படுத்தும்போது கவிதை வலி

* எலும்புக்கூடுகளின் ஊர்வலம், கவிதைகள், சேரன், தேடல் பதிப்பகம், டொரான்டோ, கனடா, 1990 வைகாசி, 22ப.

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



மையும் வேகமும் பெறுகிறது கவிதையின் வெற்றி கவிதையின் உள்ளடக்கத்திலேயே தங்கியுள்ளது என்பதை உணராமல் யாப்பிலக்கண விதிகளுக்கமைய வரர்த்தைகளை அடுக்கி மரபில் வந்து அலுத்துப்போன உவமான உவமேயங்களை எல்லாம் கவிதை என்று மயங்கிய காலமொன்று இருந்தது. அப்போக்கு இன்னமும் மரபுக் கவிதைத் துறையின்று போய்விடவில்லை. புதுக் கவிதையோ பெரும்பாலானவர்கட்குப் புரியாத புதிராக அதிபுத்திசாலித் தனமான ஒரு வசனத்தை (சிலவேளை இரண்டை)ப் பிய்த்து வரிவரியாக அடுக்குகிற காரியமாகவே தெரிகிறது. இது மட்டரகமான மலிவுக் கவிதைகளின் நிலை. இன்னுஞ் சிலரிடம் படிமங்களையோ அல்லது மிகவும் சிக்கலாகத் தெரிகின்ற சிந்தனைகளையோ மட்டுமோ கவிதையின் சாராம்ஸமாகக் கருதும் போக்கு உள்ளது. இது தமிழகத்தில் பரவலாக காணப்படக் கூடியது. எனினும் ஈழத்துக் கவிதையிலும் இதன் பாதிப்பு உண்டு. கவிதையின், கூறுகளையே கவிதையாகக் காணும் போக்கே புதுக்கவிதையின் முக்கியமான பலவீனம் என்று தோன்றுகிறது. புதுக்கவிதை மூலம் ஒரு முழுமையான அனுபவத்தைப் பகிரவும் பரிமாறவும் முனைவோர் சிறுபான்மையினரே. சேரன் இவர்களுள் ஒருவர். அவருடைய கவிதைகளின் நடையில் புதிய போக்குகள் உள்ளன. ஆயினும், அவரது கவிதைகளின் வலிமை அவற்றின் எளிமையிலும் உணர்வுபூர்வமான உள்ளடக்கத்திலுமே தங்கியுள்ளது.

இக் கவிதைத் தொகுதியிலுள்ள எட்டுக் கவிதைகளில் 'யமனும்' 'இரண்டாவது சூரியோதயமும்' காட்டிய சேரனைச் சில கவிதைகளில் தெளிவாகவே தெரிகிறது சில கவிதைகளில் அவரது புதுமை வேட்கையின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது ஆயினும் ராஜனி பற்றிய அவரது கவிதையின் சோகத்தினூடு எழும் பிரகடனத்தை விட்டால் நம்பிக்கையீனமும் விரக்தியுமே எல்லாக் கவிதைகளிலும் இழையோடுகிறது. அவரது கவிதைகளில் உள்ள நகைச்சுவை (சில இடங்களில் வலிந்து திணிக்கப்பட்டது போன்று உள்ளது) black humor எனப்படும் துன்பியல் நகைச்சுவையின் தன்மையுடையது அவருடைய கவிதைகளில் உள்ள அரசியல் விமர்சனம் சூழலின் அவலத்தை பிரதிபலிக்கிறதே ஒழிய, அதற்கப்பாற் செல்லுமாறு தூண்டும் முனைப்பைக் காட்டவில்லை. இது அவரது கவிதைகள் எழுதப்பட்ட காலத்தினதும் சூழலினதும் விளைவான ஒரு மனநிலையின் பிரதிபலிப்பாக இருக்கலாம் ஆயினும் இன்றைய சூழலின் தேவை இதற்கும் மேலானது அதற்கான தேடலில் கவிதைக்கும் ஒரு பங்குண்டு கொடிய குளிரில் நடுங்கி ஒதுங்கிச் சுருண்டுபோகும் உடல்களிலும் மனங்களிலும் சூடேற்றவும், மங்கித் தெரியும்



மனிதவுரிமைப் போராட்டத் தீக்கு புத்துயிர்ப்பூட்டவும் ஒரு தேவை இருக்கிறது. இதற்கான ஒரு அரசியற் பார்வை சேரனது எதிர்காலக் கவிதைகளில் விருத்தியடைய வேண்டும் என்பது என் எதிர்பார்ப்பு. இந்தப் பொதுவான மதிப்பீட்டை அடுத்துக் கவிதைகள் பற்றிய சில விமர்சனக் குறிப்புகளை எழுத விரும்புகிறேன்.

'ராஜனி', தொகுதியின் முதற் கவிதை. இதுவே தொகுதியில் உள்ளவற்றில் மிக இறுக்கமானதும் போராட்ட உணர்வினைச் சற்றேனும் வெளிக்காட்டுவதும் எனலாம்.

''நீ விழுந்தபோது
சூரியனின் கடைசிக் கிரணங்கள்
சுவரில் விழுத்திய
உன் நிழல்
கைகளை வீசிமேலே ஓங்கிற்று
முடிவிலி வரை''

ராஜனி திரணகமவின் கொலையைக் கண்டித்தும் அவருக்கு அஞ்சலி செலுத்தியும் பல கவிதைகள் வந்துள்ளன. நான் படித்தவற்றுள் சேரனது அஞ்சலியைவிடச் சிறப்பானது இல்லை. மேற்காணும் அதன் இறுதிவரிகள் ராஜனியின் போராட்ட உணர்வின் அற்புதமான படிமமாக அமைகின்றன.

'உயிர் பிடுங்கிகளின் காலம்' கோபமும் ஏளனமும் கலந்த ஒரு படைப்பு.

''போ அப்பால்
தலையிழந்த சூரியனே
முகமற்ற நிலவே
ஒளி செத்த தேசமே
உயிர் தின்ற காலமே''

போன்ற படிம அடுக்குகளும்

''அவர்க்கோ
இரவல் நாட்டில் அந்நிய வாழ்வு
எனக்கோ
சொந்த நாட்டில் இரவல் இருப்பு''

படிப்பகம்

என்ற வெறுப்புணர்வின் வெடிப்பும் முன்பு சேரன் எழுதிய வரிகள் சில வற்றை நினைவூட்டுகின்றன. இக் கவிதையில் மேற்கூறிய படிமங் களும் இரவல் என்ற சொற்பிரயோகமும் கவிதையின் தொடக்கப் பகுதி தரும் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யுமாறு கவிதைக்கு வலிமை யூட்டுவதாகத் தெரியவில்லை.

'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' என்ற சிறப்பான கவிதை ஏனோ இரண்டு கவிதைகளை ஒட்டவைத்த மாதிரி உணர்வை ஏற்படுத்து கின்றது. ஒற்றைப் பரிமாண வாழ்வின் சாதாரணமான கனவுகளைக் கண்ட ஒருவனது கனவுகளின் தன்மையில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய கவிதை அது. கனவின் உருமாற்றத்துக்கான சூழ்நிலையைச் சேரன் கூறமுற்படவில்லை. அச் சூழ்நிலை நாமறிந்தது. அதை அவர் கூறாமல் விட்டதே கவிதைக்கு இறுக்கத்தைத் தருகிறது. ஆயினும் சேரனது நகைச்சுவையை வெளிக்காட்ட முனையும் வரிகள் கவிதைக்கு வலுவூட்டுகின்றனவா எனத் தெரியவில்லை.

''மருத்துவம், பொறியியல், கணக்கியல்
மும்மூர்த்திகள்
இப்போது புதிதாய்க் 'கொம்பியூட்டர்'
படிப்பும்
மும்மூர்த்திகளுடன் துர்க்கா தேவியின்
புதிய எழுச்சி''

கொம்யூட்டர் கல்வி ஏன் துர்க்காதேவியாகத் தெரிகிறதோ தெரியவில்லை. (இதற்குள் அர்த்தம் தேடிக் கண்டுபிடிக்க ஒருவேளை எனக்கு ரஸனை போதாதோ!)

கவிதையின் பிற்பகுதி Surrealism எனப்படுகிற அதியதார்த்தக் கலைவடிவப் போக்கைச் சார்ந்தது. இக் கலைவடிவம் மேலை நாடுகளில் பலதுறைகளில் பரவியுள்ளது. தமிழில் அசோகமித்திரனின் 'ஆகாயத் தாமரை' நாவல் இத்தகைய தன்மையுடையது என நினைவு. சமகால வடபிரதேசச் சூழலின் குரூரத்தை இந்த முறையான எழுத்தாற் சித்தரிக்க முடிவது போல வழமையான வர்ணனைகளாற் செய்யமுடியாது. சேரனது எலும்புக்கூட்டு ஊர்வலம் அற்புதமான ஒரு படிமமுறை என்றே சொல்வேன். எனினும் ஒருசில தௌிவீனங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. இவை வேண்டுமென்றே புகுத்தப்பட்டவையோ என நிச்சயமில்லை. ஊர்வலமாகச் செல்லும் எலும்கக்கூடுகளில் சில குழந்தையை ஏந்திச் செல்கின்றன. குழந்தை மட்டும் ஏன் எலும்புக்கூடாக இல்லை?



கவிதையின் இறுதிப் பகுதியில் டொரன்டோ உறைபனித் திரளுள் துண்டுதுண்டாக வீசப்பட்டிருந்தது எது? அவனா, எலும்புக் கூடுகளா?

பயங்கரத்தை ஒரு கவிச்சித்திரமாக வரைந்துவிட்டு அதனுள் பயங்கரம் என்ற சொல்லைப் புகுத்தும்போது கவிஞரின் சொல்லாற்றல்மீது அவருக்கே நம்பிக்கை இல்லாமற் போகிறதோ என்ற ஐயம் மனதில் எழுகிறது. இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, கவிதையை வாசித்து வெகுநேரத்தின் பின்பும் நமது காதில் எலும்புக்கூடுகளின் படைநடப்பின் ஒலிகேட்கிறதே, அங்குதான் சேரனின் கவியாற்றல் ஓங்கி ஒலிக்கிறது.

'புதைகுழிப் பாடலில்' வரும் 'வார்த்தைக்குள் அகப்படாத குரூரம்' என்ற சொற் தொடரும் முன்குறிப்பிட்ட பயங்கரம் என்ற சொல்போன்று கவிதையை பலவீனப்படுத்துவதாகும் தன்னுடைய புதைகுழியையே வெட்டியவன் சொன்ன இறுதிவார்த்தைகளில் தேசத்தின் உயிர் இருந்ததாயின். அவன் சொன்னது என்ன? நம்மால் நமது மனநிலைக்கேற்ப ஊகிக்கத்தான் முடிகிறது. இதுவே கவிஞரின் நோக்கம் என்று நினைக்கிறேன்.

இக்கவிதையுடன் ஒப்பிடும்போது 'பிசாசுக் கவிதை' (சேரனது நகைச்சுவைக்கு நன்றி!) வெகு சராசரியாகவே தெரிகிறது. 'நவீன துப்பாக்கி அரசன்' குழந்தைப் படைகளின் ஒரு சித்தரிப்பு.

''இருபுறமும் குழல்நீண்ட
துப்பாக்கிச் சனியனை
ஏந்துகிறேன்''

என்ற ஈற்றடிகள் கட்டாயமாய்ப் படைக்குள் இழுக்கப்பட்ட சிறுவர்களின் நிர்க்கதியான நிலையை தத்ரூபமாகச் சித்தரிக் கின்றன.

'சிம்மாசனமும் சவப்பெட்டியும்' போன்ற கொம்பஸிட்டர் கவிதைகள் எப்போதோ வந்துபோனவை. சிம்மாசனத்தில் இருந்து தேசத்தின் சவப்பெட்டிமீது வடிகிற ரத்தம் யாருடையது? இதில் புதிர்போடுகிற மேதாவித்தனம் உள்ள அளவுக்குக் கவித்துவம் தென்படவில்லை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



'கேள்விகள்' ஏனோ விகடத் துணுக்குகளின் (ஹா, ஹா) திரட்டாகவே தெரிகிறது. இது பரீட்சார்த்தமான முயற்சிகளில் ஒன்றோ தெரியாது. எக்காரணத்தாலோ என்மனதில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தத் தவறிவிட்டது.

சேரன் அல்லது அச்சுப்பதிப்பவர் கவனிக்க வேண்டிய ஒரு சிறு விஷயம்:

உயிர்பிடுங்கிகளின் காலத்தில்
''இருட்டு; மிருகங்கட்கு
ஒளி; மனிதர்கட்கு
அது முன்பு''

என்ற வரிகளின் நடுவே மாத்திரைக் குறிகள் (;) என இருப்பது தவறு. அவை (:) ஆக இருந்திருக்கலாம். குறிகள் இல்லாமலே இருந்திருக்கலாம். அல்லது (;) வரிகளின் ஈற்றில் வரலாம் உள்ளபடி அவை

''மிருகங்கட்கு ஒளி
மனிதர்கட்கு அது முன்பு''

எனவே அர்த்தப்படும். கவிதையிற் சொற்பிரயோகம் இறுக்க மாக இருப்பது அவசியம் என்பது ஏற்றுக்கொள்வோருக்கு மாத்திரைக் குறிகளும் கவனமாக பாவிக்கப்பட வேண்டிய தேவையை விளக்க அவசியமில்லை.

நூலை அறிமுகஞ் செய்த செல்வம் அவர்கள் சேரன்பற்றிக் கூறும் வார்த்தைகள் எனக்கு உடன்பாடனவையே ஆயினும் ''கவிதையில் அரசியல் பிரக்ஞை என்பது ஈழத்துக் கவிஞர்களால்தான் வளம் பெற்றது'' என்ற வசனம்பற்றி ஐயம் உண்டு. சின்னச்சாமி ஐயர் மகன் சுப்பிரமணிய ஐயர் என்று ஒருவர் எழுபதுசொச்ச வருஷம் முன்னால் அற்புதமான அரசியற் கவிதைகளை எழுதியிருக்கிறார். (அவரைப் பாரதி என்று சிலபேர் அழைப்பதாகக் கேள்வி!)

மொத்தத்தில் நல்லதொரு காரமான கவிதைத் தொகுதியை வழங்கிய தேடலுக்கு நன்றி.

சுவடுகள், 1991, மாசி

# சிவரமணியின் கவிதைகள் : விமர்சனத்தின் தற்கொலை

சிவரமணியின் கவிதைகள் பற்றிச் சிலாகித்துப் பேசி எழுதப்படு கிறது. சில விமர்சகர்களது கருத்துக்களில் அவரது கவிதைகளின் உள்ளடக்கமும் அழகியலும் பற்றிய அறிவு தென்படவில்லை. 'சரி நிகர்' என்ற சமூகவியல் மாத ஏட்டில் 1991 பிற்பகுதியில் எழுதிய ஒருவர் விஷயஞானமற்ற மரணவிசாரணை அதிகாரியின் பாங்கில் சிவரமணியின் தற்கொலையை ஆராய முற்பட்டார். ஏறத்தாழ அதே தோரணையில், சித்திரலேகா மௌனகுரு, 1991 இறுதியில் சுவடுகள் சஞ்சிகையில் சிவரமணியின் கவிதைகளை அவரது தற்கொலைக்கான காரணத்துடன் பிணைத்து எதையோ வலியுறுத்த முற்பட்டுள்ளார். ஏப்ரல் 1992இல் ஜேர்மனியில் நடந்த இலக்கியச் சந்திப்பில் சிவரமணிக்குத் தெரிவிக்கப்பட்ட அஞ்சலிகட்கு ஒரு வரட்டு மாக்சிய வாதியின் ஆட்சேபனைகளைப் பற்றியும் கேள்விப்பட்டேன். தற் கொலை கோழைத்தனமானது, எனவே சிவரமணி கண்டனத்துக் குரியவர் என்பது அவரது வாதத்தின் சாராம்ஸம். இந்த கண்ணோட்டத்தில் சயனைடு விழுங்குகிற போராளிகளையும் கோழை களென்றே நிராகரிக்க வேண்டுமா தெரியவில்லை. என் கருத்தில் தற்கொலையை அதன் சூழ்நிலைகளினின்று பிரித்தெடுத்து மதிப் பிடுவது கிளிப்பிள்ளைத் தனமானது.

இந்த நடுவர்கள் சிவரமணி என்ற கவிஞரை அறிவதிற் கூடிய கவனங்காட்டியிருந்தால் நன்றாயிராதா? சிவரமணி பற்றிய ஆன்மிக, அறநெறித் தீர்ப்புகளை விட, அவர் எழுதி மிஞ்சியுள்ள சில கவிதை கள் மூலம் அவர் வழங்கும் பார்வையையும் தமிழ்க் கவிதைக்கு அவற்றின் பங்களிப்பையுங் கண்டறிவது தமிழுக்கும் தமிழருக்குங் கூடிய பயனளிக்காதா? நாம் நமது முற்சாய்வுகளின் அடிப்படையிற் கூறுங்கருத்துக்கட்கு மறுமொழியோ விளக்கமோ தரக்கூடிய வாய்ப்பு, சிவரமணிக்கு இல்லை. எனவே நாம் செய்யும் மதிப்பீடுகளில் ஓரளவு நிதானம் இருப்பின் நன்றாய் இருக்கும்.

கவிஞர் ஒருவர் பற்றிய கேள்விஞானமின்றி அவரது படைப் பொன்றைப் பார்க்கும் வாய்ப்பு இப்போது இடைக்கிடை நேருகிறது.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



அவ்வாறு பார்த்தவற்றுள், மனதிற் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியவை சில சிவரமணி எழுதிச் 'சொல்லாத சேதிகள்' தொகுதியில் வந்து பனிமலரிற் பிரசுரமான கவிதை அவற்றுள் ஒன்று. அவரது கவிதைகள் ஏழோ எட்டோதான் இதுவரை என் பார்வைக்குக்கிட்டியுள்ளன. ('சொல்லாத சேதிகள்' கவிதைத் தொகுதி என் கைக்கு இதுவரை எட்டவில்லை.) இந்த ஏழெட்டுக் கவிதைகளை வைத்தே சிவரமணிக்குத் தமிழ்க் கவிதையுலகில் ஒரு தனியான இடம் உள்ளது என்று சொல்லலாம்.

சிவரமணியின் கவிதைகளிற் புதிய படிமங்கள் உள்ளன. வித்தியாசமான சொற்பிரயோகங்கள் உள்ளன. ஆயினும் அவரது கவித்துவத்தின் அளவுகோல்கள் அவையல்ல. அவரது கவிதைகளின் வலிமை அவற்றின் கருத்துச் செறிவான உள்ளடக்கத்தில் உள்ளது. தமிழிற் புதுக்கவிதையின் தொடக்க நிலையில் படிமக் குவியல்களையே கவிதையாகக் கருதி மயங்கிய ஒரு நிலை இருந்தது. வித்தியாசமான சொற்பிரயோகங்கள், புத்திஜீவித்தனமான புதிர்களைக் கவிதையாக்குவோராலும் புனையப்பட்டுள்ளன. சிவரமணியின் கவிதைகளில் அபூர்வமாகவே இவ்வாறான தன்மைகளைக் காண்கிறேன். அவரது சொற்கள் பெரும்பாலும் தெளிவானவை, நேரடியானவை, எளிமையானவை. அன்றாட நிகழ்வுகளை வெகு சாதாரணமான முறையிற் சொல்லி ஒரு சூழலின் கொடுமையை உணர்த்த அவரால் முடிகிறது. அதிக உதாரணங்கட்கு அவசியமின்றி ஒருசில கவிதைப் பகுதிகளை உங்கள்முன் வைக்கிறேன்.

'ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின்
ஓசை
எல்லாக் குழந்தைக் கனவுகளினதும்
அர்த்தத்தை
இல்லாதொழிக்கிறது''
''இரவு முக்கியமானது
நேற்றுப்போல்
மீண்டும் ஒரு நண்பன்
தொலைந்து போகக்கூடிய
இந்த இருட்டு
எனக்கு முக்கியமானது''
''நடத்தல் எனக்கு இயலாததல்ல
மூன்றாவதாய் எனக்கொரு
பாதம் தேவையில்லை
கைத்தடியைத் தூர எறிந்துவிட்டு
எழுந்து நடக்கத் தொடங்கியிருக்கிறேன்''



இவை ஒவ்வொன்றுமே ஒரு முழுமையான செய்தியைக் கூறுகின்றன. இத்தகைய இறுக்கமான சொல்லமைப்பை அவரது கவிதைகள் ஒவ்வொன்றினதும்,முதலிலிருந்து முடிவுவரை காணலாம்.

இயற்கைச் சூழல் பற்றிய ஒருவரது அவதானம் அவரது மனநிலையைப் பிரதிபலிப்பது உண்மை. ஒரு ஆக்கக் கலைஞர் ஒரு மனநிலையையோ ஒரு உணர்வையோ சித்தரிக்க இயற்கையைத் துணைக்கழைப்பது கவிதைக்கு மட்டுமுரியதல்ல. ''கத்துங் குயிலோசை'' என்ற சொற்றொடரில் மகிழ்ச்சியைப் புலப்படுத்திய சுப்பிரமணிய பாரதி வெளியிற் சுடரும் விளக்கில் மனத்துடிப்பைக் காண்கிறார். சிவரமணியின் ''இறந்து போனவர்களின் கண்களைப் போன்று விளக்கமற்ற அர்த்தங்களை விடுத்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள்'' வான்வெளியிற் கண்சிமிட்டிக் கதைச் சொல்ல ஏன் மறுக்கின்றன? மரங்களின் நிழல்கள் ஏன் கிழிந்து தெரிகின்றன? நிர்க்கதியான நிலையிலுள்ள ஒரு சமுதாயத்தின் அவலத்தின் சித்தரிப்புகள் இவை. இவற்றை விட 'யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்', 'புத்திசாலித்தனமான கடைசி மனிதனும் இறந்து கொண்டிருக்கிறான்' போன்ற கவிதைத் தலைப்புகளும் அதே அவலத்தைப் புலம்படுத்துவன.

இவை விரக்தியின் வெளிப்பாடுகள் என்று சொல்ல முடியுமா? நம்பிக்கையூட்டக்கூடிய வார்த்தைகளை இன்று எத்தனை ஈழத்துக் கவிஞர்கள் எழுதுகிறார்கள்? 1983 முதல் 1987 வரை தமிழர் விடுதலைப் போராட்டம் பற்றி வளர்ந்த, வளர்க்கப்பட்ட நம்பிக்கைகள் இன்று பெரும்பாலானோரிடம் இல்லை. சேரனும், ஜெயபாலனும், அரவிந்தனும், விஜயேந்திரனும் நம்பிக்கையூட்டும் விதமாக எழுதவில்லை. எத்தனையோ நல்ல பேனாக்கள் ஓய்வெடுத்துவிட்டன. முழு இலங்கையிலும் உள்ள இருண்ட சூழலின் விவரணம் விரக்தியின் வெளிப்பாடல்ல. அதே விரக்தியின் வெளிப்பாடாயின் புதுமைப்பித்தனின் சிறுகதைகளும் விரக்தியின வெளிப்பாடா? சிவரமணி தன் சூழலின் யதார்த்தத்தை எடுத்துச் சொல்கிறார். அதன் பாரிய பிரச்சனைகளை நமக்கு உணர்த்தும் அவர் தீர்வுகளை முன்வைக்கவில்லை. தீர்வுகள் பற்றிய நிச்சயமின்மையோ நம்பிக்கையின்மையோ அதற்குக் காரணமாக இருக்கலாம்; தீர்வுகளை வலியுறுத்த வசதியான சூழ்நிலை இல்லாமை காரணமாக இருக்கலாம்; அல்லது தீர்வுகளை வழங்குமுன் பிரச்சனையைத் தெளிவுபடுத்தும் நோக்கம் காரணமாக இருக்கலாம். 1989க்கு முன் போராட்ட நம்பிக்கையுடன் எழுதியவைபோல் 1989க்குப் பின், ஏன் எதுவும் எழுதப்படவில்லை என்பதற்கு ஒரு வசதியான விளக்கம் 'விரக்தி'யாக இருக்கலாம். சரியான விளக்கம், அனுபவமும் முதிர்ச்சி

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



யாகவும் இருக்கவும் இடமுண்டு. சிவரமணி தற்கொலை செய்தார் என்ற அடிப்படையில், அகநிலைச் சார்பாக, எவரும் இவ்விஷயத்தை முடிவுகட்டுவது சரியா? ஓசை (2.4) இல் மறுபிரசுரமான ''இருட்டு அவசர அவசரமாக...'' என்ற கவிதையில் சூழலின் கொடுமையை உணர்த்தும் சொற்களுடன் சேர்ந்தே திரும்பத் திரும்ப ஒலிக்கின்ற உணர்வு என்ன?

''திசைகள் தறிபட்டு
எல்லைகள் நழுவிப்போய்த்
தொலைவு நீளுகிறபோது
நான் பரிநிர்வாணமாய்
நடந்துகொண்டிருப்பேன்
அனைத்திலும்''
நான் கொளுத்துகிற
மெழுகுவர்த்திகள் அணைக்கப்பட்டாலும்
ஒவ்வொரு விடியலிலும்
தரிசனம் தருகிற ஒரு சூரியன்
என்னுள்ளும் ஒரு சூரியனை
இருத்திவிட்டுப் போகிறது''

இருண்ட சூழலிலிருந்து விடுபட மார்க்கம் காட்டாத சிவரமண அதற்குச் சரண்டைய மறுக்கிறார். அவருடைய கவிதைகளில் ஒ( சமுதாயத்தின் இயலாமை பற்றிய கோபமும், குரூரமான விகாரமை யும் சூழல் பற்றிய கரிசனையும், சகமனிதருக்கு நேருங் கொடுமைக பற்றிய துயரமும் உள்ளன. தன்னைப் பற்றிய பரிதாப உணர்வா இல்லாமற் சமுதாய நிலைமையைப் பற்றிய கூர்மையான அவதான களாக அமையும் வலிய சொற்களை விரக்தியுற்ற மனத்தில் விளைப் பது கடினம். ஒரு சமுதாயத்தின் பொதுவான விரக்தியை அவரது கவிதை காட்டுகிறது.

''எல்லாவற்றையும்
சகஜமாக்கிக் கொண்டு
அசாதாரண முயற்சியில்
தூங்கிக்கொண்டும் இறந்துகொண்டும்
இருப்பவர்களிடையே
நான் எனது நம்பிக்கைகளுடன்
தோற்றுக்கொண்டிருக்கிறேன்''



என்ற வரிகள் சிவரமணியின் நம்பிக்கையீனத்தின் வெளிப் பாடென்று அடித்துச் சொல்லும் ஒருவர், தன் கவிதை உணர்வை ஒரு கணம் ஒதுக்கி வைத்துவிட்டுத்தான் அவ்வாறு சொல்ல முடியும். சிவரமணி சொல்லும் நம்பிக்கைகளின் தோல்வி நம்பிக்கையிழந்தவர் மத்தியில், நம்பிக்கைகளையுடைய சிறுபான்மையாக, அவர்களைத் தன் நம்பிக்கையின் திசையில் ஈர்க்கமுடியாத நிலையைக் குறிக்கிறதே ஒழிய அவரது நம்பிக்கைகளின் இழப்பையல்ல. ''தோற்றுக் கொண்டிருக்கிறேன்'' என்பதற்கு அர்த்தம் நம்பிக்கை களை இழந்துபோகின்றமை அல்ல. சிவரமணியின் பிற்காலக் கவிதைகளில் பெண்ணுரிமை பற்றிய அழுத்தம் இல்லாமைக்குக் காரணம் அச்சூழலில் மனித உணர்வுகளும் மனித உரிமைகளும் மனித இருப்பும் சீரழிவை எதிர்நோக்கியிருந்தமையே என ஊகிக் கிறேன். பெண்களின் அவலநிலையைவிடச், சாதிய ஒடுக்கலைவிட, முழுச் சமுதாயத்தினதும் இந்த அவலம் பல உணர்வுமிக்க படைப்பாளிகளது கவனத்தையும் ஆக்கிரமித்தது. சிவரமனியின் கவனம் தன் உடனடியான சூழலின் நெருக்கடி பற்றியதாக இருந்ததில் அதிசயம் இல்லை.

சிவரமணியின் பெண்ணுரிமைவாதம் நாம் கேட்கும் உயர்நடுத்தர வர்க்கத்தின் பெண்ணுரிமைப் பிரகடனங்களினின்று முக்கியமான ஒரு வகையில் வேறுபட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. 'எமது விடுதலையில்' தோழியரையும், தோழர்களையும் சேர்த்துச் சர்வதேச நோக்கிற் போராட்ட அழைப்பு விடுக்கிறார். பெண்கள் தமது ஆடை அலங்காரங்களிற் செலுத்தும் மிகையான கவனத்தையும் அவர் விமர்சிக்கிறார். பெண்ணடிமைத்தனத்தின் முக்கியமான ஒரு அம்சம், பெண் ஆணின் நுகர்வுக்குரிய ஒரு அலங்காரப் பொருளாக இருப்பது என்பதை அவர்,

''ஆடையின் மடிப்புகள்
அழகாக இல்லை என்பதற்காகக்
கண்ணீர் விட்ட நாட்களை
மறப்போம்''

(எமது விடுதலை)

''சரிகைச் சேலைக்கும்
கண்ணிறைந்த காதலர்க்கும்
காத்திருந்த காலங்கள்!

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



அந்த வெட்கங்கெட்ட
காலத்தின் சுவடுகளை
அழித்துவிடுவோம்''

(வையத்தை வெற்றிகொள்ள)

என்ற வரிகளில் அடையாளங் காட்டுகிறார்.

சாரமற்ற புதுக்கவிதைகள் தமிழில் மலிந்த ஒரு யுகத்திற் செய்நேர்த்தியுடன் ஒவ்வொரு சொல்லையும் அளந்து பிரயோகிக்கும் புதுக்கவிதையாளர் வெகுசிலரே. அவர்களுள் ஒருவரை நாம் இழந்துவிட்டோம். சிவரமணி தானாக வரித்துக்கொண்ட மரணம் நமது கவலைக்கும் கரிசனைக்கும் உரியது. அதன் முக்கியத்துவத்தின் பல்வேறு சமுதாயப் பரிமாணங்களை நாம் அறியுந் தேவை உள்ளது. ஆயினும் அகநிலை முற்சாய்வுடன், சிவரமணியின் கவிதைகளில் அவற்றைக் கண்டறிவதாகப் பாவனை செய்வோமா யின் அவரது கவிதைகளைச் சரிவர விளங்கிக் கொள்வதற்கு இயலாது போய்விடும்.

சுவடுகள்; 34, 1991 சித்திரை

# மறையாத மறுபாதி

## புகலிடப் பெண்கள் கவிதைகள்

''சொல்லாத சேதிகள்'' என்ற கவிதைத் தொகுப்பு ஈழத்துப் பெண் எழுத்தாளர்களை மிகவும் ஊக்குவித்தது. அதிற் சமகால ஈழத் தமிழ்க் கவிஞர்களுள் முக்கியமான சிலரது கவிதைகளும் உள்ளடங்கி யிருந்தன. அதில் எழுதினோரில் முதன்மையான கவிஞரான சிவரமணி இன்று நம்மிடையே இல்லை. அவர் தானாகவே பிரிந்து சென்றார். செல்வி என்ற மனவுறுதிமிக்க இளம் எழுத்தாளர் இரண்டு வருடங்கள் முன் கடத்திச் செல்லப்பட்டார். அவரைக் கடத்திச் சென்றவர்கள் இதுவரை ஒரு விளக்கத்தையும் தரவில்லை. அவர் நம்மிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டு விட்டார் என்றே பரவலாக நம்பப்படு கின்றது. ''சொல்லாத சேதிகளிற்'' தம் கவிதைகளைக் கண்டவர் களில் எல்லோருமே இன்று எழுதுவதாகத் தெரியவில்லை.

நல்ல கவிதைகளைத் தந்த ஊர்வசியின் எழுத்துக்களையோ ஔவையின் எழுத்துக்களையோ நான் அண்மையிற் காணவில்லை. சமூகப்பிரக்ஞை மிக்க சன்மார்க்காவும் அதிகம் எழுதுவதாகத் தெரியவில்லை. மைத்ரேயியின் எழுத்துக்கள் சில அண்மைக் காலங் களிற் கண்ணிற்பட்டன. பெண் எழுத்தாளர்களின் பலவேறு பிரச் சனைகள். எழுத்தாற்றல் மிக்க நல்ல நல்ல படைப்பாளிகளைத் தமிழ் இலக்கியத்துக்கு மறுத்து விட்டன. ஆயினும் ஈழத்தமிழரைப் புலம் பெயரச் செய்த அரசியல் நெருக்கடியும் புதிய சூழலும் புதிய எழுத் தாளர்களை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளன. புதிய அனுபவங்களும் அயல்மொழிப் பரிச்சியமின்மையின் காரணமான குறைபாடுகளுடன் வேறுபட்ட கலைவடிவங்கள் பற்றியும் கருத்து வெளிப்பாடு பற்றியும் பெறப்பட்ட அறிவும் பழம்மரபைப்பேண இயலாமைக்கும் புதிய சூழலினைக்கிரகித்துப் பழக்கப்படுத்துவதில் உள்ள இடர்ப் பாட்டுக்குமிடையிலான முரண்பாடும் புதிய சிந்தனைகளை யும் வேறுபட்ட வகையிலான ஆக்கங்களையும் வழங்கும் வாய்ப்பைப் புலம்பெயர்ந்தவர்களிடையே கலையுணர்வுள்ளவர்க்கு அளித்துள்ளன. ஆயினும் ஆர்வமுள்ள அளவுக்கு ஆற்றலை வளர்த்

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



தெடுக்கும் பக்குவம் பல படைப்பாளிகளிடம் ஏற்படவில்லை. அயற் சுற்றாடலிலும் தாய்மொழியிலேயே செயற்படும் தேவை சுய அடையாளத்தேடல் காரணமாகவும் அயல் மண்ணில் எதிர்நோக்கும் நிராகரிப்பின் காரணமாகவும் அனைத்திற்கும் மேலாகப் பழக்கங் காரணமாகவும் இன்னும் ஒரு தலைமுறைக்கேனும் தொடரும் என்றே தெரிகிறது. ஆயினும் இலக்கியத்துறையைப் பொறுத்தவரை, உன்னதமான படைப்பாளிகளைப் புலம்பெயர்ந்த சமுதாயம் இன்னமும் உருவாக்கவில்லை. புலம் பெயர்ந்த சூழலில் எழுதுவோர் பலர் புதுக்கவிதையையே நாடுவதற்கான காரணம் அவர்களுக்கு வேறு எதையுமே எழுத இயலாமைதான் என்ற கருத்துடன் நான் உடன்படுகின்றேன். பொதுவாக விமர்சனம் என்பது உச்சி குளிர்த்தும் முகத்துதியாக இல்லாத பட்சத்தில் காழ்ப்புணர்வு காரணமான கண்டனமாகவே இருக்கிறது. நல்ல சிறுகதைகளை இடையிடையே காண்கிறேன். ஆயினும் நல்ல சிறுகதை இலக்கியம் புலம்பெயர்ந்த தமிழரிடையே இன்னமும் உருவாகவில்லை. நாடகங்கள் என்று ஓரிரண்டு படைப்புக்களை வாசிக்கிறேன். அவை ஒரு நாடக மரபாக வளரமுடியாது திணறுகின்றன. ஏராளமான புதுக்கவிதைகளிடையே கவித்துவமிக்க ஓரிருவரது படைப்புக்கள் சுடருகின்றன. ஆயினும் பலம் பெயர்ந்தோர் கவிதை மிகவும் பலவீனமான நிலையிலேயே உள்ளது. மரபுசார்ந்து எழுதுவதாக நினைப்போரின் படைப்புக்களில் யாப்பிலக்கண அறிவின் போதாமையை விட மோசமாகச் சந்த உணர்வின்மை தென்படுகின்றது. விறைப்பான உயிரற்ற அரைகுறை வாக்கியங்களெல்லாம் தமிழ்க் கவிதைகளாக உலா வருகின்ற ஒரு அவலம் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்திற் தொடர்கின்றது. இந்தப் பின்னணியிலேயே புலம் பெயர்ந்தவர்களது படைப்புக்களை மதிப்பிட வேண்டி இருக்கிறது. ''மறையாத மறுபாதி'' ஐரோப்பாவில் வாழும் பெண்கள் சிலரது கவிதைகளை உள்ளடக்கிய ஒரு தொகுதி. ''சொல்லாத சேதிகளின்'' சுவட்டில் வருவதாகச் சொல்லப்படினும் முன்னையதிற் கண்டதைவிடக் காத்திரமான முறையில் உரிமைக் குரல் எழுப்புகிற சில கவிதைகளை அது உள்ளடக்குகிறது. அதே வேளை, தமிழ்ப் புதுக்கவிதையின் பலவீனம் நூல் முழுமையிலும் வெவ்வேறு அளவுகளிற் பரவியுள்ளது இவ்வகையான குறைபாடுகள் தமிழ்க்கவிதைகளுடன் போதியளவு பரிச்சயமின்மை, கவிதை விமர்சனங்கள் போதியளவு இல்லாமை. கவிதைபற்றிய தெளிவீனமான புரிதல் போன்ற பல காரணங்களாலானவை. ஆயினும், இத்தொகுதியின் முக்கியத்துவம். இதுவரை ஈழத்தமிழ் பெண் எழுத்தாளர்கள் எழுதத்தயங்கிய விஷயங்களையும், எழுப்பத் தவறிய கேள்விகளையும் இதிலுள்ள கவிதைகள் எழுப்புவதாகும். இதில் எழுதியுள்ள பெண்கள் அனைவரும் அரசியல் ரீதியாகவோ பெண்



ணிலைவாதந் தொடர்பாகவோ ஒருமித்த பார்வையுடையோரல்லர். ஆயினும் பெண்களின் ஒடுக்குமுறைக்கெதிரான ஒருமித்த எழுச்சிக் குரலாக அவர்களது ஆக்கங்கள் ஒன்றுபடுகின்றன. ஒவ்வொரு படைப்பாளியின் பார்வையின் விரிவும், ஆழமும் அவரவரது சமுதாய உணர்வின் வளர்ச்சியாலும் அனுபவங்களினின்று விருத்திபெற்ற அறிவாலும் நிர்ணயமாகின்றன. அவர்கள் அனைவருமே ஆணாதிக்கத்தின் கொடுமைகளை நேரடியாவும் மறைமுகமாகவும் கண்டறிந்தமையே அவர்களது படைப்பின் ஒருமைக்குக் காரணமாகின்றது. பெண்களின் பிரச்சனைகள் பற்றிப் பெண்கள் நம்மிடையே பேசுவதையும் சிலர் விரும்புவதில்லை. கருத்தரங்குகளில் அவர்கள் ஆண்கள் மத்தியில் பேச வாய்திறந்தால் சகல வர்ண மரபுவாதிகளும் (செஞ்சட்டையாற் தமது பழமைவாதத்தை மூட முனைவோர் உட்பட) அவர்களது வாயை அடைக்கப் போட்டியிடுகிறார்கள். சாதிப்பிரச்சனை தொடர்பாகவோ தேசிய விடுதலை தொடர்பாகவோ இனவெறிக்கும் நிறவெறிக்கும் எதிரான போராட்டங்கள் தொடர்பாகவோ சில முற்போக்கு வாதிகள் காட்டும் சகிப்புத்தன்மை பெண் விடுதலை தொட. பாக காட்டப்படுவதில்லை. பெண் விடுதலை என்ற பெயரில் வெளியாகும் பிற்போக்குவாதச் சிந்தனைகளை எதிர்க்கும் போக்கிற் பெண்ணுரிமையின் குரலை நிசப்திக்க முனைவது எவ்வகையிலும் முற்போக்கான காரியமில்லை. ''மறையாத மறுபாதியில்'' எழுதிய பெண்கள் பலர் இத்தகைய பேச்சுரிமை மறுப்புக்கு முகங்கொடுத்தவர்கள் என்பதை மல்லிகாவின் முதலாவது கவிதையான 'நாங்களும் மனிதர்கள் தான்' நினைவூட்டியது. கோசல்யாவின் 'ஒரு சத்தியம்' மல்லிகாவின் 'ஏனிந்த வித்தியாசங்கள்' கல்யாணியின் 'பலமான கேள்விகள்' போன்ற கவிதைகள் இளம் பருவத்திலேயே பெண்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள் பற்றிக் கண்டனக் கேள்வி எழுப்புகின்றன. பிற கவிதைகளிற் பல சீதனமுறையையும் வற்புறுத்திப் பெண்களைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தையும் சாடுகின்றன. ஒரு சில அதற்குமப்பாற் சென்று ஆணாதிக்க மனோபாவத்திற்கே சவால் விடுகின்றன. 'மணமில்லா விட்டாலென்ன மாய்ந்துவிட மாட்டோம் நாம்' என்ற கருணாவின் வரிகளும்

'உயிர்தப்ப வேண்டுமானால்
ஊரைவிட்டு ஓடுவோம்
ஆனால் விலைகொடுத்து
வாங்கியவனுடன் மட்டும்
ஓட நான் தயாரில்லை'



படிப்பகம்

என்ற உமையாளின் பிரகடனமும்
''சீதனத்திற்கு
வழியில்லாததால்
எம்மைச்சுற்றி
உரஞ்சிப்பார்க்கும்
இளைஞரில்
ஒருவன்கூட
புருசனாய் வர
தகுதி இழந்தான்'
என்ற ரஞ்சனியின் ஏளனமும்
'விலைகளை நிறுத்தி
விருப்புக்களுக்கு
இனியாவது
இடங்கொடு'
என்று பாமினி விடுக்கும் சவாலும்
'வாருங்கள்
மாப்பிள்ளையே
நம்
வருங்கால வாழ்வு பற்றி
வாதிடுவோம்'

என்று தன்னோடு வாழவந்தவரை வாதுக்கழைக்கும் நிருபாவின் குத்தலான வார்த்தைகளும் சொல்ல முனைவது என்ன?

குமர்கள் கரைசேர்வதும், விதவை வாழ்விழந்தவளாவதும், கணவனால் நிராகரிக்கப்பட்டவள் வாழாவெட்டியாவதும் நமது மொழிவழக்கிலே பொதிந்துள்ள ஆணாதிக்கத்தின் ஆழ்ந்த சுவடுகள். 'சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டு' சொந்தமும் உறவும் நிர்ப்பந்திக்கும் திருமணத்தின் அவசியத்தையே கேள்விகுட்படுத்தும் இப் பெண்களது தைரியம் மனதுக்கு உற்சாகமூட்டுகிறது. திருமணம் அவசியமா என்ற கேள்வியும் அது அவசியமாயின் அந்த உறவு சமத்துவம், பரஸ்பர மரியாதை பரஸ்பர விருப்பு, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே அமையக்கூடும் என்ற பதிலும் இவர்களது கவிதைகளிற் தொக்கி நிற்கின்றன.

ஆண்கள் பெண்களுக்குத் தரும் அடி உதைகள், நிந்தனைகள் போன்றவை திருமணம் என்ற உறவுக்கு உள்ளேயே நியாயப் படுத்தப்படுவதையும் திருமணத்துக்கு உள்ளும் வெளியிலும் பெண்



கள் ஆண்களது போகப் பொருட்களாகவே காணப்படுவதையும் சாடுகிற வரிகள் பல. உதாரணமாக,

'எங்களைப் பாருங்கள்
எங்கள்
சேலையையும் ரவிக்கையையும் அல்ல
எமது உணர்ச்சிகளை
எங்கள்
முகத்தையும் மார்பையுமல்ல
மனக்குமுறல்களை'

—கல்யாணி (சாம்பற் பூச்சிகள்)

'காரணமின்றி என்மீது
தொடரப்பட்ட
வன்முறைகள்
அவள்மீதும்
தொடரப்பட நான்
அனுமதிக்கப்போவதில்லை'

—பாமினி (பிரகடனம்)

''தேசங்கள் தாண்டினும்
வாழ்நிலை மாறினும்
அகதியாகவும் பெண்ணாகவும்
என்னைக் கண்கள் நோக்கிய வண்ணமே''

—பிரியதர்சினி (பெண்ணாக ஒரு அகதி)

பெண்கள் மத்தியிற் பெண்மை பற்றிய பழமைவாதக் கோட்பாடு களைக் கேள்விக்குட்படுத்தும் கவிதைகள், அயல்நாடு வந்தும் இன்னமும் பழைய சூழலிலேயே தம்மைச் சிறைப்படுத்தியுள்ள மனங் களைத் திறக்கக் கோருகிற கவிதைகள் என்று பல்வேறு கோணங்களி னின்று பெண்ணுரிமைக்குரல் எழும்புகின்றது. அதே வேளை, நிற வெறிக்கு எதிரான கிளர்வுகளும் மனித சமத்துவம் பற்றிய குரல் களும் சேர்ந்தே ஒலிக்கின்றன.

''அம்மா
மனிதனை மனிதனாகப்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



பார்க்க முதலில்
பழகிக்கொள்வோம்''

—உமையாள் (அம்மாவிற்கு)

''ஏன் இங்கு வந்தாய்?
எட்டி நில் கறுப்பனே!''
நிருபா (அப்பிள் மரத்தடியில் மாங்காய்களைத் தேடி)

இந்த வகையில் ஈழத்தமிழ் பெண்ணுரிமைக் கவிதைகள் கடந்த சில ஆண்டுகளிற் தம் செயற்பரப்பை மிகவும் விசாலித்துள்ளன. ஆயினும் இவை தொட வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. பெண்களின் பாலுணர்வு பற்றிய தயக்கங்கள் சமுதாய நிர்பந்தத்தாலானவை. ஒரு பெண் தன் காதல் பற்றிப் பேசுவதே 'அடக்கமற்றவள்' 'ஆட்டக்காரி' போன்ற பட்டங்களை சம்பாதிக்கப் போதுமானது. இந்நிலையில் பெண்களின் பாலுணர்வு தொடர்பான மரபு சார்ந்த பார்வைகளைக் கேள்விக்குட்படுத்துவது சிரமமானதே. ஒழுக்கம் கற்புப் போன்ற விஷயங்களில் உள்ள மனத் தடைகளும் அச்சங்களும், பாசாங்குகளும் முதலில் களையப்படல் வேண்டும். பெண்மை என்றால் என்ன என்ற கேள்விக்குப் புதிய விடைகள் தேவைப்படுகின்றன கருத்தடை பற்றியும், கருக்கலைப்புப் பற்றியும் (அண்மையிற் சில செஞ்சட்டைப் பத்தாம் பசலிகள் எழுப்பிய கேள்விகளின் பின்னணியிற்) கடுமையான ஆய்வுகள் தேவைப்படுகின்றன ஆக்க இலக்கியங்கள் இவற்றைக் கையாள்வதன் மூலம் இவை பற்றிய புதிய சமுதாய பிரக்ஞையை ஊட்ட முடியும். அனைத்திலும் முக்கியமாகப் பெண்ணுரிமை பற்றிய ஒரு உறுதியான நிலைப்பாடற்ற எந்த ஆணுமே ஒரு முற்போக்கு வாதியல்ல என்ற கருத்து இத்தொகுதியில் வந்துள்ளதைவிட இன்னமும் தெளிவாகவும் வலிமையுடனும், முன் வைக்கப்படல் வேண்டும்.

பெண்கள் தேசிய இன ஒடுக்கல், சாதி ஒடுக்கல், நிறவெறி, மதவெறி போன்று வர்க்க சமுதாயத்தின் சகல ஒடுக்குமுறைகட்கும், அனைத்திலும் முக்கியமாக, வர்க்கச்சுரண்டலுக்கும் ஏகாதிபத்திய ஒடுக்கலுக்கும் எதிராகக் குரல் எழுப்பவேண்டும். சுற்றாடல், யுத்தம், போன்றன வெறுமனே ஆண்களின் ஆளுமைக்குட்பட்டன வல்ல மல்லிகாவின் கவிதையில் இந்த விழிப்புணர்வு தென்படுகின்றது. பெண்கள் ஆணாதிக்கத்திற்கு எதிராக மட்டுமே குரலெழுப்ப வேண்டும் என்ற போக்கு ஒரு சிறுபான்மையான பெண்ணிலைவாதப் போக்காகும். சகல அடக்குமுறைகட்கும் சுரண்டலிக்குமெதிராகப் 



போராடுவதில் ஆணுக்குச் சமமாக மட்டுமின்றி, ஆணைவிட அதிகளவில் சுரண்டப்பட்டு ஒடுக்கப்படுவதால், ஆணைவிட அதிகமாகவும் போராடவேண்டிய தேவை பெண்ணுக்கு உண்டு. இதற்கான உரிமையை அவர்கள் எந்த ஆணிடமும் பெறவேண்டிய அவசியமில்லை. கவிதைகளின் அமைப்புத் தொடர்பாக விமர்சிப்பதானால் இதுவரை தமிழிற் புதுக்கவிதையின் குறைபாடுகள் தொடர்பாகச் சொன்னவற்றையே மீண்டும் வலியுறுத்த வேண்டி வரும். இறுக்கமின்மை, ஓசைநயமின்மை, என்பன பற்றிய கவலை பெரும்பாலான புதுக்கவிதையாளரிடம் இல்லை. கவிதையில் வரும் வாக்கிய அமைப்பு எவ்வாறு உரைநடையினின்று வேறுபடுகின்றது என்பது பற்றிய தெளிவீனம் இன்னமும் புதுக்கவிதையை வாட்டுகிறது நம் ஒவ்வொருவருள்ளும் ஒரு கவிஞர் உள்ளார். கவிதையுடனான பரிச்சயம், திறந்த மனப்பான்மை, செய்நேர்த்தி போன்றன அவரை வெளிக்கொணர்கின்றன. பட்டை தீட்டாத முரட்டு வைரம் ஒளிர்வதில்லை கவித்துவம் என்பது கவிதையின் ஒரு கூறுமட்டுமல்ல, நேரடியாகப் பேசும் பாங்கு ஈழத்துத் தமிழ்க் கவிதையின் வலிமையாக சிலகாலம் முன்பு அடையாளங்காணப் பட்டது. அதுவே கவித்துவம் என்று கருதுகிற நிலையிற் சிலர் உள்ளனர். எந்த எழுத்துவடிவத்தையும் விடக் கவிதையே மொழியின் சாத்தியப்பாடுகளை அதிகளவில் பரிசீலிக்க வல்லது இந்த ஆற்றலைப் புதுக்கவிதைமூலம் மிகவும் விருத்தி செய்ய முடியும். எனினும் தமிழிற் பொதுவாக புதுக்கவிதை என்பது யாப்பு இலக்கண விதிகளினின்று தப்பி ஓடும் ஒரு வழியாகவன்றி வேறெதுமாக இல்லை. இக்குறைபாடின் விளைவுகள் இத்தொகுதியில் உள்ள கவிதைகளையும் தொடாமலில்லை.

இங்கு சில பலவீனங்களின் உதாரணங்களைச் சுட்டிக்காட்டு முன், இவை குறிப்பிடப்படும் கவிதைகட்கு மட்டுமே உரியனவல்ல என்பதையும் மேற்கினின்று வரும் தமிழ்க் கவிதையாக்கங்களில் இவற்றைவிடப் பாரிய குறைபாடுகளைக் காணலாம் என்பதையும் கூறுவது அவசியம்.

மல்லிகாவின் ''நாங்களும் மனிதர்தான்'' கட்டுரைப்பாங்காகவே தெரிகிறது. ஆங்கிலத்தில் 'மரபு சார்ந்த' வடிவில் அமைந்த செய்யுளின் தமிழாக்கம் என்பதால் இந்தப் பலவீனமோ தெரியவில்லை. ''ஏனிந்த வித்தியாசங்கள்'' எடுப்பாகவே தொடங்கி முடிவிற் பலவீனமான ஒரு போதனையுரைபோல நலிந்து விடுகிறது.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



கோசல்யா சொர்ணலிங்கத்தின் கவிதைகளின் வரிப்பிரிப்பு தமிழ்ப் புதுக்கவிதையின் விடுபடாத புதிர்களில் ஒன்றாக இருப்பது வருந்தத்தக்கது.

வாலிபம்
வரவேற்றது
அவனுடைய
எல்லாவற்றுக்குமே
விலை சொன்னது...

இவ்வாறான வரி பிரிப்புக்கள், தனித்து வரும் சொற்களின் மீதான அழுத்தத்தை இல்லாதொழிக்கின்றன. அவரது ''ஆடலின் அர்த்தங்களில்''

சிவன்
அவன் பெருமான்
ஆடியே ஆடல்...
அவை தீர்த்தாக
ஐதீக அர்த்தங்கள்

என்ற வரிகளில் வரும் சிவன் எதன் படிமம் என்பதும் கவிதை எதைப்பற்றியது என்பதும் எனக்கு விளங்க மிகவும் சிரமமாகவே உள்ளன.

கல்யாணியின் கவிதைகளில் வரும் படிமங்கள் மிகவும் வலியவை:

''மூக்குச்சிந்துவதற்காக
எங்கள்
மார்புக்கச்சைகளை
அவிழ்த்துக் கொள்பவர்கள்''

''இத்தனை விஞ்ஞான வெய்யிலிலும்
குலமானத்துக்காகக் குடைபிடிப்பது''

''அடுப்பங்கரையிற்
சாம்பற் பூச்சிகளாய்''



ஆயினும் இப்படிமங்களின் வலிமை ஈற்றடிகளிற் தளர்ந்து அவை கவித்துவமற்ற சொற்றொடர்களாக வருவது கவிதையை மிகவும் பலவீனப்படுத்துகிறது.

''உங்கள்
வறண்டுபோன அதட்டல்களையும்
நொருங்கிப்போன கட்டளைகளையும்
நிறைவேற்றும் மனிதப் பிணமாக
வாழாமல்''

இங்கே எதிர்ப்புணர்வைக் கண்டிப்பாகச் சொல்லவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கவிதைக்கு எதிரியாகி விடுகிறது.

நிருபாவின் கிண்டல் அலாதியானது. ஆயினும் இடையிடையே வரும் சில சொற்றொடர்கள் (''சூறாவளி அமைப்பு முறைகள்'' ''வே(மை)சதாரி'' போன்றன) வலிந்து திணிக்கப்பட்ட தன்மையுடன் கவிதை ஓட்டத்தை இடறுகின்றன. ஓரிரு இடங்களில் வரும் தெளிவற்ற வாக்கியங்கள் ('யதார்த்தங்களைக் குருடராக்கி விட்டதாய் நம்பினர்!'' போன்றன) பற்றிக் கூடியகவனங் காட்டியிருக்கலாம். வரவேற்க வேண்டிய துணிச்சல் மிக்க வார்த்தைகள் இவை போல் இன்னமும் தமிழுக்குத் தேவை.

பாமினியின் ஒரு கவிதையில் வரும் இயற்கை வர்ணனை அழகாகவுள்ளது. ஆயினும் அழகான தன் ஊரிலிருந்து பிரிய நேர்ந்தைக் கூறும் வரிகள்,

''இவையனைத்தும்
ஒருங்கே கொண்ட
கரையோரத் தீவுகளைப்
பிரிய நேர்ந்தது''

என்று வரும்போது கவிதை திடீரென்று காணாமற்போய் விடுகின்றது ''ஆண்'' ''போலி எழுதுகோல்கள்'' ஆகியவற்றில் வரும் வரிகளில் கவித்துவம் பின் கதிரைகளில் அமர்ந்து கொள்கிறது.

மைத்ரேயின் ''நாமும் மனிதராய்'' கவிதையை வாசிக்கும்போது இரண்டு ஆக்கங்கள் ஒட்டப்பட்டுள்ளது போல ஒரு தோற்றம் மனதில் எழுந்தது முன்பகுதியில் வரம் இயற்கையின் வர்ணஜாலம் தோழி

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



மின் உருமாற்றத்துடன் உறவு காட்டுகிறது. கவிதையின் மிகுதியோ வேறு திசையிற் பிரயாணஞ் செய்கிறது.

மற்றக்கவிஞர்களின் ஆக்கங்களில் உள்ள குறைபாடுகளும் பொதுவாக முன்கூறிய வகைக்குட்பட்டனவாகவே உள்ளன. இவையெல்லாம் ஆற்றலின்மையாலோ கவித்துவமான உணர்வின்மையாலோ ஏற்பட்டவையல்ல. கவிதைகளைச் சுவைக்கவும் விமர்சிக்கவும் மெருகிடவும் புலம் பெயர்ந்த கவிஞர்களுக்குள்ள வாய்ப்புக்கள் குறைவு. சமகாலக் கவிஞர் பலரது குறைபாட்டுக்குக் காரணம் தமது படைப்புக்கள் பற்றிய சுயதிருப்தி. நான் அறிந்த புலம்பெயர்ந்த கவிஞர்கள் பலர் இதற்குப் பலியானவர்கள் போலவே தெரிகிறது. ''மறையாத மறுபாதியில்'' வந்துள்ள கவிதைகள் ஆளுக்காள் பாராட்டுத் தெரிவிக்கும் சில ஆண்களுடைய ஆக்கங்களை விட ஆழமான உள்ளடக்கத்தை உடையன. பல ஊர்வசிகளும் சிவரமணிகளும் மறைவாகவே இருக்கிறார்கள். ''மறையாத மறுபாதியின்'' பிரசுரம் அவர்களையும் ஊக்குவித்து வெளிக்கொணரும் என நம்புகிறேன். இத்தொகுதியில் வரும் கவிதைகள் போல எந்த ஆணாலும் எழுத முடியாது. ஒடுக்கலுக்கு எதிரான பெண்களின் குரல் அவர்கள் மூலமே முழுமையுடன் வெளிவர முடியும். சீதைக்கும் அகலிகைக்கும் இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் புதிய சீதைகளும் அகலிகைகளும் போர்க்குரல் எழுப்பாமற் பெண்விடுதலை சாத்தியப்படாது. இந்த இலக்கிய முயற்சி இன்னும் வலிய படைப்புகட்கு வழி வகுக்க வேண்டும். அதற்கு உதவுவது ஒவ்வொரு முற்போக்குவாதியினதும் கடமை.

ஓசை 1993

# அரவிந்தனின் முகம் கொள்ளல் *

தமிழிலே வேறெதையுமே எழுத இயலாதவர்கள் புதுக்கவிதை எழுதுகிறார்கள் என்ற கருத்து மிகப்பெரும்பான்மையான புதுக் கவிதையாளர்கட்குப் பொருந்தும். மரபுக் கவிதை எழுத மொழி அறிவும் சொல்லாற்றலும் தேவைப்பட்டது. ஆயினும் செய்யுள் வடிவில் சடத்தன்மையான சொல்லடுக்குகள் எல்லாமே கவிதையாக உலா வந்தன. புதுமைப்பித்தன் 'அண்ணாந்து கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ்ப் பாட்டாச்சே முட்டாளே இன்னமுமா பாட்டு' என்று சாடியவை அந்த உயிரற்ற செய்யுள்கள்தான். மரபு வடிவிற்குள் இருந்தே புதுமையைச் சாதிக்கலாம் என்று நிரூபித்தவர் சுப்பிரமணிய பாரதி. பாரதிதாசன் தமிழ்த் தேசீயவாதத்தினுட் தன் தலையை ஆழப் புதைத்துக் கொண்டாலும் அற்புதமான கவிதை வீச்சைக் காட்டினார். மகாகவியும் முருகையனும் ஈழத்தில் மரபிற்குள் நவீனமான நல்ல கவிதைகளை வடித்தோரில் முக்கியமானவர்கள். மரபின் சிறப்பான அம்சங்களை, முக்கியமாகச் சந்த வலிமையை, முதன்மைப்படுத்திப் புதுக்கவிதைக்கும் மரபுக்கும் பாலமாக நின்றவர்களுள் உடனே நினைவுக்கு வருபவர்கள் நுஃமான், ஜெயபாலன்

மரபுக் கவிதையை முற்றாக நிராகரிப்பது தான் புதுக்கவிதை என்றும் புதுக்கவிதைக்கு ஓசைநயம் அவசியமில்லை என்றும் புதுக் கவிதை ஒவ்வொன்றும் தனக்கான இலக்கணத்தை வகுத்துக் கொண்டே போகிறது என்றும் எங்கோ கேள்விப்பட்ட விஷயங்களை அரைகுறையாக விளங்கிக் கொண்டு சிலர் எழுதியுள்ளவற்றைக் கண்டிருக்கிறேன். ஆயினும் புதுக் கவிதைக்கும் மரபுக்கும் ஏன் உறவு இருக்கக் கூடாது என்றோ எவ்வாறு ஓசை நயம் அவசியமற்றுப் போகிறது என்றோ ஒவ்வொரு புதுக் கவிதையும் தனக்காக வகுத்துக் கொள்ளும் இலக்கணம் என்னவென்றோ உருப்படியாக இவர்கள் எவருமே விளக்குவதில்லை.

அதே வேளை, மகாகவி, முருகையன் போன்றோர் புதுக் கவிதையைப் புரிந்துகொள்ள அதிகம் முயலவில்லை. அவர்களைப்

*'முகம் கொள்' - கவிதைத் தொகுதி கீதாஞ்சலி வெளியீடு, சென்னை–21, 1992, நவம்பர்

படிப்பகம்

பொறுத்தவரை பேச்சு மொழியின் சொற்களையும், சொற்றொடர்களையும், சில சமயம் வாக்கியங்களையும், மரபுக்கியைவான சந்தத்துடனோ அல்லது சீரான புதிய சந்தத்துடனோ, எதுகை மோனையுடன் எழுதுவதே கவிதையிற் பேச்சு மொழியின் பிரயோகமாக இருந்தது பேச்சு மொழிக்கு ஒரு ஓசை நயம் இருக்கிறது; அதிலும் சந்த அமைப்புக்கள் உள்ளன. அவற்றைத் தெரிந்தெடுத்து வேறுபடும் முறைகளில், மரபிற்போல் ஒரு சீராக இல்லாமல், பாவிக்க முடியுமென்ற உண்மை ஏனோ போதியளவில் நமக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை. மரபுக் கவிஞர்கள் கூடத், தாம் வெளிப்படுத்த விரும்பும் உணர்வுகட்கமையவே கவிதையின் சந்த அமைப்பைத் தெரிந்தெடுக்கிறார்கள். (ஒரு சந்தத்தை தெரிந்தெடுக்கிறார்கள் என்பதைவிட அவர்களது கவிதையாக்கத்தில் அது வந்து அமைகிறது என்பது கூடப் பொருந்தும்). ஒரு சோகமான பாடலின் தாள அமைப்பும் குதூகலமான பாடலினதும் எவ்வாறு வேறுபடுகின்றன என்று கவனித்தாற் தெரியும்.

ஒரு காலத்திற் கவிதைகள் யாவுமே பாடக்கூடியவையாக இருந்தன. ஒவ்வொரு கவிஞரும் சொல்லும் பொருளுக்கும் தன் உணர்வு நிலைக்கும் ஏற்றபடி சந்தங்களை அமைத்தனர். அது மட்டுமன்றிச் சில கவிஞர்கள் சில செய்யுள் வடிவங்களையே நாடினர். சந்தமும் எதுகை மோனையும் சொற் தெரிவு மீது கட்டுப்பாடுகளை விதித்தன. ஆயினும் நல்ல கவிஞர்களால் இந்தக் கட்டுப்பாடுகட்கு உட்பட்டு உன்னதமான கவிதைகளை அமைக்க முடிந்தது. மொழி வளர்ச்சி உரைநடை இலக்கியத்தின் தோற்றத்துக்கு வழிவகுத்தது. கவித்துவம் என்பது உரைநடை மூலமும் வெளிப்படுத்தக் கூடிய ஒன்றாகியது. ஆயினும் கவித்துவமான உரைநடை கவிதையாகி விடவில்லை.

ஐரோப்பிய இலக்கியத்திற் புது கவிதை நெறி (இறுக்கமான சந்த விதிகளும் எதுகையும் இல்லாத கவிதை ஆக்கம்) படிப்படியாக விருத்தி பெற்றது. ஆயினும் ஓசை நயம் என்பது முற்றாகவே நிராகரிக்கப்படவில்லை. மரபு அடையாளங் கண்ட ஓசை நயத்தினின்று வேறான முறையிற் புதுக்கவிதை ஓசை நயத்தை வலியுறுத்தியது. தமிழில் ஏற்பட்ட புதுக் கவிதை இயக்கம் அயலிலிருந்து பெற்ற சில கருத்துக்களை அரைகுறையாகப் புரிந்து கொண்டவர்களால் முன்னெடுக்கப்பட்ட காலத்திற் தான் கவிதையின் சில கூறுகளையே கவிதையாகக் காணும் பண்பு மேலோங்கியது. குறியீடுகளும் படிமங்களும் புதிர்களும் அதிமேதாவித்தனமான சித்தனைகளும் சொற்சிலம்பமும் தம்மளவிலேயே கவிதைகளாகக்



காணப்பட்டன. இந்த நோயினின்று தமிழ்ப் புதுக் கவிதை விடுபட நீண்டகாலம் எடுத்தது. இன்னமுங் கூடத் தமிழில் ‘ஹைக்கூ’ போன்ற முயற்சிகளில் இவ்வாறான போக்குகளைக் காணலாம்.

ஈழத் தமிழ் இலக்கியத்தில் மரபு சார்ந்த சந்தம் தன் பிடிப்பை இழக்கத் தொடங்கினாலும் ‘உணர்ச்சிக் கவிதைகள்’ என்று சொல்லக் கூடிய, வலிய சந்தத்தையுடையதும் பாடவும் மேடைகளில் வாசிக்கவும் உகந்தவையான, ஆக்கங்களிற் தன் இடத்தைப் பேணியே வந்தது. உணர்ச்சிக் கவிஞர்களிடம் உணர்ச்சியும் சொல்லாற்றலும் இருந்த அளவுக்குக் கவித்துவம் இல்லாது போய் விட்டது. உரைநடை இலக்கியத்தில் அதிக பரிச்சமுடைய புதிய எழுத்தாளர் பரம்பரையைப் பொறுத்தவரை மரபு சார்ந்த கவிதை வடிவங்களும் மரபின் ஓசை நயமும் நமது மொழிக்கு அந்நியமாகவே தோன்றின. மஹாகவியோ முருகையனோ நீலாவணனோ வழங்கிய கவிதைகளின் உள்ளடக்கத்தின் சமகாலத் தன்மையைக் கூட அவர்களது கவிதைகளின் மரபுசார்ந்த தன்மை கவர்ச்சிக் குறைவான தாக்கிற்று. நுஃமானும் சண்முகம் சிவலிங்கமும் மரபின் சந்தத்துடனும் பேச்சின் ஒலி நயத்துடனும் பரிச்சயமானவர்களாக இருந்தனர். தமிழ் இலக்கியம் அவர்கட்குப் பழக்கப்பட்ட முறைக்கும் பிற்காலத்தவர்கட்குப் பழக்கப்பட்ட முறைக்கும் இருந்த வேறுபாடு பின்னைக் காலத்தவர்களது படைப்புக்களில், பெருமளவுக்கும், மரபின் சாடையே இல்லாதவாறு செய்துவிட்டது.

மரபுக் கவிதையின் அழகியலை விளக்கக் கூடியவர்கள் போலப் புதுக் கவிதையின் அழகியலை விளக்கக் கூடியவர்கள் அதிகம் பேர் இருக்கவில்லை. விளக்க முனைந்த பலரும் ஆனை பார்த்த குருடர் போல ‘கட்புலன்வழிக் கவிதை செவிப்புலன்வழிக் கவிதை’, ‘நேரடியாகப் பேசுதல்’, ‘படிமங்களின்முதன்மை’ போன்று எதையெதையோ எல்லாம் புதுக் கவிதையின் வரைவிலக்கணமாக்கினர். இந்த வகையின் புதுக் கவிதையில் ஈடுபட்டவர்கட்குத் தாம் வாசித்தகவிதைகளின் அடிப்படையிலேயே தம் கவிதையைக் கண்டுபிடிக்கும் தேவை ஏற்பட்டது உருப்படியான விமர்சன மரபும் கவிதா ரசனை பற்றிய பரிச்சயமும் இல்லாததால் எதையோ எவரையோ பின்பற்றி எழுதுவதாக எண்ணி இடறினோர் பலர். தம்மையும் தம் கவித்துவத்தையும் கண்டறிந்து வளர்ந்தோர் வெகு சிலர். அவர்களுள் ஒருவர் கி. பி. அரவிந்தன். பதினேழு கவிதைகளையும் எஸ். வி. ராஜதுரையும் வ. கீதாவும் எழுதிய முன்னுரையையும் தமிழக நண்பர்கட்கு அரவிந்தனின் திறந்த மடல் ஒன்றையுங்கொண்டது அவரது கவிதைத் தொகுப்பான ‘முகங் கொள்’,

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



கவிதை எடுத்த எடுப்பிலேயே விளங்கப்படக் கூடாது என்று சிலர் கருதலாம். பொதுவாகவே ஒரு கவிதையை ஒரு வாசிப்பிற் பூரணமாக உணர முடியாது. இதற்கான காரணங்களுட் கவிதையின் செறிவும் இறுக்கமான தன்மையும் உள்ளடக்கங்களும் குறியீடுகளும் படிமங்களும் உவமைகளும் சிலசமயம் கவிஞர் கருதியதற்கும் மேலான பாதிப்புகளை வாசகரிடம் ஏற்படுத்தலாம். ஒரு கவிதையின் ஓசை நயங் கூட ஒவ்வொரு வாசகருக்கும் ஒவ்வொரு விதமான உணர்வைத் தரலாம். ஆனாற் கவிதை சிக்கலான ஒன்றாகவே இருக்கவேண்டும் என நினைப்போர் கவிதையை அறியாதோர். சாராம்சத்தில் அவர்கட்கும் சொற் சிலம்பத்தில் ஈடுபடும் பண்டித மரபில் வந்த கவிராயர்கட்கும் கவிதை பற்றிய பார்வையில் அதிக வேறுபாடில்லை. அரவிந்தனுடைய கவிதைகள் எளிமையான அமைப்பை உடையவை. இடையிடையே பரிச்சயமான மரபின் சந்தத்தைத் தொட்டும் பிற இடங்களிற் பேச்சோசையின் சந்தத்திலும் அமைந்தவை. புதிய படிமங்கள், குறியீடுகள் என்று அதிகம் காண முடியாது. ஆயினும் அன்றாட வாழ்க்கையின் அனுபவங்களும் மன ஓட்டங்களும் பழைய நினைவுகளும் எதிர்பார்ப்புகளும் ஐயங்களும் கேள்விகளுமே கவிதை அனுபவமாக வந்து அமைகின்றன.

புலம்பெயர்ந்த கவிஞர்கள் பலரின் எழுத்துக்களிற் தெரியும் அவல உணர்வும் நம்பிக்கையீனமும் அரவிந்தனுடைய எழுத்திலும் தெரிகின்றன. ஆயினும் அநீதிக்கெதிரான கோபம் ஒவ்வொரு கவிதையிலும் இழையோடுகிறது. தன் நிலையைப் பற்றித் தனக்குள் இரங்குகிற தன்மை பரவலாகவே இருந்தாலும் கவிதைகளிற் சக மானுடர் பற்றிய உணர்வு ஓங்கி நிற்கிறது. அகதி வாழ்வின் அனுபவங்களின் பின்பும் சாதியத்தைப் பேணும் மனங்களையும் அதிகாரபூர்வமாக அகதி என்று புகலிட அரசால் ஏற்கப்பட்டதையிட்டுப் பெருமைகொள்ளும் கீழ்மையையும் வெள்ளை நிற வெறியையும் அதற்குச்சற்றேனுஞ் சளைக்காத நமது மனத்தடைகளையும் அவரது கவிதைகள் சாடுகின்றன.

பாரிசின் ''மலர்கள் தூவிய பீடங்கள் ஒவ்வொன்றிலும் கூர்வாள் உயர்த்திய'' குதிரைமேலமர்ந்த வீரர்கள்

''சிலையிலும் முறைப்புடன்
செவிகளில் அறைவர்
வெளியேறு''



''சிலைகள் உயிர்க்கும்
வாள்முனை மினுங்கும்
தாயகம் துறந்தவனே
உனக்கு ஏது இருப்பிடம்?''

சொந்த மண்ணிற் பட்ட வதைகளை எல்லாம் நினைவு கூரும் 'வதை மொழி' என்ற கவிதையின் இறுதியில் அகதியாக ஏற்கப்பட்டதையிட்டு மகிழும் மனநிலை பற்றி வரும் நமது சுய அடையாளம் பற்றிய ஒரு பெரிய கேள்வியை எழுப்புகின்றன.

முகமுறிஞ்சிப் பெருத்தவரின்
பாதங்களிற் தெண்டனிட்டு
இறைஞ்சிப் பெற்ற
முகத்திரை
முண்டத்திற்கு மொட்டாக்கு
இதிலென்ன குதூகலிப்பு
சவலையாய் நாமானதற்கா?
ஆகா ...... ஆகா......
அகதிகள் நாமென்றா......

பாரிசில் ஆங்காங்கே எலிவளைகளூடு (சுரங்கப் பாதைகளில்) குறுக்கும் மறுக்குமாக ஓடும் எஃகு அட்டைகள் (மெத்றோ ரயில்) நிற வேறுபாடின்றி மனிதரைக் காவும். குறுக்குக் கட்டும் நார்க்கடகமும் சுமந்தோரெல்லாரையும் இழிவாசக் கருதும் உயர் சாதிக்காரர்களான

என்னவர் அகங்கள்
தரமிங்கும் அளக்கும்
கறுப்பினை இகழும்
காலணிகள் முகங்கள்
நசுங்கும் சிதையும்
அதனால் என்ன?
ஐரோப்பியக் காலன்றோ
மோதிரக் கையன்றொ
தோத்திரங்கள் சொல்வோம்
Thanks, Mercl, Danke......

இங்கு எஃகு அட்டையும் எலிவளையும் புதிய படிமங்கள். ஆயினும் இக் கவிதையின் வலிமை இப் படிமங்களைச் சார்ந்திருக்கவில்லை. பாரிசில் உதாசீனமாக நடத்தப்படும் கறுப்பு இன

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



மக்களுடைய அவலநிலை பற்றிய இக் கவிதை அன்றாட வாழ்வை எளிமையாகச் சித்தரிப்பதிலேயே தன் வலிமையைப் பெறுகிறது.

எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளை அரவிந்தன் தனது தாலாட்டில்

உன் கையிலுல் நெருப்பு வரும்
கண்ணுறங்கு கண்ணுறங்கு

என்ற நம்பிக்கையூட்டும் மொழியிலும் நெருப்பை விழித்துப்

பற்று
மூண்டெழு
ஈரலிப்பு, நீர்மை
அனைத்திலுந் தாவு
பவுத்திரங்கள் பொசுக்கு
சீறிச் சினந்து
கங்குகள் விசுறு
ஒளி...
வசந்த ருதுவென
தேசம் வனப்புற

என்றும் போராட்ட உணர்வுடன் சில இடங்களிலும் சூரியனை நோக்கித் தன் குறைகளைக் கூறி

செம்மணிச்
சுடலையென
வேகும் என் தேசம்
.................
தரிசித்தாயா...?
உன் சினம் தணி
சுருக்கிக் கொள்
.........
மழைக்கரங்களால் நீராட்டு

என்று அமைதி வேண்டியும் தெரியப்படுத்துகிறார்.

விடுதலைப் போராட்டம் பற்றி அவரது நம்பிக்கை இழப்பு அனுபவவாயிலானதாக இருக்கலாம். ஆயினும் சூரியனையும், நெருப்பையும்விட ஒடுக்குமுறைக்குட்பட்ட மனிதன் வலியவன். அந்த



மனிதனுக்கு நம்பிக்கையூட்டவல்ல சொற்கள் வெற்றிகளிலும் எழுச்சியிலும் மட்டுமன்றித் தோல்விகளிலும் வீழ்ச்சியிலுங் கூட ஒரு விதமான பசப்பும் பம்மாத்தும் இல்லாமலே வழங்க முடியும். இந்த வகையில் அரவிந்தனது கவிதைகள் இன்னமும் செய்ய வேண்டியது அதிகம்.

அரவிந்தன் இசைத் தன்மையுடைய சந்தத்தையும் நாடுகிறார். மாலை விழுந்த பின் முன்னிராப் பொழுதினில் என்ற கவிதை எனக்கு மிகவும் பிடித்த ஆக்கம். ஆயினும், இங்கும் சீரான சந்தத்தைப் பொதுவாகவே நாடும் தோற்றமுடைய பிற சில கவிதைகளிலும் இடையிடையே ஓசையில் முறிவு ஏற்படுகிறது. இது அவர் தேவை கருதி ஏற்படுத்திய முறிவாகத் தெரியவில்லை.

மரபு சார்ந்த படிமங்களையும் பழமொழிகளையும் அவர் மற்றச் சமகால ஈழத் தமிழ் கவிஞர்களை விட அதிகமாகவும் நேர்த்தியாகவும் பிரயோகித்த போதிலும் எப்போதுமே அவை சிறப்பாக அமையவில்லை. சில இடங்களில் அவை கவிதைக்கு ஊறாகவே உள்ளன. உதாரணமாக,

ஆற அமர்ந்து
திரை தனை விலக்க
வண்டியும் மாடும்
சுப்பற்ற கொல்லைக்குள்

என்ற வரிகளில் சுப்பற்ற கொல்லை என்ற யாழ்ப்பாணப் பேச்சு மொழிச் சொற் பிரயோகத்தின் உடன்பாடின்மையையும் அந்தச் சொற்றொடர் குறிக்கும் கருத்து சேர்ந்து வரும் கவிதை வரிகளுடன் இசையாமையும் கவனிக்கத் தக்கன.

இவ்வாறே அவரது புதிய படிமம் ஒன்று எனக் கூறத்தக்க முறையில்

பிணைந்து நழுவும்
கயிற்றிரவு

என்ற வரிகளில் இரவு கயிறாக வருகிறது. எதனுடன் பிணைகிறது. எவ்வாறு நழுவுகிறது என்தெல்லாம் யோசித்தேன். எவ்வாறோ இந்தப் படிமம் கவிதை அசை போடும் காதலின்ப உணர்வு பற்றிய ஏக்க மிகுந்த வரிகளுடன் இசைவில்லாது உள்ளது.

சில இடங்களில் அவரது வரிப் பிரிப்பு முக்கியமாக வரிக்கு ஒரு சொல்லாக வரும் கவிதைகளில், கவிதைக்கு வலுவூட்டுவதாக இல்லை. அதைவிடக், கவிதையைப் பலவீனப்படுத்தும் முறையில்

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



செம்மணிச்
சுடலையென
வேகும் என் தேசம்

என்ற இடத்தில் செம்மணி ஏன் சுடலையிலிருந்து பிரிய வேண்டுமென விளங்கவில்லை.

உயிர் உனக்கு
மயிராயிற்று

என்ற வரிகளின் சொற் தெரிவில் வரும் எதுகையை விட ஓசைநயம் இல்லை. அதையொட்டி வரும் வரிகளுடன் ஒலியிலும் அமைப்பிலும் உடன்பாடற்று விடுவதால் அந்த எதுகையோ கவித்துவத்தின் எதிரியாகி விடுகிறது.

தலையெடுத்த
பூக்களை மட்டுமா
நசித்தாய்?
உயிர் உனக்கு
மயிராயிற்று.
உடன்பாடற்ற
சமன்பாடு.

சாதியத்தினதும் நால்வர்ண முறையினதும் கொடுமையை நன்குணர்ந்த அரவிந்தன் ராஜ ராஜனின் குதிரையின் குளம்பு களதிர்ந்த மண் பற்றிப் பேசும்போது மனம் கொஞ்சம் துணுக்குற்றது. அந்தப் 'பொற்காலத்தின்' இருண்ட பக்கத்தை அரவிந்தன் கவனிக்கத் தவறிவிட்டாரோ என்றே தோன்றியது. தொகுதியின் பிற கவிதைகளில் உள்ள சமுதாயப் பார்வையோ மானுட சமத்துவஞ் சார்ந்து, மனித நேயத்தை வலியுறுத்துவது, ஒடுக்கலுக்கு எதிராக மனத் தளர்ச்சியூடுங்கூட மறுத்துப்பேசுவது.

நான் அண்மைக் காலத்தில் அறிய வந்த இலங்கைத் தமிழ்க் கவிஞர்களுள் அரவிந்தன் முக்கியமான ஒருவர். அவரது கவிதைகளின் எளிமையும் தெளிவும் கட்டுக்கோப்பான அமையும் புதுக் கவிதை எழுதுவோர் படித்துக் கற்க வேண்டிய சிறப்பம்சங்கள். அவரது கவிதை இன்று நம்மைச் சூழும் அந்தகாரத்தை ஊடறுத்து ஒளிமிகுந்த எதிர்காலத்திற்கான போராட்டப் பாதைக்கு ஒளியூட்ட வேண்டும். பலஸ்தீனக் கவிதைகளில் இருளும் ஒளியும் சேர்ந்தே தெரிகின்றன. பலஸ்தீனியரின் நாற்பத்தைந்து வருட அகதி நிலை அவர்களது உறுதியைக் குலைக்கவில்லை. புதிய சூழ்நிலைகளில் புதிய போராட்ட நிலைகளும் போராட்டத் தேவைகளும் அரவிந்தனது கவிதைகட்கு உரமூட்டி வளம்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஓசை 1993

# சுந்தர ராமசாமி : சில சந்தேகங்கள் *

'ஜே ஜே. : சில குறிப்புகள், தமிழ் நாவல் இலக்கியத்தில், கதை சொல்லும் முறையில் வரவேற்கத்தக்க ஒரு புதுமையான முயற்சி. சுந்தரராமசாமியின் படிமங்களது வலிமை (ஓரிரு சமயங்களில் வாசகர் களின் திறமை மீதுள்ள ஐயப்பாடு காரணமாகவோ வேறு எதற் காகவோ அவர் படிமங்களுக்கு விளக்கம்தந்து, அவற்றின் கூர்மையை மழுங்கடித்த போதும்கூட) படைப்பிற்குச் சிறப்பூட்டுகிறது.

மென்மையான உணர்ச்சிகளையுடையவனும் அய்யப்பனென்ற மாக்சியவாதி ஒருவரது தொடர்பால் நவீனச் சிந்தனைகளுடன் பரிச்சயப்படுத்தப் பட்டவனும், காலப்போக்கில் கம்யூனிஸ்டுகளின் எதிரியுமாகி தனிமனித உணர்வுகளில் லயித்தும் சமூகச் சீர்கேடு களைக் கண்டு சினந்து தனக்குள்ளே குமுறுகிறவனும், ஈவிரக்கமற்ற விமர்சகனுமான ஜோஸஃப் ஜேம்ஸ் (ஜே. ஜே.) எனும் மலையாள எழுத்தாளனைச் சிருஷ்டித்த சுந்தர ராமசாமி அவனைச் சில தீய பழக்கங்கட்குட்படுத்தி 39 வயதிலேயே ஸிரோஸிஸ் (cirrhosis) காரணமாகச் சாகடித்து விடுகிறார். கதை இந்த ஜே. ஜே. யின் உபாசகனான தமிழ் எழுத்தாளன் பாலு ஜே. ஜே. பற்றி நூல் எழுத விபரங்களைத் திரட்டும் பாங்கில் அமைந்துள்ளது. முதலாம் பாகத்தில் பாலு ஜே. ஜே.க்கு மிகவும் பரிச்சயமான பலர் மூலம் தகவல்களைத் திரட்டிய கதையையும் அதன் மூலம் ஜே. ஜே. பற்றிய ஒரு சித்திரத் தையும் இரண்டாம் பாகத்தில் ஜே. ஜே. யின் நாட்குறிப்பிலிருந்து (அவனது மனைவியும், இன்று பிரபல அரசியல்வாதியுமான சாரம்மா வின் அனுமதியின் வரையறைக்குட்பட்டு) தெரிந்தெடுத்த சில, பகுதி களையும் தந்த ஆசிரியர் இறுதியாக ஜே. ஜே. பற்றிய நூலை எழுதும் முயற்சியில் பாலுவை (கதை பாலுவின் கண்ணோக்கிலேயே எழுதப்பட்டுள்ளது) தூண்டியவருக்கு நன்றியுரை, ஜே. ஜே யின் புத்தகப்பட்டியல் ஒன்று, தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய மூன்று ஜே. ஜே. நூல்களின் ரத்தினச் சுருக்கமான விமர்சனக் குறிப்புகள் எனும் மூன்று அனுபந்தங்களையும் சேர்த்திருக்கிறார். (இந்த அனுபந்தங்கள் எனக்குக் கொஞ்சம் அபத்தமாகவே இருக்கிறது.

*சுந்தர ராமசாமி, ஜே. ஜே. : சிலகுறிப்புகள், சென்னை: க்ரியா, 1981, 200 பக்கங்கள், விலை: இந்திய ரூபா 20.00



படிப்பகம்

ஆசிரியருக்கு அவர் தன் படைப்பில் நாடுவதும் பிறரை நாடத் தூண்டுவதுமான முழுமை (perfection)யை அவை அளிப்பதாகத் தென்பட்டிருக்கலாம்!) கதையின் ஆரம்பப் பகுதிகளில் ஒரு வகையான பாசாங்குத்தன்மை தொனிக்கிறது இது மூன்றாம் பக்கத்திலேயே வந்து விழும் அடிக்குறிப்பால் சற்றே வலியுறுத்தப்பட்ட போதும், மேலும் சிறிது வாசிக்கும் போது, சு. ரா ஏற்படுத்த முனையும் கதைச் சூழல் பரிச்சயமாவதன் மூலம் முன்னைய உணர்வு சற்றே தணிந்து விடுகிறது.

ஜே ஜே. மூலமும் அவன் கதையைக் கூறும் பாலு மூலமும் சு.ரா. கம்யூனிஸ்டுகள் மீது கட்டவிழ்த்துவிடும் கண்டனங்களையோ, அல்லது கம்யூனிசம் பற்றி, அவரது வியாக்கியானங்களையோ நான் விமர்சிக்க முனையவில்லை.

கதையில் வரும் சில பாத்திரங்கள் மூலம் கம்யூனிஸ்டுகளது தரப்பிலான பிரதிவாதம் தரப்பட்டுள்ளது என்றாலும் அந்தப் பாத்திரங்களது தன்மையும் அவர்களது வாதங்களது தன்மையும் கம்யூனிஸ்கட்கும் கம்யூனிஸத்திற்கும் எதிரான சு. ரா. வின் கருத்துகட்கு வலிவூட்ட உதவுமாறே, அமைகின்றன. சு. ரா வை மீறியே எதிர்தரப்பு வாதங்களின் நியாயத்தை யாரும் காணவேண்டிய நிலையுள்ளது. ஆனாலும் அவரது கருத்துக்களையும் வியாக்கியானங்களையும் விமர்சிப்பதைவிட அவரது கதையிலுள்ள சில முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுவதே இங்கு தேவையானது. ஜே. ஜே என்பது சு. ரா. வை குறிக்கிறதா அல்லது வேறு யாரையுமா என்பது எல்லாம் அவசியமற்ற கேள்விகள். ஆனால் சு. ரா. வின் கருத்துக்களை ஜே. ஜே. பிரதிபலிப்பது என்னவோ கவனிக்க வேண்டிய உண்மை.

ஜே. ஜே மென்மையான மனதுடையவன். அவன் மற்றவர்களை எள்ளிச் சிரிப்பதே கூடவேதனையின் சிரிப்பு. அவன் முழுமை வேண்டுவோன். (perfectionist) அவனது மாஜிக்காதலியும் மேனி முழுவதும் வெண் குஷ்டம் முற்றாகப் பரவிய அழகியுமான ஓமனக் குட்டியின் கவிதைகளை (அவை மிக மட்டமானவை) ஏளனம் செய்து அதனால் அவள் கோபித்து அவனை ஏச அந்த உறவு முறிகிறது. அதே ஜே.ஜே, இரண்டு மணிநேரம் யோசனை செய்து, ஆறு கிளாஸ் தண்ணீரும் குடித்து, ஒருபடியாக ஹொட்டல் வாசலில் கண்ட குஷ்டரோகிக்கு உதவுவது என்று முடிவு செய்த பிறகு (இந்த மாதிரியான பெரிய முடிவுகளை எல்லாம் சாமான்யர்களான நாம் அரை நிமிசத்தில் எடுத்து விடுவோம். இரண்டு மணி நேரமாவது சிந்திக்காதவன் எல்லாம் எப்படியாம் சிந்தனையாளனாவது?)



குஷ்டரோகியைத் தேடி அலைந்து வேறு யாரோ குஷ்டரோகியைக் கண்டு அவன்முன் நாணயம் ஒன்றைப் போடுகிறான். கைவிரல்கள் அழுகி விழுந்த அந்தக் குஷ்டரோகி, நாணயத்தைக் காலால் மண்ணுள் அரைத்து, தன்னைக் கணிப்பில் எடுக்காமல் ஜே. ஜே. செய்த தானத்தை அவமதித்துவிடுகிறான். இதை ஜே. ஜே. யால் தாங்க முடியவில்லை. தன் குற்றத்தை நினைத்து உள்ளுக்குள் குமுறுகிறான். இது ஜே. ஜே. யின் மென்மையின் வெளிப்பாடு. மற்றவர்களின் மனதைப் புண்படுத்தும் விதமாக ஏளனம் செய்யும் ஜே. ஜே. அங்கெல்லாம் இந்த மென்மையைக் காட்டவில்லை. குஷ்டரோகியிடம் எதிர்பாராத விதமாக ஜே. ஜே. பெற்ற அவமதிப்பில் அவனது சுயம் (ego) புண்பட்டதன் விளைவாக இந்த மென்மை, அல்லது இத்தகைய மென்மையான உணர்விற்குரியவர்கள் எல்லாமே ஒரு வகையான டம்பக்காரர்கள் (snobs) தானோ என்ற கேள்வி எனக்குள் எழுகிறது.

கம்யூனிஸ்ட் சித்தாந்தி அய்யப்பன், பக்கர் முதலாளியுடன் கொண்டுள்ள உறவின் விசித்திரம், முல்லைக்கல் மாதவன் நாயர். அல்பர்ட், ஸ்ரீகாரியம் போன்ற கம்யூனிஸ்ட்கட்சிக்காரர்களிடம் எல்லாம் முதலாளித்துவ தன்மையையும் நிலப்பிரபுத்துவச் சிந்தனையின் நிழல்களையும் காணும் ஜே. ஜே. க்கு இவர்களெல்லாம் மூலதனமில்லாமல் சுரண்டிக் கொழுப்பவர்கள் 'இவர்கள் ஆட்சிக்கு வந்தால் சோஷலிசம் மலருமா?' என்று சாடுகிறான் ஜே. ஜே ஊழலையும் போலித்தனத்தையும் தாக்கி விமர்சிப்பதை வரவேற்கும் எனக்கு, இந்த விமர்சனமெல்லாம் கம்யூனிஸ்ட்டுகளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டவை போலவே படுகிறது. தீய எண்ணங்களுடன் தர்ம காரியங்களில் ஈடுபடும் பணக்காரர்களது செயல்களின் நல்விளைவுகள் ஜே. ஜே. மனதில் ஓங்கி நிற்கின்றன. (வாடகைக்கு சைக்கிள் விடுபவனையும் சுரண்டற்காரன் என்று கம்யூனிஸ்டுகள் தாக்கியதாகவும் வருகிறது. அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது) சில கம்யூனிஸ்டுகளின் குறைகள் எல்லாக் கம்யூனிஸ்டு கட்குமே உரியனவா? அல்லது கம்யூனிஸ சித்தாந்தமே அக்குறைகளின் தோற்றுவாயா? (உண்மையைத் தேடிய ஒருவர் என்று கால் மார்க்ஸுக்கு ஒரு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது) ஜே. ஜே. க்கள்' கூறும் மூன்றாவது பாதைகள் யாவுமே சாராம்சத்தில் ஜே.ஆர். களின் முதலாவது பாதையேதான் என்பதுதான் உண்மை. ஜே. ஜே. ஒரு மாஜி ஓவியனும் கூட அவன். வரைந்த ஓர் ஓவியத்தில் (கதையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது) பத்மனாப ஸ்வாமி கோயிற்படிக்கட்டில் நிறைய ஏழைகள் சூழ நடுவே காந்தி உட்கார்ந்து நேராகப் பார்த்தாற்போல் வரையப்பட்டுள்ளது. சத்திய வேட்கைமிக்க

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



ஜே. ஜே. காந்தியை பிர்லா மாளிகையின் படிக்கட்டில் நின்றாற் போல் ஒரு படம் வரைந்து, காந்தி எனும் சத்தியத்தின் மறுபக்கத்தைக் காட்டி இருக்க மாட்டானா? (அவனது சமுதாய நோக்கின் ஆழமே அவ்வளவுதானா அல்லது அப்படி ஒரு படத்தைச் சாரம்மா ஒளித்து வைத்திருக்கிறாளா என்று விசாரிக்க பாலுவை விட வேறு யாரையாவது அனுப்புவாரா சு. ரா...?)

ஜே. ஜே. மாஜி கால் பந்தாட்டக்காரன். அதிற்கூட முழுமை வேண்டுபவன். அவனது இறுதி நாட்களில் ஒரு நாள் சிறுவர்கள் டென்னிஸ் பந்துடன் கால் பந்தாடுவதைக் காண்கிறான். கட்டுப் பாடற்ற ஆட்டம். கற்பிக்கவும் யாருமில்லை. உழைப்பு குறிக் கோளற்றுச் சிதறுவது பற்றிக் கவலையின்றி ஆர்ப்பரித்து விளையாடு கிறார்கள். ஜே. ஜே. யின் நினைவு சமுதாயத்தில் செய் நேர்த்தி இல்லை என்ற எண்ணத்துக்குத் தாவுகிறது. ஜே ஜே. எதிர்பார்க்கும் செய் நேர்த்தி எங்குமே இல்லைத்தான் ஆனால் சிறுவர்களது ஆரவாரம் அவர்களது வயதையும் வளர்ச்சியையும் ஒட்டிய ஓர் ஒழுங் கின் அடிப்படையிலானது. அந்த ஒழுங்கு இல்லாவிட்டால் அங்கு களைதான் மீந்திருக்கும். சமுதாயம் ஒன்றில் ஒழுங்கு ஏற்படுவதும் அந்த ஒழுங்கின் குலைவில் வேறு புதிய ஒழுங்கு ஏற்படுவதும், அந்த வளர்ச்சிப்போக்கின் போது சிதைவும் குழப்பமும் விரயமும் நிகழ்வதும் இயல்பானவை. இயங்கும் எதனிலும் குழப்பமும் ஒழுங்குமான முரண்பாட்டின் இரு தரப்புகளும் இருந்தே தீரும். (மனித உடலின் இயக்கமே அப்படியானது.) சமுதாயத்தைக் கேட்பானேன். சோஷலிசத்தின் கீழ் உள்ள நேர்த்தி ஜே. ஜே. க்களுக்குப் பிடிக்குமா? இவர்களெல்லாம் காண விரும்பும் இடங்களில் ஒழுங்கையும் அழகை யும் காண்பார்கள்: விரும்பாவிட்டால், எல்லாமே எதிர்மாறுதான்.

அய்யப்பன் ஜே. ஜே. யைக் கடுமையாக விமர்சித்து அவனைத் தத்துவ பீடத்திநின்று தீர்க்கதரிசியின் இருட்டுக் குகைக்கு ஒதுக்கியதா மூன்றாம் பக்கத்தில் வருகிற விஷயம் கதைப்போக்கில் நிரூபணமாகவில்லை. ஜே. ஜே. க்குப் பின்னால் சிறிய ஓர் எழுத் துலகப் பட்டாளமே திரண்டு நிற்கையில், அவனது எதிரிகள் கூட அவனை மதித்து நடக்கையில் இது எப்படிச் சாத்தியமாயிற்று? அல்லது அய்யப்பன் அவனைப் பற்றிச் செய்த கணிப்பீடுதான் கதையில் வரும் சகலவற்றிலும் அதிகம் உண்மையானதோ? 'உள்ளுணர்வின் ஒளிக்கீற்றுக்களில் தன்னை ஏமாற்றிக் கொண்டவன் தன் நிலையில் விட்டுப்போன பகுதி ஒன்று இருக்குமெனவும் எதிர் நிலையில் உண்மையின் பகுதி இருக்குமெனவும் எப்போதும் எண்ணி பாதைகளில் குழம்பி சந்தேகங்களில் தத்தளித்து முடிவுகளில் ஊசலாடிக் கொண்டிருந்தவன்.'



'சிந்தனை உலகு கேட்டுக்கொண்டிருக்கும் முழுமை' இல்லாமல் எதையெதையோ எல்லாம் எண்ணிததடுமாறுகிற எவனையும் (விசேஷமாக அல்பாயுசாக இறந்துபோனால்) மேதை என்று கொண்டாட நம்மிடையே 'பாலு' கட்குக் குறையவில்லை.

இறுதியாக பாலு தன் சிறுவயதில் தன் அக்காள் ரமணியுடன் சேர்ந்து விளையாடும் பொம்மை விளையாட்டின் கற்பனையான நிஜத்தைக் கலைக்க முனையும் பெரியவர்களை வெறுக்கிறான். ஜே. ஜே. கூட முதிர்ச்சியடையாத மனித மனங்களின் கனவுகளைக் கலைக்கும் ஒருவனாகக் காட்டப் படுகிறான். சுந்தர ராமசாமி என்னும் குழந்தை ஜே. ஜே. என்னும் சாமி பொம்மையுடன் விளையாடுகிறது. அது சாமி இல்லை. வெறும் பிளாஸ்டிக் பொம்மைதான் என்று சொல்லுகிற என்மீது அவருடன் கூட விளை யாடும் குழந்தைகள் கோபிப்பதில் நியாயம் இருக்கலாம். அவர்களது கனவுகளைக் கலைக்க எனக்கு என்ன உரிமை?

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# காகம் கலைத்த கனவு*

## சில குறிப்புகள்

ஈழத் தமிழ்க் கவிதைக்குக் கடந்த பத்தாண்டுகளில் நேர்ந்த பெரிய இழப்பு சிவரமணியின் மரணம் என்றால் அதே கால கட்டத்தில் அது அடைந்த ஒரு முக்கியமான பேறு சோலைக்கிளியின் பிரவேசம். இருவரும் இரண்டு வித்தியாசமானதும் ஈழத் தமிழ்க் கவிதை வழக்கிற்குப் புதியதுமான கவிதைப் போக்குகளை அடையாளம் காட்டினார்கள். முன்னவர் தனது கவிதைத்துவத்தின் உச்சத்தை நோக்கிய பயணத்தின் போதே தனது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டார். பின்னவர் புதிய புதிய உச்சங்களை நமக்குத் தொட்டுக் காட்டுகிறார்.

''காகம் கலைத்த கனவு'' தொகுதியாக வெளிவர முன்னரே சோலைக்கிளியின் ''தொப்பி சப்பாத்து சிசு'' கவிதையைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் முன்பு சம்பந்தப்பட்டிருந்த 'பனிமலர்' என்ற லண்டன் தமிழ்ப் பத்திரிகையின் சக ஆசிரியர் அதை மறு பிரசுரம் செய்த காரணத்தாலேயே, சோலைக்கிளி பற்றி அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரது முந்திய தொகுதி ஒன்று (எட்டாவது நரகம்) சென்ற வருடமே என் பார்வைக்குக் கிடைத்தது. எக்காரணத்தாலோ 'காகம் கலைத்த கனவு' என் கைக்கு வர ஒன்றரை வருடம் எடுத்தது. அதற்கிடையில், அவரது சில கவிதைகள் ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகளில் மறுபிரசுமாயின. சோலைக்கிளியின் தொடக்ககால கவிதைகள் சில பற்றி முருகையனது விமர்சனக் குறிப்புகள் தொடர்பாக நுஃமான் 'எட்டாவது நரகம்' தொகுதியின் முன்னுரையிற் குறிப்பிட்டிருந்தார். அவரது முன்னுரையில் விமர்சனப் பாங்கான சில வார்த்தைகள் கூறப்பட்டிருந்தன. 'காகம் கலைத்த கனவு' பற்றி வ. ஐ. ச. ஜெயபாலன், விமர்சிக்க மிகுந்த தயக்கத்துடன், எழுதிய நயப்பு ஒன்று கனடாவிலிருந்து வரும் 'தாயகம்' வார ஏட்டில் வந்ததாக நினைவு. வேறொருவரது விமர்சனக் குறிப்பொன்று ஒரு ஐரோப்பிய ஏட்டில் வந்ததாக நினைக்கின்றேன். சோலைக்கிளியின் கவிதைகள் தம் உருவமும் உள்ளடக்கமும் காரணமாகப் பல வேறு கோணங்களின்று விமர்சிக்கப்படக் கூடியன.

*சுவடுகளுக்காக, பொன்னி — அடையாறு, சென்னை-20



எனினும், அவரது கவிதைத் தொகுதி மிகவுங் காலந்தாழ்த்தியே கைக்கு வந்தமையால் அது பற்றி எழுதும் எண்ணத்தைக் கைவிட்டிருந்தேன் அண்மையில் இலங்கையிலிருந்து நண்பர் ஒருவர் சோலைக்கிளியின் கவிதைகள் பற்றி எழுதுவது நல்லது என்று தெரிவித்திருந்தார். எனவே சமகாலத் தமிழ்க் கவிதை பற்றி அக்கறையுடையோர் மிகவும் அறிய வேண்டிய ஒரு கவிஞரின் படைப்புக்களைப் பற்றி எழுத முற்படுகிறேன்.

நுஃமான் 1988ம் ஆண்டு எழுதிய தனது முன்னுரையில் அவரது வெளிப்பாட்டு முறையும் அலாதியான புதுப்புதுப் படிமங்களையும் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். படிமங்களே கவிதைகளாகக் கருதப்பட்ட ஒரு சூழலினின்று புதுக் கவிதை விடுபட்டாலும், படிமங்கள் அதிபுத்திசாலித்தனமான உணர்வு மரத்துப் போன ஒரு கவிதை மரபின் தூண்களாகிய நிலையைத் தமிழ்நாட்டின் புத்திஜீவிக் கவிதை வட்டம் உருவாக்கியது. இலங்கையின் தமிழ்க் கவிதையோ தன் நேரடியாகப் பேசும் தன்மை மட்டுமே போதுமானதாகக் கருதும் தவற்றுக்கு ஆளாயிற்று. தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டச் சூழல் கவிதைகளின் உள்ளடக்கத்தில் ஒரு கனதியான தன்மையைச் சாத்தியமாக்கிற்று. ஆயினும் மரபுக் கவிதை பற்றியும் பொதுவாகவே கவிதை பற்றியும் போதிய அறிவின்மை காரணமாகப் புதுக்கவிதைஎன்பதுஎழுத்தாற்றல் இல்லாதவர்கள் ஒதுக்கிடம் தேடும் ஒரு அம்பலம் போலாயிற்று. புதுக்கவிதை என்றால் என்ன என்பது பற்றிய தீர்க்கமான விடையை எவரும் தருவது எளிதல்ல. புதுக்கவிதைகளை அமைப்பின் படி வகைப்படுத்துவதும் அதன் அழகியற் கூறுகளை வரிசைப்படுத்துவதும் மட்டுமே போதாவெனினும், தமிழிற் புதுக்கவிதைக்கு எது அவசியமில்லை என்று காட்டுவது பலருக்கும் எளிதாக இருந்தது. இவ்வகையிற் சிலரால் முற்றாகவே மறுக்கப்பட்ட ஒரு அம்சம் ஓசை நயம் எனலாம். எதுகை, மோனை இல்லாமல் மரபின் சந்த வடிவம் ஒன்றில் அமைந்த கவிதை புதுக் கவிதையல்ல என்று நிராகரித்த ஒரு கட்டுரையைத் தமிழகச் சிற்றேடொன்றிற் பன்னிரண்டு ஆண்டுகள் முன்பு கண்ட நினைவு. ஓசைநயம் என்றால் ஒரு சீரான சந்தமே தான் என்ற அபிப்பிராயம் இன்னமும் உள்ளது. பேச்சோசையின் சந்தங்கள் பற்றிய உணர்வும் அறிவும் நம் மத்தியிற் போதாது. ஆயினும் அவற்றைக் கவிதையிற் பயன்படுத்த முடியும், சோலைக்கிளியின் கவிதையில் ஒரு விதமான சந்த ஒழுங்கைக் காணலாம் அது சீர்ப் படுத்தப்பட்ட பேச்சு மொழியின் சந்தம் அது வரிக்கு வரி

தந்தன தந்தன தனதன தந்தோம்

என்ற விதமாகவோ

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



தக்கத் தரிகிட தா தக்கத் தரிகிடதை

என்ற விதமாகவோ வரிக்கு வரி ஒரே விதமாக வராது. அவரது சொற்கள் இயல்பாகவே வந்து கவிதை வரிகளாக விழும் போது அவற்றிடையே உள்ளார்ந்த ஒரு சந்த உறவும் அமைந்து விடுகிறது. மரபுக் கவிதையிற் போல் 'தேமா, புளிமா' என்ற அளக்கக் கூடிய விதமாக அது எப்போதும் அமையாது.

நாம் சந்திக்கும் வேளைகளில்
உன் முகத்தில் சந்திரன் உதிக்கவில்லை.
என் முகத்தில்
ரோஜா மலரவில்லை
அவ்வளவே

(ஓர் உறவு பூத்த பாட்டு)

மூன்றாம் நான்காம் வரிகளைச் சேர்த்து வாசித்தால் இரண்டாவது வரியுடன் உள்ள ஓசை உடன்பாடு தெரியும்.

நீயும் நானும்
அண்மையிற் தான் இருந்தோம்
நம் உறவுதான்
நான் முன்னர் சொன்னதைப்போல்
பூமிக்கும் வானுக்கும்
இடைப்பட்ட தூரமாய்
நெருங்க முடியாமல் தினசரியும் நீண்டது.

அதே கவிதையில் வரும் இந்த அடிகளில், முன்னையளவு தெளிவான ஓசை ஒழுங்கு இல்லை. உரக்க வாசிக்கும் போது ஒரு ஒழுங்கான ஓட்டத்தை உணர முடிகிறது. வரிக்கு வரி வரும் அசைகளின் நீள வேறுபாடுகளை மீறிய ஒரு சந்த உணர்வை அனுபவிக்க முடிகிறது. அதை விறைப்பான அளவு கோல்களால் அடையாளம் காட்டுவது சிரமம்.

வலிந்து வார்த்தைகளைத் திணிக்கிற போக்குச் சோலைக் கிளியின் எழுத்திற்கு அந்நியமானது. நுஃமான் தன் முன்னுரையிற் கூறியது போல சோலைக்கிளியின் கவிதைகள் வாசகர்களிடம் உணர்



திறனையும் கற்பனை வளத்தையும் வேண்டி நிற்கின்றன. அதி புத்திஜீவித்தனமான கவிதைகளை முடிச்சவிழ்க்கும் ஆற்றலைப் போலன்றி இவை கவிஞரது கவிதை மொழியுடனான பரிச்சியத்தின் மூலம் எளிதாக விருத்தி செய்யக் கூடியவை.

•

அவருடைய கவிதைகள் மிகவும் தன்னுணர்வு சார்ந்தவை. ஒரு புறம் அவரது தனிப்பட்ட அனுபவங்களதும் அந்தரங்க உணர்வுகளதும் வெளிப்பாடாகவும் மறுபுறம் தன்னைச் சூழவுள்ள சமுதாயத்தின் அதி வேகமான சீரழிவின் மீதான கோபத்தின் வெளிப்பாடாகவும் அவரது கவிதைகள் அமைகின்றன. இடையிடையே தன்மன உட்தேடல்களையும் காணலாம். ஆயினும் அவரது மொழியின் எளிமை கவிதை அனுபவமற்ற ஒரு வாசகரை ஏமாற்றி விடலாம். அவரது 'நான் பிள்ளை' என்ற கவிதையைப் பார்ப்போம்.

திடீரென வானம் விழுந்தது.
நாலு தென்னைகளும் ஆறேழு பனையும்
தலையாலே முறிந்து தொங்கின
ஒரு கோழி வீறிட்டுக் கத்தியது.

எனது பிள்ளை விளையாடிக் கொண்டிருந்தான்
வாசல் முழுக்க நட்சத்திரங்கள்
உடைந்து நொருங்கிக் கிடந்தன
ஒரு முகிலை எடுத்து அணைத்து முத்தமிட்டான்.

பின்னர் எழுந்து
அங்கே சிதறிக் கிடந்த நிலவின் துண்டுகளை
ஒட்டிப் பார்த்தான். பிறகு எறிந்தான்.

இன்னொரு நிலவைச் செய்யலாம் என்று
தனக்குள் சொல்லிக் கொண்டு நடந்தான்

நான் வீட்டுக்குள் இருந்தேன்
என் சின்ன வயதில் இந்த நிலவிற்காய்
அழுத அழுகைகளை நினைத்தேன்.

படிப்பகம்

ஒரு நட்சத்திரம் கூட என்னால் அந்த நாட்களில்
பிடித்துப் பார்க்க முடியாமல் போயிற்று
வானம் என்னை விட வெகு தொலைவில் இருந்தது.

என் தலைமுறைக்குள் இப்படியொரு மாறுதல்,
மாங்காய்க்குக் கல்லை எறிவதுபோல்

வானுக்கு எறிந்து
நிலத்திற் கிடக்கிற பிள்ளை!

இப்போது அவன் வானத்தை
மீண்டும் சரிசெய்து விட்டு நடக்கிறான்

'தொப்பி சப்பாத்து சிசு' 'தொட்டில்' போன்று எதிர்கால சிறுவர்கள் பற்றிய அச்சங்களை வெளிப்படுத்திய கவிதைகள் இன்றைய சமுதாய நெருக்கடியும் யுத்தச் சூழலும் இளஞ்சிறார்கள் மீது ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றியன. இன்றைய இளைஞர் பரம்பரைக்கும் அவர்களது முன்னோருக்குமிடையிலான வேறுபாட்டின் இன்னொரு அம்சம் பற்றியதே மேற்தரப்பட்டுள்ள கவிதை. இங்கு சமகால இளைஞர்களின் தன்னம்பிக்கையும் துணிவும் நேரடியாகவே அடையாளங் காணப்படுமாயினும், நுகர்வைப் பெருக்கும் இலக்குடன் குப்பைத் தொட்டிக்கான உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட ஏக போக முதலாளித்துவத்தின் முக்கிய பாதிப்புக்களின் ஒன்றான விரயத்தையும் நாம் தரிசிக்க முடிகிறது.

சோலைக்கிளியின் பல கவிதைத் தலைப்புகள் (காகம் கலைத்த கனவு, இறகு உதிர்ந்த கிராமம். கொம்பன் காற்று, பேய் நெல்லுக் காய வைக்கும் வெய்யில் போன்று) பல வாசகரை உலுப்பிவிடும் தன்மையுடைய படிமங்களே. அவரது கவிதைகளில் படிமங்கள் செறிந்திருப்பது போல சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் எங்குங் காண்பது அரிது. படிமங்கள் ஒவ்வொன்றும் அவரது எண்ணங் களைக் கீழ்க் கோடிட்டுக் காட்டுவன. 'முட்டையை விட்டு வெளி யேறிய குஞ்சுகள் மாதிரி' மீண்டும் நகருக்கு வரும் மனிதர்கள் பற்றிய முதலடிகள் மேற்கொண்டு வரும் வரிகளுக்கு நம்மை ஆயத்தப்



படுத்தி விடுகின்றன. இக்கவிதையில் மனிதனைப் பார்த்து ஏளனமாக மாடு சாணமிடுகிறது. மரமும் மண்ணும் காகங்களும் தமக்குள் சிரிக் கின்றன. 'கல் விழுந்த குளம் போல்' காலை விடிவது ஒரு கலவர மிக்க நாளை அறிவிக்கிறது. இவ்வாறு இவரது புதுமையான படிமங்களைப் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆயினும் இவரது கவிதைகளின் சிறப்பு சொற்கள் மீதான இவரது அற்புதமான ஆளுமையை விட மேலாக, இவரது இளகிய மனதின் மீதும் அதன் மனித நேயத்தின் மீதும் தான் தங்கியுள்ளது. கல்லிறைத்து உருளை நெரித்த தெருவில் தலை நிமிர்ந்தும் புல்லையும் புத்தகத்தை மூடுகையில் நசுங்குண்ட புள்ளி அளவிலான பூச்சியையும் நினைத்து உருகிய மகாகவியின் மனித நேயத்தை ஏனோ சோலைக்கிளி என் மனதுக்குக் கொண்டு வருகிறார்.

சோலைக்கிளி மற்ற எந்த ஈழத்துத் தமிழ்க் கவிஞரையும் விட அதிகமாக விலங்குகளுடனும் இயற்கையின் வெவ்வேறு கூறுகளு டனும் உறவாடுகிறார். அவற்றுடன் உரையாடி அவற்றின் மூலம் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் சோலைக்கிளியின் கவிதைகளில் மனித இருப்புப் பற்றிய கரிசனை மிகுதியாக உள்ளது. அவரது தொடக்க காலக் கவிதையின் காதல் ஏக்கங்களும் பின்னைய காலத்திற் தனக்கு இழைக்கப்பட்ட தவறுகள் பற்றிய மனஉளைச்சலுங்கூட, மற்றவர்களும் எளிதாகப் பகிரக் கூடிய பாங்கில் அமைந்துள்ளன. ஆயினும், 'திருஷ்டி பட்டு விடுமோ என்று 'ஒரு கவிஞனைப் போன்ற திரிகிற அற்பனுக்கு' என்று தன் தரத்துக்கு ஒவ்வாத ஒரு தனிப்பட்ட தாக்குதலையும் இத்தொகுதியில் உள்ளடக்கி விட்டார்.

முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கில் அநியாயமாகப் பலியாகிற சூழல் களையும் தமிழ் — முஸ்லீம் கலவரங்களையும் மனித அவலத்தை அதிகப்படுத்தும் போர்ச் சூழலையும் பற்றிய பல கவிதைகள் நிறைந்த இந்தத் தொகுப்பில் எந்தவொரு இடத்திலும் இனத்து வேஷமான சொற்களோ மதத் துவேஷத்தின் சாடையோ இல்லாமை மிகவும் கவனிக்கத்தக்க ஒன்று. சோலைக்கிளியின் கோபம் மனிதர்கள் மீதல்ல அவர்களை கொடிய மிருகங்களாக்கும் ஒரு சூழல் மீதானது. பரணி பாடுகிற பம்மாத்துக் கவிராயர்கள் சோலைக்கிளியிடமிருந்து கற்க வேண்டிய பண்பு மனித நேயம்.

கடந்த சில மாதங்களில் சோலைக்கிளியின் அண்மைய கவிதை கள் (காகம் கலைத்த கனவிற்குப் பிற்பட்டவை) ஓரிரண்டைக் கண்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



டேன். அவரது கவிதைகளின் சமுதாய உணர்வு கடந்த சில ஆண்டு களில் மிகவும் வளர்ந்துள்ளது. இது நுஃமான் அவரிடம் கேட்டுக் கொண்டது போல, மேலும் விரிவடைய வேண்டும் என்பது என் ஆவல்.

சரிநிகர் 1–15 ஜூலை 1993

# ஒரு தொடர்கதை நாவலாகிறபோது*

இலக்கியம் சமுதாயத்தின் கண்ணாடி என்று சொல்லும்போது அது சமுதாயத்தில் நடக்கும் விஷயங்களை. அப்படியே காட்டுகிறது ஒன்று என நாம் கருந்துகிறோமா? உத்தமமான கண்ணாடி என்று பௌதிக நடைமுறையில் எதுவும் இல்லை. அகச்சார்பும் முற்சாய்வு களும் மனத்தடைகளும் பூரணமாகவே அற்ற மானுடரும் இல்லை. எனவே மனிதரது ஆக்கங்கள் ஒருபுறம் காட்சியையும் மறுபுறம் கண்டவரையும் பற்றியவை அகச்சார்போ முற்சாய்வோ மனத் தடையோ நேர்மையீனத்தின் வெளிப்பாடல்ல. அவை ஒவ்வொன்றும் நமது பார்வையின் குறைபாட்டின் வெவ்வேறு பரிமாணங்கள். மனி தரது குறைபாடான அறிவாற்றலின் உதவியுடனேயே தாம் உண் மையைத் தேடுகிறோம். மனிதரது உண்மை காலமும் சூழலுங் கடந்த நிரந்தரமான ஒரு பொருளல்ல. அது மனித நடைமுறை எனும் உரைகல்லில் மீண்டும் மீண்டும் பரீட்சிக்கப்பட்டு மாற்றமடை யும் ஒரு பொருள் மனிதர் சமுதாய வாழ்வுடையோர் என்பதால் மனித உண்மைக்குஒரு பாரிய சமுதாயத்தன்மை உண்டு. சமுதாயம் மாறும் போது உண்மை பற்றிய பார்வைகள் மாறுபடுகின்றன சரி பிழை பற்றிய மதிப்பீடுகள் மாறுகின்றன. நல்லது கெட்டது என்று வேறுபடுத்தும் விழுமியங்கள் மாறுகின்றன. முரண்பாடுடைய ஒரு சமுதாயத்தில் வாழும் ஒரு இலக்கியவாதியால் சமுதாயப் பிரிவுகட்குச் சார்பின்றியோ சமுதாய மாற்றம் பற்றிய நோக்கின்றியோ இயங்க முடியாது. ஒருவரது சமுதாயப் பார்வையும் சார்புகளும் அவரது எழுத்தினூடு தம்மைப் புலனாக்குகின்றன. தனக்கு நம்பிக்கையில் லாத ஒன்றை வலிந்து எழுதும் எழுத்து புற உண்மையைச் சார்ந்தி ருந்தாலும் அகத்திற்குப் பொய்யானது. பார்வையின் குறைபாட்டால் உண்மையைக் கிரகிக்கத் தவறினாலும் நம்புகிறதை எழுதுபவரது எழுத்துத் தவறானதே ஒழியப் பொய்மையாகாது.

நமது ஈழத்தமிழ்ச் சமுதாயம் மாறிக்கொண்டு வருகிறது. அந்த மாற்றத்தைக் கிரகிக்க முன்னமேயே தமது மண்ணிலிருந்து பிரியும்

*உலகமெல்லாம் வியாபாரிகள்— ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் (1991) நிலமலர். 5 குச்செரி ஒழுங்கை, சென்னை 600004

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



நிலை பலருக்கு ஏற்பட்டு விட்டது. காலத்துடனான மாற்றதுக்கு முகங்கொடுக்க முடியாது தலைமுறைகட்கிடையிலான முரண்பாடு களை விளங்கிக் கொள்ளத் திணறும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமுதாயத் துக்குப் புதிய பிரச்சனைகளையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. தமிழ் ஈழத்தேசியம் பேசிக்கொண்டே யாழ்ப்பாணத்துச் சைவ வேளாள உயர்குடிப்பிறந்த படித்த உத்தியோகம் பார்க்கும் மகனுக்குச் சீதனத் துடன் அழகான பெண்ணுக்குக் கூசாமல் விளம்பரம் செய்யும் இழி நிலை நமது. சாதகம், சாதி, சீதனம், உத்தியோகம் என்று மனித உறவை வியாபாரமாக்கிவிட்ட நமது இழிவைப் புதிய சூழலிலும் தொடர்கிறோம். நமது பெண்ணடிமைச் சிந்தனைகளைக் கற்பு, பெண்மை, கலாச்சாரம் என்பன பற்றிய பம்மாத்துக்களூடு நீடிக்கி றோம். இங்கு முளைத்துள்ள பத்திரிகைகளில் கனமான அரசியற், சமுதாய ஆய்வுகளைக் கொண்ட சிறு சஞ்சிகைகளை விட்டால், யாவுமே பெண்ணடிமைத்தனம் பேணுவன. விலக்கான சிறு சஞ்சிகை களிலும் பெண்ணடிமைத்தனம் பற்றிய ஆழமான சிந்தனை போதாது. பெண்ணுரிமை பேசுவோர் பலரிடையே பிற சமுதாய முரண்பாடுகளுடன் பெண்ணடிமைமுறை எவ்வாறு பிணைந்துள்ளது என்ற தெளிவு உள்ளதாகத் தெரியவில்லை. ஒரு இலக்கியவாதியாற் தீர்விகளை முன்வைக்க முடியுமா, முடியுமாயின் எவ்வாறு என்பன ஒரு வகையான கேள்விகள். நமது மனத்தடைகள் நமது கண்களை மறைக்கின்றபோது ஒரு இலக்கியவாதியால் நம் பார்வை செல்லத் தவறிய ஒரு திசையில் நம் கண்களைத் திருப்ப முடியும். கண்களைத் திறந்து காண்பதும் கண்டதைப் பற்றிச் சிந்திப்பதும் நமது தரத்துக் கும் தகுதிக்கும் ஏற்றபடி நிகழும் ராஜேஸ்வரியின் நாவல் பதின் நான்கு வருடங்கட்கும் முன்னர் எழுதப்பட்டுச், சென்ற ஆண்டு நூல் வடிவம் பெற்றது. 'லண்டன் முரசு' சஞ்சிகையிற் தொடர்கதையாக வந்ததை நாவலாகப் பிரசுரிக்கு முன் அதிலிருந்த பல குறைபாடுகளைக் களைத்திருக்கமுடியும். இந்த மீண்ட கால அவகாசம் சரியாகப் பயன்படுத்தப்படாததன் விளைவாகக் கதையின் அத்தியாயங்கள் தொடர்கதையின் தன்மையையே காட்டுகின்றன. அதை விட முக்கியமாகச் சொற்பிழைகள், செனப்பிழைகள், தலைகீழான வாக்கி யங்களின் கணிசமான எண்ணிக்கை என்பன வாசகர்களிடம் ஒரு பொறுப்பான எழுத்தாளர் காட்டும் கரிசனையைத் தெரிவிக்கவில்லை. பழமொழிகளும் உரைநடை வழக்கில் வருஞ் சொற்றொடர்களும் சில இடங்களிற் தவறாக வருகின்றன. இவை திருத்த முடியாத தவறுகள் அல்ல. ஏன் திருத்தப்படவில்லை என்பதற்கான விளக்கம் ஆசிரியர் தட்டிக் கழிக்கத் தகாதது. சம்பவங் களின் புனைவிலும் பாரிய பிசகுகள் உள்ளன. இவை பற்றி இங்கு விபரிக்க இடமில்லை. கதையின் சாராம்ஸத்தையும் அது



கூற முனையும் கருந்துக்களையும் ஆசிரியர் அதைச் சொல்வதில் எவ்வளவு தூரம் வெற்றி கண்டுள்ளார் என்பதையுங் கவனிப்போம். வழமையான சமுதாய அந்தஸ்துத் தொடர்பான காரணத்துக்காக லண்டன் வாழ் தமிழ்ப் பெற்றார் தம் பெண்ணை அவள் (சகுந்தலா) நேசித்த ஒருவனிடமிருந்து பிரித்து அமெரிக்கவாசி ஒருவனுக்கு வற் புறுத்தி மணம் செய்விக்கின்றனர். அவளது இளைய சகோதரி தனது ஆங்கிலேயக் காதலனை மணக்கத் திட்டமிடுகிறாள் என்ப தால், அதிற் குறுக்கிட, அவள் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப் படுகிறாள். பழைய காதலனைச் சந்திப்பது; தகப்பனுக்கும் பழைய காதலனுக்கும் மோதல்; அவனுக்கும் அவளுக்குமிடையே முதலில் மோதல், பிறகு நெருக்கம்; அதை அவசியமாக்கும் வகையில் அவளுக் கும் அவளது கணவனுக்குமிடையிற் சுமூக உறவின்மை; சகோதரிக்குத் தாய் தகப்பன் செய்யும் திருமண ஏற்பாடு; அக்காள் உதவியுடன் தங்கை தப்பியோடும்போது விபத்தினால் மரணம்; அவள் மரித்த ஆஸ்பத்திரியில் மாஜி காதலர் ஒருவரை ஒருவர் அணைக்கும்போது திடீரென்று கணவன் அமெரிக்காவிலிருந்து வந்து ஆஸ்பத்திரியில் பிரசன்னம், அபார சஸ்பென்ஸ் என்கிறீர்களா? புருஷன்காரனுக்குச் சொத்தில் ஒரு கண். எனவே அதைக் கண்டுங் காணாததுபோல் நடந்து மாமனாரிடம் பணங் கறக்கத் திட்டமிடு கிறான். மனைவி அவனுடன் அமெரிக்கா போக மறுக்கிறாள். அயல் நாடு சென்ற தனது காதலனுக்குக் காத்திருப்பதாகக் கதை முடி கிறது.

கதையில் ஒரு மசாலா தமிழ் சினிமாக் கதைத்தன்மை இருக்கிற தென்னவோ உண்மை. பல தொடர்கதைகள் பலவீனமான இலக்கியப் படைப்புக்களாக இருப்பதற்கான காரணங்களில் ஒவ் வொரு அத்தியாய முடிவிலும் இனி என்ன நடக்குமோ என்ற ஏக்கத்தை வாசகர் மனதில் ஏற்படுத்த வேண்டிய தேவையும் ஒன்று. இந்த வகையிற் சராசரித் தொடர்கதை ஒரு வியாபாரப் படைப்பாகி விடுகின்றது. (கதாசிரியர் குறிப்பிடும் 'உலகமெல்லாம் வியாபாரிகள்' என்ற வகையிலல்ல) தொடர்கதையாக எழுதும் நிர்ப்பந்தத்தை மட்டுமே வைத்து என்னாற் சில விஷயங்களை விளக்கவோ நியாயப் படுத்தவோ முடியவில்லை.

பிரதான ஆண் கதாபாத்திரம் (கார்த்திகேயன்) இன ஒடுக் கலுக்கும் இனவாத வன்முறைக்கும் ஆளான ஒரு இளைஞன், காதலி யின் தகப்பனாருடைய உயர் நடுத்தர வர்க்கத்தின் பம்மாத்து அரசி யலையும் பசப்பான சமுதாய விழுமியங்களையும் நிராகரிப்பவன், அவனால் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டத்தையே ஆதரிக்க முடிகிறது. அதற்காதரவாக அவன் செயற்படுகிறான். அவனது காதல் தோல்வியடைந்தபின் தனது முன்னாட் காதலியைக் காணும்

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



போது இளக்காரமான சுடுசொற்களால் ஒவ்வொரு தடவையும் அவளைத் தாக்குவது இந்த ''விடுதலை பெற்ற'' இளைஞனது தனி மனித உறவுகளில் அவனது சுயத்தின் முக்கியத்துவம் மற்ற மனிதர் களது மனநிலையையும் இடர்ப்பாடுகளையும் கணிப்பில் எடுக்கத் தவறுவதைக் காட்டுகிறதா?

ஆங்கிலேயன் ஒருவனை மணந்த ஒரு தமிழ்ப் பெண் அவனை விவாகரத்துச் செய்கிறாள் என்பதைக் கதையிற் குறிப்பிடும் ஆசிரியர், சகுந்தலாவின் சகோதரி ஒரு ஆங்கிலேயனை மணமுடிப்பதற்கான திட்டத்தில் அவளது மரணத்தின் மூலம் மண் விழுத்துவது ஏன் சகுந்தலா கணவனைப் பிரிய எடுத்த முடிவும் பழைய காதலனை எதிர்பார்த்திருப்பதாகக் கதை முடிவதும் ஓரளவு துணிகரமானது என்ற காரணத்தால் ஆசிரியர் மற்றுமொரு காரியத்தைத் தவிர்த் தாரா தெரியவில்லை.

எதிர்பாராத திருப்பங்களும் கிளர்ச்சியூட்டும் சம்பவங்களும் ஒரு நல்ல கதை இலக்கியத்தின் அந்தியாவசியமான கூறுகள் அல்ல. வெகு சாதாரணமாகவே தோன்றும் விஷயங்களிற்கூட ஒரு நல்ல இலக்கியவாதியால் அழகான அற்புதமான அம்சங்களைக் காணவும் காட்டவும் முடியும். தமிழ் வாசகர்கள் நுண்ணிய உணர்வு மிக்க எழுத் துக்குப் பரிச்சயப்படாததாலேயே நமது இலக்கியங்களில் மர்மக் கதைப் பண்பு சற்று அதிகமாகவே உள்ளது.

இந்த நாவலின் முக்கியமான பங்களிப்பு நமது லண்டன் வாழ் தமிழ் நடுத்தர வர்க்கச் சமுதாயத்தின் சமுதாய விழுமியங்களைத் தோலுரித்துக் காட்டுவதுதான். இச்சமுதாய விழுமியங்கள் சாதி ஒடுக்கல், வர்க்கச்சுரண்டல், பெண்ணடிமை என்பனவற்றைச் சார்ந்து நிற்பன. சொந்த மண்ணில் ஏற்படும் மாற்றங்களைச் சீரணித்து கொள்ள மாட்டாது அந்த மண்ணிற்கூடப் பேண முடியாத பழமை யின் இழிவான அம்சங்களையும், போலித் தனங்களையும், பம்மாத் துக்களையும் லண்டன் தமிழ் நடுத்தரவர்க்கம் பேணுகிறது. பதினான்கு வருடங்கட்குப் பின்னும் கதையில வரும் சம்பவங்கள் இன்றும் நடக்கக் கூடியனவாகத் தோன்றுவது, நமது சமுதாயத்தின் அரசியல், சமுதாய உணர்வுகளின் தேக்க நிலையையே காட்டுகிறது.

கதாசிரியரது அரசியல் உணர்வின் ஆழமின்மை, கதையிற் பல இடங்களிற் தன்னை அடையாளங்காட்டிக் கொள்கிறது. ஆயினும், இடையிடையே தோன்றும் பிரசார வாடையை மீறி, நேர்மையான ஒரு அவதானியின் தரிசனங்கள் நூல் முழுவதும் வியாபித்துள்ளன. கதையமைப்பிலும் கூடிய கவனம் காட்டப்பட்டிருப்பின், இந் நாவல் ஐரோப்பியத் தமிழ் எழுத்தின் ஒரு பிரதான ஆக்கமாக வழி ஏற்பட் டிருக்கும்.

ஓசை, 1993

# தமிழில் உலாவரும் உன்னதமான* சிறுகதைத் தொகுதி

சென்ற வருட முற்பகுதியிற் பிரசுரமான சட்டநாதனின் இந்த இரண்டாவது தொகுதிக்குச் சரிநிகரில் ஒரு சுருக்கமான விமர்சனக் குறிப்பு வந்தது. அதில் சட்டநாதன் கதைகளில் வரும் ஆண்களை விடப் பெண்கள் மன உறுதி அதிகம் உடையோராகத் தெரிவது ஏன் என்று ஒரு கேள்வியையும் எழுப்பியிருந்தார். சட்டநாதன் எழுதியது குறைய. அவர் தரமாக எழுதவேண்டும் என்பதாலோ என்னவோ எழுதிக் குவிப்பதில்லை என்ற என் ஊகத்தை இரா. சிவச்சந்திரன் நூலின் பின் அட்டையில் வரும் விமர்சனக் குறிப்பில் உறுதி செய் கிறார். அவரது ஆக்கத்திறன் பற்றி நூலின் முன்னுரையிம் ஏ. ஜே. கனகரெத்தினா எழுதியவற்றுடன் யாரும் கருத்து முரண்படுவதற்கு இடமில்லை.

அவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'மாற்றம்' 1980ல் வந்தது. அதில் வந்ததாக நானெண்ணும் இரண்டு கதைகளை வாசித்ததாக நிச்சயம். பெண்ணுரிமைக்குச் சார்பான அவரது நிலைப் பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்திய ஒரு கதை இப்ஸனின் 'பொம்மை வீடு' நாடகத்தை நினைவூட்டினாலும் பாத்திரப் படைப்பும் கதையமைப்பும் கதை சொல்லும் நேர்த்தியும் மனதில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின. நண்பர்கள் எஸ். வி. காசிநாதனும் திருக் கந்தையாவும் சேர்ந்து இக்கதையை ஆங்கிலத் துக்கு மொழி பெயர்ப்பதற்காகத் திட்டமிட்டனர். அக்காரியங் கைகூடு முன் பல இடையூறுகள் ஏற்பட்டு அம்முயற்சி நிறைவேறவில்லை. (Journal of South Asian Studies எனும்) தென்னாசிய இலக்கியச் சஞ்சிகையில் அவரது கதைகள் பற்றிய ஒரு குறிப்பு வந்ததாகப் பின் அட்டையிலிருந்து தெரியவருகிறது

---

உலா (சிறுகதைத் தொகுதி) க. சட்டநாதன் வெளியீடு: க. சட்டநாதன் 21, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், 1992 133ப. விலை ரூ. 60/–



படிப்பகம்

சட்டநாதனின் எழுத்தில் எந்தவிதமான ஆர்ப்பரிப்பும் இல்லை, மெல்லெனப்பாயும் ஆழநதியின் உறுதியான கம்பீரமான பாய்ச்சல் அவரது எழுத்துக்குரியது சொற்தெரிவும் வாக்கிய அமைப்பும் தெளிவுக்கு முதன்மை கொடுப்பன அன்றாட வாழ்க்கையின் சாதாரணமானதும் அசாதாரணமானதுமான நிகழ்வுகள் மூலம் மனித உறவுகளை அனுதாபத்துடன் சித்தரிக்கும் அவரது கதைகளில் பாலுறவு தொடர்பான விஷயங்கள் வருகின்றன. ஆனால் எவ்வகையிலும் அருவருப்புக்கு இடமில்லாதவிதமாக அவை எழுதப்பட்டுள்ளன.

சட்டநாதனுடைய கதைகளில் கோஷங்கள் இல்லை சுலோகங்கள் இல்லை ஆயினும் அவை பிரசாரம் செய்கின்றன, சமுதாயம் பற்றியும் குழந்தைகளின் உரிமை பற்றியும் சட்டநாதனுடைய நிலைப்பாடு அழகாகவும் தெளிவாகவும் கதைகளூடு வருகின்றன. எது சரி, எது பிழை என்று தன்னை நீதவனாக்கித் தீர்ப்பு வழங்காமற், கதைப் போக்கில் நியாய அநியாயங்களை அழகாக உணர்த்துகிறார்.

'தரிசனம்' கதையில் சந்தேகங் காரணமாக மனைவியையும் மகளையும் கைவிட்டுப் போன கணவர் திரும்பி வந்து மனைவி தன்னை ஏற்பாள் என எதிர்பார்க்கிறார் எந்த ஆணையும் சார்ந்திருக்க ஆயத்தமாக இல்லாத மனைவி அவரைப் பண்பாகவே நடத்தி நிராகரித்து விடுகிறார்

'பக்குவம்' மரணச்சடங்குக்குச் சுடலைக்குப் போய் மனவிரக்தியுடன் வருகிற ஒருவரிடம் முன்பின் தெரியாத ஒருசிறுமி காட்டும் அக்கறையால் அவரது மனநிலையில் ஏற்படும் மாற்றத்தைச் சித்தரிக்கிறது.

'தளம்பல்' ஆண் துணையின்றி வாழும் ஒரு ஏழைப் பெண்ணுடைய அனுபவம். கணவனை இழந்த பெண்ணை நாடி வரும் ஒருவனது துரோகமும் ஒரு காமுகனின் பார்வையும் அப்பெண்ணுக்குத் தன் குழந்தை மட்டுமே ஆதாரம் என்று உணர்த்துகின்றன.

'அரும்பு' ஒரு குழந்தைக்குக் கல்வியில் ஏற்படக்கூடிய ஆர்வத்துக்கு ஒரு ஆசிரியை காட்டும் பரிவின் முக்கியத்துவத்தை ஒரு சிறு சம்பவத்தின் மூலம் காட்டுகிறது. 'உலா' கதையில் வரும் குழந்தை மூலம் தமிழ்ச்சமுதாயம் தன்னுள் இல்லை என்று பாசாங்கு செய்ய விரும்பும் தகாத உறவு ஒன்றைக் கூறுகிறது கோயிற்திருவிழாவுக்குப் போன குழந்தையின் நடத்தையில் அக்குழந்தை முன்னர் கண்ட சம்பவம் ஏற்படுத்தும் சிறிய பாதிப்பைக் கதை விவரிக்கிறது.



'வித்தியாசமானவர்கள்'; நமது சமுதாயத்திற் கற்பு, ஒழுக்கம் என்பன பற்றிக் கட்டிக்காக்கப்படும் பிறழ்வான நியாயங்களை அடையாளங்காட்டி இந்த வக்கிரத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு பெண்ணின் கதை. கனகரெத்தினா முன்னுரையில் குறிப்பிட்டது போல உலாவும் வித்தியாசமானவர்களும் சிலருக்கு முகச்சுழிப்பை ஏற்படுத்துவது தவிர்க்கவியலாததுதான்

'ஒதுக்கம்' வேலை நிறுத்தத்திற் பங்குபற்றாத 'கருங்காலி' ஒருவர் பற்றியது. குற்ற உணர்வு, மனித உறவுகளில் ஏற்படுத்தும் மாற்றத்தை, முடிவில் வரும் இலேசான நகைச்சுவை உணர்வுடன்' புலப்படுத்தும் கதை இது.

'கவளம்' இந்திய அமைதி காக்கும் படையின் அடாவடித்தனத்துக்குப் பலியாகும் ஒரு கிழவர் பற்றிய கதை. இன்று இந்தியா வந்து இன்னோரு கால் இரட்சிக்க வேண்டும் என்று சிலர் ஏங்கத் தொடங்குகிற நிலையில், சில வருடங்கள் முந்திய வரலாற்றை அமைதியாக நினைவூட்டுகிற இக்கதை ஒரு பயனுள்ள ஞாபக மாத்திரை.

சட்டநாதனடைய உரைநடையில் மாதிரிக்குச் சில பகுதிகள் கீழே உள்ளன,

பிரதான வீதிக்கு வந்ததும் அவன் பசுபதியிடம் விடைபெற்றுக் கொண்டான்.

சைக்கிள் ஞாபகம் வந்தது

காற்றுக் கீற்றுப் போய்க் கிடக்குமோ அந்தப் பிள்ளை அவளது தம்பி வால்வ்ரியூப்பைத் தொட்டுக்கிட்டுப் பார்த்து,

ஏதோ கனவு கலைந்தது போலவும் மீண்டும் இயல்பான சூழலில் காலூன்றியது போலவும் அவனுக்கு இருந்தது.

சோர்வு நீங்கிய பாடாய் இல்லை. சைக்கிள் வைத்த வீட்டை அடைந்த போது அங்கு அவனுக்கு அதிசயம் காத்திருந்தது.

சைக்கிள் மழையில் நனையாதபடிக்கு பக்குவமாய் ஸ்ண்சேட்டின் கீழ் முன்புறமாக எடுத்து வைக்கப்பட்டிருந்தது.

யாருடைய வேலை இது அந்தக் குழந்தைதான் எடுத்து வைத்திருப்பாளோ? சிரமமாக இருந்திருக்குமே. சைக்கிளை எடுக்கும்போது எதிர்ப்பக்கமாகச் சரிந்து அவளுக்கு அடிகிடி பட்டிருந்தால் அல்லது உருட்டும்போது உடம்பில் உரசல் எதாவது.

இவன் சைக்கிளை எடுத்தபோது ஈரக்கையைத் தனது சீத்தைச் சட்டையில் துடைத்தபடி ஓடி வந்தாள்.

''மழை பெய்தது அதுதான்''

''மழை பெய்தால் என்னம்மா? உனக்கு ஏன் இந்தத் தொந்தரவு?

''தொந்தரவா எனக்கா?''

அவள் உதடு நெகிழச் சிரித்தாள்.

உடைந்து போன உள்ளம் நிரவல் பெற்றுப் பரவசம்கொள்ள அவளை வாஞ்சையுடன் பார்த்தான்.

வாழ்வின் அர்த்தமே அவள் என்பன போலவும் உயிர்ப்பசையின் தொடர்ச்சியை ஒரு சுடராய் அவள் தாங்கி நிற்பது போலவும் அவனுக்குத் தோன்றியது.

(பக்குவம்)

''படுத்திட்டு வாறன் யேஸ் ஐ சிலெப்ற் வித் ஹிம்'' அவள் பேசி முடிப்பதற்கு முன்பாகவே பதில் தந்தாள்.

அவளது அந்தப் பதிலை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அது அவர்களை அதிரவைத்தது.

அக்கா கூச்சத்துடன் கேட்டாள் : ''என்னடி இது வெக்கங்கெட்ட பேச்சு மட்டு மரியாதையில்லாமை.''

''என்ன வெக்கமிதிலை. அண்ணை செய்யிறதை, அப்பா செய்ததை நான் செய்தாப் பிழையே?''



''உண்மையிலை அந்த லாப் அசிஸ்டென்றிலை உனக்கு விருப்பமா? வெளியிலை தலை காட்ட முடியாமை கதையடிபடுகுது எனக்கு நாக்கைப் பிடுங்கிச் சாகலாம் போலை இருக்கு.''

''விருப்பம்... காதலெண்டில்லை... வெறும் உடல் சம்பந்தப் பட்ட, பச்சையாச் சொன்னா செக்ஸ் விசயம்தான்.''

அவர்களை மேலும் சீண்டி வேடிக்கை பார்க்கவே அவள் அப்படிச் சொன்னாள்.

அண்ணைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடல் பதற எழுந்தவன், அவளது தலைமயிரைப் பிடித்து இழுத்துச் சுவருடன் மோதினான். பலமான அடி தலையில் பட்டதால் நிலைகுலைந்தவள், சுவரோடு உட்கார்ந்து கொண்டாள்.

அந்த நிலையிலும் அவள் அவனைப் பார்த்து நிதானமாக அவனது நானைக் காயப்படுத்தும் தோரணையுடன் கேட்டாள்.

''அண்ணி சுகமா இருக்கிறாளா? என்ன நான் கேக்கிறது விளங்கேல்லையே? சின்னண்ணிதான். கராஜ்சிலை இருக்கிறவளும் பிள்ளைகளும்தான் இடஞ்சலாக்கும்...''

அவனது பலவீனமான பகுதிகளை இவள் சுண்டியதும் அவன் உன்மத்தனாய் அவளது முகத்தில் எட்டி உதைத்தான்.

அத்தானும் அவசர அவசரமாகத் தன் பங்கிற்குக் கையோங்கிய போது அவள் ஏளனமாகச் சிரித்தபடி ''பாவம் அத்தானுக்கும் அந்தச் செல்லப் பூனை விளையாட்டு ஞாபகம் வந்திட்டுதுபோலை... அதுதான் இந்தச் சுறுசுறுப்பாக்கும்''

''உவளுக்குச் சரியான ஹிஸ்ரீரியாதான். உவளின்ரை அமரடங்க உதையுங்கடா! அந்தக் கோவியனிட்டை அப்பிடி என்ன இனிப்பைக் கண்டிட்டாள் இந்தப்பரத்தை'' அம்மா.

''கோவியனோ?'' இது அப்பா.
''அவன்ரை அப்பன்ரை அப்பன்ரை அப்பன் சிறுபுலப்பக்கம். அம்மா தாவடிக்காரி''. இப்படித்தான் அவயால் பேச முடியுமென்பது இவளுக்குத் தெரியும்.

அவள் அவர்களது முகத்தையே பார்க்கவிரும்பாதவளாய் பாத்ரூமுக்குள் சென்று சவரைத் திறந்து விட்டாள். உணர்ச்சிகள் சமனாகும்வரை சவரில் நின்றவள். குளித்து முடிந்ததும் அறையை அடைந்து, கதவை மூடிக்கொண்டாள். தனிமை அவளுக்கு அப்பொழுது தேவையாக இருந்தது.

(வித்தியாசமானவர்கள்)

''என்ன... என்ன... ஏன் இப்படிச்சிரிக்கிறை?''

''இல்லை... மலர் உங்கடை பெண்ணென்பதை நிச்சயப் படுத்தியாச்சுப் போலை... அதுக்கு, உங்களுக்கு ஏழு வருஷம் பிடிச்சிருக்கு...''

''ஏன்... ஏன் அப்பிடிச் சொல்லிறை?''

''அந்தச் சந்தேகம்தானே நம்மைப் பிரிச்சு வச்சது... அது கூட ஒரு வகையிலை நல்லதாய்ப் போச்சு... கனவுகள் கலைய இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைப்பது நல்லதுதான்.

''நான் கனவிலை நினைக்காத ஒரு வாழ்வை நீங்கள் கற்பிதம் செய்து... என்னை விட்டுப் பிரிந்த பின்பு... கற்பிதமானதே நிதர்சனமாகிவிடுவது எவ்வளவு துயரம் தருகிற விஷயம்.''

''என்ன... துயரமா? நீ நகுலேசோடை சந்தோஷமாக இருக்கேல்லையா?''

''எதற்குமே ஆணில் சார்ந்திருக்கும் பெண்ணுக்கு மகிழ்ச்சி, சந்தோஷமென்பதெல்லாம் கைகூடுமா? உங்களைப் பிரிந்த பின்பு எனக்கு வயிறு இருந்ததே... மலர், அத்தப் பிஞ்சு துடித்திருக்க என்னாலை பொறுத்திருக்க ஆகுமா? சரியோ தப்போ, நீங்கள் தான் எனது முதல் காசுமரம்; பாதுகாப்பு; வாழ்க்கை; கன்னி கழித்த உத்தமர்; தெய்வம்''

குரலில் ஏளனம் இழைய அவள் தொடர்ந்தாள்.

(தரிசனம்)

இரவு பட்டினி. காலையில் ஒரு சொட்டு நீர் வாயில் ஊற்று வதற்குக்கூட வழியில்லாமல் போய்விட்டது.



வாய் ஊறலெடுத்தது ஒரு துண்டுப் புகையிலைக் காம்பாவது கொடுப்பினுள் அதக்கினால்தான் அவருக்குப் பத்தியப் படும்போலிருந்தது. ''வயிற்றுக்கே கிடையாதபோது புகையிலை ஒரு கேடா'' என நினைத்துக்கொண்டவர், தன்னை மறந்தவராய் வாய் விட்டுக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

நேற்றுக்காலை நித்திரைப் பாயால் எழுந்த பொழுது பென்சனியர் கந்தசாமி பட்ட அவஸ்தைதான் அவரை அப்படிச் சிரிக்க வைத்தது.

ஒரு 'குறள்' சுருட்டைப் பற்ற வைப்பதற்கு அவர் பட்டபாடு, கைத்தடியை ஓரமாய் வைத்தவர், நிலத்தில் உட்காரமுடியாமல் தவழ்ந்து நெருப்புக் கொள்ளியைக் குனிந்து ஊதிக் கனிய வைத்தபடி சுருட்டை எடுத்து வாயில்வைத்து தணலை வாய்வரை கொண்டு வந்து நிமிர்ந்தபொழுது, பின்பக்கத்தால் குடை சாய்ந்து விழப்போனார். இவரது சமயோசிதம் அவரைக் காப்பாற்றியது. தாங்கிக் கொண்ட இவரை அந்தக் கிழவர் பீளை சாறிய கண்களால் நன்றி தெரிவித்துக் கொண்டது இவருக்கு இன்னமும் ஞாபகம் இருந்தது.

''கிழவன் பிடரி அடிபட விழுந்திருந்தால்...'' அவருக்கு நினைக்கவே பயமாக இருந்தது.

உடல் ஆட்டங் கண்டுவிட்ட இந்த நிலையிலும் இந்தப் பலவீனமா? மனிதர்கள் திருந்தவே மாட்டார்களா? சுருட்டுப் பற்றாமல் விட்டால் குடியா முழுகிவிடும்?

அவருக்கு எல்லாமே புரியும்படியாய் இல்லை.

வெற்றிலை சுருட்டு, பீடி, கசிப்பு, கள்ளச்சாராயம் என்று எல்லா வியாபாரமும் வீதியில் நடைபெறுகின்றது. ஆனால் ஒரு பருக்கை அரிசியோ பருப்போ மட்டுந்தான் எங்கும் கண்ணில் படமாட்டேன் என்கிறது.

(கவளம்)

சட்டநாதனுடைய உரையாடற் தமிழ் சற்றே செப்பனிட்ட யாழ்ப் பாணப் பேச்சுத் தமிழை ஒட்டியதேயாயினும், (அடிக்கடியல்ல) இடை யிடையே தமிழகத்துப் பத்திரிகைகளும் சினிமாவும் நம் எழுத்தாளர்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



களின் சொற் தெரிவில் ஏற்படுத்திய தாக்கத்தைக் காண நேர்வது ஒரு சிறிய குறைபாடு. ஆங்கிலச் சொற்களின் பிரயோகம் அளவுடன் தேவையையொட்டி அமைவது ஒரு சிறப்பு. தமிழகத்தின் சில முன் வரிசை எழுத்தாளர்கள் இவ்வகையிற் சட்டநாதனிடம் கற்கச் சிறிது உள்ளது.

இரண்டு மாதங்கள் முன்பு 'உலா' என் கைக்குக் கிடைத்தபோது அதைப் படித்து முடித்து விட்டுச் சரிநிகரில் அதுபற்றி வந்த கருத்தைப் பற்றி யோசித்தேன். சட்டநாதன், சமுதாயத்தில் இருக்க முடியாத, இல்லாத ஒரு பாத்திரத்தையும் படைக்கவில்லை. நடக்க முடியாத, நடக்காத எதையுமே சொல்லவில்லை. வலிமையான பெண் பாத்திரங் களை அவர் உலாவவிடுவது ஏன்? இது தேவை கருதிச் செய்யப் பட்டதா? எப்படியாயினும் அவர் செய்தது மெத்தச் சரி என்றே நினைக்கிறேன்.

இறுதியாகச் சுய விளம்பரமும் விமர்சன வெறுப்பும் புகழுரைகள் பெறும் சுயதிருப்தியும் வயதுவேறுபாடின்றிப் பல எழுத்தாளர்களைப் பிடித்துள்ள ஒரு சூழ்நிலையை இன்று நாம் காணலாம். இச்சூழலில் இந்த அடக்கமான மனிதரின் எழுத்தின் தெளிவும் ஆழமும் ஈழத் தமிழ் இலக்கியத் துறையின் எதிர்காலம் பற்றிய ஒரு நம்பிக்கைச் சுடரை ஏற்றுவன.

ஓசை 1993

# நீண்ட இடைவெளிக்குப் பின்*

# எஸ்பொவின் கதைகள்

எஸ்பொ எனப் பலராலும் அறியப்பட்டவரான எஸ். பொன்னுத் துரை எழுதிய வேறுபட்ட நீளங்களையுடைய ஏழு, கதைகளின் தொகுதி இது. கதைகளின் நீளங்கள் போன்று அவை எழுதப்பட்ட காலங்களில் மட்டுமன்றி அவை குறிக்குங் காலங்களும் வேறுபடு கின்றன. எனினும் எஸ்பொவுடைய எழுத்து நடை அன்று போலவே இன்றும் உள்ளது எனலாம்.

கதைகள் பெரும்பாலும் நிசமான மனிதர்கள் பற்றியனவும் நிசமான சம்பவங்களதும் அடிப்படையிலானவையுமாம். (இது நிசமான சித்தரிப்புக்கு உத்தரவாதமில்லை) நீளமான மூன்று கதை களில் இரண்டு (சுவடு, ஆகுதி) பௌத்த பிக்குக்களின் பாலியல் நடத்தை தொடர்பானவை. முன்னையது சமகாலத்துக்குரியது. அறியாப் பிராயாத்திற் புத்த பிக்குவாகிக் காவிபூண்ட ஒருவன் ஒரு விபசாரியினிடம்கொண்ட மோகம் முடிவில் அவனை இல்லற வாழ் விற்கு உந்துவதைச் சித்தரிக்கும் இக்கதை, மதபீடத்தின் உச்சமட்டங் களில் உள்ள முரண்பட்ட நியாயங்களையும், பம்மாத்துக்களையும் தொட்டுக்காட்டும் அதே வேளை, அந்த பிக்குவின் பாலுணர்வின் எழுச்சியையும் செயற்பாட்டையும் அனுதாபத்துடனேயே சித்தரிக் கிறது. அவ்விபசாரி அவனுக்கு வழிகாட்டிய 'குருத்தினி'யாக அமைகிறாள். மற்றையது கண்டி அரசின் அதிகாரப் போட்டியில் பௌத்த மதபீடத் தலைமையின் செயற்பாட்டை விவரிக்க முனைகிறது. வரலாற்றுப் பின்னணி போர்த்துக்கேயரின் வருகைக்குப் பிற்பட்ட காலமாகும். இங்கே பெரிய பிக்குவின் திரைமறைவிலான செயல்கள் சித்தரிக்கப்படுகின்றன. அதிகார வெறியும் வஞ்சகமும் காம மிகுதியும் கொலைபாதகமும் ஒருங்கிணைந்த பெரிய பிக்குவின் சூழ்ச்சிகளில் அவரது கருவியாகச் செயற்பட்ட ஒரு பெண் அவர் கற்பித்த பாடத்தை அவர் மீதே பிரயோகித்துத் தனது அதிகாரத்தை நிலை நிறுத்தும் கதை. வரலாற்றைத் திகிலூட்டுஞ் சம்பவங்களாகவும் தனிமனித சூழ்ச்சிகளதும் சூரத்தனங்களதும் தொடராகவே காணப்

*அவா, எஸ். பொன்னுத்துரை, குறுநாவல், சிறுகதைத் தொகுப்பு, மித்ர வெளியீடு, சென்னை, 1993 செப்ரெம்பர் 280 + XXIV ப.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



பயிற்றப்பட்ட நமது சினிமா, மற்றும் (கல்கி, சாண்டில்யன் மரபில் வந்த) சரித்திர நாவல்களின் போக்குடனான ஒரு உடன்பாடு இயல்பாகவே தென்படுகிறது. ஒரே ஒரு முக்கியமான வேறுபாடு: எஸ்பொவின் எழுத்து ஆளுமை.

மூன்றாவது நீளமான கதையான அவா, கதையமைப்பிலும் கதை கூறுகிற முறையிலும் பிற கதைகளிலும் பார்க்க உயர்ந்து நிற்பது. அற்பாயுளில் மரிக்கும் சீடனுக்குக் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தை மூலம் அவர் அவன் வாழ்ந்த காலத்தில் ஒதுக்கச் சொன்ன பாலுறவு அனுபவத்தை வழங்க முற்படும் ஒரு சமகால 'ரிஷி'யின் கதை. பல வேறு முயற்சிகளின் தோல்வி, முடிவில் குருவின் துரோகத்தில் விபசாரியான ஒரு பெண்ணிற்குப் பிறந்து விபசாரியான அவரது மகளின் மகனிடம் அவரைக் கொண்டு செல்கிறது. அவரது மகளிடம் சீடன் (முதல்நாள் இறந்த ஒருவனது உடலுட்புகுந்து) அனுபவித்த உறவின் விளைவாக அவரது மகளும் பேரனும் பிரிகின்றனர். பேரன் அவரது சீடனாகிறான். இங்கு குருவின் 'ரிஷிமூலம்' மட்டுமன்றிப் பொய்மையும் ஆணவமும் கலந்த போதனைகளும் நம் முன் விவரிக்கப்படுகின்றன.

மூன்று நீண்ட கதைகளும், துறவுக்கும் மனித இயல்பு சார்ந்த பாலுணர்வின் வலிமைக்குமிடையிலான முரண்பாட்டை மையமாக்கி, அம் முரண்பாட்டின் விளைவாகப் பொய்வாழ்வு வாழ நேரும் மனிதர்கள் பற்றியன எனின், ''சில நேரங்களின் சில தோழர்கள்'' ஒரு அரசியல்வாதியின் கதை. இரண்டு நாட்குறிப்புக்களின் பாங்கில் எழுதப்பட்டிருக்கும் இக்கதை எவரைப் பற்றியது என்பதை மறைக்க எஸ்பொ முயலவே இல்லை எனலாம். சில உண்மைகளுடன் தனது விருப்புவெறுப்புச் சார்ந்த சம்பவங்களையும் இணைத்துக் கதை கூறும் எஸ்பொ தனது அரசியற் கோபதாபங்களை அதிகமாகவே வெளிப்படுத்தும் கதை இது. கதைக்குரியவர்கள் இருவரும் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த மேயரின் மனைவியும் ஒரு இடதுசாரி அரசியற் தலைவருமாவர். நோய்வாய்ப்பட்ட மேயர் சாகுமுன்பே அவரது நண்பரான அரசியல்வாதிக்கும் ஏற்படும் நெருக்கம் பற்றிய இக் கதையில், கலாச்சாரப் புரட்சியின் காலமும் கம்யூனிஸ்ட் கட்சியின் உடைவின் காலமும் வேண்டுமென்றே குழப்பப்படுவது ஒரு புறமிருக்க, எஸ்பொவின் தாக்குதலுக்கு இலக்காகும் அரசியல்வாதிகளிடம் இல்லாத குறைபாடுகளும் அரசியல் நிகழ்வுகளின் விஷமத்தனமான திரிப்புக்களும் வம்பளப்பு எழுத்தாளர்கட்கே உரிய நேர்த்தியுடன் சிருஷ்டிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

'சுழி'. பாடசாலை ஆசிரியர்கள் பற்றி நமது மரபில் உள்ள மதிப்பீட்டுக்கு முரணாக ஆசிரியர்களது நிஜ வாழ்க்கை அமைந்துள்ளமை



பற்றிய ஒரு சிறு சித்தரிப்பு. இது யாரைக் கருத்திற் கொண்டு அமைந்ததோ எனக்குத் தெரியாது. 'யானைக் கலை' ஒரு அரசியற் கிண்டலான குட்டிக்கதைப் பாங்கில் அமைந்துள்ளது. கதை யார் யாரை எல்லாம் தாக்க முனைகிறது என வாசகனுக்கு விளங்க வேண்டும் என்ற ஆவலில் வாசகனுக்கு ஒரு விளக்கத்தையும் தந்துள்ள எஸ்பொவை நினைக்கப் பரிதாபமாகவே இருந்தது. மற்றப்படி, இன்று வரும் கிண்டற் கதைகளுடன் ஒப்பிடுகையில் நன்றாகவே எழுதப்பட்டுள்ளது

'Adieu' அவுஸ்திரேலியாவிற் குடியேறிய மக்களுடன் வாழப் புலம்பெயரும் ஒரு முதியவரின் கதை. கொழும்பில் வசதியாக வாழ்ந்த இந்த முதியவர் மகளிடம் சென்றபோது இருந்த எதிர்பார்ப்புக்கள் அவளது வாழ்க்கைமுறையில் ஏமாற்றத்துக்கு வழிகோலுகின்றன. கொழும்புக்குத் திரும்புமுன் விமானநிலையத்தின் தன் கதையை ஒரு இளம் நண்பருக்குக் கூறுகிறதாகக் கதை அமைகிறது. இக்கதையில் எஸ்பொவின் அனுதாபம் தமிழரது மரபு சார்ந்த வாழ்க்கை முறையை அவுஸ்திரேலியாவிலும் தமிழர்கள் தொடர வேண்டுமென்ற கொள்கையுடனேயே ஒட்டி நிற்கிறது. கிழவர் மூலம் வெளிப்படுத்தப்படும் ''புதிய பறங்கிக் குட்டிகளுக்குத் தாத்தா என்று சொல்லிக்கொண்டு வாழாமல் பிறந்த மண்ணிற் தமிழனாகச் சாகிறது கௌரவமானது'' என்பன போன்ற கருத்துக்கள் பல. ஈழத் தமிழ்ச் சமுதாயத்தின் அந்நிய மோகத்தின் தோற்றுவாய், அவரது அனுதாபத்திற்குரிய கிழவரது வர்க்கத்தின் சமுதாயப் பார்வையே என்பதை எஸ்பொ எங்கேயோ தவறவிட்டுவிட்டார்.

அதனிலும் முக்கியபாகப், பாலுணர்வு பற்றி நிறைய எழுதுகிற எஸ்பொவின் எழுத்தில், பெண்கள் ஆணினத்தின் பாலியல் நுகர் பொருளாகச் சொல்லப்படுவதை மறுக்கும் முனைப்பைக் காண முடியாமலுள்ளது. இந்த இடத்திற்தான், தி. ஜானகிராமன், சமுதாயம் தகாத உறவுகள் என வெறுத்தொதுக்குவனவற்றைப், பெண்களின் உணர்வுகள் பற்றிய ஓரளவு அனுதாபத்துடனும், மென்மையுடனும், எழுதுவதை நினைவுகூர்வது அவசியமாகிறது, பாலுணர்வையும் பாலுறவையும் அங்க அவயவ வர்ணனைகளையும் விட முக்கியமான ஒன்று: மனித உறவுகள் பற்றியது. இதைக் கையாள்வதற்கு அவசியமான நுன்மையான உணர்வுகளை என்னால் எஸ்பொவின் எழுத்திற் காண முடியவில்லை.

எஸ்பொ தன்னுடைய கதைத் தலைப்பை நியாயப்படுத்தக்கூடக் கணேசலிங்கன் மீதும் ஜெயகாந்தன் மீதும் தாக்குதல் தொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம், அவரது சமுதாயப் பார்வைமீது அவரது தனிமனிதவாதம் செலுத்தும் ஆதிக்கத்தின் விளைவு தானோ தெரிய

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



வில்லை. தன்னை ஒரு கம்யூனிஸ்ட்டாகவே காட்ட விரும்பும் எஸ்பொவின் எழுத்து அவரை அவ்வாறு காட்டுகிறதா என்பது ஒரு நல்ல கேள்வி. அரசியலை அவர் தனிமனிதர்களாகவே காண்கிறார். அந்தளவில் முதலாளித்துவ, நிலமான்ய சமுதாய அரசியல் வரலாற்றியயாளர்களின் பாதையிலேயே அவரும் பயணிக்கிறார். அண்மையில் 'மாஓ சேதுங் ஒரு கொலைகாரன், காமுகன், நரமாமிச உணவை ஊக்குவித்த ஒரு வெறியன்' என்றவாறான ஒரு சித்திரம் மாஓ நூற்றாண்டு தினத்திற்கும் சில வாரங்கள் முன்பு BBCயில் ஒளிபரப்பானது. அங்கு உண்மைகளும் ஊகம்களும் கலந்தன, தனி மனிதர் மீதான அவதூறுகள் இடதுசாரிச் சிந்தனைமீதான அஸ்திரமாகியது. ஏனோ, எஸ்பொவின் 'அவா' தொகுதியை வாசித்த பின்பு, அந்த நிகழ்ச்சியே மனதில் நின்றது.

சமகாலத் தமிழ் எழுத்தின் முனைப்பினின்று ஒதுங்கி ஓரளவுக்கு மரபை நாடி நிற்கும் எஸ்பொவின் எழுத்து நடை இன்று நான் வாசிக்கும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் சோர்வான எழுத்து நடைக்கு மத்தியில் ஒரு விறுவிறுப்பை ஏற்படுத்துகிறது. எனினும் அவரது சொற்பிரயோகப், அவரது சொல்வளத்தின் பூரணமான பயன்பாட்டை வேண்டியோ என்னவோ, வழக்கொழிந்து போகும் சொற்களைக் கணிசமாகவே உள்ளடக்குகிறது. சில இடங்களில், மிக எடுப்பான மரபு சார்ந்த மொழி நடையின் நடுவே நவீனத்துவத்தின் கொச்சை வந்து இடறுகிறது (இது அடிக்கடி நிகழும் ஒன்றல்ல). எழுதுகிற வேகத்தில், உதாரணமாக:

''இந்த மோடன்கள் எங்கட பழமொழியைக்கூட மறந்து போனார்கள். காகம் உயரப் பறந்தாலும் அன்னமாக மாட்டாது'' என எழுதுகிறார். இங்கே பேச்சு மொழியில் ஒரு சிறு இடறல்: ''மோடன்கள் போனாங்கள்'' என்று வரக்கூடுமேயொழியப் ''போனார்கள்'' என வராது. அதை விட, நமது பழமொழி.

''உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது'' என்று தான் நினைவு. அன்னத்தை உயரப்பறப்பதுடன் நமது மரபிற் சேர்த்துக் கருதுவதாக நினைவில்லை. எஸ்பொ இத்தகைய சில பிசிறுகளையும் தவிர்த்திருக்கலாம். ''(தமிழ்) மொழி மீது (எஸ்பொவின்) ஆளுமையே அவரது அதியுயர்ந்த வலிமையாகும். இடையிடையில் அதுவே அவரது பலவீனமுமாகும்'' என்று ஏ. ஜே. கனகரத்னா 1968ம் ஆண்டு எழுதிய வரிகளும் 'அவா' நூலில் உள்ளடக்கியிருப்பதை இவ்விடத்துக் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

(1994 முற்பகுதியில் சுவடுகளுக்கு அனுப்பப்பட்ட விமர்சனம்)

# காசி ஆனந்தன் கதை எழுதுகிறார்*

நிழலின் அருமை வெய்யிலிற் தெரியும் என்பது பழமொழி ஈசாப் கதைகளின் அருமை காசி ஆனந்தனுடைய கதைகளை வாசிக்கும் போது நிச்சயமாகத் தெரியும். ஈசாப்பின் நீதிக் கதைகளின் அமைப்பில் மிகுந்த கவனமுண்டு. கதைகளில் வரும் விலங்குகளுடன் மனிதர் உறவுபடுத்தும் பொதுவான பண்புகளை ஈசாப் தனது கதைகள் கூறும் நீதியை வலியுறுத்தப் பயன்படுத்தியுள்ளார். கதைகளில் ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கிச் சுவாரசியமான முறையில் திருப்பங்களையும் கதைகளிற் புகுத்தியிருக்கிறார். உதாரணமாக, முயலும் ஆமையும் பந்தயத்துக்கு ஓடிய கதையை நாம் அறிவோம். ஆமை வெல்லக்கூடுமா என்ற பிரச்சனையை அவர் முயலின் தூக்கத்தின் மூலம் தீர்த்து விட்டார். அவரது திறமையை அவரது கதைகள் அனைத்திலும் நம்மால் உணரமுடியும். அவரது கதைகள் ஆயிரம் இரண்டாயிரம் வருடம் நிலைத்து இன்னமும் விருப்புடன் கேட்கப்படுகின்றன என்றால் அதற்குரிய நியாயம் அவரது கதைகட்கு உள்ளேயே இருக்கிறது.

காசி ஆனந்தன் எதுகை, மோனை உணர்ச்சி ஆகியவற்றை வைத்துக் கவிதை பண்ணினவர். அரசியற் காரணங்களால் தமிழரசுக் கட்சியின் இலக்கியப் பாசறையில் முக்கியமான ஒருவரானவர் (இது தமிழரசுக் கட்சியின் தேசியவாத அரசியலின் தத்துவ கலை இலக்கிய வறுமையின் விளைவாகவும் இருக்கலாம்) மற்றப்படி அவர் வெகு சராசரியான ஒரு கவிஞர் தான். அவருக்கு மரபுத் தமிழ்க் கவிதையுடன் உள்ள பரிச்சயம் கவித்துவத்துடனான பரிச்சயமாக இல்லாமற் போய்விட்டது. உணர்ச்சிக் கவிதைகளை எழுதிக் குவிப்பது போல குட்டிக் கதைகளை எப்போதோ எழுதிக் குவிக்க முற்பட்டிருக்கிறார் விளைவு: இந்தத் தொகுதி.

காசி ஆனந்தன் பாணியில் குட்டிக்கதை எழுத வேண்டுமானால் அதற்கான எளிய விதிமுறை ஒன்றுஉண்டு. மூன்று கட்டங்களில் இதைத் தருகிறேன்

---

(காசிஆனந்தன் கதைகள், காசி ஆனந்தன், 1992 மார்கழி காந்தளகம், சென்னை 600 002, 93ப. இந்திய ரூபா 30.00)

படிப்பகம்

முதலாவது:

இதுவே, இம்மூன்றிலும் சிறிது சிரமமானது ஆயினும் எவருக்கும் இயலுமானது. ஒரு 'புதுமொழியை' உதிருங்கள் எதுகை மோனையுடன் இருப்பது சிறப்பு ஆயினும் அவசியமில்லை. உதாரணமாக 'மேலே பார்ப்பான் கீழே விழுவான்'

இரண்டாவது:

முதலாவது விஷயத்தில் வரும் காரியங்களைச் செய்யக்கூடிய ஒரு பிராணியை அல்லது பொருளை அல்லது ஒரு மனிதனைத் தெரிந்தெடுங்கள் அதைச் செய்யாத அல்லது செய்ய முனையாத ஏதோ ஒன்றுஇரண்டையும் தெரிந்தெடுங்கள்.

மூன்றாவது :

தெரிந்தெடுத்த முதலாவது பிராணியோ, பொருளோ, மனிதனோ புதுமொழிக்கேற்ப எதையோ செய்யப் போய் எப்படியோ முடிவதாக ஒரு சில சொற்களில் எழுதுங்கள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பிராணியோ பொருளோ மனிதனோ அதைப் பற்றி ஒரு கருத்துத் தெரிவிக்கலாம் அல்லது கேள்வி கேட்கலாம். அதற்கு மற்றப் பிராணியோ பொருளோ மனிதனோ உங்கள் 'புதுமொழியைப்' பதிலாகத் தரலாம். அல்லது கேள்வியின் உதவியில்லாமலே யாராவது அந்தப் புதுமொழியை உதிர்க்கலாம்.

இனிக் கதையை அமைத்துப் பார்ப்போம்.

ஒரு ஒட்டகம் (அல்லது கழுதை அல்லது யானை, அல்லது உயரமான மனிதன், அல்லது குள்ளமான மனிதன் அல்லது குடை...) மேலே பார்த்தபடி தெருவழியே போனது (போனான்) தன் அகம் பாவத்தால் (அல்லது அசட்டையால் அல்லது கழுத்துச் சுளுக்கியதால் அல்லது சும்மா வேறு பராக்காக...) அக்கம் பக்கம் பாராமலும் (நடந்தோ மிதந்தோ பறந்தோ எப்படியோ) போனது (போனான்). கீழே இருந்த குழி )அல்லது முன்னால் வந்த வண்டி, அல்லது கிடந்த மலை அல்லது பறந்த ஆகாயவிமானம்) அதற்கு அவனுக்குத் தெரியவில்லை. தடுக்கியோ இடறியோ மோதியோ எப்படியோ விழுந்து தொலைத்தது (தொலைத்தான்) அதைப் பார்த்துக் கொண்டிருந்த காகம் (அல்லது மேகம் அல்லது மரம் அல்லது அம்மிக்கல் அல்லது கிழவி...) அதைப் பார்த்துச் சொன்னது (சொன்னாள்.)



'மேலே பார்ப்பான்
கீழே விழுவான்'

கதையை மாற்றி மரத்திடம் அம்மிக்கல் சொன்னதாகவும் எழுதலாம். அம்மிக்கல் எப்படித் தெருவுக்கு வந்தது என்று யோசிக்காதீர்கள். தொண்ணூற்றெட்டு வயதுப் பாட்டி அதை வெய்யிலில் காய வைக்கத் தெருவுக்குக் கொண்டு வந்தபோது சம்பவம் நடந்ததாக எழுதலாம். இல்லாவிட்டாலும் என்ன தமிழர்கள் இந்த மாதிரிக் கேள்வி கேட்டுப் பழகியிருந்தால் யாரும் தமிழனுக்கு இந்த மாதிரிக் கதை விடுவார்களா!

இந்த மாதிரிக் கதை எழுதுவதற்கு அவசியமான திறமையை விடப் பச்சடிக்குத் தேங்காய் அரைப்பது எப்படி என்று தெளிவாக எழுத அதிகம் மொழி ஆற்றலும் இலக்கிய ஆளுமையும் அவசியம். அதுவும் இயலாதவர்கள் சிலபேர் கவிதை எழுதுகிறார்கள். இப்போது காசி ஆனந்தன் புதியபாதையைக் காட்டியுள்ளார். இனியாவது கவிதைக்கு வந்தது குட்டிக் கதையோடு போயிற்று என்றவாறு தமிழ்க் கவிதை பிழைக்குமா?

காசிஆனந்தன் தான். தனது கதை சொல்லும் ஆற்றலுக்கும் கற்பனை வளத்துக்கும் ஏற்றபடி எதையோ எழுதினாரென்றால். அதற்கு ஆசீர்வாதம் வழங்குகின்ற சிலரது பொன்மொழிகளைப் பார்ப்போமே. (யாரை நினைத்து அழுவது என்று தெரியாததால் நான் அழவில்லை)

'நாளைய நம் தலைமுறைக்கு வரலாற்றோடு ஒப்புமை செய்து பேச இன்றைக்கே எம் கவிஞர் எழுதி வைத்த இந்த அழகுகள் என்றும் வாழும்... திலீபத் தளிர்களாய்!' —அறிவு மதி

'ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் நாடகத்தின் உரையாடல்களில் பல, ஆங்கிலத்தில் பழமொழிகளாகி விட்டன என்பர், இத் தொகுப்பிலுள்ள ஒவ்வொரு கதையின் இறுதியிலும் பழமொழிப் பாணியிலான புதுமொழிகள் இடம்பெற்றுள்ளன. இப்புது மொழிகள் பழமொழிகளாகி நின்று நிலவும்.' —கவிஞர் இன்குலாப்

''கவிஞர் காசி ஆனந்தன் ஈசாப் ஆகியிருக்கிறார்.''
—கவிஞர் அப்துல் ரகுமான்

''காலத்துக்கு வாழ்வு கொடுக்கும் இலக்கியப் படைப்புக்கள் இவை.'' —மறவன்புலவு க சச்சிதானந்தன்

இதோ மாதிரிக்கு காசி ஆனந்தனின் கதை ஒன்று :

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## அளவை

அன்றாடம் ஓடிக்கொண்டிருந்த பேருந்தின் சக்கரத்தைப் பார்த்துத் தெரு கேட்டது :-

''மண் முழுவதும் சுற்றி வருகிறாயே—நீ பெற்ற அனுபவம் தான் என்ன?''

சக்கரம் அமைதியானது.

பின்பு அது தெருவைப் பார்த்துச் சொன்னது :-

''நான் என்னையே பலமுறை சுற்றி அளந்து கொள்கிறேன்—அதனால் தான் உலகத்தையே அளந்து வருகிறேன்.''

திரும்பவும் தெருவைப் பார்த்துப் ''புரிகிறதா?'' என்று கேட்டது சக்கரம்.

அது சொன்னது :-

''தன்னை அளந்தவன்
மண்ணை அளந்தவன்''

(முகட்டில் மாட்டியிருந்த மின்விசிறியும் தரையிற் சுற்றிக்கொண்டிருந்த பம்பரமும் ஆளையாள் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டன. சி. சி.)

காசி ஆனந்தனுடைய அண்மைய குட்டிக் கதைகள் சில ''ஹைக்கூ கதைகள்'' என்ற பேரில் ''சுபமங்களா''வில் விதந்துரைக்கப்பட்டு மறுபிரசுரமாகியுள்ளன. ஒரு சில ''எரிமலையி''ல் வந்துள்ளன. காசி ஆனந்தனின் குட்டிக் கதைகள் இன்னமும் தரத்தில் அவரது கவிதைகள் போலவே உள்ளன. (ரசனை என்பது அகச் சார்பான விஷயமும் தானே!)

நிற்க. நூலின் அச்சுப் பதிவு நேர்த்தியானது. இடையிடை கதைக்குப் பொருத்தமற்று அமைந்தாலும் கதைகளுடன் வரும் சித்திரங்களைக் கதைகளை விட மேலாக ரசிக்க முடிந்தது.

ஓசை 1994

# இருத்தலியல்வாதம் என்கிற எக்சிஸ்டென்ஷியலிசம் தொடர்பாக

0.1. S. V. ராஜதுரை எழுதிய 'எக்சிஸ்டென்ஷியலிசம்' (2ம் பதிப்பு, க்ரியா, சென்னை, மார்ச் 1983, 323 ப., இந்திய ரூ. 25–00) பற்றிய விமர்சனம் ஒன்று எழுதும் ஆலோசனை சொல்லப்பட்டபோது நான் முதலில் சிறிது தயங்கினேன். Existentialism எனும் பிரெஞ்சு மொழிப் பதம் குறிக்கும் இருத்தலியல்வாதம் பற்றி ஏற்கெனவே சிறிது அறிவேன். சில இருத்தலியலாளர் பற்றியும் அறிவேன். இருத்தலியல்வாதம், என்வரையில், ஒரு பிற்போக்குச் சித்தாந்தமாக இல்லாதவிடத்து ஒரு உதவாக்கரை ஆய்வு முறை என்ற எண்ணமே இருக்கிறது. இதை நான் இப்போதே சொல்வதால் என்னை நடு நிலையாளன் என்றோ திறந்த மனத்துடன் பிரச்சினையை அணுகு பவன் என்றோ காட்டிக்கொள்ள முடியாமல் போகலாம். ஆனால் இது போன்ற பிரச்சனையில் என் நிலைப்பாடு பற்றிய பாசாங்குகள் வாசக ருக்கு எந்த விதத்திலும் உதவமாட்டா. இவ்விஷயத்தில் என்னால் என் அரசியல் நிலைப்பாட்டையும் சிந்தனைச் சார்பையும் தாண்டிச் செயற்படுவது மிகவும் சிரமமான காரியம். ஆயினும் வாதங்களுள் காணப்படும் முரண்பாடுகள் உண்மைகளுடன் பொருந்தாமை போன்ற விஷயங்களில் அகநிலைச்சார்பின்றித் தர்க்கிக்க முடியும் என்றே எண்ணுகிறேன். எனவே என் கவனத்தைப், பெரிதும், அத்திசையி லேயே செலுத்துகிறேன்.

0. 2. SVR தன்னை மாக்ஸியவாதி என்றே கருதுபவர். ஆயினும் அவருடைய கருத்துக்கள் பலவற்றுடன் நான் முரண்பாடுடையவன். அவர் இந்த நூலை எழுதிய நோக்கம் மாக்ஸிய எதிர்ப்போ மாக்ஸியத் துக்கு மேலாக இருத்தலியலை நிலைநாட்டுவதோ இல்லை. அவ்வாறிருந்தும், இருத்தலியல் மீது SVRஇன் மிகையான அனுதாபம், அவர் சில முக்கியமான தகவல்களைப் புறக்கணிக்கவும் வேறு சில இடங்களில் வாசகரால் தவறாக விளங்கிக்கொள்ளப்படவும், இன்னுஞ் சில இடங்களில் அவரே தவறான கருத்துக்களை முன் வைக்கவும் இடமளித்துள்ளது. இவை யாவற்றையுமே விவரமாக



படிப்பகம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



விளக்கி விவாதிப்பதாயின் என் விமர்சனம் என் திறமைக்கும் வாசகரின் பொறுமைக்கும் பரிசோதனையாகுமளவு மிக நீண்டு விடும். எனவே, என் தகுதிக்கும் திறமைக்கும் உட்பட்டு, சில விஷயங்கள் பற்றிய குறிப்புக்களுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

0. 3. மிகக் குறைவான அச்சுப்பிழைகளுடன் நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்நூலில், தான் சொல்லவந்ததைத் தெளிவாகச் சொல்ல மிகுந்த சிரத்தை எடுத்துள்ளார் SVR ஆயினும் அவர் எழுதியுள்ள முறையில் உள்ள ஒரு குறைபாடு சுட்டிக்காட்டப்பட வேண்டியது பல (அப்படியானால் பெரும்பாலான என்று பொருள் இல்லை) இடங்களில் வார்த்தை அமைப்பு அயல் மொழித் தன்மையினதாக உள்ளது. இத்தகையதொரு நூலில் இவ்வாறானதொரு குறைபாடு தவிர்க்க இயலாததாகவே இருக்கலாம். நேர்மையாகச் சொன்னால் என் வசனங்களிலேயே சிலசமயம் ஆங்கிலவாடையை முகர எனக்கு முடிகிறது. எனக்கு SVR பரவாயில்லை என்பதால் குறைபாடு இல்லாமற் போய்விடுமா?

0.4 இந்த விமர்சனம் பல சந்தர்ப்பங்களில் புத்தக விமர்சனமாக இல்லாமல் SVRஇன் சிந்தனைகளுடன் என் முரண்பாடுகளது வெளிப்பாடாக அமையத் தோன்றினால் என்னைப் பொருத்தருள்க. சில சமயங்களில் சில விஷயங்கள் பற்றி என் நிலைப்பாட்டை விளக்கும் நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டுள்ளேன். அத் தேவையை உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்.

1.1. ‘தத்துவம் பற்றிய பிரச்சனையும் பிரச்சனை பற்றிய தத்துவமும்’ என்ற தலைப்பில் இருத்தலியற் சிந்தனையின் வரலாற்றுப் பின்னணியுடன் நூல் ஆரம்பிக்கிறது. இந்த அத்தியாயத்திலேயே இருத்தலியலாளர்களது சார்பில் எழுப்பப்படும் வாதங்கள் சில முன்வைக்கப்படுகின்றன. SVR சில சந்தர்ப்பங்களில் அவ்வாதங்களில் தனக்கும் உடன்பாடு உண்டா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தத் தவறிவிட்டார் வேறுசில சந்தர்ப்பங்களில் அவரது அனுதாபமான நிலைப்பாடு அவரை ‘‘கீர்க்கெகார்ட், மார்க்ஸ் இருவருக்கிடையில் எல்லா இருத்தலியலாளர்களையும் நிறுத்திவிட முடியும் இதன் பொருள் இருவரும் ஒரே துவக்க முனையிற் புறப்பட்டு வெவ்வேறு திசைகளிற் சென்றனர் என்பது தான்’’ (ப 14) என்பது போன்ற கருத்துக்கு அவரைத் தள்ளிவிடுகிறது.

தத்துவ சிந்தனைகளை இவ்வாறு ஒற்றைப் பரிமாணத்தில் அடுக்கலாமா என்ற உடனடியான கேள்வியை விலக்கிவிட்டு, எந்த



அர்த்தத்தில் பார்த்தாலும் எனக்கு ஹைடெக்கர் (Heidegger) என்கிற ஹிட்லரின் அடிவருடியை, ஹிட்லரின் முடிவுக்குப்பின் மேற்கு ஜேர்மன் ஜனாதிபதியாக அடினார் வந்ததையொட்டிப் புனர்வாழ்வு பெற்ற பல நாஜி பிரமுகர்களுள் ஒருவரை, அவரது சிந்தனையை மாக்ஸுக்கும் கீர்கெகார்ட்டுக்கும் (Kierkegaard) நடுவில் எங்கே நிறுத்தலாம் என்றே புரியவில்லை.

மேலும் தொடர்ந்து, ‘‘ (‘முற்போக்கு’ முகாமைச் சேர்ந்தவர்களால்) இருத்தலியலாளர் அனைவரும் மக்களைப் புதைகுழிக்கு அனுப்புவதற்காக ஏகாதிபத்தியவாதிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பிற்போக்குச் சிந்தனையாளர்கள்தான் என்று சொல்லப்பட்டு வருகிறது!’’ என்று குறைப்படுவதுடன் அக்குற்றச்சாட்டை மறுக்கவும் முனைகிறார் SVR. இருத்தலியல் பிராய்டியச் சார்பற்றது என்ற SVRஇன் பதில் ‘முற்போக்கு’ முகாமுக்குத் தரப்படும் இடத்தில் SVRஇன் பிரச்சனை எனக்கு விளங்குகிறது. ‘முற்போக்கு என்ற பேரில் மாக்ஸியம் கொச்சைப்படுத்தப்படுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் மாக்ஸியத்தைக் கொச்சைப்படுத்தும் ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றன் உறுப்பினராக இருந்தே தீரவேண்டியதில்லை. கொச்சைப்படுத்தலுக்கு எதிராகக் கிளர்ந்தெழுபவர்களும் அறிந்தோ அறியாமலோ அக்காரியத்தில் ஈடுபடமுடியும். எல்லா மாக்ஸிய விரோதிகளுமே ஏகாதிபத்தியம் திட்டமிட்டு உருவாக்கியவர்களல்ல ‘முற்போக்கு’ முகாம் கூறுமளவிற்கு இருத்தலியல் பிராய்டிய (Freud) உளவியலுடன் நேரடியான உறவு கொண்டதாக இல்லாமலே கூடப் போகட்டும். இந்த இருத்தலியல் யாருக்கான தத்துவம் என்ற கேள்விக்கும் அதை யார் எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்ற கேள்விக்கும் ‘முற்கோக்கு’ அணியினர் தரும் பதில் (தவறான காரணங்கட்காகவே இருப்பினும்) சரியான ஒன்றாகவே இருக்கிறது. இருத்தலியலாளர்களது சிந்தனைகளை மாக்ஸியவாதிகள் பயன்படுத்த முடியுமா என்பதோ, இருத்தலியலாளர்களிடையே ஏகாதிபத்திய விரோதிகள் இருந்தார்களோ என்பதோ வேறு விஷயங்கள்.

மாக்ஸியம் தன் தோற்றம், வளர்ச்சி, மாக்ஸியம்—லெனினிஸமாகியமை, மாஓ சேதுங் சிந்தனையாகச் சீனாவில் பரிணமித்தமை ஆகிய ஒவ்வொரு கட்டங்களிலும் புதிய தகவல்களையும், தன் வரையறைகட்குப் புறம்பான சிந்தனைகளையும் கணிப்பிலெடுத்தே வந்துள்ளது. மாக்ஸியவாதிகளல்லாதோரின் சிந்தனைகளை எல்லாமே அது முரட்டுத்தனமாக நிராகரித்ததில்லை. ஆயினும் ஒவ்வொரு சிந்தனை முறைபற்றியும் அதன் பயன்பாடுபற்றியும் ஆராயும்போது அதில் நமக்குள்ள ஈடுபாடு இறுதி ஆராய்வில்

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



நடைமுறை சார்ந்தே அமைகிறது. (என் தோட்டத்து மண்ணில் கூடப் பொன் உள்ளது. ஆனால் நான் அதைப் பிரித்தெடுக்க முனைவதில்லை எனக்குப் பொன்மேல் ஆசை இருந்தாலும் கூட அதைப் பிரித்தெடுக்கும் சிரமத்துக்கு அந்தப் பொன் பெறாது. என்நேரம், முயற்சி, வசதிகள் எல்லாவற்றையும் வேறு பயனுள்ள வகையிலேயே கழிக்க முனைவேன்).

1 2. ''சாவு, நிலையாமை என்கிற பிரச்சனைகளை வைத்துக் கொண்டு ஒப்பாரி வைக்கிறவர்கள்தான் இருத்தலியலாளர்கள் என்ற குற்றச்சாட்டினைத் தொடுகிறவர்கட்கு இருத்தலியலாளர் தரும் விடை இதுதான்: இத்தகைய குற்றச்சாட்டுக்களைத் தொடுப்பவர்கள் ஏதேனும் ஒரு கட்டத்திலாவது மரணத்தைப்பற்றிய சிந்தனையோ, இயற்கை விதிக்குரிந்த வரையறையினின்று ஏதேனும் ஒரு வகையில் கடந்து செல்ல வேண்டும் என்ற வேட்கையோ தங்கள் உள்ளத்தில் எழுந்ததே இல்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இச்சிந்தனை இல்லாதவன் தன்வாழ்வின் பொருள் பற்றியோ, இப்பேரண்டத்தில் தன் ஒருமை பற்றியோ ஒருபோதும் கவலைப்படமாட்டான். இவன் கல்லாக இருப்பான் அல்லது கடவுளாக இருப்பான்; இரண்டும் கைகூடாதவையாதலால் ஏதேனும் ஒருவரட்டுத் தத்துவததில், அறநெறிக் கோட்பாட்டில், கட்டுப்பாடற்ற புலனின்ப வாழ்க்கையில், தலைவிதி பற்றிய கருத்தில் தன்னை மறந்திருப்பான்; அல்லது தன் வாழ்க்கையை வாழும் பொறுப்பை நிறுவனங்கள், இயந்திரங்கள் ஆகியவற்றிடம் ஒப்படைத்தவனாக இருப்பான். இவன் வாழ்வதே இல்லையாதலால், சாவைப்பற்றிச் சிந்திக்கமாட்டான்.'' (ப. 12–13) என்று கூறும் SVR இந்த நிலைப்பாட்டுக்கு மாறாக ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

என்வரையில், சாவு தவிர்க்க முடியாதென்று அறிய அதிகம் நாளாகவில்லை. அதைப்பற்றிச் சிந்திப்பதில் அதிகம் பயன் இல்லை என்பதை உணர்வதும் அதிகம் சிரமமான ஒன்றாக இருக்கவில்லை. நான் மிகுந்த ஹிந்து நம்பிக்கையுடையவனாக இருந்தபோதே மறுபிறவி என்பது அபத்தமான விஷயமாகவே மனதுக்குத் தோன்றியது. மனிதச் சுற்றாடலில் மரணம் நிகழும்போது, மற்ற எந்த விஷயமும் போல மனிதனது கவனத்தை அது கவருவது இயல்பானது. அது தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்த பிறகு அதைப்பற்றி மேலும் சிந்திக்க என்ன இருக்கிறது? மரணத்தின் தவிர்க்க முடியாமையை ஏற்றுக்கொள்வதென்றால் மரணத்தை எந்நேரத்திலும் எதிர்கொள்ள ஆயத்தமாக இருப்பது என்றாக வேண்டியது இல்லை, மரணத்தை



வரவேற்பது என்றாகவும் வேண்டியதில்லை. ஒரு நல்ல நண்பனின் மறைவு அல்லது மதிப்பிற்குரிய ஒருவரின் பிரிவு மனதை வாட்டவே வாட்டுகிறது. ஆனால் இது நிலையாமையையும் மரணத்தையும் ஒரு கணம் நினைவூட்டுவதற்கு அப்பால் எதையும் செய்வதில்லை. மரணம் பற்றிச் 'சிந்தித்து' அதைக் கடந்து செல்லும் வேட்கை ஏன் தோன்றவேண்டும்? (எல்லாக் குழந்தைகளுமே நிலாவுக்கு அழத்தான் வேண்டுமா? மரணம் மிக இயற்கையானது என்ற எளிய உண்மையை உணர்ந்தவர்க்கு இருத்தலியலாளர்கள் குறிப்பிடும் கவலைகள் அர்த்தமற்றவை.

சக மனிதன் மீதும் மனித இனத்தின் மீதும் என் அக்கறைக்குக் காரணம் நானும் அந்த இனத்தவன் என்பதே. மற்றபடி, மனிதன் என்ற ஜிவராசியை நாம் முக்கியப்படுத்த அதைவிடப் பெரிய காரணம் எதுவுமே இல்லை. மனிதனுக்குள்ள முக்கியத்துவம் மனிதனே மனிதனுக்கு வழங்கிக்கொண்டதுதான் அதில் ஒரு தவறும் இல்லை. ஆனாலும் அதுவே மிகைப்படுத்தப்படும்போது ஹிந்துவின் ஆத்மாவின் பிறவிச் சுழல்ரக, பௌத்தனுடைய கர்மாவின் தொடர்ச்சியாக, கிறிஸ்தவனுடைய புத்துயிர்ப்பாக மரணத்தை இறுதியான முடிவாக ஏற்றுக்கொள்ள முடியாத தன்மையாக வெளிப்படுகிறது. பழக்கப்பட்டுப்போன இவ்வாறான சிந்தனைகளினின்று விடுபடுவது எளிதல்ல, எனினும் அசாத்தியமானதும் அல்ல இந்தியச் சிந்தனையால் இந்த ஆத்மாவை மற்ற உயிர்கட்கும் விஸ்தரிக்க முடிந்தது மனிதனால் கடவுளைத் தன் பிரதிமையாகவே சிருஷ்டிக்க முடிந்தது. தன் குணங்களை அந்தக் கடவுளுக்கும் கற்பிக்க முடிந்தது. இந்தியச் சிந்தனை கடவுளுக்கு மானிட உணர்வுகளையும் தேவைகளையும் கற்பித்ததோடு கடவுளை வெவ்வேறு வடிவங்களூடும் காணுவதைச் சாத்தியமாக்கிற்று. இதே இந்தியச் சிந்தனையால் மரணத்தை வெகு இயல்பான ஒன்றாக ஏற்றுக்கொள்ள முடிந்த சிந்தனையாளர்களையும் கடவுள் மறுப்பாளர்களையும் உருவாக்க முடிந்தது என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம். இவர்கள் எல்லாம் வாழாதவர்களா? மோட்சம்—நரகம், மறுபிறவி, கர்மவினை என்றெல்லாம் எண்ணிப் பயந்து செயற்பட்டவர்கள் எல்லாரும் 'வாழ்ந்தவர்'களா? இருத்தலியல் இந்த விஷயத்தில் வெறுமே ஒரு பின்நோக்கிய பயணமே.

1. 3. ''இருத்தலியலாளர்கள் அனைவருமே அப்பட்டமான பிற்போக்காளர்களல்லர்'' (ப. 14) என்று கூறும் SVR மிகுந்த பிரயாசையுடன் சில இருத்தலியலாளர்களது நற்பண்புகளை விளக்க முற்படுகிறார். இந்தக் கும்பலில் சார்த்தர் (Sartre) போக மீந்தவர்களில்

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



முற்போக்கான சிந்தனையின் ஜாடை என்னவோ பௌர்ணமிச் சூரிய கிரகணம் மாதிரித்தான். நம் கேள்வி 'நாஜிகளுள் நல்லவர்கள் இல்லையா?' என்பது போலல்ல. நாஜிக்கொள்கை நல்லதா என்பது போல் இருத்தலியல் முற்போக்கானதா என்பதே நம் பிரச்சனை. முற் போக்கா பிற்போக்கா என்பதைச் சமகால வரலாற்றுப் பின்னணியில் வைத்தே அணுக வேண்டியுள்ளது.

1. 4. இருத்தலியல் வாதத்துக்கு நீண்டகால வரலாற்றுப் பின்னணியுண்டு என்று விளக்கிய பிறகு, முதலாம் உலக யுத்தத்தை அடுத்து ஐரோப்பியச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களால் எவ்வாறு இருத்தலியல் ஊட்டம் பெற்றது என SVR விளக்குகிறார். அன்றைய மனித அவலத்தினின்று மீள வழி தேடிய இருத்தலியல் சிந்தனையாளர்கள் மாக்ஸிய எதிர்ப்பில் இடறி விழுந்து கருத்து முதல்வாதத்தில் வழிதவறிப் போனார்கள். இவர்களிடையே சில சிறந்த கலைஞர்களது சிந்தனைகள் இடையிடை மின்னல் கீற்றுக்கள் போல பளிச்சிடுகின்றன. மனிதனுக்கு வழிகாட்டும் ஒளியாக அமைந் தது என்னவோ மாக்ஸியம்தான். இருத்தலியல் விரக்தியின் சித்தாந்த மாக மாக்ஸியவாதிக்குத் தோன்றியது முற்றிலும் இயல்பானதே.

1. 5. ''விஞ்ஞானங் கொண்டுவந்த அஞ்ஞானம்'' (ப. 17); ''இருத்தலியலானது விஞ்ஞானத்தால் மனித ஆளுமைக்கு நேர்கிற அவலத்தையும் ஒரு முற்றான பிரச்சனையாக்கிக் கொள்கிறது' (ப. 10); விஞ்ஞானமானது பிரச்சினைகளை 'மூடிவிடுகிறது'' ஆராய்ச்சிக் கோப்புக்களில் பிரச்சினைகளைப் பூட்டி வைத்து அவற்றை மறந்து விடுவதே தீர்வு என்கிறது.'' (ப. 9); ''மனிதனை விஞ்ஞானம் ஆராயத் தொடங்கும்போது அவனையும் அது இதர பொருட்களைப் போற்கருதுகிறது''. இவைபோன்று, விஞ்ஞானம் பற்றிய 'தீர்ப்புக்கள்' எல்லாம் SVRக்கும் உடன்பாடானவையா? இவ்விஷயத்தில் இருத்தலியலாளர்களுக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமை-வேற்றுமைகளைத் தெளிவுபடுத்த அவர் தவறிவிட்டார்.

மாக்ஸியம் விஞ்ஞானத்தைத் தன் உறுதியான அத்திவாரமாகக் கொண்டுள்ளது என்பதையும், விஞ்ஞானத்தாற் தீர்க்க முடியாத பிரச்சனைகளையே 'உண்மையான பிரச்சனைகளாக' எண்ணிய இருத்தலியலாளர் விஞ்ஞானத்தை வெறுத்தொதுக்கினர் என்ப தையும் இங்கு குறிப்பிட வேண்டும். 'விஞ்ஞானத்துக்கும் அப்பால்' பார்க்க முனையும் இவர்கள், விஞ்ஞானத்துக்கும் அப்பால் போகுமுன் விஞ்ஞானத்திற்கு உட்பட்ட விஷயங்களை எவ்வளவு தூரம் அறிந்திருந்தனர் என்பது சுவையான விஷயம். (இவர்கள்



மாதிரியேதான் மாக்ஸியத்துக்கு உள்ளே என்ன உள்ளது என்று தெரியாமல் சிலர் மாக்ஸியத்துக்கு அப்பால் தேடிப் பார்க்க ஆரம்பித் தார்கள். பாவம்).

2.1. தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் (கிரேக்கச் சிந்தனை யூதச்சிந்தனை, மறுமலர்ச்சி, பிளெய்ஸ் பாஸ்க்கால், எதிர்ப்புக்குரல் கள், ஹெகல்) இருத்தலியலுக்குத் தொடர்பான சிந்தனை வளர்ச் சியை வரலாற்று ரீதியாக அணுகுகிறார். நான் சிந்தனை வரலாற்று விஷயங்களில் ஆழமான அறிவுடையவன் அல்ல என்பதை முதலில் ஒப்புக் கொண்ட பிறகே, மேற்கொண்டு என் கருத்துக்களை முன் வைப்பது நியாயமானது SVR நூலின் இப்பகுதியை மிகவும் தெளி வாகவே எழுதியுள்ளார்.

கிரேக்கச் சிந்தனை காலம் எனும் பரிமாணம் பற்றிக் காட்டாத கவனத்தை யூதச் சிந்தனை காட்டுகிறது என்பதை வலியுறுத்தி, அதனாலேயே 'கடந்து செல்லல்' என்ற மனித அகத்தன்மை சார்ந்த பண்பு வளர்ந்தது என்று சுட்டிக்காட்டும் SVR, காலத்தின் முக்கியத் துவத்தை வலியுறுத்திய மாக்ஸ் பிறப்பால் யூதர் என்பது அதிசயமான உடனிகழ்வு என்று வியக்கிறார். இது போன்ற விஷயங்கள் நூலை எவ்வகையிலும் பலப்படுத்த உதவவில்லை என்றே எண்ணுகிறேன். (மற்றப்படி இது போன்ற கருத்துக்களுக்கு நான் எந்தவித முக்கியத் துவமும் தரவில்லை).

2. 2. யூதனின் கர்த்தர் பற்றிய சில விஷயங்களை SVR தவற விட்டு விட்டார் எனத் தோன்றுகிறது. மனித இனத்தின் மீது சினங் கொண்டு வெள்ளம், கொள்ளை நோய் போன்றவற்றை அவன்மேல் ஏவிவிடும் கர்த்தர் அவர். கடவுள் பற்றிய இவ்வாறான கோட்பாடு எவ்வாறு சாத்தியமாயிற்று? மாறி மாறி ஏற்பட்ட அடிமை நிலை, அந்நிய ஆட்சியாளன் கீழ் அனுபவித்த துன்பங்கள் ஆகியவற்றுடன், நெருங்கிய தொடர்புடையது யூதச் சிந்தனை. நல்லவிதமாக நடந்து கர்த்தரின் தண்டனையினின்று தப்பிக்கொள்ள எண்ணிய யூதன் எதிர் பார்த்த விடுதலையும், இராச்சியமும் இவ்வுலகு தொடர்பானவை. இயேசு காட்டிய விடுதலை மார்க்கம் சரணாகதி மூலம் அடுத்த உலகத்தின் இராச்சியம். யூதனால் அதை ஏற்க முடியவில்லை. யூத இனத்தின் மேன்மை (கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் அல்லவா!) இம்மண்ணில் நிலைநாட்டப்படும் என்ற கர்த்தரின் 'வாக் குறுதியை' நிறைவு செய்யமுடியாத இயேசுவால் யூதர்களுக்குப் பயன் இல்லை. SVR இவ்விஷயத்தில் கருத்து வேறுபடலாம். ஆனால் இந்த விஷயத்தைப் பற்றி அவர் எழுதாமலே விட்டுவிட்டார்.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



பண்டை வரலாறும், புராதனப் பெருமைகளும் காலநகர்வில் காவியத் தன்மை பெற்றுக் கடவுட்தன்மை காண்பதையும் கொஞ்ச மாவது நாம் அறிவோம் (நம் கண் முன்னாலேயே பகவான்கள் உருவாகிற யுகத்தில் அல்லவா வாழ்கிறோம்). பழங்கதைகட்குக் கடவுட் தன்மை வழங்கப்படுவதற்குச் சமுதாய ரீதியான விளக்கங் களும் வியாக்கியானங்களும் பல உள்ளன. இவற்றுள் சில மனித வரலாற்றைப் புரிந்து கொள்ள நமக்கு மிகவும் உதவியானவை. ஆரியரது கூடிவாழும் வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளே சம்பிர தாயங்களாகவும் சடங்குகளாகவும் உருமாற்றம் பெற்றன என்பதை, வேத நூல்களை ஆராய்ந்தவர்கள் சுட்டிக் காட்டினர். இதே சடங்கு களுக்குக் காலப் போக்கில் சிக்கலான தத்துவ விளக்கங்களும் வழங்கப்பட்டன. இவற்றுக்குத் தெய்வீகத்தன்மை வழங்க அதிக காலம் அவசியமாகவில்லை.

பழைய சமுதாயங்களின் நம்பிக்கைகள், வழக்கங்கள் என்பன யாவுமே வரலாற்றின் வழிப்பட்டே உருவாகின. இறை நம்பிக்கையும் இது போன்றதே. SVR யூத இறை நம்பிக்கையையும் அவர்களது சமுதாயச் சுற்றாடலில் வைத்துக் காண்பித்திருக்கலாம்.

2.3. ''ஏசுநாதர் அற்புதங்கள் புரிகிறார் — உண்மை'' என்ற வசனத்தில் எதை SVR உண்மை என்று கருதுகிறார் என்பது தெளிவு படுத்தப்படவில்லை. ''பேராசை மிகுந்த சமுதாயத்தில் அப்பத்தைப் பங்கிட்டுத் தருவது அற்புதமே'', ''சாவு பற்றிய அச்சம் நிறைந்து நின்ற நாட்களில் அந்த அச்சத்தை வென்றது அற்புதமே'' (ப. 36) என்று அடுக்கிக் கொண்டு போகும் SVR இயேசுவின் அற்புதகங்கட் கெல்லாம் தத்துவ விளக்கங்கள் தந்து, இயேசுவின் மறுவுலகப் பேரரசுக்குத் தான் காட்டிய சரியான அர்த்தம் இயேசுவிற்குப் பிற் பட்டவர்களால் திரிக்கப்பட்டு விட்டது என்று வாதிக்கிறார்.

''சாவைப்பற்றிய அச்சத்தை வென்றவனுக்கு அனைத்தும் எளிதானவை. ஒரு போதும் சாதிக்கமுடியாதது என்று ஏதும் இல்லை. இந்த நிலை அடைந்து விட்டவனுக்கு அற்புதங்கள் என்று ஏது மில்லை. ஏனெனில் எல்லாச் செயல்களுமே மிகச் சாதாரணமானவை யாக, மிக இயல்பானவையாகத் தோன்றுகின்றன. அவற்றை அற்புதச் செயல்களென்போரெல்லாம் தீர்மானமான முடிவுகளை எடுக்காதவரே. முடிவுகளை எடுப்போரே அற்புதங்களைப் புரிய முடியும்.'' (ப. 36)

மேற்கூறியதுதான் அற்புதங்கள் பற்றி SVR இன் நிலைப்பாடா? இந்த இடத்தில் மாக்ஸியத்தின் நிழலைக்கூட என்னால் தரிசிக்க



முடியவில்லை. இயேசுவைத் தேவகுமாரன் என்று ஏற்கத் தயங்கும் SVR கிறிஸ்தவர்களது மனது புண்படாமல் மேற்படி அற்புதங்களைப் பற்றி எழுதியிருக்கிறார். இயற்கை விதிகட்கு அப்பாற்பட்டதாகத் தென்படும் நிகழ்வுகளையே மனிதர்கள் அற்புதங்களென்று கருதி வருகிறார்கள். செத்தவனைப் பிழைக்க வைப்பதும். செத்து உயிர்ப் பதும், 5 ரொட்டிகளை 5000 ஜனக் கூட்டத்துக்குப் பகிர்ந்தளித்ததும் வெறும் குறியீடுகளாகக் காணப்படுவது ஒரு விஷயம். அவையே அற்புதங்களாகி அவற்றைப் பின் தொடர்ந்து மேலும் அற்புதங்கள் நிகழ்ந்ததாயும் நிகழ்வதாயும் மயங்கும் மனிதர் மத்தியில் SVR மேலும் தெளிவாகத் தன் நிலைப்பாட்டை விளக்கியிருக்கலாம்.

இயற்கை விதிகளது எளிமை அற்புதமானது (முன்கூறிய 'அற்புதங்களது' அர்த்தத்தில் அல்ல) அந்த எளிய விதிகளின் வரை யறைகளை மீறாமல் நம் கண்முன் நித்தமும் நிகழும் எத்தனையோ சாதாரணச் சம்பவங்கள் ஒவ்வொன்றுமே நம்மைப் பிரமிக்கச் செய்ய வல்லன. இவற்றை விடப் பெரிய அற்புதங்களை, அந்த இயற்கை விதிகளை மீறி, அந்த விதிகளுக்கும் அவை ஆளும் இயற்கை உலகுக்கும் காரணமான இறை சாதிக்கிறது என்பதோ, தானிருப் பதை உணர்த்தத் தன் விதிகளையே மீறிச் செயற்படுமாறு இறை நிர்ப்பந்திக்கப்படுவதோ உண்மையாயின் அந்த இறை மனிதனைத் தன்னை விட உயர்ந்த ஒன்றாகக் கருதும் இறையாகவே இருக்க வேண்டும் அற்புதங்களது துணை இல்லாமல் தன்னை உணர்த்த முடியாத இறை மிகவும் பலவீனமான இறை. இந்த அற்ப மனுஷ ஜீவராசி தன்னை நம்புகிறானா இல்லையா என்று கவலைப்படும் அளவுக்குத் தன்னைக் கீழிறக்கிக் கொண்டுள்ள இறை தான் நிகழ்த்திய முதலாவது 'அற்புதத்துடனேயே' இறந்து போயிருக்க லாம். அற்புதங்களைக் காட்டி இறையை உணர்த்துவோர் இறைக் கொள்கையையே இழிவு செய்வோர் என்ற கருத்தில் SVR என்னுடன் உடன்படுவாரென்றே நம்புகிறேன்.

**2.4.** மறுமலர்ச்சி (renaissance) பற்றி எழுதும் போது, ''மத்தியகாலக் கிறிஸ்தவம் கருத்திற் கொண்டிருந்த ஒழுங்கான முறையான பேரண்ட அமைப்பிலிருந்து மனிதனை வெளியே கொண்டு வந்தது மறுமலர்ச்சி. ஆனால் அது எல்லையற்ற பேரண்ட வெளியில் கடுங்குளிரில் மனிதன் கவனிப்பாரற்றவனாக நடுங்கிக் கொண்டிருக்கு மாறு செய்துவிட்டது! மனிதன், தனது அதிகாரத்தையும் ஆற்ற லையும் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் யாவும். அவனை அளவிட முடியாத அதல பாதாள சூனியத்தில் தூக்கி எறிகின்றன.

இந்தப் பேரண்டக் காட்சிக்கு வித்திட்டவர் ரெனே தெகார்தே (Rene Descartes). இதைக் கடந்து செல்ல முயன்றவர் ப்ளெய்ஸ் பாஸ்கால் (Blaise Pascal).'' (ப. 49–50) என்கிறார் SVR

நிலமான்ய சமுதாயத்தினின்று முதலாளித்துவ சமுதாயத்திற்குச் செல்லும் மாற்றத்தை ஒரு பழைமைவாதி வேறு எவ்வாறு நோக்க முடியும்? பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து வந்த பயங்கரத்தின் ஆட்சியை (reign of terror) பற்றிக் குறைப்பட்டவர்கள் அதற்கு முந்திய ஆட்சியின் பயங்கரங்களை மறந்தவர்களே. சீனப் புரட்சியில் இறந்தவர்கட்கு புள்ளிவிவரக் கணக்குப் போட்டுக் காட்டியவர்கள் சியாங் கைஷேக் ஆட்சியின் நிலைமைகளைக் கணக்கில் எடுக்கத் தவறியவர்களே. மறுமலர்ச்சிக்கு முந்திய சமுதாய அமைப்பு முடிந்து போனதன் காரணம் அது ஒரு அழகான பூந்தோட்டமாக இருந்து அதில் பகுத்தறிவு என்ற பூதம் புகுந்தது அல்ல. மறுமலர்ச்சி என்பதே ஒரு சமுதாயச் சூழலின் நெருக்கடியின் முடிவில் அந்த நெருக்கடியின் தீர்வாக விளைந்த ஒன்றே அந்த 'ஒழுங்கான, முறையான' பேரண்ட அமைப்பு மனிதத் தேவைகட்கு முகங்கொடுக்க முடியாமற்போன சரித்திரச் சூழ்நிலைகளைக் கணிப்பில் எடுக்காமல் நேற்றுக்கு ஏங்குவது அர்த்தமற்றது.

நிலமான்ய சமுதாயத்தின் தெளிவான திட்டவட்டமான உறவுகளை அழித்த முதலாளித்துவம் அதனிடத்தில் நிச்சயமற்ற உறவொன்றை நிறுவியது. எந்தவொரு சமுதாய மாற்றமும் நேரும்போது இத்தகைய அடிப்படை மாற்றங்கள் ஏற்படவே செய்கின்றன. நிலமான்ய சமுதாயம் ஏற்பட்ட பின்பு அடிமைச் சமுதாய முறையின் மேன்மையையும் சிலர் எண்ணி ஏங்காமலா இருந்திருப்பார்கள். சிந்தனைத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை அவற்றுக்குரிய சமுதாய வரலாற்றுப் பின்னணியில் பார்க்க இயலாதவர்கள் போயொழிந்த பொற்காலங்கட்காக ஏங்கவே செய்வார்கள். முன்னொரு தடவை குறிப்பிட்டது போல இவ்விஷயத்திலும் SVR தன் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி யிருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

2.5. முதலாளித்துவத்தின் தோற்றத்துக்கான காரணிகள் அதற்கு முந்திய சமுதாயத்திலேயே உருவாகிவிட்டன. நவீன விஞ்ஞான மரபு முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் நெருங்கிய உறவுடையதுதான். அதையிட்டு நவீன விஞ்ஞானச் சிந்தனை யாளர்கள் வருந்த எதுவுமே இல்லை. விஞ்ஞானத்துடனும் நவீனத்துடனும் மோதியவர்களைப் பற்றி 'எதிர்ப்புக்குரல்' என்ற அத்தியாயத்தில் எழுதும் SVR சமுதாய மாற்றத்திற்கு அடிப்படைக் காரணி விஞ்ஞானமல்ல சமுதாய அமைப்புத் தொடர்பான, உற்பத்தி உறவுகள் தொடர்பான பிரச்சனைகளே என்பதை ஏனோ வலியுறுத்த வில்லை. பகுத்தறிவு தன் தலையை உயர்த்த உதவியாக இருந்ததே சமுதாயச் சூழல்தான் என்பதை அவர் விளக்கியிருக்கலாம்.



''மறுமலர்ச்சிக் காலம் கடவுளைப் பீரங்கி வைத்துப் பிளந்தபோது மனித வாழ்க்கைக்கான மரபுவழிப்பட்ட சமயக் கருத்துக்களும் சிதறியோடிவிட்டன என்று நாம் பார்த்தோம்.

மீண்டும் மனித ஒருமை பற்றிய பிரச்சினை எழுந்துவிட்டது.

மறுமலர்ச்சி யுகம் கொண்டுவந்த பூர்ஷ்வா சமுதாய அமைப்பும், நாத்திகக் கருத்துக்களும், பகுத்தறிவும், விஞ்ஞானமும் பேரண்ட ஒளியை அணைக்கவே செய்தன.

இதை உணர்ந்தவர்களில் கவிஞர்களும் கலைஞர்களும் முதல் வரிசையில் உள்ளவர்கள்.

அவர்களைத் தொடர்ந்து புதிய நம்பிக்கையினை உருவாக்கிய சிந்தனையாளர்கள் தோன்றுகிறார்கள்'' (ப. 92).

பிளக்கப்பட்டவையும் சிதறியோடியவையும் நிலைக்க முடியாத சிந்தனைகளே. முழுமையற்ற, வரட்டு நாத்திகமும் கொச்சைப் பொருள் முதல்வாதமும் கொடுத்த அடியைத் தாங்கத் திராணியற்ற சிந்தனைகள் எத்தகையனவாக இருக்கமுடியும்? கழியும் பழையன காலத்துடன் நிலைக்கும் வலுவிலாத காரணத்தாலேயே கழிவன அவை தாம் வளரமுடியாமையாலேயே தேய்வன என்பதை உணர்ந்தால், புதியனவற்றை ஆக்கபூர்வமாக அணுகலாம். இதுவே மாக்ஸுக்கும் அவரது யுகத்தின் மற்றைய சிந்தனையாளர்கட்கு மிடையிலான வேறுபாடு.

3. 1. நூலின் இரண்டாம் பகுதி இருத்தலியலாளர் பற்றியது. 'இறுதித்துயரமா நம்பிக்கையா? என்ற அத்தியாயத்தை அடுத்து கீர்க்கெகார்ட், நீட்சே (Nietsche), ஹைடெக்கர், ப்யூபா (Buber) பேர்டியேவ் (Berdeyev), காம்யூ (Camus), சார்த்ர் (Sartre) பற்றிய தனித்தனி அத்தியாயங்களும் இறுதியாக 'விமோசனமும் வழிமுறை யும்' எனும் அத்தியாயமும் உள்ளன. இந்த அத்தியாயங்களில் SVR உடன் என் முரண்பாடுகள் முன்னையவற்றினும் வேறுபட்டவை.

3. 2 கீர்க்கெகார்ட் பற்றிக் கூறும்போது கீர்க்கெகார்ட் மாக்ஸிக் குச் சமகாலத்தவராக இருந்தும் அவரது சிந்தனைகள் மார்க்ஸின் கவனத்தை ஈர்க்காதமைக்கும் அவர் மாக்சின் சிந்தனைகளை அறிந்து கொள்ளாமைக்கும் மூலகாரணம் அவர் டேனிஷ் மொழியில் எழுதியமை என்று கருதும் SVR, 19ம் நூற்றாண்டின் பெரிய ஐரோப்பியச் சிந்தனை இயக்கங்களுடன் அவருக்குத் தொடர்பில்லா மையையும் சுட்டிக்காட்டுகிறார். இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். மாக்ஸோ ஏங்கல்ஸோ இருத்தலியல் சிந்தனைக்

குழப்பத்தை எப்போதோ அதன் குப்பைமேட்டுக்கு வழிகாட்டியிருக்க முடியும்.

மனித விடுதலையை அடிப்படையாகக் கொண்ட அளவிலும் அதை உண்மையுடன் நெருக்கமாகப் பிணைத்துப் பார்ப்பதிலும் மாக்ஸுக்கு அருகில் நிற்பதாகக் கூறப்படும் கீர்க்கெகார்ட்டின் உண்மைவேறு, மாக்சின் உண்மைவேறு. மாக்சின்உண்மை புறநிலை யதார்த்தங்களினின்று விதிகளின் வடிவில் கிரகிக்கப்பட்டு மனித வாழ்வை மேம்படுத்தப் பயன்படும் விஞ்ஞான ரீதியான உண்மை. அது என்றைக்குமே முழுமையாகாத உண்மையாயினும் அதைப் பெற மனிதன் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் மனித இன விடுதலையை நோக்கி மனிதனை உந்திச் செல்லும் வலிமையை வழங்கும் உண்மை. கீர்க்கெகார்ட்டின் உண்மை அகநிலை சார்ந்தது. விஞ்ஞான ரீதியான அறிவுசார்ந்த உண்மைகளினின்று தப்பியோட முனைவதும் அபத்தமானது என்று கருதப்படும் புறஉலகுக்குப் பகுத்தறிவு சாராத ஒரு மாற்றாக அமைவதுமான 'உண்மை'.

வரலாற்றையும் வரலாற்று விதிகளையும் கீர்க்கெகார்ட நிராகரிப்பதில் வியப்பொன்றுமில்லை. அவரது தனிமனிதவாதமும், அறிவு விரோதமும், சமுதாய வெறுப்பும் அவரது சிந்தனைப் போக்குடன் நெருக்கமான உறவுடையன. நிர்க்கதியான நிலையையே ஏற்று அதனுள்ளேயே உழன்று அதையே வாழ்வின் சாராம்சம் என்று உயர்த்தி அதனூடேயே நம்பிக்கையும் விமோசனமும் தேடும் சித்தாந்தம் அவருடையது. கீர்க்கெகார்ட்டின் சமுதாய விமர்சனம் சமுதாய விமோசனத்துக்கு வழி காட்டாத ஒன்று. கீர்க்கெகார்ட்டின் அகநிலைச் சார்பிலும், முன்னேற்றம் பற்றிய ஏமாற்ற உணர்விலும், சுகபோகவாழ்வு மீதான கோபத்திலும் அவரது சூழலின் யதார்த்தத்தின் மெல்லிய பிரதிபலிப்பாவது உள்ளது. அவரது வாரிசுகட்கு அப்பெருமை கூடச் சேருமோ என்பது ஐயம்.

**3. 3.** நீட்ஷேயின் பிற்போக்கு நிலைப்பாடுகளைச் சுட்டிக் காட்டத் தவறாத SVR சிலவிஷயங்களை அசட்டை செய்து விட்டார். பூர்சுவா சமுதாயம் பற்றிய நீட்ஷேயின் விமர்சனம் சிறிதே மாக்சியச் சாயலைக் கொண்டிருக்கக் காணலாம் என்றாலும் அது சாராம்சத்தில் நிலவுடைமை சார்ந்த கனவுலகச் சிந்தனைதான் என்று சுட்டிகாட்டும் SVR நீட்ஷேயின் எழுத்துக்கள் ஜேர்மன் இன மேன்மையை வலியுறுத்தியதுடன் யூத இன விரோத எண்ணங்களையும் கொண்டிருந்ததைத் தவறவிட்டுவிட்டார்



**3. 4.** ஹைடெக்கர் ஒரு முக்கிய இருப்பியல்வாதி. அவர் ஒரு பிற்போக்குவாதி என்ற தகவலையும் அவர் நாஜிக்கட்சியில் சேர்ந்ததையும் சொல்வதுடன் SVR நறுத்திக் கொள்கிறார். மாக்சின் 'அந்நியமாதலுடன்' ஹைடெக்கரின் சிந்தனையின் உடன்பாட்டையிட்டுத்தன் அங்கீகாரத்தைத் தெரிவிக்கும் SVR அந்த ஹைடெக்கர் ஹிட்லருக்குத் தாசனானதற்குத் தரும் விளக்கம் திருப்தியாக இல்லை. ஜேர்மன் மேன்மையையும் ஜேர்மனியின் வழிகாட்டும் தகுதியையும் பற்றிப் பேசும் ஹைடெக்கருக்கு அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் தொழில்மயம் தீயது ஆனால் ஹிட்லரின் ஜேர்மனியில் க்ருப், நைஸென் போன்ற தொழிலதிபர்களது விருத்தி கண்ணுக்குப் படாத விஷயம் யூதரான ஹீஸேள் (Husserl) இவரது முன்னோடி. ஹுஸேளுடனான தொடர்புகளைக் கச்சிதமாகத் துண்டித்துக் கொண்ட இந்தக் கண்ணியவான் தான் விஞ்ஞானம் அழித்துவிட்ட மனிதத்தன்மையை மீட்க வழிகாட்டுகிறார்!

3.5 காம்யூ (Camus)வின் மாக்ஸியவிரே! தம் புரட்சி விரோதம் வெகுஜனங்கள் பற்றிய இழிவான மதிப்பீடு என்பனவும் SVR கவனத்தை ஈர்க்கின்றன. ஐரோப்பியச் சூழ்நிலையின் சிக்கலான அறப்பிரச்சனையுள் வாழ்ந்து அதை மீறிவரமுயன்ற காம்யூவின் நேர்மை ஒரு நல்ல பண்புதான். வினோபாகூட நல்ல மனிதர்தான். ஆனால்! 77 எமர்ஜன்ஸியை ஆதரித்தாரே ஹிட்லர் சைவச் சாப்பாட்டுக்காரன், மொரார்ஜீ நேர்மையான மனிதர் என்கிறார்கள். நேர்மை, கொள்கைப்பிடிப்பு, சத்திய வேட்கை, இப்படி நல்ல இயல்புகள் பல. ஆனால் சரியான வழிகாட்டலற்ற நேர்மையும் திறமையும் எங்கே போய்முடிகின்றன? இவை பற்றி இருப்பியல் வாதத்துக்கு ஏது அக்கறை? அவர்களது உண்மைதான் அகநிலை சார்ந்த விஷயமாற்றே. அங்கே சரி ஏது பிழை ஏது? காம்யூவின் எழுத்துக்கள் சிறப்பது அவரது அறிவின் ஆழத்தாலா அல்லது உணர்ச்சிகளின் ஆழத்தாலா? இந்தக் காம்யூ மனிதஇன விமோசனத்துக்கு வழிகாட்டுபவாரா?

3.6. சார்த்ர் ஒருவரே இருத்தலியல்வாதப் பிரமுகர்களுள் முற்போக்கானதும் மாக்சியத்துக்கு அனுதாபமான நிலைப்பாடுகளை எடுத்தவர். இவர் பால் SVR மிகவும் ஈடுபாடுகாட்டுவது குறிப்பிட வேண்டிய விஷயம். சார்த்ர் பற்றி ஒரு முக்கிய கேள்வியை இங்கு எழுப்புவது பயனுள்ளது. நடைமுறையில் பெருமளவும் முற்போக்குத் தன்மையுடையனவும் புரட்சிகர இயக்கங்கட்குச் சாபாக அமைந்தனவுமான நிலைப்பாடுகளை அவர் கொண்டார் என்றால் அவரால் தன்னுடைய இருத்தலியல்வாத அடிப்படையில் அந்த நிலைப்பாடு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



கட்கு வரமுடிந்ததா? SVR கூறுவதுபோல ''தன் தத்துவ நிலைப் பாட்டிலுள்ள குறைகளைச் செயலிற் தவிர்த்துக் கொள்கிற' சார்த்ர் தன் தத்துவ நிலைப்பாட்டின் குறைகளை நீக்க முடியாமல் விட்டு விட்டாரா?

தன் இருத்தலியல் தத்துவத்தினூடு மாக்சியத்துடன் உடன்பாடு காண முடியாத சார்த்ர் நடைமுறையிலும் சிந்தனையிலும் மாக்சியத் துடன் காண விழைந்த நெருக்கத்தை மற்ற இருத்தலியலார்கள் கண்டித்தமை இருத்தலியலின் கண்ணோட்டத்தில் நியாயமானது அல்லவா? இருத்தலியலின் வறுமையை உணர்ந்த சார்த்ர் அதை நிராகரிக்கத் தயங்கினார் என்றால் அதற்கான காரணமென்ன? இருத்தலியலின் குறைபாடுகளைக் களைய அவர் முயன்று முடியாமற் போனாரா? இந்த விஷயங்கள் தெளிவுபடுத்தப்படாத பட்சத்தில் அவர் வந்தடைந்த மாக்சியச் சார்பான முடிபுகள் தற்செயலானவை என்று கருத இடமிராதா? அவர் நேர்மையாளரா, அவர் மாக்சியம் பற்றிச் செய்யும் விமர்சனங்கள் நியாயமானவையா என்பன வேறு விஷயங்கள். அவரது இருத்தலியல் சரியானதா என்ற கேள்விக்கான பதில் இல்லை என்பது தான். பல இடங்களில் மாக்சியம் பற்றி அவரது மதிப்பீடுகள் தவறானவை என்றால், அவர் சில முக்கிய விஷயங்களில் சரியான முடிபுக்கு வந்தார் என்பது, எந்த அடிப்படை யில் தீர்மானிக்கப்பட வேண்டும்?

வியட்னாம், அல்ஜீரியா விஷயங்களில் மாக்சியவாதிகளல்லாத பலர், சில சமயங்களில் பிற்போக்குச் சிந்தனையாளர்கள் கூட சரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். 1968 பிரஞ்சுப் 'புரட்சி' பெரும்பாலும் இளம் அராஜவாதிகள், பலரகப்பட்ட ட்ரொட்ஸ்கிவாதிகள், மாஓவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொண்ட சிலர் தலைமையில் நடந்த ஒரு கலகம். அதில் பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்கத்தினதும் பரந்துபட்ட வெகுஜனங்களதும் பங்கு என்ன? இவர்களுக்கு ஆசீர்வாதம் தந்தவர் மாக்கூஸெ (Marcuse). இந்தக் கலகத்தின் தோல்விக்குக் காரணங்களுள் அதன் தவறான அணுகுமுறை முக்கியமான ஒன்று (இன்று இதன் தலைவர்கள் எல்லாம் எங்கே? பல்கலைக்கழக மாணவப் 'புரட்சிவீரர்களை' நிறையவே கண்ட நாடு இது. அங்கே நடந்தது பற்றி அதிகம் விளக்க வேண்டிய அவசியமில்லை.) மேற்படி சிந்தனைக் குழப்பத்திற்கு சார்த்ர் தந்த ஆதரவு தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிய அவரது தவறான மதிப்பீட்டுடன் தொடர்பற்ற ஒன்றா? சார்த்ர் மேதையாக இருக்கலாம், நல்லவராகவும் நேர்மையாள ராகவுமே கூட இருக்கலாம். அதனாலேயே அவருடைய நிலைப்பாடு



சரியானதாகிவிடாது. அவர் மற்ற இருத்தலியலாளர்களினும் மிகவும் வேறுபட்டவர், உயர்ந்த மனிதாபிமானி என்ற விஷயங்களில் நான் SVR உடன் பெரிதும் உடன்படுகிறேன் மாக்ஸியம் பற்றி அவருடைய கருத்துக்களை SVR அளவுக்கு என்னால் மதிக்க முடியவில்லை.

4. 1. இறுதி அத்தியாயங்களிரண்டும் இருத்தலியலாளர்கட்கு மாக்சியத்தின் மறுமொழியாக அமைகின்றன. SVR இன் மாக்சிய வியாக்கியானங்களை என்னால் முற்றாக ஏற்க முடியவில்லை என்பது ஒருபுறமிருக்க, இடதுசாரிக் கட்சிகளது குறைபாடுகள் பற்றி அவரது கருத்துக்கள் பொதுவாக நியாயமானவையே. இருப்பினும், ஒரு நடைமுறை அரசியல் இயக்கத்தை அதன் யதார்த்தமான சூழலில் வைத்து மதிப்பிட வேண்டிய நிலையில், SVR இருத்தலியல்கார நாஜி களிடம் காட்டும் பரிவில் சிறிதேனும் இடதுசாரிக் கட்சிகட்குக் காட்டி யிருப்பின் நியாயமாக இருக்கும். ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைத் திரிபு வாதக் கட்சி என்று முத்திரை குத்தி விட்டு அதனால் அது வெகுஜன விரோதக் கட்சி என்ற முடிவுக்குத் தாவ முடியாது. (மாஓ ரூமேனிய கொரிய கம்யூனிஸ்ட் கட்சிகளுடனான உறவை ஒரு கட்டத்திலும் முறிக்கவில்லை. மாஓ சேதுங் சிந்தனையை அன்று தூக்கிப் பிடித்த அல்பேனியக் கட்சி இன்று ஒரு விளக்கமுமின்றி மாஓவையும் தூஷிக் கிறது. ஒவ்வொரு கட்சியையும் அதன் சூழலில் வைத்தே சரியாக மதிப்பிட முடியும். தவிர, தேசிய, சமுதாய, சரித்திர எல்லைகட்கப் பாற்பட்ட காலத்தின் ஆளுமையற்ற விதிகள் எதையும் நான் அறி யேன்) வெறுமே 'தத்துவத் தூய்மையின்' அடிப்படையிலோ 'நல்ல மனிதர்கள்' என்ற அடிப்படையிலோ நடைமுறை இயக்கங்கள் வளர்ந்தது கிடையாது. இடதுசாரி இயக்கங்களுள் ஊழல், போலித் தனம், வரட்டுத்தனம் ஆகியன அகற்றப்பட வேண்டியது அவசியம். ஆனால் நடைமுறை இயக்கத்தின் போக்கிலேயே இவை சாத்தியமா கின்றன. அதற்காகச் சரியான நிலைப்பாட்டை வலியுறுத்தாமல் இருக்க வேண்டாம். ஆனால், கட்சியில் உள்ள மனிதனையும் கொஞ்சம் சகிப்புத் தன்மையுடன் பாருங்கள் என்கிறேன்.

4. 2. 'இத்தகைய உன்னதமான மாக்சியமுமே ஒரு சிறுகிப் போன வடிவம் எடுத்த காலத்தில் இருத்தலியலின் சில போக்குகள், அகத்தன்மை, மனித அனுபவத்தை மதித்தல் கருத்துக்களின் இறுகிப் போன அமைப்பிலேயே முடங்கிவிடாமல் முன்னோக்கிய செயலில் பங்கேற்றல் என்ற பிரச்சினைகளை முன்வைத்துக் கடுமையாகப் போராடின.

''இப்பிரச்சனைகளிலும் இருத்தலியல் வழங்கிய விடைகள் தவறானவையாகவோ குறைபாடுடையனவாயோ இருக்கக்கூடும்.''

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



''இப் பிரச்சனைகளை எழுப்பிய முறைகளிலும் வடிவங்களிலும் கூடத் தவறுகள் இருக்கலாம்.''

''ஆயினும், எழுப்பப்பட்ட பிரச்சனைகளின் கூரிய தாக்குதலில் மாக்சியம் துவண்டு விடாமல், தன் செழுமையை மீண்டும் மீண்டும் நிலைநாட்டிக் கொள்ள வேண்டும்—தன் விமர்சன சுய விமர்சன நோக்கில்' (ப. 279) என இறுதியாகக் கூறுகிறார் SVR.

மேற்கூறிய பிரச்சனைகள் இருத்தலியலாளர்கள் மட்டுமே எழுப்பியன அல்ல. தாராளவாதிகளும் பல்வேறு வலதுசாரிகளும் எழுப்பியவைதான். SVR குறிப்பிட மறந்த ஒன்று இருத்லிய லாளர்கள் கேள்விகளை எழுப்பிய நோக்கம் தொடர்பானது. அவர் களது விடைகள் சரியா, தவறா கேள்விகளை எழுப்பிய முறை சரியா, த்வறா என்பதை எல்லாம் ஆராயப் புகுமுன் அவர்கள் யாரைச் சார்ந்து நின்றார்கள் என்பதையும் நினைவு கூர்வது நல்லது அவர்களது அறிவுவிரோதம், மாக்சிய விரோதம், விஞ்ஞான விரோதம் எல்லாமே அவர்கள் போதிக்கும் தனி மனிதவாதம் சார்ந்தவை. மாக்சியத்தின் செழுமை இந்தப் புழுக்கள் அரித்துத் துவண்டு போகுமளவு பலவீனமானதல்ல.

5. 1. இந்நூலில் சில விஷயங்கள் பற்றி மேலும் சொல்லி யிருக்கலாம். யாஸ்ப்பெர்ஸ் (Jaspers), ஹைடெக்கரையும் கீர்க் கெகாட்டையும் போன்றவர்களைவிடச் சிறிது சினேக பூர்வமாக விஞ்ஞானத்தை அணுகினார். யாஸ்ப்பெர்ஸ் ஹைடெக்கர் போன்று நாஜிகட்கு ஊழியம் செய்தவரல்ல. ஆயினும் அவரால் நாஜிக் கொடுமைகட்கு எதிராக மாற்று ஒன்றையுமே தர முடியவில்லை. ஏனெனில் அவரும் வெகுஜனங்களை இழிவாகக் கருதிய ஒருவரே.

5. 2. ''Existentialism has risen in Modern Europe because the steadily increasing pressures of **collectivism and abstract idealism** have forced the individual to a resolute and radical self—affirmation.'' என The Existentialist Revolt என்னும் நூலில் இருத்தலியல் உளவியலாளரான றையின்ஹட் (Reinhardt) கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. இருத்தலியலின் வளர்ச்சியை அமெரிக்க நிறுவனங்கள் ஏன் ஊக்குவிக்கின்றன? இது பற்றியும் SVR எழுதியிருக்கலாம்.

5. 3. நீட்ஷேயைப் பின்பற்றிய உளவியலாளரான யுங் (C. G. Jung) நாஜிகளின் ஏவலாளாக வாழ்ந்ததும் நீட்ஷேயின் கருத்துக் களது அடிப்படையில் யூதர்களைக் கீழ்மைப்படுத்துமாறான உளவியற் கருத்துக்கனை அவரால் முன்வைக்க முடிந்தது என்பதும் SVR கணிப்பில் எடுத்திருக்க வேண்டியவை அல்லவா!



6. 1. SVR இன் நூல், அவர் விரும்பியோ விரும்பாமலோ, விஞ்ஞானம் பகுத்தறிவு (ஈ.வே ரா. ரகம் அல்ல) போன்ற விஷயங்கள் மீது பெரும் நம்பிக்கையீனத்தைக் காட்டுகிறது. SVR இன் நம்பிக்கையீனம் ஈ.வே.ரா. போன்றோரின் வரட்டு நாத்திகம், விஞ்ஞானிகள் எனப்படுவோர் சிலரின் தத்துவ வறுமை என்பன காரணமானது என்றால் அதை அவர் தெளிவுபடுத்தி யிருக்கவேண்டும். கொச்சையான பொருள்முதல்வாதத்தையும், கொச்சையான விஞ்ஞான அறிவையையும் பொருள்முத்ல்வாதத்துட னும்விஞ்ஞானத்துடனும் குழப்பலாமென்றால் மதங்களின் பெயரால் நிகழும் மோசடிகளை எல்லாம் அவற்றின் சிந்தனைகளுடன் குழப்ப உரிமை உண்டல்லவா!

6. 2. இருத்லியல் வாதம் எவ்வளவு தூரத்துக்கு இருத்தலியல் வாதிகளது மனித விரோத, பிற்போக்கு சிந்த்னைகட்கும் செயல்கட்கும் பொறுப்பானது என்பதை SVR போதுமான அளவு ஆழமாக ஆராயவில்லை. அதையும்விடச் சில படு பிற்போக்காளர்கள் பற்றி அவர் மிகவும் மென்மையாகவே நடந்து கொண்டுள்ளார் என்று நினைக்கிறேன்.

6. 3. இருத்தலியல்வாதம் பற்றிய அவரது அணுகுமுறை இருத்தலியலின் தகுதிக்கு மீறிய அணுத்பமுடையது. காம்யூ நல்லவர், சார்த்ர் இலட்சியவாத மேதை, ஹைடெக்கர் அந்நியமாதல் பற்றிய ஆழச் சிந்தித்தவர் என்பன பண்பாடான அறிமுகங்கள்; ஆனால் இருத்தலியலை நியாயப்படுத்தப் போதாத நியாயங்கள்.

6. 4. இருத்தலியலாளர்களையும் இருத்தலியலையும் SVR விமர்சித்ததில் அளவும் போதாது தீவிரமும் போதாது. இருத்தலியல் தன் தொடக்க காலம் தொட்டே பிற்போக்கிற்காகப் பணியாற்றி வந்துள்ளது என்பதை இந்த நூல் சுட்டிக்காட்டத் தவறிவிட்டது. இருத்தலியல் பற்றி என் எண்ணங்களை மாற்ற இந்த நூலால் முடியவில்லை. இந்த விமர்சனத்துக்காக நான் படித்த நூல்கள் என் இருத்தலியல் எதிர்ப்பை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன.

அலை 23, 24, 1993–94



படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# 'எக்சிஸ்டென்ஷியலிசமும்' - சிவசேகரத்தின் மார்க்ஸியமும்

—சிவசேகரத்துக்கு எஸ். வி. ராஜதுரை பதில்

முதலாவதாக, எக்சிஸ்டென்ஷியலிசத் தத்துவம் பற்றித் தானாகப் படித்துத் தெரிந்துகொண்ட விஷயம் என்று ஒன்றைக் கூடச் சிவசேகரம் சொல்லவில்லை; பிறகு அதைத் தனக்குத் தெரிந்த மார்க்ஸியத்தின் அடிப்படையில் மறுக்கவும், அதைக்காட்டிலும் வளமான கருத்துக்களை வைக்கவும் இல்லை. இரண்டாவதாக எனது புத்தகத்திலிருந்து சிலவரிகளை மேற்கோளாகக் காட்டி அவற்றின்மீது தனது கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்கிறார். இந்த வரிகள் யாவும் அவர் கூறும் வியாக்கியானங்களுக்குச் சம்பந்த மற்றவை என்பதை அவற்றை நூலின் அந்தந்த இடங்களில் வைத்துப் படிப்பவருக்குப் புரியும். மூன்றாவதாக எக்சிஸ்டென்ஷியலாளர் வாதங்கள் என்ன நூலாசிரியரின் (எனது) வாதங்கள் என்ன என்பதை நான் தெளிவுபடுத்தவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிறார். ஒவ்வொரு பந்தியிலும், எனது கருத்து இது, மற்றவரது கருத்து இது என்று கூறி சிரத்தையுள்ள வாசகரின் அறிவுக் கூர்மையை என்னால் இழிவு செய்திருக்க முடியாது.

சிவசேகரத்தின் கட்டுரை, மார்க்ஸிய இயக்கத்தின் வரலாற்றில் ஒருகாலத்தில் தோற்றுவிக்கப்பட்டதும், சில மார்க்ஸியர்களால் (குறிப்பாகத் தமிழ்பேசும் மார்க்ஸியர்களால்) விடாப்பிடியாக இன்னும் பின்பற்றப்பட்டு வருவதுமான போக்கையே எதிரொலிக்கிறது. இந்த இறுகிப்போன பார்வையை சோவியத் யூனியனில் நாற்பதுகளில் ஜடனோவ் தோற்றுவித்தார். ஒரு தத்துவத்தை, அது 'பூர்ஷ்வா தத்துவம்', 'கருத்து முதல்வாதம்', 'பிற்போக்கு' என்று வர்ணிப்பதுடன் விஷயங்கள் முடிவடைந்து விட்டதாகக் கருதுகிறது இப்போக்கு. இது எப்போதேனும் அக்குறிப்பிட்ட தத்துவத்தின் உள்ளடக்கத்தை 'ஆழமாக'ப் பரிசீலிக்க முயற்சி செய்கிறதென்றால், அது அத்தத்துவத்தைப் பற்றி ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டுவிட்ட பொதுவான மதிப்பீட்டை விவரிக்க ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளை 'தோண்டி' எடுப்பதுதான் குறிப்பிட்ட தத்துவத்திலுள்ள உடன்பாட்டுவகைக் கூறுகள், எழுப்பப்பட்ட பிரச்சனைகளுக்கு அது தரும் ஓரளவுக்கு உண்மையான தீர்வுகள் ஆகியவற்றை இப்போக்கு முற்றாகப் புறக்கணிக்கிறது. ஏனெனில், இவை முன்கூட்டியே வகுத்துக் கொள்ளப்பட்ட பொதுவான மதிப்பீட்டில் பொருத்தப்பட முடியாதவையாக உள்ளன. திறனாய்வுக்குட்படுத்தப்பட்ட தத்துவத்தில் உடன்பாட்டுவகையான கூறுகளையும் அது எழுப்பும் உண்மையான பிரச்சனைகளையும் அங்கீகரிப்பதை 'Objective academism' என்று ஜடனோவியம் கருதியது. எதிராளியின் கருத்துகளை மேற்கோள் காட்டாமலோ அல்லது அதைத் திரித்துக் கூறியோ அவரைத் தாக்குவது என்பது நியதியாகியது. நேர்மையான முறையில் எதிராளியின் கருத்துகளை எடுத்துக்காட்டினால் அது, ''எதிராளிக்கு மேடை அமைத்துக் கொடுத்தல்'' எனத் தாக்கப்பட்டது. இப்போக்குடன் கொச்சைச் சமூகவியலும் சேர்ந்துகொண்டது. ''இவர் குட்டி பூர்ஷ்வா; எனவே, இவரது சிந்தனையும் இப்படித்தான் இருக்கும்.'') அடையாளச் சீட்டுக்களை எதிராளியின்மீது ஒட்டிவிடுவதே ஜடனோவியத் திறனாய்வுக்குப் போதுமானதாக இருந்தது. தான் ஒரு மார்க்ஸியன் என்ற நினைப்பே ஒருவனை மற்றவர்களைக் காட்டிலும் புனிதமானவனாகவும் உயர்ந்தவனாகவும் ஆக்கிவிடும் என்று இப்போக்கு கருதியது. இப்போக்கு ஆதிக்கம் செலுத்திய சூழலில் நுனிப்புல் மேய்ப்பவர்கள் கொட்டமடித்தனர்

இத்தகைய போக்கு மார்க்ஸியத்துக்குச் சேவை புரியக் கூடியதல்ல; மாறாக மாற்றுத் தத்துவங்களுக்கு, குறிப்பாக, பூர்ஷ்வா தத்துவங்களுக்கு எதிரான போராட்டத்துக்கு ஊறு விளைவிக்கவே செய்யும். வெறும் எதிர்மறைத் திறனாய்வு அல்லது வெறும் மறுப்பு (அவதூறு) ஏற்கனவே நமது கூடாரத்தில் இருப்பவர்களின் கைதட்டலைப் பெற்றுத் தரலாம். ஆனால் திறனாய்வு செய்யப்பட்ட கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர்களை, அவற்றின் தாக்கத்துக்கு உட்பட்டவர்களை வென்றெடுக்காது. (விவாதத்தின் குறியிலக்கு இவர்களேயன்றி நமது ஆதரவாளர்களல்லர்) மாற்றுக் கருத்துள்ளவர்களின் படைப்புகளைப் படிக்க முயற்சி செய்யாத, அவர்களைத் திரித்துக் கூறுகிற, அவர்கள் எழுப்பிய பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள இயலாத 'மார்க்ஸிய' விமர்சகர்களுக்கு அவர்கள் கட்டிவைத்துள்ள குட்டி முகாம்களிலிருந்து பாராட்டுகள் வரலாம். இந்த விமர்சகர்கள் தமது அம்புறாத் துணியிலிருந்து எடுத்து வீசுகிற மொண்ணை அம்புகள் எதிராளியின் அல்லது நம்மால் வென்றெடுக்கப்பட வேண்டியவர்களின் முகாமுக்குள் சிறு சலனத்தைக் கூட ஏற்படுத்தாது. மேலும் எதிராளியின் தத்துவத்தைப் பற்றிய ஆழமான, நேர்மையான படிப்பும் ஆய்வும் நம்மால் வழங்கப்பட வேண்டிய மாற்றுத் தீர்வுகளும் இல்லாமல் நமது உள்நம்பிக்கைகளை, ஏற்கனவே நாம் ஏற்றுக் கொண்டுவிட்ட கருத்துக்களை வலுப்படுத்த முடியாது. எதிர்மறைத்

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



திறனாய்வு இலக்கைத் தவறவிட்டு விடுகிறது; துவக்கத்திலீருந்தே நமக்குத் தோல்வியை உருவாக்கி விடுகிறது; நமது சிந்தனையை வறட்சிக்குட்படுத்தி அதன் வளர்ச்சியைத் தடுக்கிறது. எதிர்மறைத் திறனாய்வும் கொச்சைச் சமூகவியலும் (இது 'சித்தாந்த' பற்றிய மார்க்ஸிய வரைவிலக்கணத்தை மிகவும் எளிமைப்படுத்துகிறது) மாற்றுத் தத்துவங்களில் ஆய்வுக்குரிய பிரச்சனைகள் ஏதும் இல்லை என்று கருதுகின்றன. மார்க்ஸியத்துக்கு வெளியே உண்மையான பிரச்சனை ஏதும் இல்லை என்றும் எந்த ஒரு பிரச்சனைக்கும் ஆக்க பூர்வமான தீர்வு முன் கூட்டியே மார்க்ஸியத்திற்குள் வகுக்கப்பட்டு விட்டது என்றும் (நடைமுறை உண்மைகளுக்கு மாறாக) இத் திறனாய்வு கருதுகிறது இந்த நிலைப்பாடு மார்க்ஸியத்தை ஆக்க பூர்வமாகப் புரிந்து கொள்வதிலிருந்து தோன்றுவதல்ல; மாறாக அதை வரட்டுத்தனமாகத் திரிப்பதிலிருந்தும் வாய்ப்பாடுகள் மூலமாக மார்க்ஸியத்தைக் 'கற்றுக்கொள்ள' முயற்சிப்பதிலிருந்தும் தோன்றுவதாகும். எனவே இது வலிமையின் அறிகுறியல்ல; வலுக்குறைவின் அடையாளமே.

காலஞ்சென்ற பேராசிரியர் வானமாமலை போன்றவர்களால்கூட இப்போக்கில் இருந்து விடுபட முடியவில்லை. அதனால்தான், சார்த் தருக்கும் ஃப்ராய்டிற்கும் சம்பந்தம் இல்லை. சார்த்தர் கவிஞரல்ல என்ற சாதாரண உண்மைகள் கூட நா.வா.வுக்கு அவசியப்பட வில்லை. எனவேதான், ''ஜீன்பால் சார்த்ரே என்ற புகழ்பெற்ற பிரஞ்சுக் கவிஞர்'' என்றும், அவர் ஃப்ராய்டிய இணைவிழைச்சுக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர் என்றும் ஒருமுறை எழுதினார். ''Existentialism என்ற பிரஞ்சு மொழிப்பதம்'' என்று சிவசேகரம் எழுதுவதும் இப்போக்கின் விளைவாகத்தான்.

''இருத்தலியல் என்வரையில் ஒரு பிற்போக்குச் சித்தாந்தமாக இல்லாதவிடத்து ஒரு உதவாக்கரை ஆய்வுமுறை என்ற எண்ணமே இருக்கிறது'' என்றும். ''இவ்விஷயத்தில் என்னால் என் அரசியல் நிலைப்பாட்டையும் சிந்தனைச் சார்பையும் தாண்டிச் செல்வது மிகவும் சிரமமான காரியம்'' என்றும் சிவசேகரம் கூறுவது இப் போக்கின் விளைவாகத்தான்.

எனது அனுதாபம் இருத்தலியலாளர்கள் எழுப்பிய பிரச்சனைகள் மீதுதான், அவர்களது தீர்வுகள் மீதல்ல என்பதையும் அப்பிரச்சனை கள் ஒவ்வொன்றுக்கும் மார்க்ஸிய நோக்கில் மாற்றுத் தீர்வுகள் தரப் பட்டுள்ளன என்பதையும் எனது நூலைக் கவனமாகப் படிப்பவர் களுக்குப் புரியும். அப்படியிருக்க, இந்த ''நூலை எழுதிய நோக்கம் மார்க்ஸிய எதிர்ப்போ மார்க்ஸியத்துக்கு மேலாக இருத்தலியலை



நிலைநாட்டுவதோ இல்லை'' என சிவசேகரம் கூறிவிட்டு அதே மூச்சில் நான் ''இருத்தலிய நாஜிக்களிடம் பரிவு காட்டுவதாக'' எழுதுவது முன்னுக்குப்பின் முரணானது.

''கீர்க்கேகார்ட், மார்க்ஸ் இருவருக்குமிடையில் எல்லா இருத்த லியலாளர்களையும் நிறுத்திவிட முடியும். இதன் பொருள் இருவரும் ஒரே துவக்கமுனையில் புறப்பட்டு வெவ்வேறு திசைகளில் சென் றனர் என்பதுதான்'' என்று நான் எழுதியிருப்பது இருத்தலியல் மீது மார்க்ஸியத்துக்கு மேலான எத்தகைய அனுதாபத்தைக் காட்டி யுள்ளது? தத்துவச் சிந்தனைகளை ஒற்றைப் பரிமாணத்தில் அடுக்கு கிறேன் என்ற சிவசேகரத்தின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. இப்படி அடுக்க முடியாது என்பதற்காகத்தான் புத்தகத்தின் ஆரம்பத்தில் பல பக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. முற்போக்கு / பிற்போக்கு என்ற ஒற்றைப் பரிமாணம் சிவசேகரத்தின் அணுகுமுறைக்கு மட்டுமே உரியது.

''ஹைடெக்கர் என்கிற ஹிட்லரின் அடிவருடி'' என்ற சொற் களும், ''அடினார் காலத்தில் புனர்வாழ்வு பெற்றவர்'' என்ற ஒற்றை வரித் தகவலும் சிவசேகரத்தின் மார்க்ஸியத்துக்குப் போதுமானவை. ஆனால், ஹைடெக்கர் என்ற சிந்தனைவாதி எழுப்பும் பிரச்சனைகளி லிருந்து கோழைத்தனமாகப் பின்வாங்குவது மார்க்ஸியத்துக்கு உடன் பாடானதல்ல. இப்படிக் கூறுவதாலேயே, ''நாஜி ஆதரவாளன்'' என்ற பட்டத்தை நான் பெறக்கூடும். ''ஹைடெக்கரின் சிந்தனையை மார்க்சுக்கும் கீர்க்கேகார்ட்டுக்கும் நடுவில் எங்கே நிறுத்தலாம்?'' என்ற சிவசேகரம் கேள்விக்குக் கட்டாயம் ஒரு பதில் வேண்டுமென் றால் அது இதுதான். ''கீர்க்கேகார்டுக்குப் பக்கத்தில்!''

''இந்த இருத்தலியல் யாருக்கான தத்துவம் என்ற கேள்விக்கும் அதை யார் எதற்குப் பயன்படுத்துகிறார்கள் என்ற கேள்விக்கும் 'முற்போக்கு' அணியினர் தரும் பதில் (தவறான காரணங்கட்காக இருப்பினும்) சரியான ஒன்றாகவே இருக்கிறது.'' இப்படிக்கூறும் சிவசேகரத்துக்கு மாறான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ள பல முற்போக்காளர்களை, மார்க்ஸியர்களை நான் மேற்கோள் காட்ட முடியும். எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் மார்க்ஸியரும், உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியும், கீழ்த்திசையியலாளரும், மக்கள் சீனத்தின் நெருங்கிய நண்பருமான ஜோசப் நீதாமின் கூற்று இது :—

''காலம், புத்துணர்வூட்டும் நீரோட்டம்'' என்ற புத்தகம் பற்றி நான் முன்பு குறிப்பிட்டேன். கடந்த உலகப்போரின் துவக்கத்தின் போது அது வெளியிடப்பட்டது. அந்த நூலுக்கு நான், சுயசரிதை உள்ளடக்கத்துடன்கூடிய சுய-மதிப்பீடு அல்லது சுய-விமர்சன

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



வடிவத்திலான அறிமுகம் ஒன்றை எழுதினேன். அது இன்றைக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது. அனுபவ வடிவங்கள் அனைத்தையும்விட, அறநெறிகளே மேலானவை என்பதை அங்கீகரித்த என் அறிமுகக் கட்டுரை, அறநெறிகளை நடைமுறைப் படுத்துவதே அரசியல் என்பதை ஏற்றுக்கொண்டது. அறநெறிகளும் அரசியலும் 'வெவ்வேறு வடிவங்களை ஐக்கியப்படுத்தும் சக்தி' என்று நான் கருதினேன். இப்படிப்பட்ட சிந்தனையில், அரசியலுக்குள்ள முதன்மை என்பது சக்திவாய்ந்த அடிப்படை அம்சமாக இருந்தபோதிலும், அனுபவ வடிவங்களை தனிமனிதனின் வாழ்வு,செயல் ஆகியவற்றை மட்டும் பொறுத்தவரை, ஐக்கியப்படுத்தும் சாத்தியப்பாடு என்பது தேர்வை உள்ளடக்கிய வாழ்வைச் சார்ந்ததாகவே தோன்றுகிறது. எனவே பின்னோக்கிப் பார்க்கையில், எனது உலகக் கண்ணோட்டம், சோரன் கீர்க்கேகார்ட், கார்ல் யாஸ்பர்ஸ், காப்ரியல் மார்செல், எம்மானுவேல் மோனியே ஆகியோரின் உலகக் கண்ணோட்டத்துடன் —ஏன் ழான் பவுல் சார்த்தரின் உலகக் கண்ணோட்டத்துடனும் என்றும் சொல்லலாம்—அடையாளம் கண்டுபிடிக்கும் வகையில் பல விதங்களில் ஒத்ததாகவே இருந்தது அவர்களில் எவரொருவரது நேரடியான செல்வாக்குக்கும் நான் உட்படாவிடினும், கீர்க்கேகார்ட் பற்றி H.J. பிளாக்ஹாம் எழுதியுள்ளார்: ''குழப்பம், தவறு, முயற்சியைத் தவறானதிசையில் செலுத்துதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கான ஒரேவழி, அறிவு சார்ந்ததையும் அழகியல் சார்ந்ததையும், அறநெறி சார்ந்ததையும் சமயம் சார்ந்ததையும் தனித்தனியாக அவற்றுக்கே உரிய தளங்களில் வைத்திருப்பதும், தனிமனிதனின் நடைமுறை வாழ்வில், அதாவது எங்கு இவற்றின் ஐக்கியம் சரியான முறையில் காணப்படுகிறதோ, அங்கு இந்த ஐக்கியத்தை ஏற்படுத்துவது மாகும்; இந்த ஐக்கியம் அறநெறியின் ஆளுகையின் கீழேயன்றி வெறும் சிந்தனை என்ற அருவத்தின் கீழல்ல, அறிவின் ஆளுகையின் கீழல்ல.'' கீர்க்கேகார்டே கூறியதுபோல ''அறநெறி தனிமனிதனின் மீது கவனம் குவிக்கிறது. ஒரு தனி மனிதன், தான் அறநெறி ரீதியாக முழுமையான மனிதனாக உருவாவது அவனது கடமையாகும்: ஒவ்வொரு மனிதனும் அறநெறி ரீதியாக முழு மனிதனாகும் வகையில் பிறந்துள்ளான் என்பதால் அவ்வாறு அவன் ஆகமுடியும் என்பது அறநெறி ரீதியான முன்நிபந்தனை என்பது போல.'' ஒருவேளை இது நம்பிக்கைமிகுந்த கூற்றாக இருக்கலாம். ஆனால் மற்றோரிடத்தில் அவர் எழுதினார்: ''சிந்தனையானது 'கற்பனை'யை மட்டம் தட்டினால் கற்பனை தன் பங்குக்குச் சிந்தனையை மட்டம் தட்டுகிறது; அதேபோல சிந்தனை உணர்ச்சியை மட்டம் தட்டுகிறது. நாம் செய்யவேண்டியது, ஒன்றைத் தாழ்த்தி மற்றொன்றை உயர்த்துவதல்ல, மாறாக அவற்றுக்கு சம அந்தஸ்து



கொடுத்து, அவற்றை உடனிகழ்வாக ஐக்கியப்படுத்தும் ஊடகம் வாழ்க்கைதான்''.

மேலும் யாஸ்பர்ஸ் சொன்னதுபோல் வாழ்தலின் மூலமே வெல்லப்படக்கூடிய தொடர்ச்சியின்மைகளாக வாழ்வுநிலை பிளவுபட்டுள்ளது. சிந்தனையினால் மட்டுமே விளக்கக்கூடிய, எல்லோருக்குமே பொதுவானதுமே ஒரே தன்மையுடையதுமான ஒரு கூட்டமைப்பைத் தேடுவது பாமரத்தனமானது.

''நவீன மனிதனுக்கு ஏற்பட்டுள்ள அந்நியமாதல் என்ற கடுமையான நோய்பற்றி இருத்தலியலாளர் தெரிவிக்கும் கருத்துகள் அனைத்துடனும் எனக்கு உடன்பாடு உண்டு என்று நான் கருதவில்லை. இக்கருத்தாக்கத்துக்கு நியாயம் செய்ய நான் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தவேண்டும்; எப்படியிருந்தாலும் அதைப் பற்றிச் சிறப்பாக எதனையும் சொல்லமுடியாத அளவுக்கு எனது வயதும் ஆகிவிட்டது. ஆனால் புறஉலகில் இருந்து அந்நியமாதல் என்ற உணர்வு பயங்கரமானது; இது எந்த சமுதாயத்தில் ஒருவர் வாழவேண்டுமோ அச்சமுதாயத்தில் இருந்து அந்நியமாதல், தனது உழைப்பிலிருந்தும் பணியிலிருந்தும் அதன் விளைபொருளிலிருந்தும் தனது சமுதாயத்தின் மதிப்பீடுகளிலிருந்தும், தன்னிடமிருந்துமே அந்நியமாதல்... எவரையும் அந்நியமாக்கி விடுவதற்கு இன்றைய உலகமே போதுமானது.

''ஒரு கருத்து முதல்வாத வடிவத்தில் உலகின் பரிணாம வளர்ச்சி பற்றிய கண்ணோட்டத்தையும் புரட்சிபற்றிய கருத்தாக்கத்தையும் கொண்டிருந்த ஹெகலின் தத்துவம் 1844-ம் ஆண்டில் கீர்க்கேகார்ட், மார்க்ஸ் ஆகிய இருவரின் தாக்குதலுக்கும் உள்ளாயிற்று. இருவருமே ஹெகலின் அறிவு வாதத்தை நிராகரித்தனர். கீர்க்கேகார்ட்டைப் பொறுத்தவரை பல்வேறு அம்சங்களின் சங்கமம் ஒவ்வொரு தனி மனித ஆளுமையிலும் சாதிக்கப்படுவதே வாழ்வுக்குரிய ஒரே அர்த்தமாக இருந்தது. ஆனால், அதற்கு மாறாக, மார்க்ஸுக்கோ தனி மனிதனில் உணர்வில் ஏற்பட்டுள்ள உள்நெருக்கடிகள், வர்க்கங்களாகப் பிளவுபட்டுள்ள ஒரு சமுதாயத்தின் சிக்கல்களின் பிரதிபலிப்புத்தான். கீர்க்கேகார்டின் கருத்து தவறானதல்ல என்றும் மார்க்ஸின் கருத்தோ மேலும் சரியானது என்றும் நான் கருதுகிறேன்.''

(Joseph Needham, 'Moulds of understanding—A Pattern of Natural Philosophy' George Allen and unwin Ltd., London (1976, pp 271-273) - அழுத்தம் என்னுடையது.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



ஜோசப் நீதாம் இருத்தலியலாளர் மீது காட்டுகின்ற 'பரிவி'ல் பத்தில் ஒரு பங்கைக் கூட நான் காட்டவில்லையே! இருத்தலியலாளர்கள் மீது கடுமையான சொற்களை நான் பிரயோகிக்கவில்லை என்பது உண்மை. ஆனால் என் விமர்சனம் கடுமையாக இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

சாவு, நிலையாமை என்கிற பிரச்சனையில் இருத்தலியலாளரின் நிலைப்பாட்டுக்கு மாறாக நான் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை என்று சிவசேகரம் கூறுவது அதிர்ச்சியைத் தருகிறது. ஏனெனில் எனது நூலின் கடைசி அத்தியாயத்தில் இப்பிரச்சனைகள் மார்க்ஸிய நோக்கிலிருந்து விரிவாகக் கையாளப்பட்டுள்ளன. ''என் வரையில் சாவு தவிர்க்க முடியாதென்று அறிய அதிக நாளாகவில்லை... மரணம் மிக இயற்கையானது என்ற எளிய உண்மையை உணர்ந்தவர்க்கு இருத்தலியலாளர் குறிப்பிடும் கவலைகள் அர்த்தமற்றவை'' என்று ஒரு பாசிடிவிச (Positivistic) விளக்கத்தைத் தரும் சிவசேகரம் இப் பிரச்சனைகளின் தத்துவ முக்கியத்துவத்தை நிராகரிக்க முடியாததாலோ என்னவோ, இந்து, பௌத்த, கிறித்துவ சமயக் கருத்துகள் சிலவற்றைத் தொட்டு விட்டு தன் பங்குக்கு சில தத்துவ விளக்கங்களையும் கொடுக்க முயல்கிறார். வரவேற்க வேண்டியதுதான்!

''விஞ்ஞானம் பற்றிய (இருத்தலியலாளரின்) 'தீர்ப்புகள்' எல்லாம் S.V.R.க்கு உடன்பாடானவையா?'' ''இவ்விஷயத்தில் தனக்குள்ள ஒற்றுமை — வேற்றுமைகளைத் தெளிவுபடுத்த (SVR) தவறிவிட்டார்'' இப்படிக் கூறுகிற சிவசேகரம் எனது நூலிலிருந்து சில வரிகளைப் பிய்த்தெடுத்து மேற்கோளாகக் காட்டுகிறார்.

முதலாவதாக, விஞ்ஞான அறிவு பற்றிய (மார்க்ஸிய) நிலைப்பாட்டை ஹைடெக்கர் பற்றிய அத்தியாயத்திலும் சார்த்தர் பற்றிய கட்டுரையிலும் குறிப்பிட்டுள்ளேன்.

இரண்டாவதாக, சிவசேகரம் மேற்கோள் காட்டியுள்ள வரிகளில் மதிப்பீடுகளை விலக்கிய, பாசிடிவிச விஞ்ஞானங்கள் பற்றிய இருத்தலியலாளரின் விமர்சனங்கள் உள்ளன. இவற்றில் ஓரளவு உண்மை உண்டு. விஞ்ஞான அறிவையும், அறியும் செயலையும் மனித உணர்வுக்குரிய ஒரே பரிமாணமாக மாற்றும் முயற்சியை மார்க்ஸியமும் ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் விஞ்ஞான அறிவையும் அறியும் செயலையும் முற்றாக நிராகரிக்கும் போக்கை மார்க்ஸியம் மேற்கொள்வதில்லை. இவ்விஷயத்தில் இருத்தலியலாளர்கள் சிலரின் நிலைப்பாட்டை மார்க்ஸியம் முற்றாக நிராகரிக்கிறது.



மூன்றாவதாக, மனித ஆளுமையை முற்றாக ஆக்கிரமிக்க 'விஞ்ஞானத்'துக்கு உரிமை இல்லை என்பதை ஜோசப் நீதாமின் மேற்கோள் தெளிவாக்குகிறது.

நான்காவதாக, எல்லாப் பிரச்சனைகளுக்கும் விஞ்ஞானத்தால் பதில் தர முடியுமென்றோ, தீர்வுகள் வழங்க முடியுமென்றோ அல்லது எல்லாவற்றையும் விஞ்ஞானத்தால் முற்றாக விளக்கிவிடலாமென்றோ கூறிவிட முடியுமா? அப்படியானால், தத்துவத்துக்கு என்ன வேலை? அறநெறிகள், கலை, இலக்கியம் முதலானவற்றுக்கு என்ன பங்கு? மனிதனின் கனவு காணும் ஆற்றலுக்கு ''(கம்யூனிஸ்டுகள் கனவு காண வேண்டும்'' —லெனின்), கற்பனை செய்யும் திறனுக்கு, மனித உணர்வுகளுக்கு என்ன இடம்? விஞ்ஞானம் விளக்கங்களைத் தானே தரும்? மதிப்பீடு செய்யுமா? ''மாக்ஸியம் விஞ்ஞானத்தைத் தன் உறுதியான அத்திவாரமாகக் கொண்டுள்ளது'' என சிவசேகரம் கூறுகையில் அத்திவாரம் அல்லாத மற்ற அம்சங்களும் உள்ளன என்று தானே பொருள் கொள்ள முடியும்? காதல், நட்பு, தியாகம், விருப்பு, வெறுப்பு பொறாமை, பக்தி போன்ற உணர்வுகளை 'விஞ்ஞான' ரீதியாக விளக்கிவிட முடியுமா? ''விஞ்ஞானத்துக்கு அப்பால் பார்க்க முனைபவர்''களைக் கிண்டல் செய்யும் சிவசேகரம் ''விஞ்ஞானத்துக்குள்ளேயே எல்லாவற்றையும் கண்டுவிட முனைகிறாரா?

'காலம்' என்னும் கருத்தாக்கம் தத்துவ உலகிலும் விஞ்ஞான உலகிலும் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சிவசேகரம் புரிந்துகொள்ளாதது வியப்புக்குரியது. 19ஆம் நூற்றாண்டில் ஹெகலாலும் பிறகு மார்க்ஸாலும் வளர்த்தெடுக்கப்பட்ட இக்கருத்தாக்கத்தின் கரு பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே யூதச்சிந்தனை மரபிலிருந்தது என்பதுதான் நான் சுட்டிக்காட்டிய உண்மை. பிரபஞ்சத்தில் ஒவ்வொரு ஜீவிக்கும் வஸ்துவிற்கும் என்றென்றைக்குமாக நிர்ணயிக்கப்பட்டுவிட்ட இடம், ஒவ்வொன்றும் திரும்பத்திரும்ப நிகழ்ந்து கொண்டிருக்கும் இடையறா சுழற்சி போன்ற கிரேக்கக் கருத்தாக்கங்களுக்கு மாறாக, தொடர்ந்து நீரோடை போல முன்னோக்கியே ஓடிக்கொண்டிருக்கும் காலம், வரலாறு நிகழும் களமாகிய காலம், மனிதவளர்ச்சி மலர்கின்ற களமாகிய வரலாறு என்னும் சிந்தனை யூதமரபின் சிறப்பியல்பாகும். இதனால்தான் பல்லாயிரமாண்டுகட்குப் பிறகு 'காலம்' என்ற கருத்தாக்கத்தை வளர்த்த மார்க்ஸ் பிறப்பால் யூதர் என்பது விந்தையான உடன்நிகழ்வு (Strange coincidence) என்று கூறினேன்.

'யூதரின் கர்த்தர் பற்றிய சில விஷயங்களை SVR தவற விட்டு விட்டார்'' என ஆரம்பிக்கும் சிவசேகரம் தன் பங்குக்குச் சில செய்தி

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



களையும் விளக்கங்களையும் கூறுகிறார். மனித சமூகத்தின் வளர்ச்சிக்குப் பணியாற்றிய கருத்தாக்கம் பற்றிய ஆய்வும் யூதச்சிந்தனை நமக்கு வழங்கிய நன்கொடை 'காலம்' என்ற கருத்தாக்கமே என்பதைச் சுட்டிக்காட்டுவதும் தான் என் நோக்கம். இந் நோக்கத்தின் வரம்புகளுக்குட்பட்டுத்தான் கர்த்தர் முதலிய விவகாரங்கள் கையாளப்பட்டுள்ளன. ''இயேசு காட்டிய விடுதலை மார்க்கம் 'சரணாகதி' மூலம் அடுத்த உலகத்தின் இராச்சியம். யூதனால் அதை ஏற்கமுடியவில்லை. யூத இனத்தின் மேன்மை (கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'இனம்' அல்லவா!) இம் மண்ணில் நிலைநாட்டப்படும் என்ற கர்த்தரின் 'வாக்குறுதி'யை நிறைவுசெய்ய முடியாத இயேசுவால் யூதர்களுக்குப் பயன் இல்லை'' என்று திராவிடர் கழக பாணியில் எழுதும் சிவசேகரத்துக்கும் 'துவக்காலக் கிறித்துவத்தின் வரலாறு' என்ற நூலில் எங்கல்ஸ் தந்துள்ள மார்க்ஸிய விளக்கங்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை ஏசுவின் போதனைகளுக்கு இன்னும் சக்திவாய்ந்த உள்ளுறையாற்றல்கள் உள்ளன என்பதாலேயே விடுதலை இறையியல் (Liberation Theology) என்ற நிகழ்ச்சிப் போக்கு தோன்றியுள்ளது என்பதும் இது தென்னமெரிக்க நாடுகளிலும் ஃபிலிப்பைன்ஸ், தாய்லாந்து. நமிபியா, எரித்ரியா போன்ற நாடுகளிலும் நடக்கும் விடுதலைப் போராட்டங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். காலஞ்சென்ற அமெரிக்கப் பத்திரிகையாளரும், முற்போக்குச் சிந்தனையாளரும், செஞ்சீனத்தைப் பற்றிப் புகழ் பெற்ற மூன்று நூல்களை எழுதியவரும் மா சே துங்கின் பெருமதிப்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவராயிருந்தவருமான 'எட்கார் ஸ்னோ'வின் நூலிலிருந்து ஒரு பகுதியை சிவசேகரம் போன்ற மார்க்ஸியர்களைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரையின் பிற்சேர்க்கையாகத் தந்துள்ளேன்.

''ஏசுநாதர் அற்புதங்கள் புரிகிறார்-உண்மை' என்ற வசனத்தில் எதை S.V.R. உண்மை என்று கருதுகிறார் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை'' என்று தொடங்கி மேலும் சில வரிகளை மேற்கோளாகக் காட்டி ''இந்த இடத்தில் மாக்ஸியத்தின் நிழலைக்கூட என்னால் தரிசிக்க முடியவில்லை'' என்று அங்கலாய்க்கிறார் சிவசேகரம். உண்மைதான், அவரால் மாக்ஸியத்தின் நிழலைக்கூட தரிசிக்க முடியவில்லை! கொச்சையான முறையில் சிவசேகரத்தால் அர்த்தப் படுத்தப்பட்டுள்ள வரிகளை ஏசுநாதர் பற்றி நான் எழுதியுள்ள மற்ற வரிகளோடு சேர்த்துப் படிப்பவருக்கு இந்த உண்மை புரியும். என்னை, விவிலியக் கட்டுக்கதைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடிய அல்லது அவற்றுக்குத் தத்துவமுலாம் பூசுகிற ஒருவராகக் காட்ட முயலும் சிவசேகரத்தின் கேலிக்கு உட்படுத்தப்பட்ட வரிகள் இவை:



''சாவைப்பற்றிய அச்சத்தை வென்றவனுக்கு அனைத்தும் எளிதானவை. ஒரு போதும் சாதிக்க முடியாதது என்று ஏதும் இல்லை. இந்த நிலையை அடைந்து விட்டவனுக்கு அற்புதங்கள் என்று ஏதும் இல்லை. ஏனெனில் எல்லாச்செயல்களும் மிகச் சாதாரணமானவையாக மிக இயல்பானவையாகத் தோன்றுகின்றன. அவற்றை அற்புதச் செயல்கள் என்போரெல்லாம் தீர்மானகரமான முடிவுகளை எடுக்காதவரே. முடிவுகளை எடுப்பவரே அற்புதங்களைப் புரிய முடியும்?'' இந்த வரிகளைச் சரியாகப் புரிந்துகொண்டால், சீனாவில் நடந்த நெடும்பயணம், டாட்டு நதியைக் கடந்த செம்படை வீரர்களின் செயல், நார்மன் பெதூனின் தொண்டு, டாச்சாய் சாதனை போன்ற நிகழ்வுகள் ஒரு விதத்தில் 'அற்புதங்கள்'தான். ஆனால் இச்செயல்களை மேற்கொண்டவர்களைப் பொறுத்தவரை அவை மிகச் சாதாரணமான செயல்களே.

'மறுமலர்ச்சி' பற்றி நான் எழுதியவற்றையும் சிவசேகரம் பாமரத்தனமாகப் புரிந்து கொள்வதுடன் நான் கூறுகிற மையமான விஷயத்தையும் தவறவிட்டு விடுகிறார்.

முதலாவதாக, வரலாற்று வளர்ச்சி ஒரு நேர்கோட்டில் செல்கிறது; ஒரு கட்டத்தை அடுத்துவரும் கட்டம் முந்திய கட்டத்திலிருந்து எல்லாவகையிலும் முற்போக்கானது-இப்படி வரலாற்றை எளிமைப் படுத்தப்பட்ட முறையில் பார்ப்பதை என் கட்டுரை விமர்சிக்கிறது.

இரண்டாவதாக, 'பழைமைவாதத்துக்கு எதிரான மறுமலர்ச்சிக் காலம்' 'கருத்துமுதல்வாதத்தைத் தகர்த்து பொருள்முதல்வாதத்தை நிலைநாட்டிய மறுமலர்ச்சி' போன்ற பரவலாக ஏற்றுக்கொள்ளப் பட்ட விளக்கத்துக்கு மாறாக, மறுமலர்ச்சிக்கால விஞ்ஞானத்துக்கு அடிப்படையே பிளாட்டோயிச பழைமைவாத கருத்துமுதல்வாதம் என்பதையும், மறுமலர்ச்சி நாத்திகம் கருத்துமுதல்வாதத்தின் மறுபக்கமே என்பதையும் நான் காட்டியுள்ளேன்.

மூன்றாவதாக, மறுமலர்ச்சியும் பூர்ஷ்வா நாத்திகமும் மனித வாழ்வின் பொருள்பற்றிய கேள்விகளுக்குப் பதில் சொல்லமுடியாமல் ஓடிவிட்டன; பழைய சமய நெறிகளிடம் அவை தோற்றுவிட்டன; சமயங்களை வென்றது மார்க்ஸியமேயன்றி பூர்ஷ்வா நாத்திகமல்ல என்பவற்றை நான் காட்டியுள்ளேன்.

நிலமான்யக் காலத்தில் சுரண்டல் இருந்தது. கூடவே, மனிதர்களுக்கிடையிலான உறவுகள் மனித உறவுகளாகவே இருந்தன; அவை பொருட்களுக்கிடையிலான உறவாகவும், பொருளுறவாகவும்

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



மாறியது 'ஒளியூடுருவாத' (opaque) முதலாளியச் சமுதாயத்தில்தான் என்பதைக் காட்டியுள்ளேன்.

பழைய கட்டத்தில் இருந்த ஒன்று, புதிய கட்டத்தில் இல்லாத தால் தான் 'பின்னோக்கிய பார்வை' தோன்றுகிறது. இதைப் புரிந்து கொண்டால் தான் 'முன்னோக்கிய பார்வை' கைகூடும் என்பதும் என் விளக்கம்.

''S. V. R., நீட்ஷேயின் எழுத்துக்கள் ஜெர்மன் இன மேன்மையை வலியுறுத்துவதுடன் யூத இனவிரோத எண்ணங் களையும் கொண்டிருந்ததைத் தவறவிட்டு விட்டார்'' என்று கூறும் சிவசேகரம் நீட்ஷே பற்றிய அத்தியாயத்தின் கடைசி வரிகள் இந்த உண்மையைத்தான் குறிப்பால் உணர்த்துகின்றன என்பதைக் கிரகித் துக் கொள்ளவில்லை.

ஹைடெக்கர் பற்றிய எனது கட்டுரையைக் குறை கூறும் சிவசேகரம், இத்தத்துவ வாதியின் அடிப்படைக் கருத்துகள் என்னால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளன என்பதைப் புரிந்து கொள்ள வில்லை. ''மாக்ஸின் 'கடந்துசெல்லலுடன்' ஹைடெக்கரின் சிந்தனையின் உடன்பாட்டையிட்டுத் தன் அங்கீகாரத்தைத் தெரி விக்கும் S. V. R.'' என்று சிவசேகரம் உண்மையைத் தலைகீழாகப் புரட்டுவதே இதற்குச் சான்று. எனது கட்டுரையில் 'அந்நியமாதல்' 'கடந்து செல்லுதல்' என்ற இரு விஷயங்களிலும் ஹைடெக்கர், மார்க்ஸுக்கு நேரெதிரான, வரலாற்றுத் தன்மையற்ற, பூடகமான பிற்போக்கான விளக்கங்களையும் நிலைபாடுகளையும் கொண்டுள் ளார் என்பதை விரிவாக விளக்கியுள்ளேன்.

காம்யு பற்றிய கட்டுரையிலும் எனது நூலின் கடைசி அத்தி யாயத்திலும், அவரது அடிப்படைத் தத்துவக் கேள்விகள் மார்க்ஸிய நிலைபாட்டிலிருந்து எதிர்கொள்ளப்பட்டு பதில் தரப்பட்டுள்ளன. காம்யு வாழ்ந்த சூழல், மிக முக்கியமான வரலாற்று நிகழ்வுகள் நடந்த, அந்த வரலாற்று நிகழ்வுகள் பல எதிர்பார்ப்புகளைப் பொய் யாக்கிய, கடுமையான அற நெருக்கடிகளை உருவாக்கிய ஒரு சூழல், இதில் வைத்தே காம்யு புரிந்து கொள்ளப்படவேண்டும். அவரை நேர்மையான மனிதன் என்றதில் தவறில்லை. (தவறான தத்துவத் தையும் தவறான சகாக்களையும் பெர்ணட்ஷா கொண்டிருந்தாலும் அவரை 'நல்லமனிதர்' என்று அழைக்க லெனின் தயங்கவில்லை) காம்யுவை, மொரார்ஜியுடனும் ஹிட்லருடனும் வினோபாவுடனும் ஒப்பிட சிவசேகரத்தால் மட்டுமே முடியும். அண்மையில் சீனத்தில்



வெளியிடப்பட்ட அய்சிங்கின் நெடுங்கவிதையொன்றுக்கு முன்னுரை எழுதியவர் காம்யுவின் ''கடந்துவர முடியாத துயரச் சூழல் என்பது ஏதும் இல்லை'' என்ற கூற்றை மிகுந்த ஒப்புதலுடன் மேற்கோள் காட்டுகிறார். இந்த அளவுக்கு மதிக்கத்தக்கவர் காம்யு.

சார்த்தர் பற்றி சிவசேகரம் எழுதியிருப்பது 'அரட்டை' சார்த் தரின் கருத்துக்களைத் தனது 'மாக்ஸிய' அடிப்படையில் திறனாய் வதை விடுத்து, ''S. V. R. உடன் உடன்படுகிறேன் / S. V. R. அளவுக்கு என்னால் மதிக்க முடியாது'' என்று மொட்டையாகவும். தனது தீர்ப்பே அறுதியானது என்ற தொனியிலும் எழுதுகிறார். 1968 பிரெஞ்சுப் புரட்சிகரப் போராட்டத்தை'கலகம்' என்று சிறுமைப் படுத்துகிறார். இது குறித்து அவர் தெரிவிக்கும் கருத்துகளுக்கும் டிகாலை ஆதரித்தும் மாணவர் — தொழிலாளர் போராட்டத்தை எதிர்த்தும் நின்ற பிரெஞ்சுக் கம்யூனிஸ்டு கட்சி, சோவியத் புரட்டல் வாதக் கட்சி முதலானவற்றின் கருத்துகளுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

''S. V R இருத்தலியல்கார நாஜிகளிடம் காட்டும் பரிவில் சிறிதேனும் இடதுசாரிக் கட்சிகட்குக் காட்டியிருப்பின்...'' என்று சிவசேகரம் எழுதுவது விஷமத்தனமானதும் ஆதாரமற்றதுமாகும். இருத்தலியலாளரில் உள்ள நேர்மையான மற்றும் முற்போக் கான மனிதர்கள் என்று நான் கருதும் ப்யூபர், பெர்டியேவ், காம்யு, சார்த்தர் போன்றவர்கள் விஷயத்தில் கூட நான் அவர்களது எல்லா அடிப்படை நிலைப்பாடுகளையும் மார்க்ஸிய நோக்கில் மறுதலித் துள்ளேன். ''ஒரு கட்சியை திரிபுவாதக் கட்சி என்று முத்திரை குத்தி விட்டு அதனால் அது வெகுஜன விரோதக் கட்சி என்று முடிவுக்கு வரக்கூடாது'' என்கிறார். திரிபுவாதக் கட்சிகள் (எடுத்துக்காட்டாக சோவியத் கட்சி, இந்தியாவிலுள்ள புரட்டல்வாதக் கட்சிகள், இலங்கையிலுள்ள புரட்டல்வாதக் கட்சிகள்) மக்கள் விரோத இயக்கங் கள் அல்லாமல் வேறென்ன? எல்லாப் பிற்போக்குக் கட்சிகளுக்குமே மக்கள் ஆதரவில்லாமல் போகாது. அதனால் அவை பிற்போக்குக் கட்சிகளாகாமலும் போகா. இவற்றில் சில மார்க்ஸியம்— லெனினியம் —மாசேதுங் சிந்தனை என்று அடையாளச் சீட்டுகளையும் ஒட்டிக் கொண்டுள்ளன. டெங்ஸியாவோ பிங்கை ஏற்றுக் கொள்கின்றன!

''விமர்சனத்துக்காக நான் படித்த நூல்கள் என் இருத்தலியல் எதிர்ப்பை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன'' என்று சிவசேகரம் கூறு கிறார். அவர் எதையும் படித்திருப்பதற்கான சான்று அவர் கட்டுரை யில் எங்கும் இல்லை (ஹைடெக்கர் பற்றி ஒரு சில விவரங்கள், 'சிட்னி பிங்கல்ஸ்டினின்' நூலொன்றில் காணப்படும் 'ஹைன் ஹாட் டின்' மேற்கோள் ஒன்று இவற்றைத் தவிர).

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



''இருத்தலியலின் வளர்ச்சியை அமெரிக்க நிறுவனங்கள் ஏன் ஊக்குவிக்கின்றன?'' என்ற கேள்விக் குண்டை வீசுகிறார் சிவசேகரம் ஜடானோவிசம் இத்தகைய கேள்விகளைத் தொடுத்துத்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தது. அறிவார்ந்த விவாதங்களுக்கான நுழை வாயிலை மூடிவிடுகின்ற கேள்வி இது. மாற்றுக் கருத்துகளை எதிர் கொள்வதற்கு மாற்றீடு ஏகாதிபத்தியப் பூச்சாண்டியைக் காட்டுவ தல்ல. இன்று அமெரிக்காவின் நலன்களைக் காப்பாற்றிக் கொண் டிருப்பனவற்றில் ரீகன் பொருளாதாரம், பெர்ஷிங் ஏவுகணை, சூப்பர் மன் வகையறாத் திரைப்படங்கள், அமெரிக்க டி. வி. முதலியனவே அடங்கும்; விளிம்பு நிலையில் நின்று ஏகாந்தக் குரல் எழுப்பும் இருத்தலியல் அல்ல. இருத்தலியலால் அச்சுறுத்தப்படுவது ஜடானோவிசம்தான் மார்க்சியம் அல்ல; மார்க்சியம் அஞ்ச வேண்டியது ஜடானோவிசத்தைத் தான்!

பிற்சேர்க்கை

## ஒரு சீனக் கம்யூனிஸ்ட் இளைஞனுடன் எட்கார் ஸ்னோவின் உரையாடல்

மக்கள் சீனத்திலுள்ள வுஹானில் எட்கார் ஸ்னோவுக்கும், அவர் சந்தித்த ஒரு சீனக் கம்யூனிஸ்ட் இளைஞனுக்குமிடையே ஓர் உரையாடல் :-

**சீன இளைஞன் :**

நீங்கள் ஒரு கத்தோலிக்கர் எனக் கேள்விப்பட்டேனே?

**ஸ்னோ :**

உங்களுக்குத் தவறான தகவல் கிடைத்துள்ளது. நான் ஒரு கத்தோலிக்கனாக வளர்க்கப்பட்டேன். ஆனால் ஸ்தாபன ரீதியான திருச்சபைகளின் மீதான நம்பிக்கையைப் பல ஆண்டுகளுக்கு முன்பே இழந்து விட்டேன்.

**இளைஞன் :**

கடவுளை நம்புகிறீர்களா?



**ஸ்னோ :**

மனிதன் அறியாமையிலும் அச்சத்திலும் இருக்கும்போது அவனுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுவதற்காக மனிதனாலேயே கண்டு பிடிக்கப்பட்டதுதான் கடவுள் என்று தோன்றுகிறது. மனித னின் ஆழ்ந்த அறியாமையையும் மரணத்துக்குப் பிறகு அந்தகாரத் தில் மூழ்கி விடுவோமா என்கிற தனிமையுணர்வு தரும் அச்சத்தையும் நான் புரிந்து கொள்கிறேன். ஸ்தாபன ரீதியான திருச்சபை தனது புகழுக்காகவும், பல சமயங்களில் தவறாகப் பயன்படுத்தப்படும் அதிகாரத்துக்காகவும் இந்த உணர்வுகளைப் பயன்படுத்திக் கொண் டது. மற்றோர் புறமோ, பேரறிவு ஒன்று உறைகிறது என்பதற்கான சான்றுகளை இப்பேரண்டம் நம்மைச் சுற்றிலும் வழங்கியுள்ளது என்று ஐன்ஸ்டின் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இது, ஒரு கத்தோலிக்கனாக இருப்பதற்கும், இப்பூமியில் போப் கடவுளின் இராசதூதராக இருக்கிறார் என்பதற்கும் வெகுதூரம் மாறுபட்டது நீ கடவுளை நம்புகிறாயா?

**இளைஞன்:**

ஹூம், நிச்சயமாக இல்லை. கடவுள் நம்பிக்கையும் மாக்ஸியமும் ஒன்றுபட முடியாதவை. நான் ஒரு மார்க்ஸியன்.

(இப்பதிலைக் கேட்டதும், எட்கார்ஸ்னோ, தான் ஷாங்காய் நகரில் சந்தித்துப் பேசிய ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் பற்றியும் கடவுளின் கட்டளைகளிற் பெரும்பாலானவற்றைக் கம்யூனிஸ்டுகள் மதித்து அவற்றை நடைமுறைப்படுத்துகிறார் என்று அவர் பாராட் டியது பற்றியும் இளைஞனுக்கு எடுத்துக் கூறுகிறார்.)

**இளைஞன்:**

அப்படியானால், அது வேறு காரணங்களுக்காக இருக்கும் நீங்கள் ஒரு கிறிஸ்துவராகவும் அதே சமயத்தில் மார்க்ஸியனாவும் இருக்க முடியாது. மார்க்ஸியம் என்பது நவீன விஞ்ஞான ரீதியான உண்மை. சமயமோ, கடந்த காலத்தைச் சேர்ந்தது. இரண்டுக்குமிடையே ஒரு தொடர்பும் இல்லை.

**ஸ்னோ :**

உன்னால் அவ்வாறு நிச்சயமாகச் சொல்ல முடியுமா? மார்க்ஸி யமுமே பல்வேறு வரலாற்றுப் போதனைகளின் ஒரு விளைவு அல்லவா? இப்போதனைகளில் யூத, கிறித்துவத்தின் அறநெறி விழுமியங்களும் உள்ளடக்கியுள்ளன அல்லவா? துவக்ககால கிறித்துவ

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



வீரத் தியாகிகளை. துவக்ககாலக் கம்யூனிஸ்ட் வீரத்தியாகிகளுடன் ஒப்பிட்டு எங்கல்ஸ் எழுதிய கட்டுரையை எப்போதேனும் படித்திருக்கிறாயா? மார்க்ஸூம் எங்கல்ஸூம் 'மதம் மக்களுக்கான அபின்' என்று கூறிய போது, அக்கூற்று 'உலகுதழுவிய சகோதரத்துவம்' என்ற கிறிஸ்துவ விழுமியத்தைக் குறிக்கவில்லை; மாறாக, மனிதனை மனிதன் சுரண்டுவதில் பங்கேற்கும் ஒரு முதலாளிய ஸ்தாபனமாக நிலவிய, ஸ்தாபனரீதியாக்கப்பட்ட திருச்சபையைத் தான் அக்கூற்று குறிப்பிட்டது.

**இளைஞன் :**

சமயம் என்பது ஒரு வர்க்கப் பிரச்சனை. இதை யார் மறுப்பினும் அவர் ஒரு மார்க்ஸீயர் அல்ல. நீங்கள் இன்னும் ஒரு கத்தோலிக்கராகவே இருக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது.

(இந்த இறுதியான பதிலுக்குப் பிறகு, தனது உரையாடலை நிறுத்திக் கொண்டு விட்டதாகக் குறிப்பிடும் எட்கார் ஸ்னோ எழுதுகிறார்: ''ஒரு வறட்டுவாதி (dogmatist) —அவன் கம்யூனிஸ்டாகவோ அல்லது கிறிஸ்துவனாகவோ இருக்கலாம் — அவனது உரையாடல் சலிப்பூட்டக் கூடியதாகவே உள்ளது. எனவே நான் விவாதத்தைக் கைவிட்டேன். ஆனால் இது எனக்கு மீண்டும் நினைவூட்டியது என்னவென்றால், பொதுவாகவே, சோஷலிசத்தைச் சமயச் சிந்தனைகளுடன் சரிக்கட்ட முடியுமா என்ற பிரச்சனைகளைப் பற்றி மேனாட்டுக் கம்யூனிஸ்டுகளுடன் ஒப்பிடுகையில் சீனக் கம்யூனிஸ்டுகளுக்குள்ள சிரத்தை மிக மிகக் குறைவானது.'')

— Excerpts from 'Red China Today—other Side of the River' by Edgar Snow, 1962, 1970 Penguin Books, London.

தமிழில் : எஸ். வி. ராஜதுரை

●

# மனோஹர மாக்ஸிஸ்டென்ஷலிஸம்

(ஒரு பழம் விகடத்துணுக்கு :

ஒரு 'விஞ்ஞானி' நீண்டகால ஆய்வின் முடிவில் தவளை ஒன்றுக்குத் 'தாவு' என்று தான் ஆணையிட்டதும் தாவக் கற்பித்தார். பின்பு தன் ஆய்வை மேலும் விஸ்தரிக்க விரும்பினார். தவளையின் வலது முன்னங்காலைத் துண்டித்துவிட்டு 'தாவு' என்றார் தவளை தாவியது. இடது முன்னங்காலையும் துண்டித்துவிட்டு 'தாவு' என்றார். தவளை தாவியது. வலது பின்னங்காலைத் துண்டித்த பின்பும் தவளை வெகு சிரமப்பட்டுத் தாவியது. நாலாவது காலும் போனபின்பு தவளை ஆணையை நிறைவேற்றத் தவறியது. விஞ்ஞானியின் முடிவு : நாலு காலும் வெட்டப்பட்ட தவளைக்குக் காது செவிடாகி விடுகிறது.)

I Existentialism என்ற பிரெஞ்சுமொழிப்பதம்[1] என்று தவறாக (?) நான் சொன்னதால் SVRஆல் ஒண்ணரைப்பக்க நீளத்துக்கு (அலை 24:704-705) வாசிக்கப்படும் குற்றச்சாட்டுகள் நிருபனமாகி விடுகின்றன.

என் விமர்சனத்துக்கான பதிலுக்கு இது அவசியம் என்று SVR கருதலாம். எனக்கு 'வரட்டுவாத' லேபல் ஒட்டாமலே தன் நிலைப்பாட்டை விளக்கவும் என்னுடையதை அவசியமானவிடத்தே பொய்ப்பிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லையோ தெரியாது. யாருக்கும் 'பிற்போக்கு', 'குட்டி பூஷுவா', 'வரட்டு வாதி' போன்ற முத்திரை குத்தி, ஆகவே, அவர் சொல்வது தவறு என்று வாதிடும் நிர்ப்பந்தம் எனக்கு இன்னும் ஏற்படவில்லை. இருத்தலியல் (existentialism) அதன் வரலாற்றுப் பின்னணியில் மிகவும் பிற்போக்கான பணியையே ஆற்றியது என்பது என் மதிப்பீடு. மாக்ஸியம் இருத்தலியல் எழுப்பும் கேள்விகட்குப் பதிலளிப்பது என்றால் மாக்ஸியத்தின் பிரச்சனைகட்கு இருத்தலிய அணுகுமுறை மூலம் பதில்

வி—10

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



தேடுவது அவசியமென்றாகி விடாது. சிலசமயம் பூஷுவா ஜன நாயகம் எழுப்பும் கேள்விகட்கு (மாக்ஸிய) மக்கள் ஜனநாயகம் அளிக்கும் பதில்கள் பூஷுவா ஜனநாயக அணுகுமுறையில் அமைவன அல்ல என்பதோடு கேள்விகளே சிலசமயம் பொருத்தமற்றவையாகின்றன. இவ்வாறான இரண்டு வேறுபட்ட அணுகுமுறைகளில் ஒன்றில் கேட்கப்படும் கேள்விக்கு மற்றதில் பதில் தேடும்போது முன்னதன் அணுகுமுறை மூலம் பின்னதில் பதில் காணாமுடியாமற் போக நிறையவே இடம் உண்டு. மாக்ஸியத்தின் பிரச்சனைகள் பிரதான முரண்பாடுகள் என்று அது கருதுவனவற்றின் அடிப்படையில் ஆராயப்படுகின்றன.

இரண்டாந்தர முரண்பாடுகள் வேறுபடும் அளவுகளில் கணிப்பிலெடுக்கப்படுகின்றன. சில, உடனடியான சூழலில், புறக்கணிக்கப்படுகின்றன. பழைய பிரச்சனைகளின் தீர்வுகள் புதிய வேறு பிரச்சனைகளை அடையாளங் காட்டுகின்றன. முரண்பாடுகளை மீண்டும் மீண்டும் சரியாக அறிவதன் மூலமே பிரச்சனைகட்குச் சரியாக முகங் கொடுக்க முடிகிறது. மாக்ஸியத்தின் போக்கில் விறைப்பான அணுகுமுறை ஸ்டாலின் காலத்தின் சில கட்டங்களிலும் மட்டுமன்றிச் சீனக் கலாச்சாரப் புரட்சியின் போதும் காணப்பட்டது. இது நடைமுறை சார்ந்த ஒரு பிரச்னை இருத்தலியலானது அடிப்படையிலேயே பிரச்சனைகளை வேறுவிதமாக அடையாளம் காணும் ஒரு அணுகுமுறை. அதை மாக்ஸியத்தின் பிரச்சனைகளது தீர்வுகளில் பொருத்துவது சாத்தியமென்று எனக்குப்படவில்லை. இருத்தலியலாளர்கள் பெருவாரியானோர் தீவிர மாக்ஸிய விரோதிகளாக அமைந்தமை தற்செயலானது அல்லது மானுடப் பிரச்சனைகட்கு இருத்தலியல் மூலம் தீர்வு தேட முனைந்தோர் மாக்ஸியத்திற்கும் இருத்தலியலுக்கும் இடையே தீர்க்க முடியாத பெரு முரண்பாடுகளை அடையாளங் கண்டமையில் தவறு இல்லை எனது சமுதாயப் பார்வையில் சமகாலச் சரித்திரச் சூழலின் ஒரு கட்டத்தில் எதாவது ஒன்றை முற்போக்கானது எனவோ பிற்போக்கானது எனவோ மதிப்பிடும் தேவை (எனக்கு) ஏற்படுகிறது. அது வெறும் ஒற்றைப் பரிமாணப் பார்வை மூலம் வந்தடையும் முடிவு அல்ல. இருத்தலியலின் வரலாற்றுப் பங்கும் அது வழங்கும் தீர்வுகளும் முக்கியமான சமுதாயப் பிரச்சனைகளில் பொருந்தாதனவாயோ தவறானவையோ அமைந்தன என்பதாலேயே இருத்தலியல் என்னை ஈர்க்கத் தவறியாது இருத்தலியல் எழுப்பும் 'பொருத்தமான' கேள்விகட்டுமே அதன் அணுகுமுறையின் துணையின்றி பதில் காண முடியும் (பெரிய பூனை வருவதற்கு சுவரில் பெரிய துவாரமும் சின்னப் பூனை வருவதற்குத் தனியே சிறிய துவாரமும் அமைக்க அவசியம் இல்லையே?



II எக்ஸிஸ்டென்ஷலிஸம் பற்றி நான் சொந்தமாகப் படித்து அறிந்த எதையுமே எழுதவில்லை என்பதோ 'எனக்குத் தெரிந்த' மாக்ஸியத்தின் அடிப்படையில் அதை விமர்சிக்கவில்லை என்பதோ பொருந்தாத குற்றச்சாட்டுக்கள். ('எனக்குத் தெரியாத' மாக்ஸியத்தின் அடிப்படையில் எழுதியிருந்தால் அது தவறு தான்!) நான் எழுதியது புத்தக விமரிசனம், கட்டுரை அல்ல. நான் எழுப்பியவை கேள்விகள், தெளிவாக்கப்பட வேண்டிய சந்தேகங்கள். முடிந்தவரை என் சார்புகளின் தாக்கம் தர்க்கரீதியான ஆய்வு முறைக்கு இடையூறு செய்யாதவாறு அணுக முயன்றேன். (அது எதற்கும் உத்தரவாதமல்ல!)

III மேற்கோள்கள் தந்து வியாக்கியானங்களைத் திணித்தேன் என்ற குற்றச்சாட்டு மாமூலானதும் பலவீனமானதுமாகும். பெருவாரியாக மேற்கோள்கள் தரப்பட்ட இடங்களில் SVR இன் நிலைப்பாடு பற்றிய தெளிவீனங்களை விளக்குமாறு மட்டுமே கேட்டிருந்தேன் மற்ற இடங்களில்கூட நான் புதிய அர்த்தங்களைக் கற்பிக்க முனையவில்லை. ''இருத்தலியல்கார நாஜிகளிடம் காட்டும் பரிவில் சிறிதேனும் இடதுசாரிக் கட்சிகட்குக் காட்டியிருந்தால் நியாயமாக இருந்திருக்கும்'' என்பது SVR கடைசிப் பகுதிகளில் இடதுசாரிக் கட்சிகள் மீது குவித்த கடும் வார்த்தைகள் தொடர்பாகக் கூறப்பட்ட கருத்து. இதில் முன் பாதியை மட்டும் எடுத்துக் கொண்டு SVR நூலை எழுதிய நோக்கம் மாக்ஸிய விரோதமானதல்ல2 என்று சொன்னதற்கு 'முன்னுக்குப்பின் முரணானதாக' எழுதியதாக வாதிடுவன சிறுபிள்ளைத்தனமானது. SVR இருத்தலியல் காரர்களது நாஜித் தொடர்புகளை முற்றாகத் தரவும் இல்லை முறையாக விளக்கவும் இல்லை. நான் இதற்காக அவரை நாஜி ஆதரவாளர் என்று அழைக்கவும் இல்லை. நாஜி ஆதரவாளன் என்று தன்னை அழைக்கக்கூடும் என்று ஒரு தொப்பியை அணிய விரும்பினால் ஆட்சேபமும் இல்லை. அது அவரே செய்த தொப்பி. தலையும் அவருடையது. 'முற்போக்கு' என்ற பதத்தை (' ') குறிகட்கிடையில் நான் பாவித்த நோக்கமே SVR கேலியாகக் குறிப்பிட்ட 'முற்போக்கு முகாம்' என்பதைச் சுட்டிக் காட்டவே. இப்போது அந்த 'முகாமில்' நானும் என்போலல்லாதவர்களும் புகுந்தவிதம் எனக்குப் புரியவில்லை. இவ்வாறான வியாக்கியானங்கள்' எனதல்ல.

IV SVR யேசுவின் அற்புதங்கள், விஞ்ஞானம் போன்ற விஷயங்களைக் கையாளும் போது அவை அவரது கருத்துக்கள் என்றே என்னும் வாய்ப்பு ஏற்பட்டது. என்னால் நம்ப முடியாமையாலேயே

படிப்பகம்

அவற்றைத் தெளிவாக்கும்படியும் அவ்வாறான தெளிவீனங்கள் பற்றியும் குறிப்பிட்டேன். சிக்கலான விஷயங்களையும் தெளிவாக எழுதலாம். எதையுமே மேலும் குழப்பமாகவும் எழுதலாம். குழப்பமான கருத்து வெளிப்பாடு காரணமாக ஐயங்கள் பிறக்கும்போது ''உனக்கு அறிவுக் கூர்மை போதாது'' என்ற அஸ்திரத்தைப் பிரயோகிப்பது நானறிந்த மட்டரகமான விரிவுரையாளர்களது உத்தி.

V மாக்ஸுக்கும் கீர்க்கெகார்ட்டுக்குமிடையில் கீர்க்கெகார்ட்டினின்று கிளைத்த பாஸிஸ வக்கிரங்களை எல்லாம் நிறுத்த முடியுமானால் கீர்க்கெகாட் இயல்பாகவே பாஸிஸ (பிற்போக்கு?) வக்கிர சிந்தனைகளது அந்தமாகிவிட முடியாதோ? இதனாலேயே தான் ஹைடெக்கரை எங்கே நிறுத்துவது என்ற கேள்வி எழுந்தது. மற்றப்படி, ஹைடெக்கருக்கும் மாக்ஸுக்கும் உள்ள தூரம் பற்றி எனக்கு ஐயமே இல்லை.

VI நீடம் கூறிய விஷயங்களில் பாரதூரமாக ஆட்சேபிக்க அதிகம் இல்லை.[3] ஆனால் அவருடன் முற்றாக உடன்பட அவசியமிருப்பதாகத் தோன்றவில்லை இயந்திர ரீதியான பொருள் முதல்வாதமோ, தர்க்கமுறையோ, சிந்தனாவாதமோ அதிகம் பயனற்றவை என்பதில் எனக்குப் பூரண உடன்பாடே. இருத்தலியலாளர்களது சில 'சரியான' கருத்துக்கள் இருத்தலியல் அணுகுமுறையாலேயே சாத்தியம் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் ஏறத்தாழ எல்லாத் 'தூய' முன்வரிசை இருத்தலியல்வாதிகளுமே படு பிற்போக்காளர்களாக (வேறு வார்த்தை அகப்படவில்லை, SVR மன்னிக்கவும்) அமையக் காரணம் என்ன? கம்யூனிஸ்ட் கட்சிக்காரனது ஒவ்வொரு சில்லரைத் தவற்றையும் பூதக்கண்ணாடி வைத்துப் பார்க்கிற ஒரு சூழலை அறிந்ததால் தான் எனக்கு இருத்தலியல் 'சிந்தனையாளனின்' பாஸிஸம் ஒரு சில்லரை விஷயமாகிப் போனது சிறிது ஆச்சரியமாக இருந்தது (ஒரு வேளை தனிமனித சிந்தனையும் சமுதாய நடைமுறையும் தொடர்பே அற்ற இருத்தலியல் சமாச்சாரங்களாயிருக்கலாம்). என் கேள்விகள் மிகவும் எளியவை. பெரும்பாலும் தெளிவாக்கலையே வேண்டி நின்றவை. எதிர்பார்த்தது தவறாக இருந்திருக்கலாம்.

VII விஞ்ஞானம் பற்றி இன்று பல நல்ல, நியாயமான கேள்விகள் எழுகின்றன. ஆயினும் அவற்றை வக்கிரப்படுத்தி விஞ்ஞான அணுகுமுறையையும் விஞ்ஞானத்தையும் முற்றாக எதிர்க்கும் ஒரு போக்கும் உள்ளது. இவை SVR அறிந்தவை. ஆயிரக் கணக்கில்



விஞ்ஞான விரோத ஸ்லோக மாரிக்குப் பிறகு விஞ்ஞானம் பற்றித் தன் கருத்தை வெகுதொலைவில் வேறொரு தொடர்பில் சொல்லி வைத்திருப்பதாகக் கூறுவது எழுப்பப்பட்ட கேள்விக்குத் தக்க பதிலும் அல்ல, எழுத்தின் பலவீனத்துக்கு உரிய பரிகாரமும் அல்ல.

VIII 'மாக்ஸ் ஒரு யூதர் என்ற அற்புதமான உடனிகழ்வு' பற்றி SVRஇன் மலைப்பு புத்தகத்துக்கு நன்மை செய்யவில்லை என்றேனே ஒழிய அந்த மலைப்புக்குரிய தகவலின் பின்னணியில் வரும் கருத்துக்களை முக்கியமற்றவை என்று சொன்னேனா? (இது போன்ற—ஒருமை; இவை போன்ற—பன்மை).

IX யூதச் சிந்தனை பற்றிய விளக்கம் அதன் முக்கியமான ஒரு அம்சத்தைப் புறக்கணித்த SVRக்குக்குப் பெரிதல்ல என்றால் போகட்டும். ஆனாலும் அவரது 'நோக்கங்களை' எல்லாம் 'குறுக்கு விசாரணை' மூலம் தான் நாம் அறிய வேண்டுமானால் அவரது எழுத்தில் கோளாறு இருக்கிறது.

X யேசுபற்றிய கருத்துக்களில் SVR விவிலியக் கட்டுக்கதைகட்கு தரும் விஞ்ஞான ரீதியான வியாக்கியானங்கள் அவருக்கே உரியனவாக இருக்கட்டும். ஆனால் கோஷம் எழுப்புகிற பாங்கில் 'அற்புதமான' வரிகளை எழுதிவிட்டு பெத்யூனின் உன்னதமான சேவையையும், டாச்சாய் ஊழலையும், சீனச் செஞ்சேனையின் வீரத்தையும் அத்தகைய 'அற்புதங்களை' ஒப்பிட்டு நியாயப்படுத்துவது, அவர் எழுத்தில் நான் முன்பும் இப்போதும் சுட்டிக்காட்டும் பலகீனத்துக்கு அவர் முகங்கொடுக்க மறுப்பதையே குறிக்கிறது. மறுமலர்ச்சி தொடர்பான விஷயமும் அது போன்றே.

XI கமூவை நான் யாருடனும் ஒப்பிடவில்லை. நல்ல சில பண்புகள் மட்டுமே போதா என்பதையே உதாரணங்கள் மூலம் கூறினேன்.

XII ஹைடெகர் அந்நியமாதல் விஷயத்தில் காட்டிய அக்கறையைப் பற்றி SVRஇன் அங்கீகாரம் ஒரு புறமிருக்க, என் கேள்வியின் சாரமே ஹைடெகர் ஹிற்லருக்குத் தாசனானது எவ்வாறு என்பது தொடர்பானது. SVR தந்த விளக்கத்தின் போதாமையைச் சுட்டிக் காட்டினேன். அதற்குப் பதில் தருவது கொஞ்சம் அசௌகரியமான விஷயம் அல்லவா! எனவே கேள்வியைவிட அதை எழுப்புபவனது 'யோக்கியதை' முக்கியமாகி விடுகிறது.

XIII முக்கியமாக நான் எழுப்பிய பிரச்சனைகளைச் சுருக்கமாகச் சொன்னால் (1) இருத்தலியல்வாதிகள் பெரும்பாலும் படுபிற்போக்

காளர்களாக அமைந்தது ஏன்? (2) இருத்தலியல்வாதிகள் சிலரது சில இருண்ட அம்சங்கள் சரிவரக் காட்டப்படாதது முக்கியமான குறை (3) சில அத்தியாயங்கள் எழுதப்பட்டுள்ளமுறை அவரது பதிலில் அவர் கனகென நிறுவ முனையும் நிலைப்பாடுகட்குப் பாதகமாய் உள்ளன. இவை பற்றி எந்தவித கவனிப்பும் இன்றித் திரும்பத் திரும்பக் கேள்விகட்குப் பதில் சொல்லாமல் கேள்விகளை எழுப்பியவருக்கு நோக்கங்கள் கற்பிப்பது பலமல்ல— மிகவும் பெரிய பலவீனம். எனவே என் வாதங்களை இத்துடன் நிறுத்திவிடுகிறேன். பலவகையிலும் என்னைப்பற்றி SVR சொல்ல முனைவன பற்றி நான் சிரமப்பட போவதில்லை. அவை என்னைவிட அவரைப்பற்றியே, அதிகம் சொல்வன.

(இது அலையிற் பிரசுரிக்க அனுப்பப்பட்டு அலை ஆசிரியரிடமிருந்து எதுவித பதிலுமின்றிப் பிரசுரிக்கப்படாது போனது).

## குறிப்புக்கள்

1. Existentialism என்ற பிரெஞ்சுச் சொல்லினும் Existentialismus, (=) Existential philosophie எனும் ஜேர்மன் சொற்கள் காலத்தின் முற்பட்டவையாயிருப்பினும் ஆங்கிலத்திற்கும், (பெருவாரியாக ஆங்கில வாயிலாகவே சொற்களைப் பெறும் நமக்கு?) உடனடியான தோற்றுவாய் பிரெஞ்சுச் சொல்லே. இதன் விளைவாக பிரெஞ்சு மொழி உச்சரிப்பே இன்றும் பல ஆங்கிலம் பேசும் புத்திஜீவிகளால் பயன்படுத்தப்படுகிறது.

2. SVR நூலை எழுதிய நோக்கம் பற்றிய என் ஊகம் SVR இன் எழுத்தில் நான் அவதானிக்கும் சில விஷயங்களுடன் முரண்பட்டால் முரண்பாடு நிச்சயமாக என்னில் இல்லை. (ராஜாவின் அறையில் பறந்த கொசுவைக் கொல்ல எண்ணி முடிவில் ராஜா தலையில் வாளை வீசிக் கொன்ற நண்பனான குரங்கின் நோக்கமும் அந்த நோக்கின் வழியான செயலின் விளைவும் எவ்வாறோ...) SVR நோக்கம் பற்றிய என் ஊகம் செல்லுபடியானது எனில் அங்கே அவ்வாறான முரண்பாடு உள்ளது என் ஊகம் செல்லாதெனில் முரண்பாடே இல்லை. என் ஊகம் தவறு என்றால் தாழ்மையுடன் ஒப்புக் கொள்கிறேன்.

3. நீடம் சீனாவின் நண்பர், விஞ்ஞானி, மாக்ஸிய அனுதாபி என்பன, போக, அவர் தனது முடிவுகளை இருத்தலியல் வழியாகவே வந்தடைந்தாரா? தவறான சிந்தனை அடிப்படைகளையுடையோரும் சிற்சில விஷயங்களில் சரியான முடிவுகட்கு வருகிறார்கள். கீர்க்கெகாட்டின் கருத்து 'பிழையில்லாது' இருப்பது அது தனிமனிதப் பரிமாணத்திற்குள் வரையறைப்பட்டு உள்ள அளவிலேயே, இருத்தலியல் சமுதாயப் பரிமாணத்திற்கு விஸ்தரிக்கப்பட்ட போது என்ன நடந்தது? ஏன்? விடைகளை வரலாற்றில் தான் தேடமுடிகிறது. சித்தாந்தம் ஒன்று பிற்போக்கானது என்பதால் அதில் பெறுமதியே இல்லை என்றோ அதன் மூலம் காண்பவை யாவுமே உண்மை சாராதன என்றோ எங்குமே நான் வாதிக்கவில்லை. இருத்தலியல் அணுகுமுறை மாக்ஸியத்திற்கு மிகவும் உடன்பாடற்றதும் பெரிதும் கேள்விக்குரிய அளவு உபயோகமுடையதும் என்பதே என் மதிப்பீடு (அலை 23 இல் என் விமர்சனத்தில் 1.1 இறுதிப் பத்தி பார்க்கவும்.)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பாரதியின் மொழிச் சிந்தனைகள் பற்றி

## நுஃமான் : *சில குறிப்புக்கள்*

எம். ஏ. நுஃமானின் 'பாரதியின் மொழிச் சிந்தனைகள் : ஒரு மொழியியல் நோக்கு' என்ற நூலின் விமர்சனங்கள் சிலவற்றை வாசித்து வெகுநாட்களான பின்பே அவரது நூலைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரது முயற்சி எவ்வளவு பயனுள்ளது என்பது பற்றி முன்பு முருகையன் எழுதியுள்ளார் : எனவே அதுபற்றி நான் அதிகம் எழுத அவசியம் இல்லை. இவ்விஷயத்தில் அவரது பார்வையுடன் அடிப்படையில் எனக்கு அதிகம் வேறுபாடில்லை என்பதால், என்னுடைய குறிப்புக்களில், அவரது முயற்சியில் அவர் தொட்டிருக்கக் கூடிய ஓரிரு விஷயங்கள் பற்றியும் சில அவசியமான தெளிவாக்கங்கள் பற்றியும் சில கருத்து வேறுபாடுகள் பற்றியுமே எழுத முனைகிறேன்.

''மொழி உணர்வு சமூக, அரசியல் நிலைமைகளின் வெளிப் பாடாகும்'' என்று ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டிவிட்டு, நுஃமான், பாரதியின் மொழி உணர்வின் அடிப்படையை அவருடைய சுதேச உணர்வில் அடையாளங் காட்டுகிறார். பாரதியின் கருத்துக்கள் சில அடிப்படையிலேயே தவறானவையாயும் அறிவியலுக்குப் புறம்பான வையுமாக அமைவதையும் அதே சமயம் வேறு இடங்களில் பாரதியின் மொழிச் சிந்தனைகள் நவீன சிந்தனையுடன் உடன்பாடானவையாக அமைவதையும் பல்வேறு இடங்களிலும் நுஃமான் தெளிவுபடுத்து கிறார். இவ்வாறான தன்மை பாரதியின் சமுதாயப் பார்வையிலும் பிற சிந்தனைகளிலும் கூட உள்ள ஒன்றே. இதனாற்தான் பாரதியின் சிந்தனைகளைப் பற்றிய வக்கிரமான வியாக்கியானங்கள் எளிதிற் சாத்தியமாயின, நுஃமான் இவை பற்றியும் தொட்டுக்காட்டியிருக்க லாம். இதற்கு மேலும் பல பக்கங்கள் அவசியமாகி இராது என்றே நினைக்கிறேன். இதன் முக்கியத்துவம் யாதெனில், மொழி பற்றிய பாரதியின் சிந்தனைகளில் சில அடிப்படையான பெருந் தவறுகள் இருக்கையில், பாரதியால், நடைமுறை சார்ந்த சில முக்கியமான



விஷயங்களில் எவ்வாறு நவீன சிந்தனைக்கு உடன்பாடான கருத்துக் களைக் கூற இயலுமாகியது என்பதே, பாரதியின் 'சரியான' கருத்துக் கள் பாரதியின் சிந்தனையில் பழமைவாத அம்சங்களையும் மீறி உருவானமை பாரதியின் அக் கருத்துக்கள் சமுதாயத் தேவைகளை யும் சமுதாய நடைமுறையையும் சார்ந்து நின்றதாலேயே என்ற கருத்தை நுஃமான் மேலும் தெளிவுபடுத்தியிருந்தால் நன்றாய் இருந் திருக்கும். இதனை வேறு பல சிந்தனையாளர்கள் விஷயத்திலும் நாம் அடையாளம் காணல் பயனுள்ளது என்பதாலேயே நுஃமான் இதற்குச் சிறிது தூரம் கவனங் காட்டியிருக்கலாம் என்று கருது கிறேன். கீழ்மட்ட, லத்தீன் அமெரிக்க கத்தோலிக்க குருமார் பலர் இன்று மாக்ஸிஸ புரட்சிகர நடைமுறையுடன் காணும் உடன்பாட்டுக் குக் காரணம் அவர்களது சமுதாய நடைமுறை அவர்கட்கு உணர்த் தும் உண்மைகள் அல்லவா! அவர்கள் தம் நவீன சமுதாயப் பார்வை யைக் கிறிஸ்துவின் போதனைகளின் பேரில் திருச்சபையின் சிந்தனை யுடன் முரண்படாதவாறு முன்வைக்கும் முயற்சிகள் இங்கு கவனிக்கத் தக்கன.

நுஃமான் கூறியிருப்பது போல, ஆறுமுகநாவலர் தமிழ் உரை நடையை எளிமைப்படுத்த முயன்றமைக்கும் பாரதி தமிழ் உரை நடையை எளிமைப்படுத்த முயன்றமைக்கு மிடையிலான வேறுபாடு இரண்டு வேறுபட்ட சமுதாயப் பார்வைகளைப் பிரதிபலிக்கிறது. ஆறுமுகநாவலருடைய பார்வை 'மரபை' நிலைநிறுத்துவதனையே அடிப்படை நோக்கமாக உடையது. ஆயினும் யதார்த்தத்துக்கு மதிப்பளிக்கவேண்டிய நிர்ப்பந்தம், ஒரு வகையான எளிமையை அவருக்கும் அவசியமாக்குகிறது. பாரதியின் பார்வை மரபை மாறக் கூடிய ஒன்றாய்க் கருதிச் சமுதாயத்தின் மொழித்தேவையை முதன்மைப்படுத்துகிறது. அதன் குறைபாடுகள் பல. ஆயினும் பாரதியால் தமிழின் பல பிரச்சனைகளைச் சரியாகவே அடையாளங் காண முடிகிறது. தீர்வுகளில் உள்ள குறைநிறைகள் பற்றி நுஃமான் மேலும் ஆழமாகக் கவனித்திருக்கலாம்.

பேச்சுக்கும் எழுத்துக்குமிடையே உள்ள இடைவெளி தமிழுக்கு மட்டுமே உரிய ஒன்றல்ல : அது எழுத்தறிவு ஒரு சிறுபான்மை யினருக்கே உரியதாக இருந்த காலத்தில் இயல்பானதாயும் இந்த 'ஜனநாயக யுகத்தில்' முக்கிய கவனத்துக்குரியதாயும் நுஃமான் குறிப்பிட்டிருக்கிறார். அவர் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ள விஷயம் ஒன்று தவறாக விளங்கிக்கொள்ளப்பட இடமிருக்கிறது என்று நினைக்கிறேன்; பேச்சுக்கும் எழுத்துக்குமான இடைவெளி எழுத்

படிப்பகம்

தறிவு பரவுவதன் மூலம் இல்லாமற் போய்விடுவதில்லை. இன்றைய நவீன சமுதாயத்தின் தொழில்நுட்பமும் கலாச்சார மாறுதல்களும் மொழிமீது ஏற்படுத்தும் தாக்கங்கள் பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையில் உள்ள இடைவெளியை மட்டுமன்றித் துறைக்குத் துறை வேறுபடும் கிளைமொழிகளையும் உருவாக்குகின்றன. ஆயினும் தமிழின் பிரச்சனை ஆங்கிலத்தினதைவிட வித்தியாசமானது. நம் பின்தங்கிய சமுதாய வளர்ச்சி பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் ஒன்றுபடுத்தும் காரியத்தை மேலும் சிரமமாக்கி வருகிறது. பேச்சுக்கும் எழுத்துக்குமான இடைவெளி இன்றும் வளர்வதற்கு ஒரு சமுதாயப் பிரச்சனை ஆதாரமாக இருக்கிறது. இந்த இடைவெளி, நிரப்பப்படமுடியாது. ஒரு சமுதாயப் பிரச்சனை ஒரு பெரிய முரண்பாடாகும் அபாயமும் இருக்கிறது. தமிழ்ப் பேசும் சமுதாயங்கள் நவீனமடைவதன் மூலமே தமிழ் மொழி நவீனமடைவது சாத்தியமாகும். என்னளவில், இவ்வாறான இடைவெளி இருப்பது என்றைக்குமே இயல்பானது. ஆனால் இந்த இடைவெளியின் தன்மை நம் கவனத்துக்கு உரியது. இதில் நுஃமானுக்கு முரண்பாடு இராது என்பது என் எண்ணம்.

இலக்கண ஆசிரியனின் பங்கு பற்றி நுஃமான் கூறும் இடத்திலும் ''இலக்கண ஆசிரியன் இந்த (இலக்கண) அமைப்பைப் படைப்பதில்லை அவன் ஆராயும் முன்பே அந்த அமைப்பு இருக்கின்றது. இருக்கும் அமைப்பை விளக்குவது மட்டுமே அவன் வேலையாகும்'' என்கிறார். இங்கே அவர் கூறுவது இலக்கண ஆசிரியரின் பங்கை ஒரு புதைபொருள் ஆராய்ச்சியாளனுடைய பங்குடன் ஒப்பிடும் பாங்கில் அமைந்து விடுகிறது. நுஃமான் சரியான ஒரு கருத்தை வலியுறுத்தும் நோக்கில் இலக்கண ஆசிரியன் ஆற்றும் இன்னொரு காரியத்தைப் புறக்கணித்து விட்டார் என்று தோன்றுகிறது. இலக்கண ஆசிரியனது பணி இலக்கண அமைப்பை விளக்குவது என்பது அடிப்படையான உண்மை. ஆனால் அந்த விளக்கத்தின் நோக்கம் என்ன? விளக்கங்கள் வேறுபடுவது ஏன்? இலக்கண விதிகள் பற்றிய கருத்து முரண்பாடுகள் எவ்வாறு உருவாகின்றன? எனவே இலக்கண ஆசிரியனின் பணியில் மேலதிகமான ஒரு நோக்கமும் அது சார்ந்த செயலும் உள்ளமை தெரிகிறது. இலக்கண ஆசிரியன் சில விஷயங்களைக் காலப் போக்கில் மொழிக்குள் புகுந்து விட்டவையாயும் ஏற்கத்தக்கனவாயும் வேறு சிலவற்றை மொழிக்கு ஏற்புடையனவல்ல எனவும் கூற நேர்கிறது. எனவே, இலக்கண ஆசிரியன், விரும்பியோ விரும்பாமலோ நேரடியாகவே மொழி வளர்ச்சியை நெறிப்படுத்தும் காரியத்திலும் இறங்கி விடுகிறான்.



பாரதி வடமொழி இலக்கணத்திலிருந்து தமிழ் மொழி இலக்கணம் தோன்றியமை பற்றியும் தமிழுக்கு இலக்கணம் வகுத்தோர் பற்றியும் தமிழ்மொழி இலக்கணம் வடமொழிக் கலப்புக்கு முன்பு வேறாக இருக்கலாம். என்றவாறும் எழுதியிருப்பதை நுஃமான் தவறென்று தெளிவுபடுத்தியிருக்கிறார். ஆயினும் தமிழுக்கு இலக்கண நூல் அமைக்கும் எண்ணம் வடமொழியில் இலக்கண நூல் ஏற்பட்ட பின்பே ஏற்பட்டமைக்கும் தமிழ் எழுத்துக்கள் முதலில் வடமொழிக்கு அமைக்கப்பட்ட பிராமி எழுத்துக்களை யொட்டியே உருவாகின என்பதற்குமான ஆதாரங்கள் உள்ளன. தமிழ்மீது வடமொழியின் செல்வாக்கும் அது சார்ந்த பண்பாட்டின் பாதிப்பும் மிகவும் பெரியது. பாரதி இலக்கணத்தையும் இலக்கண நூலையும் குழப்பிக்கொண்டதை நுஃமான் சுட்டிக்காட்டுவது சரியே. இங்கு பாரதியின் கருத்துக்கள் ஆதாரமே அற்றவை என்று நிராகரிப்பதைவிட அவை இலக்கணம் பற்றிய குழப்பமான ஒரு கருத்தின் விளைவானவை என்பது கூட நியாயமானது.

எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாக நுஃமான் S.V. சண்முகத்தின் கருத்துக்களையே மேற்கோள் காட்டுவது மூலம் அவர் பின்னவருடன் உடன்படுவது போன்றே தெரிகிறது. இவ்விஷயத்தில் என் கருத்துக்களை வேறு இடங்களில் விளக்கமாக வெளியிட்டுள்ளேன் என்பதோடு மேலும் மேலும் எழுத இருப்பதால் அது பற்றி இங்கு எழுத விரும்பவில்லை. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை பற்றி பாரதியின் அடிப்படையான கருத்து மிகவும் சரியானதே. அதற்கு பாரதி காட்டிய காரணங்களிற்போன்று, கூறும் தீர்வுகளிலும் தவறுகள் உள்ளன. அவை ஓரளவுக்கு பாரதியின் சமுதாயச் சூழலின் விளைவானவை. எனவே, இன்றைய சூழலில் அவை பற்றிய புனர் நோக்கு பயனுள்ளது.

இந்தியாவுக்குப் பொதுப் பாஷை பற்றி பாரதியின் கருத்துக்களைச் சொல்லியபிறகு சமஸ்கிருதம் இந்தியாவின் தேசிய மொழியாவது அசாத்தியம் என்று நுஃமான் சரியாகவே சுட்டிக்காட்டுகிறார். இந்தியைத் தேசிய மொழியாக்குவதன் பிரச்சனைகளையும் அதன் காரணமாகத் தேசிய ஒற்றுமை குலையும் சூழ்நிலையையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். ஆயினும் ரஷ்யாவில் (உண்மையில் முழு சோவியத் யூனியனிலும்) ரஷ்ய மொழி தொடர்பு மொழியாகியதற்கு அது ஏனைய மொழிகளைவிட வளர்ச்சி பெற்றமையைக் காரணமாக்கி அது இயல்பாகவே பொதுத் தொடர்பு மொழியாகியது என்கிறார். இஸ்ரேலில் ஹீப்ரு பொது

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



மொழியாக மறுபடி சிருஷ்டிக்கப்பட்டமைக்கு அங்கு குடியேறிய யூதர்களிடையே பல வேறு மொழிகளையும் பேசுவோர் இருந்தமையால் ஒரு பொது மொழி அவசியமானமையைக் காரணமாகக் காட்டுகிறார் இவைகூடக் கட்டுரையைச் சுருக்கமாக அவர் எழுத முயன்றதன் விளைவுகளோ தெரியவில்லை. நுஃமான் சுட்டிக்காட்டியவற்றை விட முக்கியமான அரசியல் காரணங்கள் உள்ளன என்பது என் அபிப்பிராயம். ஆயினும், அவர் பொதுப்படக் கூற முனைவது போல், சமுதாயக் காரணிகளே இவ்விஷயங்களில் முதன்மை வகிக்கின்றன என்பது எனக்கு உடன்பாடானது.

தாயகம் 1986

# அல்தூஸர் - ஒரு அறிமுகம்

## — சில குறிப்புக்கள்

இந்த நூலைப் படித்து அல்தூஸர் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பவர்கள் ஏமாறலாம். ஏனெனில், இது அல்தூஸர் பற்றிய முறையான ஒரு அறிமுகமாக இல்லாமல், அல்தூஸரின் சில விளக்கங்களும் வியாக்கியானங்களும் ஆசிரியர்களது கருத்துக்களுடன் முரண்படுவதைப் பற்றியதும் அல்தூஸரின் சில நிலைப்பாடுகளை முன்வைத்து அவற்றிற்கு அவர்களது மறுப்புக்களைக் கொண்டதுமான ஒரு நூலேயாகும். உண்மையில் அவர்கள் யாருடன் விவாதிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் குறிப்பிடும் அல்தூஸர் ஆதரவாளர்கள் யாரென்றும் எனக்கு தெளிவில்லை அமைப்பியல் (ஸ்றரக்சுரலிஸ்ர்) மாக்ஸியத்தின் முதல்வர் என்று கருதப்படும் அல்தூஸர் பற்றிய இந்நூலில் அமைப்பியல் பற்றிய விளக்கமேதுமில்லை. அல்தூஸர் வாழ்ந்த பிரெஞ்சு அறிவுச் சூழலில் அமைப்பியலும் மொழியியலும் உளவியற் பகுத்தாய்வும் அல்தூஸர் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகக் கூறும் ஆசிரியர்கள் ஏனோ அவற்றை விளக்கத் தவறி விட்டார்கள். தமிழில் 'ஸ்றரக்சுரலிஸம்' என்ற விஷயம் பற்றியத் தமிழவன் ஒரு விரிவான நூலை 1980களின் முற்பகுதியில் எழுதியுள்ளார். அது பற்றி இந் நூலின் குறிப்புகளிலும் கூட ஒரு சாடையையும் ஏனோ இல்லை.

என் பார்வையில், இந்த நூல், மாக்ஸ் அந்நியமாதலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கினார் என்ற விடயத்தை மையமாக வைத்தே உழல்கிறது என்று தெரிகிறது அதைவிட எஸ் வி. ராஜதுரையின் முன்னுரையின் கூற்றிலும் ''மாக்ஸியத்தின் மனிதநேய' 'மானுடத்தவம்' பரிமாணம் மட்டுமே நம்பிக்கை தரவல்லது'' என்ற கருத்தை வலியுறுத்தும் அவசியம் தெரிகிறது. 'மேற்கு ஐரோப்பிய மாக்ஸியத்திற்' கணிசமான பகுதி மாக்ஸியத்தைப் பற்றிய ஏட்டுச் சுரக்காய் விவாதமாகவும் மாக்ஸின் மனதில் என்ன இருந்தது என்ற ஆராய்வுகளுமாகவே உள்ளது. அந்த கருத்துச் சுதந்திரம் அவ்வாறே இருக்கட்டும். அந்நியமாதலும் அமைப்பியலும் இருத்தலியல்வாதமும் இன்றைய உலகைப் புரிந்துகொள்ளவும் மாற்றவுமான அரசியல் இயக்கத்திற்கும் அரசியல் நடைமுறைக்கும் என்ன பங்கை அளித்துள்ளன, அளிக்க கூடியன என்று எனக்கு நிச்சயமில்லை. நம்பிக்கை தரக்கூடிய விதமான ஒரு ஆய்வையோ அணுகுமுறையையோ இந்த

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



நூலில் விருத்தியடையும் விவாதங்களில் என்னாற் காணமுடியவு மில்லை.

அல்தூஸரின் மொழிப்பிரயோகம் சிக்கலான முறையில் மிக எளிய ஜோஷயத்தைக் கூறும் தன்மையுடையது என்று கூறும் ஆசிரியர்களின் எழுத்து நடை, தமிழ் மொழி வழக்கிற்கு மிகவும் அந்நியமான முறை யிலேயே உள்ளது. சொல்லமைப்பிலும் வாக்கிய அமைப்பிலும் உள்ள விறைப்பான தன்மைக்கு என்ன நியாயம் என்று தெரியவில்லை. இந்த நூலின் பல பகுதிகளைத் தமிழில் வாசித்துச் சிரமப்படுவோர் அதிலும் எளிதாக, ஆங்கிலத்தைப் படித்து ஆங்கிலத்திலேயே ஒரு நல்ல நூலை வாசித்து அதிக பயனை அடைய முடியுமோ என்ற எண்ணமும் எனக்கு தலை தூக்கியது. இக்குறைபாடு ஓரளவுக்கு தமிழிற் கலைச் சொற்களின் விருத்தி தொடர்பானது எனினும், ஆசிரியர்கள் இது பற்றிக் கூடிய சிரத்தை காட்டியிருக்கமுடியும்.

அல்தூஸரின் வாதங்களை எதிர்கொள்ள ஆசிரியர்கள் மேற் கொள்ளும் வாதங்கள் பலவீனமானவை. மாக்ஸை இளம் மாக்ஸ், முதிய மாக்ஸ் என்று பிரிப்பது வெறும் கற்பனை எனவும் இரண்டிலும் விரிவி நிற்பது ஒரே ஒரு முழுமையான பார்வையே எனவும் வலியுறுத்தும் ஆசிரியர்கள் அந்த முழுமையான பார்வைக்கு ஒரு விருத்தியும் வளர்ச்சியும் உண்டு என்பதையும் தொடக்க நிலைக்கும் விருத்தி பெற்ற பிற்கால நிலைப்பாட்டுக்குமிடையே ஒற்றுமை களுடன் வேற்றுமைகளும் இருக்க முடியும் என்பதையும் உணர்ந்த தாகத் தெரியவில்லை. (அல்தூஸரின் 'கறாரான வாதங்கள்' போல இதுவும் ஒரு கறாரான நிலைப்பாடாக அவர்கட்குத் தெரிய வில்லையோ?) மாக்ஸின் பிற்காலப் படைப்புக்களில் அவரது முற்காலச் சிந்தனைகளில் காணப்பட்ட சில அம்சங்கள் அதிகம் வலியுறுத்தப் படாமை, அவற்றை அவர் முற்றாக நிராகரித்து விட்டார் என்று அர்த்தப்படாது எனினும், அவற்றிற்கு அவர் வழங்கிய முக்கியத் துவம் குறைந்து விட்டதைக் குறிக்காதா? ஒருவரது சிந்தனையின் விருத்தியின் போக்கில் ஏற்படுகிற முறிவுகள் 'சுத்தமான' 'கறாரான' முறிவுகளாகவே இருக்க வேண்டுமா?

மாக்ஸ், மனிதன் என்ற சொல்லைத் தன் இளமைக் காலப் படைப்புக்களில் (வர்க்கங்கட்கும் வரலாற்றுக்கும் பாற்பட்ட) தனி மனிதனைக் குறிக்குமாறு பயன்படுத்துகிறார் என்று அல்தூஸர் கருதுவது தவறு. அது பொதுப்பட மனிதர்கள் என்பதையே குறிக் கிறது என்பது ஆசிரியர்களது வாதம். இதை நிறுவுவதானால்,



மாக்ஸின் எழுத்துக்குரிய மொழி வழக்கை வைத்து அவர் எழுதிய மொழியினதும் அது பயன்படுத்தப்பட்ட சிந்தனைத் துறையின் மொழி வழக்கிற்கும் சார்பாக) வாதங்களை முன் வைக்க முடியுமே ஒழியத் தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள நாளாந்த மொழி வழக்கு, ஆசிரியர்களது வாதங்களை நிறுவப் போதியதல்ல.

சிலருக்கு மாக்ஸியம் என்பது மாக்ஸின் மனிதன் செயற்பாடு பற்றிய ஆராய்வாகவே இருக்கிறது. லெனினும் மாஓவும் மாக்ஸி யத்தை விருத்தி செய்ய அதன் சாராம்ஸத்தைப் புரிந்து கொண்ட விதம் வேறு. மாக்ஸியத்தை முன்னெடுத்துச் செல்ல முன்னைய ஆய்வுகளை மேற்கொள்வோர் என்ன பங்களிப்பை வழங்க முடியும் என்பதை வரலாறு தீர்மானிக்கட்டும்.

ஐரோப்பிய மாக்ஸியவாதிகள் பலரின் ஆய்வுகள் தவறவிட்ட ஒரு முக்கிய உண்மை : முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் இன்று மாக்ஸின் காலத்தின் தேசிய எல்லைகளைத் தாண்டி, லெனின் கண்ட ஏகாதிபத்திய வடிவத்தின் அதிபயங்கர விருத்தியாக முழு மனித இனத்தினதும் இருப்பையே மிரட்டும் நிலைக்கு வந்துள்ளன. முதலாளித்துவ நாடுகளின் தேசிய எல்லைகட்குள் வர்க்கப் போராட்டத்தையும் முரண்பாடுகளையும் ஆராய்ந்து தொழிலாளி வர்க்கத்தின் மீது நம்பிக்கை இழந்து போய்ச் சமுதாயத்தின் விளிம்பில் நிற்கும் உதிரிவர்க்கங்களையும் மாணவர் களையும் புரட்சியின் முன்னோடிகளாகக் கண்டவர்களின் ஆய்வுகளும் பொய்த்துவிட்டன: காரணம் என்ன? இதை மறந்து 1968 இன் பிரெஞ்சு மாணவர் எழுச்சி, கிராம்ஸ்சி, லூக்காஷ் போன்ற விஷயங்களில் விமர்சனமின்றி ஒருதலைப்பட்சமான தன்மையை ஆசிரியர்கள் காட்டுகின்றனர். ஸ்டாலின், ஸ்டாலினிஸம் (இது மாஓ இஸம் போன்று, ஆயினும் அதிலும் அதிக முனைப்புடன், ஸ்டாலின் எதிர்ப்பாளர்கள் உருவாக்கிப் பயன்படுத்தும் ஒரு சொல்) என்ற விஷயங்கள், அவற்றிற்குரிய வரலாற்றுச் சூழல்களைக் கணிப்பிலெடாமலே பகைமையுடன் கையாளப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் மிகுந்த அனுதாபங்காட்டும் மாஓ, ஸ்டாலினுடன் மிகுந்த கருத்து வேறுபாடுகளையுடையவராக இருந்த போதும், ஸ்டாலின் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் மிக நிதானமானவை. ஸ்டாலினிசம் என்று அக்காலத்தில் வசைபாடப்பட்ட சிந்தனைப் போக்கே சீனாவிலும், வியட்நாமிலும் வேறு பல நாடுகளிலும் அதி உன்னதமான வெற்றிகட்கு வழிகாட்டியது.

''உலகெங்கும் வலதுசாரிப் பிற்போக்கு அலை அடித்தவண்ணம் இருக்கிறது'' என்ற ராஜதுரையின் கூற்று ஒரு அரை உண்மை,

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



வரலாறு என்றுமே நேர்கோட்டில் விருத்தியடைந்ததில்லை. விருத்தியடையவும் முடியாது. முதலாளித்துவத்தின் நெருக்கடியின் தோற்றப்பாடுகளை நாம் வரலாற்றுப் போக்கின் முழுமையுடன் குழப்பிக்கொள்ளக்கூடாது. காலம் என்கிற பரிமாணம் கொஞ்சம் விரிவானது. நமது சமுதாயங்களை உலக சமுதாயத்துடன் உறவுபடுத்தி, நமது குறிப்பான அம்சம்கட்கும், உலக வரலாற்றின் பொதுவான போக்கிற்கும் உள்ள ஐக்கியத்தையும் வேற்றுமைகளையும் சரிவர அடையாளங் காண்பதன் மூலமே நம்மால் முன்னோக்கிச் செல்லமுடியும். மாக்ஸியத்தின் 'மனிதநேய' 'மானுடத்துவப்' பரிமாணத்தில் மட்டுமே நம்பிக்கையைத் தரிசிக்கின்ற போக்குப் புதியதல்ல. அதன் மூலம் மாக்ஸியத்தைச் சிந்தனை மட்டத்திலும் செயல்மட்டத்திலும் வளர்த்தெடுக்கிற பேச்சு இதுவரை எதையும் சாதிக்கவும் இல்லை. ஆசிரியர்கள் எதையாவது சாதிக்க விரும்பினால் முதலில் தெளிவாகவும் எளிமையாகவும் எழுதப் பழகட்டும்.

மனிதம், ஸ்விற்ஸலாந்து, 1990

# அமைப்பியல்வாதமும் தமிழ் இலக்கியமும்*

புத்தகத்தைப் பற்றி எழுதுமுன் இரண்டு கதைகளைச் சொல்லலாமென்று நினைக்கிறேன். முதலாவது, ராம கிருஷ்ணர் சொன்ன ஒரு கதையின் மாற்று வடிவம்:

ஒரு ஊரிலே ஒரு குரு. அவருக்கு ஒரு சீடர். குருவுடன் இருந்து எதையுமே சாதிக்கவில்லையே என்ற விரக்தி அவருக்கு. திடீரென ஒரு நாள் எங்கோ போய் விட்டார். வெகுகாலம் கழித்து வெகு உற்சாகமாகத் திரும்பி வந்தார். பழைய குருவைக் காணப் போனபோது குரு தியானத்தில் இருந்தார். தியானம் முடிந்த குரு சீடரைப் பார்த்து வாய் திறக்கு முன்னரே ''கண்டு பிடித்து விட்டேன்! கண்டுபிடித்து விட்டேன்!'' என்று சீடர் கூவினார். குரு நிதானமாக ''எதை?'' என்று கேட்டார். கேட்டகுருவின் கையைச் சீடர் பற்றித் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குப் போனார். குருவைக் கரையில் நிறுத்தி விட்டு ஆற்று நீர் மேல் நடந்து அக்கரைக்குப் போனார். பிறகு, நீர் மேல் நடந்து திரும்பி வந்து குருவிடம் ''இதைத்தான் கண்டு பிடித்து விட்டேன்'' என்று மிகுந்த பெருமையுடன் சொன்னார். குரு புன்முறுவலுடன் ''இதற்காகவா நீ இவ்வளவு காலத்தையும் செலவிட்டாய்? படகோட்டியிடம் அரை அணா கொடுத்தால் அவனே உன்னைக்கொண்டு போய்க் கொண்டு வந்திருப்பானே!'' என்றார்.

இரண்டாவது நிசமாக நடந்தது. பேர்களைக் குறிப்பிட அவசியமில்லை.

''என்னுடைய சகபாடிகளில் ஒருவர் புதிதாக மாக்ஸியத்தால் ஈர்க்கப்பட்டு இயங்கியல் பற்றி நிறைய வாசித்தார். தேனீர் அருந்தப் போனாலும் இயங்கியல் பற்றியே பேசுவார். படம் பார்க்கப் போனாலும் சாப்பிடப் போனாலும் இயங்கியலே பேச்சாக இருந்தது. வெகு சிரமப் பட்டுக் கதையை மாற்றுவோம். ஒரு நாள் ஒரு இளம்

*அமைப்பியல்வாதமும் தமிழ் இலக்கியமும்— தமிழவன், காவ்யா, பெங்களூர், 1991, 151 + 8 ப., விலை: ரூ. 30



படிப்பகம்

பட்டதாரி மாணவர் எங்களைப் பார்த்துப் போக வந்திருந்தார். அவர் முன்னிலையிலும் இயங்கியல் பற்றிய பேச்சு எழுந்தது. மிகவும் மரியாதையாக ''இயங்கியல் என்றால் என்ன என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார். தோழர் பெருமையுடன் ''அதையெல்லாம் லேசாக விளக்க முடியாது. நிறைய வாசிக்க வேண்டும்'' என்றார். பழைய மாணவர் ஒருவித சலனமுமின்றி ''இயங்கியலைக் கொண்டு என்ன செய்யமுடியும் என்றாவது சொல்ல முடியுமாஎன்றார். தோழர் மிகவும் உற்சாகமாக ''எதை வேண்டுமானாலும் செய்யமுடியும்'' என்றார் பழைய மாணவர்'' என்னுடைய பாலுணர்வை எப்படி இயங்கியல் மூலம் கட்டுப்படுத்தலாம் என்று சொல்வீர்களா?'' என்று சிரிக்காமலே கேட்டார் அதற்குப் பிறகு நம்மிடையே இயங்கியலுக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது.

சீடர் நீர்மேல் நடக்கக் கற்றது போலவும் தோழர் இயங்கியல் பற்றிக் கற்றது போலவும் தமிழவன் அமைப்பியல் பற்றிக் கற்றிருக்கக் கூடுமோ என்னவோ! தமிழில் அமைப்பியல்வாதத்தைப் பற்றி முதலில் வெளிவந்த நூல் 1982 மட்டில் வெளியான ''ஸ்ரக்சுரலிஸம்'' தமிழவன் எழுதியது. அதை வாசித்து விளங்குவதற்கு ஒருவர் எடுக்க வேண்டிய சிரமம் அதிகம். அதற்குப் பதிலாக, அவர் ஆங்கிலமோ பிரெஞ்சு மொழியோ கற்று அந்த மொழியில் ஏதாவது நல்ல புத்தகத்தை வாசித்து விஷயத்தை அறிய அதைவிட அதிகம் சிரமம் தேவைப்பட்டிருக்குமோ தெரியாது.

## தமிழ்ப் புத்திஜீவிகளும் இஸங்களும்

தமிழ் நாட்டிலே புதிய 'இஸங்'களுக்கும் 'லாஜி'களுக்கும் எப்போதுமே மவுசு உண்டு. யாருமே முன்பு அறிந்திராத ஒரு இஸத்தையோ லாஜியையோ கண்டுபிடித்த ஒருவர், மா வெந்து உருவி ஆவியாகும் வரை அரை அரையென்று அரைத்துத் தள்ளலாம். அந்த இஸமோ லாஜியோ அவர்களது பேட்டை. அதற்குள் அயலார் கால் வைத்தால் வந்தது தகராறு.

'புதுமை புதுமைக்காகவே' என்ற போக்கைப் பற்றிய எனது சொற்கள் புதிதாகத் தமிழுக்கு எதையும் கொண்டு வருகிறவர்களை ஏளனம் செய்ய முனையவில்லை. எல்லாமறிந்த விதமாக நடக்கிற பம்மாத்துக்களை மட்டுமே கடுமையாக விமர்சிக்கிறேன். ஒருவர் புதிதாகக் கொண்டு வரும் இஸமோ லாஜியோ புதிய விஷயங்களையும் புதிய அணுகுமுறைகளையும் நமக்குக் காட்டுகிற அளவில்



அவரது பங்களிப்பு முக்கியமானது. அதன் நிறைகுறைகளை அவர் நிதானமாக ஆராய்ந்து விளக்குவாரானால் அது போற்றத்தக்கது. அதன் மூலம் மட்டுமே சில காரியங்கள் சாத்தியம் என்று அவர் நம்பினால் அதை அவர் அவ்வாறு பிரயோகித்துக் காட்ட வேண்டும். தமிழவன் அமைப்பியல்வாதத்தின் மூலம் செய்து காட்ட முனைவதைக் கேள்விக்கு உட்படுத்த எவருக்கும் உரிமை உண்டு. நான் என்னுடைய உரிமையை இங்கு பிரயோகிக்கிறேன். என்னுடைய அமைப்பியல் அறிவின் அளவோ ஆழமோ இங்கு முக்கியமானவை அல்ல. என் கைம்மண்ணளவுக்குள் அமைப்பியல்வாதம் அடங்கவில்லை. ஆயினும் தமிழவனது புதிய நூலின் தன்மையை அளவிட அது தடையாக இல்லை.

அமைப்பியல் அணுகுமுறையைப் பாவித்து விஷயங்களை ஆராய்வதன் மூலம் எதைச் சாதிக்கலாம் என்பதல்ல. இங்குள்ள பிரச்சனை தமிழவன் இந்த நூலில் எதைச்சாதித்துள்ளார் என்பதே நமது கவனத்துக்குரியது. முன்னுரை தவிர எட்டுக் கட்டுரைகள் உள்ள இத் தொகுப்பில் அமைப்பியலின் பிரயோகம் பற்றி நேரடியான விளக்கம் உள்ள ஒரு கட்டுரை ''அமைப்பியல் திறனாய்வும் தமிழும்''. மற்றையவற்றில் அமைப்பியல் பற்றிய தமிழவனது புரிதல் வேறுபடும் அளவுகளிற் புலனாகிறது.

விஞ்ஞானம் பற்றித் தமிழவன் வைத்திருக்கும் பார்வையும் தமிழ் மாக்ஸிய விமர்சகர்கள் பற்றிய அவரது கணிப்பீட்டின் விளைவுகளும் பெரும்பாலான கட்டுரைகளில் வெளிப்படுகின்றன. அவரது தாக்குதலுக்குப் பிரதான இலக்காக இருப்பவர் கைலாசபதி. அவரது பார்வையில் மாக்ஸிய இலக்கிய விமர்சனத்தின் சகல குறைபாடுகட்கும் காரணி Positivism எனப்படும் பொருண்மைவாதம் [?] மேலைய [முக்கியமாக பிரித்தானிய] மாக்ஸியவாதிகளின் வழிகாட்டல், பண்டித மாக்ஸியம் [அப்படி ஒன்று இருக்குமாயின் அது எது?] என்ற விதமாக, அதன் குறைபாடுகட்கு ஆதாரங்களாகச் செயற்பட்டவற்றின் பட்டியல் நீளுகிறது. பிறகு, சர்வரோக நிவாரணியாகத் தமிழவனுடைய அமைப்பியல் வந்து தமிழ் இலக்கிய விமர்சனத்தின் உயிரைக் காக்கிறது. தமிழவனின் அமைப்பியல் நோக்கு ஆக்க எழுத்தாளன் தன்படைப்பினுள் விமர்சகனாகுவதை எதிர்க்கும் (ப.95) ஆய்வறிவாளன் விமர்சகனாவதற்குக் கண்டனம் தெரிவிக்கும் (ப.35) அங்கே கே. டானியலின் சாதிய உணர்வு (!) கைலாசபதியின் விமர்சனக் குறைபாடுகள் எல்லாவற்றுக்கும் ஆதாரபூர்வமான விளக்கங்கள் இருக்கும். இலங்கையின் தேசியவாதத் தலைமையான தமிழரசுக் கட்சி (தமிழவனுக்கு பெடரல் கட்சி) இடதுசாரி இயக்கம் பற்றிய

மதிப்பீடுகள் தமிழகத்தில் திமுக, கம்யூனிஸ்டு கட்சி என்பன பற்றிய தமிழவனது மதிப்பீடுகளின் அடிப்படையில் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும். இந்தியாவிலும் இலங்கையிலும் பரவிய மாக்ஸியம் இவ்விரு நாடுகளின் காலனியாதிக்க எஜமானர்களாயிருந்த பிரிட்டிஷ்காரர்கள் வழியாகத்தான் வந்தது என்பதைக் கவனிக்க வேண்டும்'' (ப. 23) என்று தமிழவன் எழுதுவதில் உள்ள பிசகு கவளயீனத்தின் விளைவுதான். ஆனாலும் இலங்கையில் எவ்வாறு ட்ரொட்ஸ்கியம் அதிமுக்கிய இடதுசாரிக் கட்சிக்கு வழிகாட்ட நேர்ந்தது என்பதற்குத் தமிழவனுடைய விளக்கம் என்னவென்று தெரியவில்லை கைலாசபதி மீது அவர் சுமத்துகிற குற்றத்தைவிடப் பாரிய குற்றங்கள் அவரது எழுத்தில் உள்ளன.

## டானியலைக் கூறுபோட்டுக் கண்டது

கதை சொல்லியின் அரசியல் என்ற கட்டுரை டானியலின் ''கானல்'' பற்றிய விமர்சனம். இது யதார்த்த பாணி நாவலைப் பற்றிய கண்டனமுங்கூட. தமிழவனின் அபிப்பிராயத்தில் யதார்த்தபாணி நாவல் உண்மைச் சொல்லுவதாக வேஷம் போடும். அதைத் தோலுரித்துக்காட்டி அப்பாவி வாசகனை ரட்சிப்பது விமர்சகனது கடமை. மிகையான கூற்றுத்தான். ஆனாலும் அது நியாயமான ஒரு அடிப்படையில் எழுகிறது. டானியலின் நாவலைத் தோலுரித்துத் தமிழவன் கண்டுபிடித்தது என்ன என்று பார்ப்போமா? கதை சொல்லியின் குரல் கிறிஸ்தவ மதச் சாய்வும் உயர்சாதி மீதான சாய்வையும் காட்டுகிறதாம்! பாவம் டானியல். இரு பாகங்களில் வந்த பஞ்சமர் நாவலில் உயர் சாதியார் மீது துவேஷத்துடன் எழுதியதாகக் கண்டிக்கப்பட்ட மனிதர். இன்னொரு அபாரமான போடு போடுகிறார். தமிழவன்: ''கதை சொல்லி நாவலின் மொழியின் குரல். மொழியை அது என்று கூறலாம் தானே. 'அவள்' என்று ஏன் கூறக்கூடாது என்று பெண்மைவாதிகள் கேட்பார்கள், கதை சொல்லி 'அவள்' என்று பார்த்தால் ஒரு பெண்ணிய விமர்சனம் கிடைக்கும். இப்போது என் நோக்கம் அதுவல்ல.'' (ப 105) தமிழவன் தமாஷ் பண்ணுகிறாரென நம்புகிறேன். அல்லாது போனால் அவரது அமைப்பியல் வாதம் எவ்வளவு எளிதாக ஒரு பெண்ணியப் பார்வையைச் சாத்தியமாக்கி விடுகிறது என்று நாம் அசந்து போக வேண்டும். டானியலின் விமர்சகரின் பிரச்சனை என்னவென்றால், டானியல் சித்தரிக்க முனையும் சமுதாயச் சூழலையே அறியாமல், எட்ட இருந்து உதிர்க்கும் ஊகங்களுக்கு அமைப்பியல் வர்ணம் பூசி அவற்றை உண்மையாக்கும் அவஸ்தைதான்.



## பாரதிதாசனிற் தெரியாமற் போனது

பாரதிதாசன் பற்றிய ஆய்வில் பாரதிதாசனின் ஒரு அம்சம் வெகு கவனமாக மூடிக் கட்டப்பட்டுள்ளது. ''பாரதிதாசனின் தமிழுணர்வு நாணயமானது. பொருள் செறிந்தது. அதனைக் குறை கூற முடியாது. ஏனெனில், தமிழ் என்ற குரலின் மூலம் அவர் வலியுறுத்தியது வேறு சிந்தனைகளையாகும்'' (ப. 132). பாரதிதாசனுக்குள் இருந்த ஒரு முரண்பாடு பழமையை எதிர்க்கும் பகுத்தறிவுவாதப் பார்வைக்கும் 'தமிழின் பழம் மேன்மைக்கு' மீளும் அகச்சார்பான ஆவலுக்கு மிடையிலான மோதல். இதை அவராற் தீர்க்க முடியவில்லை. இது முழுத் திராவிட இயக்கத்துள்ளும் இருந்த பிரச்சனை. இதைக் கவனமாக ஒதுக்கி வைப்பதன் மூலம் பாரதிதாசனது தமிழுணர்வு பற்றிய புரிதலைப் பலவீனப்படுத்த மட்டுமே முடியும். வடமொழியைத் தமிழுக்கு எதிரி என்று காட்டித் தமிழுக்கு நிசமான ஆபத்தாக வந்த ஆங்கில மோகத்தை (முக்கியமாகத் தமிழ்நாட்டுப் புத்திஜீவிகளது ஆங்கிலத் தமிழ் நடை போன்ற வெளிப்பாடுகளை) முற்றாகவே தவற விட்டவர்களுள் பாரதிதாசனும் ஒருவர் தான். பாரதிதாசனின் சமூகப் பிரக்ஞையின் வலிய அம்சங்கள் பலவீனப்படுவதும் இந்தக் குறுகிய பார்வையின் விளைவுதான். எனக்கு இந்த ஆய்வின் நோக்கம் என்னவென்று தெரியாது. அது எதுவானாலும் மற்றவர்களுடைய எழுத்துக்களில் இல்லாத முரண்பாடுகளை எல்லாம் தேடியறியவல்ல கட்டுரையாளர், பாரதிதாசனுக்குள் உள்ள அடிப்படையான முரண்பாடுகளை மட்டும் அழகாக ஒதுக்கிவிட்டு ''பாரதிதாசனில் தமிழ் எனும் அர்த்த பரிமாணத்தை'' அலசுகிறார்.

## ஈழத்துப் புதுக்கவிதையா, அதென்ன?

தமிழ்ப் புதுக்கவிதை பற்றிய ஒரு கட்டுரை. அங்கே ஈழத்துக் கவிதை பற்றி ஒரு சொல் கிடையாது. ''எண்பதுகளில் புதுக்கவிதை: தமிழனின் இரண்டாம் எதார்த்தம்'' என்று கட்டுரைத் தலைப்பு. பசுவய்யா என்கிற சுந்தர ராமசாமி, பிரம்மராஜன் போன்றவர்களது தத்துவ விசாரங்களை எல்லாம் விழுந்து விழுந்து ரசித்துப் போதாக் குறைக்குத் தன்னுடைய வியாக்கியானங்களையும் சேர்த்து அவர் காணும் இரண்டாம் யதார்த்தம் பற்றிய விளக்கம் இது:

''எண்பதுகளில் கவிஞன் முற்றாய் உள்முகமாகி விட்டான்... ஆனால் உள்முகமாய் போகும் பொருள்முதல்வாதி மொழியின் பயங்கர உள்தர்க்கத்தின் வீச்சால் ஆகர்ஷிக்கப்படுவது நடக்கும். எண்பதுகளில் புதுக் கவிதையில் அதுதான் நடந்துள்ளது. புறப்

போராட்டத்தைப் புதுக்கவிஞர்கள் இப்படி நடத்தியுள்ளனர். இது அவர்களைச் சமூகப் பொறுப்பற்றவர்களாக்கி விடாது. புதுக் கவிதையின் சமூகப் பொறுப்பு வடிவம்தான் இதுவும். உள்வயமாக அதாவது, மொழிவயமாகிப் புறவயமாகக் கொடுமையைக் கண்ட, பாணி இது. இதில் ஆத்மாநாம் மட்டும் புற உலகக் கொடுமையையும் சேர்த்து உள்வயமாக்கும் கவிஞராகக் கிடைக்கிறார்...

''இந்த இரண்டாம் எதார்த்தமென்பது இவ்வகையில் பார்த்தால் முதல் எதார்த்தத்தின் சாயை. அதாவது முதல் எதார்த்தமே ஒரு சாயை என்கையில் இரண்டாம் எதார்த்தம் அதன் இரண்டாம் சாயை... முதல் எதார்த்தம் ஒரு நிழல் என்பதை இரண்டாம் எதார்த்தம் நிரூபிக்கிறது... மொழி வாய்ப்பட்ட முதல் எதார்த்தம் தத்துவமாய், சித்தாந்தமாய் எதார்த்தத்தை ஒரு சட்டகத்துள் அடக்கு கையில் இரண்டாம் எதார்த்தம் முளைக்கிறது... வறுமை, சுரண்டல் பற்றி ஆயிரமாயிரம் வரிகள் கவிதையாய், கட்டுரையாய் வேறு பல வடிவங்களாய் எழுதப்பட்டபோது உண்மையை நுட்ப உணர்வால் கண்டு எழுதப்பட்ட இரண்டாம் யதார்த்தமொழியே இரண்டாம் எதார்த்தக் கவிதைகள்.''

தமிழ்நாட்டுப் புதுக்கவிதையின் அவலத்தை, சமுதாய உணர்வினின்று ஒதுங்கிய சோகை பிடித்த நிலைமையை அழகுபடுத்த வேண்டுமானால், நிச்சயமாக அதற்கான ஆட்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் புதுக்கவிதைகளை ஈழத்துக் கவிதைகளுடன் ஒப்பிட்டால், இந்த இரண்டாம் யதார்த்தம் என்ற கவிதைப் போக்கின் வறுமை விளங்கி விடும். தமிழவன் இதை அறியாதவரல்ல என ஊகிக்கிறேன். தமிழவன் போற்றும் தமிழ்நாட்டுப் புதுக்கவிதை சமுதாய யதார்த்தத்தினின்று தப்பி ஓட முனைகிறது. அதற்கு என்ன பேர் வைத்தாலென்ன.

## ராஜாவின் துணி அலுமாரி

இந்த இடத்தில், தமிழவன் 1983 அளவில் சுந்தர ராமசாமியின் ஜே. ஜே: சில குறிப்புக்கள் பற்றி எழுதிய நீண்ட விமர்சனம் பற்றிக் குறிப்பிடுவது பயனுள்ளது. மையத்தைத் தகர்க்கும் நாவல் என்று ஏதோ சொன்னதோடு, இடதுசாரிகள் மீது ராமசாமியின் ஒட்டு மொத்தமான தாக்குதல் பற்றிக் குறிப்பிட்ட விமர்சனங்களை எல்லாம் தட்டிக் கழித்தும் எழுதியிருந்தார். ராமசாமியின் எழுத்தின் நேர்மை யீனம் பற்றி ''அலை''யில் வந்த சுருக்கமான எனது விமர்சனத்தில் எழுதியிருந்தேன். அவரது பாத்திரப் படைப்பின் குளறுபடிகள் பற்றியும் நாவலுடைய யதார்த்தப் பண்பை அதிகப்படுத்தும் முனைப்பிலான சில பம்மாத்துக்களைப் பற்றியும் எழுதியிருந்தேன். சில ஆண்டுகள் முன் ஞானி இந்த நாவல் பற்றி எழுதியதை அண்மை யிற் காணக் கிடைத்தது அது எனக்குப் பல விஷயங்களில் மிகவும் உடன்பாடாக இருந்தது. தமிழவனுடைய அமைப்பியற் பார்வை, அப்பட்டமாகத் தெரியும் உண்மைகளை அலட்சியம் செய்கிறது. ஏனெனில் ராஜாவின் புதிய ஆடைகளை வர்ணிக்கும் ஆற்றல் உள்ள ஒருவருக்குத்தான் சாமான்யரின் கண்களுக்குத் தெரியாத சிறப்புக்க ளெல்லாம் தெரியும்.



## கைலாசபதிக்கு அடிக்க எந்த தடியானாலென்ன

கைலாசபதி Positivism என்கிற பொருண்மைவாதத்தாலேயே வழி நடத்தப்பட்டார் என்று மிகவுஞ் சிரமப்பட்டு விளக்க முயல்கிற தமிழவன் அதற்குப் புறநடையாகக் கைலாசபதியின் ஆய்வுகள் அமை யும்போது அதற்கு வேறு விளக்கங்களைத் தந்து கொண்டு போகிறார். கைலாசபதி அன்றைய தமிழ்ப் புதுக்கவிதையை நிராகரித்தமை, ஜேம்ஸ் ஜொய்ஸ் முதலான நாவலாசிரியர்களது தனி மனிதவாத முனைப்பை விமர்சித்தமை, அதிலும் முக்கியமாக, மு. தளையசிங்கம், க. நா. சுப்பிரமணியம் போன்றோர் மீது கடுமையான தாக்குதல்கள் தொடுத்தமை போன்ற விஷயங்கள் தமிழவனது கண்ணில் முக்கிய குற்றங்கள். அதைவிட, 'விஞ்ஞானம் அகவயப் பார்வைகளை ஏற்பதில்லை, கருத்துக்களிலிருந்து சமுதாயம் தோன்றுவதில்லை, புறவயமானது அகவயமானதை நிர்ணயிக்கிறது, மொழியும் மதமும் கலாச்சாரமும் பொருளாதார அடிப்படையிலே அமைந்துள்ளன என் பன போன்ற கருத்துக்களை மிகவும் கொச்சையாகவே விளங்கிக் கொண்ட தமிழவன், அந்தக் கொச்சைத் தனத்தைப் பிறர் மீதும் சுமத்துகிறார் என்றே தெரிகிறது. இயங்கியல் பற்றிய விஷயத்திற் தமிழவன் காட்டும் அசட்டை அமைப்பியல்வாதத்தினுள் புகுந்துள்ள ஒரு மாறா நிலையிற் போக்கின் விளைவுதானோ தெரியவில்லை. விஞ்ஞானமும் மாயவித்தையும் ஒரு வகையில் ஒன்றே தான் என்று ஜோசப் நீடம் (Joseph Needham) கூறுவதன் சாரம் தமிழவனுக்கு விளங்காததில் அதிசயமில்லை. தமிழவனைப் பொறுத்தவரை, விஞ்ஞானமென்பது அவர் அறிந்த ரஸாயனம், பௌதிகம் என்பன போன்று திட்டவட்டமான விதிகளாலானது, இந்த நிலைமை இன்று வெகுவாக மாறிவிட்டது பற்றி அவர் அறியார். டாவினின் ஆய்வுமுறை முற்றிலும் அகவயமானது என்றவாறான தமிழவனின் கருத்தும் விஞ்ஞான முறை பற்றி அவரது குழப்பமான கருத்தின் பிரதிபலிப்புத்

தான். விஞ்ஞானம் எப்போதுமே மாதிரியுருக்களைக் கட்டி அவற்றின் அடிப்படையில் நடைமுறை—கொள்கை—நடைமுறை என்ற சுற்றிலேயே வளர்ந்து வந்துள்ளது. இந்த மாதிரியுருக்களை விஞ்ஞான ரீதியானவையாக்குவது அவற்றின் ''பொய்ப்பிக்கப்படக் கூடியமை'' என்று காள் பொப்பர் (Karl Popper) விளக்கியுள்ளார்.

## விஞ்ஞானமும் அகச்சார்பும்

கருத்துக்களிலிருந்து சமுதாயம் தோன்றுவதில்லை என்பது சமுதாய மாற்றத்துக்குரிய கருத்துக்களும் சமுதாய நடைமுறையின் விளைவுகளே என்பதையும் சமுதாயத்திற்குப் புறம்பாகக் கருத்துக்கள் தோன்றிப் புதிய ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியாது என்பதையும் குறிக்கிறது. அதாவது, நடைமுறையே அடிப்படையானது என்று கூறுகிறது. (''சரியான கருத்துக்கள் எங்கிருந்து வருகின்றன?'' என்று மாஓ சேதுங் கட்டுரையைப் பார்க்கவும்). விஞ்ஞானம் அகவயப் பார்வைகளை ஏற்பதில்லை என்பதன் சாராம்ஸம், விஞ்ஞான உண்மைகள் ஒருவரது விருப்பு வெறுப்புக்களால் நிர்ணயமாவதில்லை என்பதே. விஞ்ஞான உண்மைகள் மனிதர் உலகில் மனித வியாக்கியானங்களாக உள்ளன. விஞ்ஞானத்தின் முனைப்பிலும் நடைமுறையிலும் மனிதரது அகச்சார்புபங்களித்தே வந்துள்ளது. ஆயினும் எவ்வளவு சிக்கலான விஞ்ஞானமாயினும் அதன் விதிகள் (மனிதர் அறிந்தாலும் அறியாவிட்டாலும்) மனிதரது ஆளுமைக்கு வெளியில் நின்றே இயங்குவன. அவற்றை அறிவதன் மூலம் மனிதர் தமது சூழலுடனான தமது உறவையும் நமது இருப்பின் மீது தமது ஆளுமையையும், வரையறைக்கு உட்பட்டு, நிர்ணயிக்க முடியும். ஆனால் அடிப்படையான விதிகளை அவர்கள் ஒருவேளை அறியலாமேயொழிய மாற்ற முடியாது.

மொழியும் மதமும் பண்பாடும் பொருளாதாரத் தளத்தின் மீது அமைத்து இருப்பதால் அவை எளிமையான சூத்திரங்களால் பொருளாதாரத்துடன் உறவுபடுத்தப்படுமென்றோ சமுதாய அமைப்பின் மீது அவற்றுக்கு ஒருவிதமான தாக்கமுமில்லையோ என்று கருத வேண்டுமா? இங்கே வலியுறுத்தப்படும் விஷயம் பொருளாதாரமே, அதாவது சமுதாய உற்பத்தியும் உற்பத்தி உறவுகளுமே அடிப்படையாக நிற்கின்றன. பிரதான முரண்பாடு என்று ஒன்று இருப்பதால் மற்றைய முரண்பாடுகள் இல்லாமலோ தம் முக்கியத்துவத்தை இழந்தோ போக அவசியமில்லை.



## கைலாசபதியும் க.நா.சு. வகையறாக்களும்

கைலாசபதி போன்றோர் பிரதான முரண்பாடுகளை வலியுறுத்திய சூழல் பற்றித் தமிழவன் அறியாமலிருக்க முடியாது. க.நா.சு., கும்பல் கலாசாரத்தைப் பற்றி முன்கூட்டியே எச்சரித்த காரணத்தால், அவர் பற்றிக் கைலாசபதி கொண்டிருந்த கருத்துத் தவறாகி விடுமா? க.நா.சு. எந்த நிலைப்பாட்டிலிருந்து இலக்கியத்தை நோக்கினாரென்றும் அவரது வாரிசுகள் எந்தத் திசையிற் போகிறார்களென்றும் தமிழவன் தனது கட்டுரையின் சிறிது கூடிய கவனங்காட்டியிருக்கலாம். ஈனொக் பவெல் (Enoch Powell) என்ற தீவிர வலதுசாரிப் பிரமுகர் அனு ஆயுதக் கொள்கை, கல்வி, சுற்றாடல், ஐரோப்பிய பொதுச் சந்தை போன்ற பல விஷயங்களில் பிரித்தானிய இடதுசாரிகள் பலருடன் உடன்படுகிறார். ஆனால் அவரது அணுகுமுறை என்ன? க. நா. சு., கும்பல் கலாசாரத்தை எந்தக் கோணத்திலிருந்து அணுகினார் என்பது தமிழவனுக்கு முக்கியமில்லாதிருக்கலாம். கைலாசபதிக்கு அது முக்கியமானது.

மு. த. விஷயத்திலும் தமிழவன் மிகவும் மேலோட்டமாகவே மு. த. வின் எதிர்ப்புப் பற்றிய கோட்பாட்டையிட்டுப் பாராட்டுகிறார். இந்த விஷயத்தில் மு. த.வின் குழப்பமான சிந்தனை பற்றியும் அதன் தோற்றுவாய் பற்றியும் சிறிது கவனங் காட்டியிருக்கலாம். மு. த. பஜனை மடமொன்று சிறிதாக இலங்கையில் இருக்கிறது. தமிழ் நாட்டிலும் பக்தர்கள் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதனையும் நாங்கள் கவனிப்பது நல்லது. ''ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியில்'' மு. த. உதிர்த்த முத்துக்களில் ஒன்று: தாழ்த்தப்பட்ட சாதி எழுத்தாளன் சாதியத்திற் கெதிராகப் போர்க் கொடி உயர்த்துவது பயனற்றது என்ற விதமான கருத்து. (இதை நியாயப்படுத்த முயன்று சு. ராமசாமி கனடாவில் கொஞ்சம் சிரமப்பட்டுப் போனார்) மு. த. மாக்ஸியத்தை எவ்வளவு தெளிவாக ஆய்ந்து தாண்டிச் செல்ல முயன்றார் என்று தமிழவன் கவனித்திரா விட்டால் அது பற்றிய எளிமையான ஒரு கட்டுரை சி. சிவசேகரத்தின் ''மரபும் மாக்ஸியமும்'' என்ற கட்டுரைத் தொகுப்பில் உள்ளது.

தனிமனிதத்துவத்திற்கும் தனிமனிதவாதத்திற்குமிடையிலான வேறுபாடு பாரியது. தனிமனிதவாதத்தை கைலாசபதி சுட்டிக் காட்ட வேண்டிய தேவையும் வாய்ப்பும் நாவல் தொடர்பாக இருந்த காரணத்தாலேயே அதை அவர் செய்தார். அகச்சார்பிற்கும் புறவயமான நடுநிலைப் பார்வைக்குமிடையே தமிழவன் காணுகிற முரண்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



பாட்டைப் பற்றி இங்கே சிறிது கூறவேண்டும் நமது அகச்சார்பான தேவைகளை நிறைவு செய்ய நாம் அகச்சார்பான ஆய்வுகளை மட்டுமே மேற்கொள்ள முடியாது. புறவயமான உண்மைகளை நம் அகச்சார்பான பார்வை கவனிக்கத் தவறலாம் நமது விருப்பம் நிறை வேறக் கூடியதா என்பதைக் கூட அந்த விருப்பத்தின் அடிப்படையில் நாம் முடிவு செய்ய இயலாது கைலாசபதி ஊக்குவித்த யதார்த்த பாணியானதும் சமூகப் பிரக்ஞையுடையதுமான எழுத்துக்கள் அவர் காண விரும்பிய சமுதாய மாற்றம் தொடர்பானவை. புதுக்கவிதை யைப் பொறுத்தளவிலும் கைலாசபதியின் மதிப்பீடு அன்றைய புதுக் கவிதையின் முனைப்பாலேயே தீர்மானிக்கப்பட்டது உண்மையிற் தமிழிற் புதுக்கவிதையின் வருகை தமிழ்க் கவிதை மரபின் நெருக்கடி யின் நேரடியான விளைவாக அமையவில்லை. சமுதாய நெருக்கடி யுடன் புதுக்கவிதை உறவு கொண்ட பின்பே உயிருள்ள கவிதைகள் எழுந்தன.

## தமிழவனின் அமைப்பியற் பிரயோகம்

''அமைப்பியல் திறனாய்வும் தமிழும்'' என்ற கட்டுரையிற் தமிழவன் எப்படி அமைப்பியல் முறையைத் தமிழ் இலக்கியப் பரப்பில் உள்ள திறனாய்வு முறைகளில் பயன்படுத்தலாம் என்று விளக்க முயன்றுள்ளார். இனி இதை பற்றிச் சிறிது கவனிப்போம். மாக்ஸிய யதார்த்தவியல் பற்றித் தனது இறுக்கமான பார்வையை இங்கும் தளர்த்தாமலே தமிழவன் எழுதுகிறார். தமிழவனைப் பொறுத்தவரை மாக்ஸிய இலக்கியப் பார்வையின் விருத்தி (அவரது அமைப்பியலின் ஆசியில்லாமல்) விறைப்பான ஒரு சட்ட வரம்குள்ளேயே நடந்து வந்துள்ளது Brecht (ப்ரெஷ்ற்) ஒரு புறமிருக்க, லூ ஷுன், மாக்ஸிய வட்டாரங்களிற் போற்றப்படுகிறார். அவரது படைப்புகளும் இத்தகைய 'உள்ளதை உள்ளபடியே கூறும்' கதைப் பாங்கில் அமைந்தவையா? அவரது யதார்த்தம் எத்தகையது என்ற கேள்வி களைத் தமிழவன் தன்னையே கேட்டுக் கொண்டாரா?

சில இடங்களில் தமிழவனின் மொழியாற்றலின் குறைபாடா அல்லது விறைப்பான பார்வையா என்று விளங்காத விதமாக வாக்கி யங்கள் அமைகின்றன. உதாரணமாகக் கீழ்வரும் வாக்கியம்:

''இலக்கியக் குழு ஆகட்டும், மாக்ஸியத் திறனாய்வாளர்களாகட் டும், இவர்களெல்லோரும் பெரும்பாலும் ஆசிரியனின் சிந்தனையிலி ருந்து வருவதுதான் படைப்பு என்றே கருதுகிறார்கள். இதற்கு எதி ராக, வாசகர்களின் வெளிப்பாடு தான் படைப்பு என்ற கருத்து மேற் கத்திய இலக்கிய உலகத்திற் தோன்றியுள்ளது.''



இதன் அபத்தத்தை நான் விளக்க அவசியமில்லை. எந்த ஒரு கருத்துப் பரிமாற்றத்திலும் சொல்பவர் குறிப்பதும் கேட்பவர் உணர் வதும் வேறுபடுகிறது. எழுத்தைப் பொறுத்தவரை 'கேட்பவர்' சொல் பவரது குறுக்கீடின்றி தன் பாட்டிலேயே வாசிப்பதற்கு அர்த்தம் கற்பித்துக் கொள்கிறார். இது உண்மை. அப்படியானால் ''காகம் கறுப்பு'' என்ற வாக்கியத்தை வாசிப்பவர் ''எனக்கு நித்திரை வருகிறது'' என்ற விதமாக விளங்கிக் கொள்ள முடியுமா? அது முடியாததல்ல. ஏனென்றால் வாசிப்பவர் அத்தகைய உள்ளர்த்தத்தை மனதிற் கொண்டிருப்பவரானால் ''கடல் நீலம்'' என்ற வாக்கியத் திற்கும் ''எனக்கு நித்திரை வருகிறது'' என்றே அர்த்தம் கூற அவருக்கு முடியும். யதார்த்தம் (மன்னிக்கவும்!) சற்று வித்தியாச மானது ஏனெனில் மொழி சமுதாயத் தன்மையுடையது. சமுதாயத் தின் இயக்கம் தெளிவான கருத்துப் பரிமாறலிற் தங்கியுள்ளது. எனவே மேற்கூறியவாறான மாறுபாடான விளக்கம் விசேஷ மான சூழ்நிலைக்குரியது. கவிதையில் அதற்கான வாய்ப்பு அதிகம். சிறுகதைகள், நாவல்களிலும் இது சாத்தியம். ஒரு குறிப்பிட்ட காலச் சமுதாயம் சூழலுக்கு வெளியே ஒரு படைப்பை விளக்கிக் கொள்வது சிரமமானதுதான். ஒரு படைப்பு அடிப்படையில் படைப்பாளி தனது சமுதாயச் சூழலினின்று பெற்றவற்றின் விளைவான வெளிப்பாடு. அங்கே படைப்பாளியின் மொழியாற்றலின் குறைபாடுகள் கருத்தை விகாரப்படுத்த இடமுண்டு. வாசிப்பவரது மொழியறிவும் உலக நோக்கும் அவர் அதை விளங்கிக் கொள்ளும் முறையை நிர்ணயிப்பன. எழுத்தாளனுக்கும் வாசகனுக்குமிடையே ஒரு பொதுவான மொழியும் அணுகுமுறையும் இல்லாதளவில் இரண்டு செவிடர்களின் தொலை பேசி உரையாடல் மாதிரியேதான் கருத்துப் பரிமாறல் இருக்கும். ஒரு பொது மொழியைக் கண்டறிவதன் மூலமே நாம் நமக்கு அயலான சூழலுக்கும் காலத்துக்கும் உரிய விஷயங்களை அறிய முடியும். ''ஆசிரியன் இறந்து விட்டான்'' என்ற அமைப்பியல்வாதக் கூற்றை அப்படியே ஏற்றுக் கொண்டால், எவரும் எதையும் எவ்விதமாகவும் விளங்கிக் கொள்ள முடியும். அதற்குமேல், கைலாசபதியை தமிழவன் விளங்கிக் கொள்வது கூடத் தமிழவனுடைய சொந்தக் கருத்தின் வெளிப்பாடு என்று ஆகிவிடும். இங்கேதான், மொட்டையான ஸ்லோகங்கள் பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும். ''ஆசிரியன் இறந்து விட்டான்'' என்ற நியதி வெறுமனே ஆக்க இலக்கியத்திற்கு மட்டுமுரியதல்ல. அது கொஞ்சம் கூரிமையான கத்தி. கவனப் பிசகா யிருந்தால் பாவிக்கும் கையையே பதம் பார்த்துவிடும்.

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



இந்தக் கட்டுரையில் அமைப்பியல் பற்றிய சில பயனுள்ள குறிப்புக்கள் இருந்தாலும் அமைப்பியலை வெவ்வேறு அணுகுமுறை விமர்சனங்களில் எவ்வாறு பிரயோகிப்பது என்று விளக்க முனையும் உதாரணங்களிற் தமிழவன் செய்வதெல்லாம் மிகவும் அகச்சார்பாக, அவர் தெரிந்தெடுத்த அணுகுமுறைகட்குப் பரிச்சயமான சொற்றொடர்களைத் தூவி, ஏதோ பாவனை செய்வதுதான். தமிழவன் முன் வைக்கும் அமைப்பியல் அணுகுமுறை மூலம் எந்த விதமான பேத்தலுக்கும் அர்த்தம் கண்டு ஆஹா, ஓஹோ என்று வியந்து கொண்டாடும் பாக்கியம் நமக்குக் கிட்டும்.

முடிவாக, அமைப்பியல் என்பது மொழியியல் மானுடவியல் போன்ற துறைகளிற் பயன்பட்ட ஒரு அணுகுமுறை. அதன் பிரயோகத்தின் மூலம் புதிய பார்வைகளை நாம் பெற முடியுமாயின் நல்லது. ஆயினும் தமிழவன் காட்டும் அமைப்பியல் அணுகுமுறை மூலம் அவர் இந்த நூலிற் சாதித்தவைகளைப் பார்க்கும் போது ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. மாக்ஸிய விமர்சனப் பார்வையில் ஏற்பட்ட குறைபாடுகட்கெல்லாம் மிகையாக எளிமைப்படுத்தப்பட்ட விளக்கங்களைத் தந்து கொண்டே போகிற தமிழவன், குறைபாடுடைய 'விஞ்ஞானப் பார்வை'' அலசல் பார்வை' Positivism எனும் பொருண்மைவாதம், empiricism எனும் பரிசோதனாவாதம் போன்றவற்றைப் பாவிப்போரை விட மோசமாக இடறி விழுவதற்குக் காரணம் அமைப்பியலில் உள்ள கோளாறாகத் தெரியவில்லை. அமைப்பியலைக் கொண்டு தன் அகச்சார்பான அணுகலை நியாயப்படுத்தும் போக்காக இருக்குமோ? நிச்சயமாகத் தமிழவன் இன்னும் நீர் மேல் நடந்து காட்டவில்லை.

[பி.கு: தமிழவனின் ஆங்கில — தமிழ்க் கலைச்சொல் மொழிபெயர்ப்பு சிறிது கவலைக்குரியது. folk tale என்பது தேவதைக் கதையல்ல; value-free என்பது வெறுமனே நடுநிலையல்ல; objective என்பதும் நடுநிலை நோக்கல்ல. இது போலவே பேர்கள் பற்றியும் சிறிது கவனமாக இருக்கலாம். Arnold Toynbee ஆர்னால்ட் தாயன்பி அல்ல டொய்ன்பி (ΤOய்ன்B). குழப்பத்தைத் தவிர்க்கப் பேர்களையெல்லாம் ஒரு அட்டவணையிலாவது ரோமன் எழுத்துக்களில் தந்திருக்கலாம்.

# யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல்

அதன் உருவாக்கம் இயல்பு, அசைவியக்கம் பற்றிய ஒரு பிராரம்ப உசாவல்.

—கார்த்திகேசு சிவத்தம்பி

இச் சிறு பிரசுரத்தை அதன் அளவினதும் தலைப்பினதும் அடிப்படையில் ஒரு முழுமையான ஆக்கத்தை விமர்சிப்பது போல விமர்சிக்க முடியாது. இது 2-6-92இல் நடந்த பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரையின் நூல்வடிவம் மட்டுமே என்பதனால் இதில் ஒரு நூலுக்குரிய முழுமையை எதிர்பார்க்க இடமில்லை. எனினும் இப்பிரசுரம் யாழ்ப்பாண சமுதாயத்தை அறிவதற்குத் ''தேசவழமைச் சட்டம்'' ஒரு முக்கிய அடிப்படை எனக்கொண்டு அதை ஒரு ஆவணமாகவும் வரலாற்றுச் சான்றாகவும் பயன்படுத்த முனைவது ஒரு பயனுள்ள செயல் யாழ்ப்பாணச் சமுதாயத்தின் இயல்புகளை அடையாளங்காணும் முனைப்பிற் சாதிய அடிப்படையிலான சமுதாய அமைப்பு சிறிது விவரிக்கப்படுகிறது. யாழ்ப்பாண சமுதாய அமைப்பின் பண்பாடும் கருத்துநிலையும் பற்றிய பகுதியும் யாழ்ப்பாணச் சமுதாயத்தின் சமகால அசைவியக்கங்கள் பற்றிய பகுதியும் ஆழத்திலும் பரப்பிலும் போதாதனவாயுள்ளன. சாதிய எதிர்ப்பியக்கம் பற்றிய தொழில்முறை ஆய்வு மேற்கொள்ளப்படாமை பற்றிய அவரது குறிப்பு கவனத்திற்குரியது.

இப்பிரசுரத்தில், சிவத்தம்பியின் எழுத்து, வழமையிலும் சற்றுத் தெளிவாக இருக்குமா போற் தெரிவதற்கு இப்பிரசுரம் ஒரு உரையின் நூல் வடிவம் என்பது காரணமாயிருக்கலாம் ஆயினும் அவரது சொற்தெரிவுகளும் பிரயோகமும் ஆங்கிலமொழி ஆதிக்கத்திற்குட்பட்ட ஒரு எழுத்து நடையையே நினைவூட்டுகின்றன. இதைவிட முக்கியமாக ஈழத்தின் தமிழ் மக்களின் முக்கிய சமூக அமைவுகளாக யாழ்ப்பாண மட்டக்களப்புச் சமூகங்களிரண்டையுமே கொள்கிறார். வன்னிப்பகுதி குறிப்பிடப்படவில்லை என்பதோடு மலையகத் தமிழர் பற்றியும், தன் தலைப்பை விளக்கும் போக்கிலேனும். எதுவுமே கூறப்படவில்லை,

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



யாழ்ப்பாணச் சமுதாயத்தின் பெண்ணடிமைத்தனமும் அவரது கவனத்தை ஈர்க்கத் தவறிவிட்டது. யாழ்ப்பாணப் பொருளாதாரம் கொலனித்துவத்தின் கீழ் முக்கியமாக பிரித்தானியர் ஆட்சியின் கீழ், அடைந்த மாற்றங்களும் அக்காலத்துப் புலப்பெயர்வுகள் அச்சமுதாயத்தில் ஏற்படுத்திய பொருளாதாரத் தாக்கங்களும் அவற்றின் சமுதாய வெளிப்பாடுகளும் ஏனோ குறிப்பிடப்படவில்லை. இவை யாழ்ப்பாணச் சமுதாயத்தின் இயல்பையும் அசைவியக்கத்தையும் நிர்ணயிப்பதில் ஆற்றிய பங்கை ஆசிரியர் மறந்து விட்டாரோ தெரியவில்லை. பிராரம்ப உசாவுதலேயாயினும் உரையின்போது தவற விட்டவைபற்றி நூல்வடிவின் முன்னுரையிலேனும் குறிப்பிட்டிருக்க முடியும் என்பது என் மதிப்பீடு. இப்பிரசுரம் சாதியத்தைப் பற்றியே முக்கிய கவனமுடையதெனின் அதையேனுந் தெளிவாக்கியிருக்கலாம். அந்தளவில், நூற் தலைப்புடன் ஒப்பிடுகையில் நூலின் உள்ளடக்கத்தின் போதாமை மிக அதிகமாகவே தெரிகிறது.

*சரிநிகர், 1993*

# பெண்ணியப் பார்வைகள் மூன்று தொடர்பாக

0. விமர்சனத்தைப் போல வெறுக்கப்படுவன அனேகமில்லை. படைப்பாளிகள் புகழை நாடியே படைக்கும் போது விமர்சனங்கள் பாராட்டுரைகளாக அமைவதை விரும்புவது இயல்பு. இயல்பானவை எல்லாஞ் சரியானவையாகா. நம் மத்தியில் விமர்சனம் என்பது நயப்பாகவும் மிகையான புகழுரையாகவும் இருக்குமாறு எதிர்பார்க்கப்படுகையிற், குறைகளைச் சுட்டிக்காட்டும் விமர்சனங்கள் பகைமையுணர்வுடன் எழுதப்பட்டதாகவே தோன்றக்கூடும். காழ்ப்புணர்வுடன் எழுதப்படும் விமர்சனங்களை அடையாளங்காண்பது சிரமமில்லை. ஆயினும் குறைகளைச் சுட்டிக்காட்டும் நேர்மையான விமர்சனங்களைப் பற்றிய ஆரோக்கியமான பார்வையைப் படைப்பாளிகள் விருத்தி செய்வது நல்லது.

ஒரு விமர்சனம் படைப்பாளியின் விருப்புக்கு உகந்ததல்லாத போது, விமர்சகரின் தகுதி பற்றிய கேள்விகளை எழுப்புவதைவிட, விமர்சனத்தின் தரம் பற்றி ஆராய்வது விமர்சனத்துக்கும் நல்லது. இன்று விமர்சகர்கள் தனிப்பட்ட முறையிலான தாக்குதல்கட்கு ஆளாவது தவிர்க்கவியலாதது. அதற்குப் பயப்படுகிறவர்கள் விமர்சனத்துறையில் நிலைப்பது கடினம். விமர்சனம் என்பது ''குணம் நாடிக் குற்றமும் நாடிச்'' சீர்தூக்குஞ் செயல். இல்லாத குணங்களைக்கூட இருப்பதாகக் காட்டும் பம்மாத்துச் சூழலொன்றில் உண்மையாகவே இருக்கிற குறைகளைக் காட்டுகிற விமர்சகர்கட்குத் தேவை அதிகம் இத் தேவையை நிறைவு செய்கிறவர்களுள் நான் ஒருவனாக இருக்கக்கூடும். என் விமர்சனங்களும் கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டியவையே.

சமூக உணர்வுள்ள எழுத்து, சமுதாயத்தின் விமர்சனமாகிறது. அத்தகைய படைப்புக்களின் விமர்சனங்கள் ஒரு வகையில் விமர்சனங்களின் விமர்சனங்களே. பெண்ணுரிமையாகத் தொடங்கிய பெண்ணியம் அல்லது பெண்ணிலைவாதமென்ற கருத்தாக்கம் ஆணாதிக்கச் சமுதாயத்தின் மீதான கடுமையான ஒரு விமர்சனமே. தேசிய விடுதலைப் போராட்டம், இனச்சமத்துவத்துக்கெதிரான

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



போராட்டம், சாதியத்திற்கெதிரான போராட்டம் என்பன போன்று பெண்ணுரிமைப் போராட்டமும் நீண்ட காலமாகத் தொடரும் ஒடுக்கு முறைக்கெதிரான ஒரு நியாயமான, அவசியமான போராட்ட வடிவ மாகும். இப்போராட்டங்களை அடிப்படையான சமுதாய மாற்றத்திற் கான போராட்டத்தினின்று பிரிக்க முடியாது. உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் வர்க்கங்களாகப் பிளவுண்டுகிடக்குஞ் சமுதாய அமைப் புக்களில் வர்க்க முரண்பாடே அடிப்படையானது எனவும் வர்க்கப் போராட்டத்தின் தீர்வே சுரண்டலற்ற சமத்துவ சமதாயத்துக்கு வழி யமைக்கும் எனவும் கூறுவது மாக்ஸிய நிலைப்பாடு.

வர்க்கப் போராட்டத்தின் மூலம் மானுட சமதர்மம் நிலைபெறும் வரை, மற்றப் போராட்டங்கள் ஒய்ந்திருக்க வேண்டும் என்பதோ அத்தகைய போராட்டங்கள் சமுதாய மாற்றத்துக்குத் தடையானவை என்பதோ மாக்ஸிய நிலைப்பாடல்ல. ஆயினுங் குறுகிய தேசியவாதி கள் மாக்ஸியம் தேசிய விடுதலையை நிராகரிக்கிறது என்று தொடர்ந்துஞ் செய்துவரும் பொய்ப் பிரசாரம் போன்று சாதிய எதிர்ப்புப் போராளிகள் மத்தியிலும் இனவாத எதிர்ப்பியக்கத்தினர் மத்தியிலும் வர்க்க உணர்வை மழுங்கடிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன. இத்தகைய போக்குக்குப் பெண் ணுரிமைப் போராட்டம் விலக்கல்ல.

பெண்ணிய (அல்லது பெண்ணுரிமை) இயக்கத்துள் வர்க்க, தேசிய அடிப்படையிலான ஒடுக்கல்களைக் கணிப்பிற் கொள்ளாது ஆண் — பெண் முரண்பாட்டையே அடிப்படையான சமுதாய முரண் பாடாகக் கருதும் ஒரு போக்கு, வசதி படைத்த வகுப்பினர் மத்தியிற் தொடர்ந்தும் நிலவுகிறது. இத்தகைய போக்கு சமுதாயத்தின் வர்க்க அடிப்படையை மாற்றுவது பற்றிக் கவலைப்படுவதில்லை; தேசிய இன ஒடுக்கலையோ சாதி, நிறம் போன்ற அடிப்படையிலான ஒடுக்கல்களையோ பற்றி அதிகம் அக்கறைப்படுவதில்லை. எவ்வாறு குறுகிய தேசியவாதிகள், பிற தேசிய இனத்தவரைப் பகைவராகக் காட்டி, மாக்ஸியவாதிகளை ஒதுக்க முற்பட்டனரோ அவ்வாறே மேற் கூறிய பிரிவினரும் செயற்பட்டுள்ளனர். அதே வேளை, சுற்றாடல் தொடர்பான பிரச்சனைகளிலும் ஆதிவாசிகளது உரிமைக்காகவும் முன்னின்று போராடியும் போட்டங்கட்குத் தலைமைதாங்கியும் அதன் மூலம் ஒடுக்கப்பட்ட பெண்களது உரிமைக்காக மட்டுமன்றி அவர்களது போராட்ட உணர்வை உச்சப்படுத்தவும் உழைக்கின்ற பெண்ணுரிமைப் போராளிகளும் உள்ளனர்.

மாக்ஸியம் பெண்களுக்காகப் போராடச்சுயாதீனமான அமைப்புக் கள் இருப்பதை நிராகரிக்கவில்லை. பெண்களின் சமத்துவத்தைப் பற்றிய முதலாவது உரத்த குரல்களிற் பெருவாரியானவை மாக்ஸியச் சிந்தனையால் வழிநடத்தப்பட்டவையே. பால் அடிப்படையிலான சமத்துவத்தை மறுக்கும் எவரும் மாக்ஸியவாதியாக இருக்கமுடியாது. ஏனெனிற் பெண்ணுரிமை மாக்ஸியத்தினின்று பிரிக்கவியலாத வொன்று. பெண்ணுரிமைப் போராட்டத்தைப் பிற ஒடுக்குமுறை கட்கு எதிரான போராட்டங்களினின்று பிரித்துத் தனிமைப்படுத்து வதை மாக்ஸியவாதிகள் கண்டிப்பது நியாயமானது. இது பெண்கள் தமது உரிமைகட்காகப் போராடும் அமைப்புக்களை மறுக்கும் காரிய மல்ல. குறுகிய தேசியவாதம் போன்று, தன்னையும் பிற நியாயமான போராட்டங்களையும் பலவீனப்படுத்தும் போக்கையே மாக்ஸியவாதி கள் நிராகரிக்கின்றனர். மாக்ஸியவாதிகளைப் பெண்ணுரிமைப் போராட்டத்தினின்று ஒதுக்கவும் அப்போராட்டத்திற்குப் பகைமை யான அல்லது ஆதரவு தரத் தயங்குஞ் சக்திகளாகக் காட்டவும் முனையும் விஷமத்தனம் இன்னமும் தொடர்கிறது. இதன் பின்னணி யிலேயே அண்மையில் என் கைக்கெட்டிய மூன்று பெண்ணிய நூல் களை விமர்சிக்க முற்படுகிறேன்.



1. பெண் விடுதலைவாதத்தின் பிரச்சனை மையம்: அது ஒரு மேலைத்தேயக் கோட்பாடா? செல்வி. திருச்சந்திரன், பெண் கல்வி நிலைய வெளியீடு இல. 30, 37 கின்றொஸ் அவென்யு, கொழும்பு-4, இலங்கை, 1990, iv + 15 ப.

பெண் விடுதலைக் கோட்பாடு பற்றிய ஒரு நல்ல அறிமுகமான இந்தச் சிறுபிரசுரம் வெவ்வேறு வகையான பெண்ணிலைவாத நிலைப்பாடுகளை அடையாளங் காட்டுகிறது. மாக்ஸிய பெண்ணிலை வாதத்தினின்று வேறுபட்டதாக ஒரு சோஷலிஸ பெண்விடுதலை வாதத்தை அடையாளங் கண்டு சில ''மாக்ஸியவாதிகள்'' பெண்விடுதலை என்ற கோஷம் தொழிலாளரைப் பிரித்து விடும் என்று கூறுவதை ஆதாரமாக வைத்து, மாக்ஸிய பெண்ணிலைவாதம் பெண்விடுதலையைத் தள்ளிப்போட முனைவதாக ''சோஷலிஸ பெண் விடுதலைவாதிகள்'' வாதிப்பதை விமர்சனமின்றி முன்வைத்திருப்பது வருந்தத்தக்கது. சுரண்டற் சமுதாய அமைப்புத் தகர்க்கப்படாமல் எந்த விடுதலையும் சாத்தியமில்லை என்பதாற், பல்வேறு விடுதலைப் போராட்டங்களை மாக்ஸியவாதிகள் மறுக்க வேண்டிய நிர்ப்பந்தமென்ன? அவ்வாறு மறுத்தோர் யார்? அது சகல ''மாக்ஸியவாதிகளதும்'' நிலைப்பாடா? இவை தெளிவாக்கப்பட வில்லை.



படிப்பகம்

பெண்விடுதலையின் பேரில் நடக்கும் சில விஷயங்களைப் பொதுமைப்படுத்திப் பெண்ணுரிமையை நிராகரிக்க முனையும் போக்கையும் பெண்விடுதலை ஏற்கெனவே உள்ளது என்றவாறு தலையை மணலுட் புதைக்கும் போக்கையும் பற்றியும் தந்துள்ள விளக்கங்கள் பயனுள்ளவையும் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியவையுமாம்.

''பெண்விடுதலைவாதம் மேல்நாட்டுச் சரக்கல்ல'' என்று கட்டுரை ஆசிரியர் வலியுறுத்துவதன் தேவை எனக்கு விளங்கவில்லை. நவீன விஞ்ஞானம், தொழிற் சட்டம், நீதிபரிபாலனம், பாடசாலைக் கல்வி போன்றவையும் மனித விடுதலையின் அடிநாதமான மாக்ஸிய மும் மேல்நாட்டுச் சரக்குகள்தாம். அவை அயலினின்று வந்தாலும் நம் நாட்டின் பல்வேறு தேவைகள் காரணமாக நமது சமுதாயத்தால் உள்வாங்கப்பட்டன. நிலமான்ய சமுதாயத்தின் பெண்ணடிமைத் தனத்திற்குப் பரிகாரங்கள், அதற்கு வெளியிலிருந்து, பெண்ணுரிமை யைச் சாத்தியமாக்கவல்ல ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கினின்று, எழுந்தன. அவற்றின் அயற் தன்மை அவற்றின் தோற்றுவாய் சார்ந்தது. அவற்றின் சாராம்ஸம் சமுதாய நடைமுறை சார்ந்தது. அயல்நாட்டுச் சரக்குகளை நாம் எவ்வாறு நமதாக்கிக் கொள்கிறோம் என்பது முக்கியமேயொழிய அவை அயலினின்று வந்தனவா என்பதல்ல. பெண் விடுதலை வெறுமனே பகட்டுக்காகக் கையாளப்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ள அளவில் அதன் அயற்தன்மை பற்றிக் கூச்சப்பட அவசியமில்லை.

2. <u>பெண்நிலைச் சிந்தனைகள்</u> சித்திரலேகா மௌனகுரு, பெண்கள் கல்வி ஆய்வு நிலையம், 17 ஏ பாக் அவென்யு, கொழும்பு-5 இலங்கை, 1993, viii + 99 ப.

இந்த நூலில் ஏழு கட்டுரைகளுள்ளன. பெண்கள் மீதான ஒடுக்கு தலின் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய இக் கட்டுரைத் தொகுதியின் முதலாவது கட்டுரையில் ''பெண்கள் விடுதலை இயக்கம் என்பது ...தீவிரமான சமூக மாற்றத்திற்கான போராட்டமாகவும் அமைகிறது. ஆனால் அதேசமயம் சோஷலிச உற்பத்திமுறை நிலவும் சமூகங்களிற் கூடத் தொடர்ந்து எதிர்க்கப்படாவிடின் ஆண்மேலாதிக்க முறை தொடரும் என்பதைச் சமகால அனுபவங்கள் புலப்படுத்து கின்றன.'' என்கிறார்.

பெண்விடுதலை இயக்கம் எத்தகைய தீவிர சமூக மாற்றத்தை வேண்டுகிறது? அதை அடையக் கூடிய மார்க்கமென்ன? அதற்காகப்



போராடக் கூடிய சக்திகள் யார்? இவை பற்றிய அக்கறை தொடர்ந்து வருங் கட்டுரைகளில் இல்லை. ''சோஷலிச மாற்றம்'' ஏற்பட்ட சமுதாயங்களிற் சோஷலிச மாற்றத்தின் பல்வேறு பணிகளையும் நிறைவேற்றுவது எவ்வளவு சிரமமானது என்பதை ஆசிரியர் அறியக் கூடும். குறிப்பிட்ட சோஷலிச சமுதாயங்களில் ஏற்பட்ட மாற்றங் களை வரலாற்றிலும் ஒப்பீட்டு முறையிலும் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. பெண்ணுரிமைப் போராட்டம் மட்டுமன்றிப் பழைய சமுதாயத்தின் சகல குறைபாடுகட்கும் எதிரான போராட்டம் இடைய றாது தொடர வேண்டிய தேவையை மாஓ சேதுங் தெளிவாகவே விளக்கியுள்ளார். சோஷலிச அரசு ஏற்பட்டவுடன் எல்லாரும் சோஸலிச மனிதராக உருமாற்றம் பெறமாட்டார். கட்டுரையாசிரியர் கடந்த 40 வருடங்களிற் சோஷலிச நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் சர்வதேசிய நிலவரங்கள் பற்றியுமான கணிப்பேதுமில்லா மலே எழுதியுள்ளமை வியப்பூட்டுகிறது.

பாலடிப்படையில் அமைந்த தொழிற்பாகுபாடு பற்றிய கட்டுரை யில் மந்தை வளர்ப்பினால் ஏற்பட்ட உபரி உற்பத்தியின் விளைவாக தனிச்சொத்துடைமையும் ஆணாதிக்கமும் ஏற்பட்டதாகக் கூறும் எங்கல்ஸை மறுத்து, கட்டுரையாசிரியர், உபரியின் தோற்றம் சிறு பயிர்ச் செய்கைக் காலத்திலும் இருந்ததற்கு ஆதாரங் காட்டுகிறார். ஆண்கள் கையில் ஆயுதங்கள் இருந்தமையே ஆணாதிக்கத்தின் காரணமாயிற்று என்ற கருத்தை ஆதரிக்கும் ஆசிரியர், அதற்கு முந்திய, வேட்டையாடுங்காலத்தின் ஆயுதங்கள் ஏன் ஆணாதிக்கத் திற்கு வழிகோலவில்லை என்று விளக்கத் தவறிவிட்டார். எங்கல்ஸின் வாதத்தின் சாரம், தனியார் சொத்துடைமையே மனிதர் மனிதரை ஒடுக்குதலுக்கு அடிப்படையான காரணம் என்பதாகும். எந்த ஒடுக்குதலும் ஈற்றில் ஆயுதஞ்சார்ந்த அடக்குமுறையாகவே அமையும். எங்கெல்ஸின் பலவேறு விளக்கங்களிற் தவறுகள் இருக்கலாம். ஆயினும் இவ்விடத்து அவரது அடிப்படையான வாதம் தவறென்று காட்டவல்ல ஆதாரமேதுந் தரப்படவில்லை.

இக்கட்டுரை நேரடியாகத் தொடத்தவறியபோதும், பாலடிப் படையிலான தொழிற்பாகுபாடு என்ற பிரச்சனை, குடும்பம் என்ற அமைப்பையே கேள்விக்குட்படுத்துகிறது. ஒற்றைக் குடும்பச்சமூக அமைப்பின் கீழ்த் தொழிற்பாகுபாட்டின் முரண்பாடுகளைத் தீர்ப்பது இயலாத காரியம். குடும்பம் என்பது ஆணுடைய உடைமை அல்ல என்ற நிலைப்பாட்டின் அடுத்தபடியாகக் குழந்தைகளும் பெற்றோரின் உடைமைகள் அல்ல என்ற கட்டத்தைத் தவிர்க்க முடியாது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



பெற்றோர் பிள்ளைகள் உறவு பற்றிய நிலமான்ய சமுதாயக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த இயலாமலும் குழந்தைகள் மீது முழுச் சமுதாயத்திற்குமுள்ள பொறுப்பை ஏற்க முடியாமலும் முதலாளித்துவ தனியுடைமைச் சமுதாயம் திணறுகிறது. எனவே குடும்பம் என்ற அமைப்பின் அடிப்படையிலான மனித உறவுகள் யாவற்றையுமே கேள்விக்குட்படுத்த வேண்டிய தேவை எழுகிறது. பழைய கூட்டுக் குடும்ப அமைப்பினாற் புதிய உற்பத்திமுறை எழுப்பும் பிரச்சனை கட்கு முகங்கொடுக்க முடியாது. எனவே, முழுச்சமுதாயமே ஒரு குடும்பமாக இயங்காதவரை, ஆண்–பெண் வேலைப் பிரிப்பின் பிரச்சனைகள் பெண்களுக்குப் பாதகமான முறையிலே அமைய முடியும். ஒற்றைக்குடும்பம் என்ற அமைப்பின் கீழ்ப், பெண்களின் உழைப்புப்பற்றி எழுப்பப்படும் கோரிக்கைகள், அடிப்படையான சமுதாயப் பிரச்சனையைத் தொடாதவரை, மற்றைய சமுதாய சீர் திருத்தங்கள் போன்று, எவ்வளவுதான் அவசியமானவையும் வரவேற்கத்தக்கனவாயும் இருந்த போதுங், குறைபாடுடையனவாகவே அமையும்.

வீட்டு வேலைகளும் பெண்களும் பற்றிய கட்டுரையிற், தொழில் புரியும் பெண்களது இரட்டைச் சுமை பற்றி, ஆண் — பெண் சமத்துவம் பேசும் பெண்களும் பெண்ணிலை வாதிகளுமன்றி வேறெவரும் அக்கறைப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு விதிவிலக்கின்றி முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதே கட்டுரையிற் கூலிஉழைப்பில் ஈடுபடும் பெண்களுக்கு "ஏனைய மத்தியதர வர்க்கத்துப் பெண்களைப் போல (அழுத்தம் எனது) வேலைக்காரரை வைத்திருப்பதற்கோ நவீன உபகரணங்களைப் பயன்படுத்தவோவசதி இல்லை" என்பதால் அவர்களது மேலதிக வேலைச் சுமை பற்றிப் பேசப்படுகிறது. இங்கே கட்டுரை ஆசிரியர் இந்த மத்தியதர வர்க்கப் பெண்களுக்குச் சாத்தியமான ஒரு தீர்வான 'வேலைக்காரர்' பற்றியும் விரிவாக எழுதியிருக்கலாம்.

பெண்களுக்கு எதிரான வன்முறை — பலாத்காரம் என்ற கட்டுரையில் 'கற்பழித்தல்' என்ற சொல் தவிர்க்கப்பட்டமை மிகவும் நல்ல விஷயம். கற்புப் பற்றியும் பாலியற் பலாத்காரம் பற்றியும் உள்ள ஆணாதிக்கச் சிந்தனைகள் இன்னமுந் தொடர்கின்றன. இக் கட்டுரையில் எழுப்பப்பட்டுள்ள கருத்துக்கள் பரவலாக்கப்பட வேண்டும். அதே வேளை, கட்டுரையாசிரியர், விதவைகளையும் பாலியற் பலாத்காரத்திற்குட்பட்டவர்களையும் திருமணம் செய்யும் ஆண்களைத் 'தியாகிகள்' எனக் கருதுவது பற்றிக் கோபிக்கிறார்.



'தியாகம்' என்ற கோட்பாடு ஆணாதிக்கஞ் சார்ந்ததேயாயினும், சமுதாயத்தின் எதிர்ப்பையும் ஏளனத்தையும் மீறியே இந்த ஆண்கள் செயற்படுவது கவனத்துக்குரியது. அந்தளவில் அவர்களது தைரியம் முன் மாதிரியானது என்பதை ஆசிரியர் புறக்கணித்து விடுகிறார்.

இனத்துவமும் பெண்களுந் தொடர்பான கட்டுரையில், இனத்துவ அடையாளத்தை வற்புறுத்துவதன் மூலம், பெண்களுக்குத், தாம் ஒடுக்கப்பட்ட இனத்தின் பெண்கள் என்ற உணர்வை முதன்மைப் படுத்துதல், தாம் பெண்கள் என்ற உணர்வை இரண்டாம் பட்சமான தாக்குகிறது என்ற ஆட்சேபனை முன்வைக்கப்படுகிறது. சாதி, மொழி, மதம், தேசிய இனம் என்று எந்த அடிப்படையில் ஒடுக்கல் நிகழ்ந்தாலும், அந்த அடிப்படையிலேயே அதற்கெதிரான போராட்டம் நிகழ்கிறது இங்கு முதலிற் கண்டனத்துக்குரியது இன ஒடுக்கலேயொழிய, ஒடுக்கலுக்குட்பட்ட மக்களின் இனத்துவ அடையாளமல்ல. இக்கட்டுரை, தேசிய இனஉணர்வின் பல்வேறு அம்சங் களை அவற்றுக்குரிய வரலாற்றுச் சூழலில் வைத்துப் பார்க்கத் தவறியதாற், தொடரும் இனஒடுக்கலைப் பற்றிய ஒரு தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவும் தவறிவிடுகிறது.

தொடர்பியல் ஆய்வுகளும் பெண்ணிலைவாதமும் பற்றிய கட்டுரையும் அபிவிருத்தியும் பெண்களும் பற்றிய மிளாய்வும் ஆழமற்ற கட்டுரைகள். மீனாட்சியம்மாள் பற்றிய கட்டுரை ஒரு நல்ல அறிமுகக்குறிப்பு. மீனாட்சியம்மாள் பெண்விடுதலைக்காக ஆற்றிய பங்கு என்ன என்று கட்டுரை மூலம் எதுவும் புலனாகவில்லை. விதவையான அவரது மகள் சாதிக்கு வெளியே மறுமணம் செய்ததை ஆதரித்தமை, பிராமணர்களான மீனாட்சியம்மாள் நடேசய்யர் தம்பதிகளின் சமுதாயப் பார்வையின் ஒரு வெளிப்பாடு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியவாதிகள் தமிழரை இடதுசாரிச் சிந்தனையினின்று தனிமைப்படுத்த மிகவுஞ் சிரமப்பட்டார்கள். சித்திரலேகாவின் எழுத்திலும், மாக்ஸியவாதிகளையும் பாட்டாளிவர்க்கப் பார்வையையும் பெண்ணுரிமைப் போராட்டத்தினின்று தள்ளி வைக்கும் முனைப்பு வெகுவாக உள்ளது. சூரியனைச் சுளகால் மூடஇயலாது. அவரவர் தம் தலைகளை வேண்டுமானால் மூடிக்கொள்ளலாம்,

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



## 3. பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்

பிரேமா அருணாசலம், சவுத் ஏசியன் புக்ஸ், 6/1 தாயார் சாஹிப் 2வது சந்து, சென்னை 600 002, தமிழ்நாடு, இந்தியா, 1983, 267 ப.

நமது மரபு பெண்களை உயர்வாக மதித்துத் தெய்வமெனப் போற்றியதாகக் கூறும் பொய்களை மறுக்கும் முனைப்பில் எழுதப் பட்ட இந்நூல் பெண்கள் பற்றித் தமிழிலிலக்கிய மரபின் நீண்ட கால வாலாற்றுப் பார்வையை விளக்க முற்படுகிறது. தொல்காப்பியர் முதல், ஒப்பிடுகையில் அண்மைக் காலத்தவர்களான, இராமலிங்கர் போன்றோர் வரை பெண்களை எவ்வளவு இழிவாகக் கருதினார்கள் என்பதற்கான சான்றுகள் நிறையவே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு படைப்பும் அதன் காலத்தின் சமுதாய விழுமியங்களைப் பிரதிபலிப் பதையும் இரண்டாயிரம் வருடத் தமிழ் இலக்கிய வரலாற்றிற் பெண்கள் ஆண்கட்குக் கீழ்ப்பட்டவர்களாகவே கருதப்பட்டதையும் வெகு சிரத்தையெடுத்து விளக்கியிருக்கிறார். பாரதியே முதன் முறையாகப் பெண் உரிமைக்காகக் குரல் கொடுத்த கவிஞர் என்பதை யும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நூலின் பங்களிப்பின் முக்கியத்துவம் இதற்குஞ் சில படிகள் மேலே போயிருக்கலாம். ஒவ்வொரு படைப்பின் சமுதாயச் சூழ லுக்கும் சமுதாய அமைப்பிற் பெண்கள் நிலைக்குஞ் சார்பாக அப் படைப்பு எந்த நிலையில் உள்ளது என விளக்கியிருக்க முடியும். வள்ளுவர் நிலவுடைமைச் சமுதாய விழுமியங்களை மறுக்கவில்லை என்று சில தீவிர இடதுசாரிகள் அவரை முன்பு விமர்சித்ததை நினைவு கூரும்போது இதன் முக்கியத்துவத்தை மேலும் வலி யுறுத்தத் தோன்றுகிறது. பிறன் மனை விரும்பாமை பற்றியும் பரத் தையர் உறவு பற்றியும் வள்ளுவரது நிலைப்பாடு, ஆண்கள் பல பெண்களுடன் உறவு பூணுவதை அங்கீகரித்துக் குடும்பப் பெண் களுக்கு மட்டும் கற்பை வலியுறுத்திய சூழலில், வரவேற்கத்தக்க ஒன்றாக கருதப்படாதா?

கம்பர் சீதையின் உருவத்தை அனுமனுக்கு ராமன் கூறும் வித மாக வர்ணிப்பது இன்று ஆபாசமாகத் தெரியக்கூடும். ஆயினும் அன்றைய சமுதாய விழுமியங்கள் வித்தியாசமாக இருந்திருக்க முடியும். கோவிற் சிலைகளிற் தெய்வங்களீறாக ஆடைக் குறை வாகவே உள்ளமையையும் பாலுறவைக் குறிக்குஞ் சிற்பங்கள் கோவில்களை அலங்கரித்ததையுங் கவனிக்கும்போது, பாலுறவு பற்றிய நமது பார்வை காலத்துடன் மாறி வந்ததை நாம் மறுக்க



முடியாது. அந்த வகையிற் கம்பரது வர்ணனை பெண்ணை ஒரு நுகர்பொருளாகக் காட்டும் நோக்கையே கொண்டதென்பது முறை யாகாது. ஆயினும் பெண்களின் வர்ணனைக்கும் ஆண்களின் வர்ணனைக்கும் இடையிலான வேறுபாடு அக்காலத்திற் இருபால ரிடமும் எதிர்பார்க்கப்பட்ட சமுதாயப் பண்புகளைப் பிரதிபலித்த என்பதில் ஐயமில்லை.

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம் நான்கு நிலங்களாலுங் குறிக்கப் பட்ட நான்கு வேறு வாழ்க்கை முறைகளைக் கொண்டது இவற்றுடன் பாலையையுங் கருத்திற் கொள்ளலாம் ஒவ்வொரு நிலத்தினதும் வாழ்க்கை முறைக்கேற்பப் பெண்களது சமுதாய அந்தஸ்து வேறு பட்டதா என்பது பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கலாம். பெண்கள் ஆண்களைச் சார்ந்தே வாழவேண்டியோராகக் கருதப்பட்ட பழைய சமுதாய அமைப்பிலிருந்ததை விட அதிகமான அடக்குமுறைக்கு உள்ளான சூழ்நிலை எவ்வாறு உருவானது என்பதும் இலக்கயச் சான்றுகளுடன் விளக்கப்பட்டிருக்கலாம். இக்குறைபாடுகள் தொடர் பாக மைதிலி சிவராமனது அணிந்துரையிலுங் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பெண்ணுரிமை பற்றிய அக்கறையுடையோர் நமது மரபிற் பெண்கள் பற்றிய பார்வையை விளங்கிக் கொள்ள மிகவும் பயனுள்ள தகவல்களைக் கொண்டது இந்த நூல்.

4. என்னுடைய விமர்சனக் கூற்றுக்கள் பெண்ணுரிமை தொடர்பான சில பெண்ணியக் கருத்துக்கள் மீதான என் கருத்து வேறுபாடுகள் என்ற வகையில் மட்டுமன்றிப் பெண்ணுரிமை தொடர் பாக முன் வைக்கப்படும் வாதங்களின் பலவீனங்கள் தொடர்பானது மாகும். பெண்ணியவாதிகள் சிலரது நோக்கிற் பிற ஒடுக்குமுறை களையுஞ் சமுதாய முரண்பாடுகளையும் விடப் பெண்ணியமே முக்கியமான ஒன்றாகவும் பிற போராட்டங்களுடனும் சமுதாய முரண்பாடுகளுடனும் பெண்ணுரிமைப் போராட்டத்தைச் சேர்த்துக் கருதுவது அவசியமற்றதாகவுந் தெரியலாம். ஒடுக்குதலுக்கெதிரான போராட்டங்களைப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடனும் அவ் வர்க்கப்பார்வையுடனும் இணைக்கும் முனைப்பு மாக்ஸியவாதி களுடையது. பெண்ணுரிமைப் போராட்டமும் மாதர் இயக்கங்களும் கட்சிக் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டுமென்று எவரும் நிர்ப்பந்திப்ப தற்கில்லை; அதற்கான தேவையும் இல்லை. ஆயினும் எந்த விடுதலை இயக்கமும் பரந்துபட்ட வெகுஜன நலன் சார்ந்ததாக அமையை வேண்டியமையைப் பற்றியும் அந்த விடுதலை இயக் கத்தின் வர்க்கச் சார்பையும் முனைப்பையும் பற்றியும் எவரும் அசட்டையாக இருக்க முடியாது. அஆஇ—15, 1993

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# செல்வி திருச்சந்திரனுடைய பதில்

பதினைந்தாவது அஆஇ கிடைக்கப் பெற்றேன் நன்றி. சிவசேகரம் அவர்கள் எனது சிறு பிரசுரம் ஒன்றை விமர்சனம் செய்திருந்தார். அதற்கு நன்றி கூறுவதுடன் அவர் எழுப்பிய கேள்விகளுக்கு விடை கூறவும் முயலலாம் என்பதும் எனது எண்ணம். அவருக்கு எழுந்த சந்தேகங்களும் அவருக்குத் தெரிந்த அதே தெளிவின்மையும் வாசகர் அனேருக்கு ஏற்பட்டிருக்கலாம். அதை நிவர்த்தி செய்யவே இக் கடிதம்.

அவருடைய இரண்டாவது வசனத்தில் எனது உடன் பாடின்மையை முதலில் கூற விரும்புகிறேன். 'படைப்பாளிகள் புகழை நாடியே படைக்கும் போது' என்று அவர் கூறுவது எல்லோருக்கும் பொருந்தும் என நான் நினைக்கவில்லை. இப்படைப்பை நான் செய்த போது புகழை நாடவில்லை. பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவர் தமிழில் பெண்ணிலைவாதக் கருத்துக்களைக் கொண்ட ஒரு பிரசுரமேனும் இல்லையே நீங்கள் அக்குறையை நிவர்த்தி செய்யக் கூடாதா என்று ஒரு விண்ணப்பத்தை என்னிடம் சமர்ப்பித்தார். ஒரு தனி மனித புகழை விரும்பி படைக்கப் பட்டதல்ல இப்பிரசுரம். பெண்ணிலைவாத இயக்கத்தைச் சார்ந்த நாம் அந்த இயக்கம் வலுவடைய வேண்டும் அதன் கருத்தியல் பரவ வேண்டும் அடிமைத்தளையில் உள்ள பெண்கள் தங்களது அடிமைத் தளத்தின் பரிமாணங்களை அறிய வேண்டும் அதற்குப் பரிகாரம் தேட வேண்டும் என்று வேணவாக் கொண்டுள்ளோம். அந்த வகையில் எழுந்த முயற்சியே இது. சமூகப்பிரக்ஞை சமுதாய மாற்றம் ஏற்படுவதற்குரிய முதற்படி. மக்களிடம் சிந்தனை மாற்றம் வேண்டுமென்றே எழுத விழைந்தேன். ஆனால் அதனால் வரும் புகழைத் தூக்கி எறிய நான் ஒன்றும் முற்றும் துறந்த முனிவர் அல்ல. ஆனால் புகழ் வேண்டிப் படைக்கப்பட்டதல்ல இப்பிரசுரம் என்பதைக் கூற வேண்டியுள்ளேன். புகழை வேண்டியிருந்தால் பெரு முயற்சி செய்து ஒரு அரிய படைப்பைச் செய்திருக்கலாம். அதே சமயத்தில் குற்றங் கண்ட விமர்சனத்தையும் வரவேற்கிறேன். ஒரு சிறு பிரசுரத்தில் எல்லாவற்றையும் கூறிவிட முடியாது. ஆனால் கோடி காட்டி விடலாம். வாதப்பிரதிவாதங்களை அதனால் தோற்றுவிக்கலாம். தமிழில் ஒரு சிறு பிரசுரமாகவேனும் இருக்க வேண்டும் என்பதை ஈடு செய்ய எழுதப்பட்டாலும் இப்பிரசுரத்தில் பல கேள்விகள் தொக்கி நிற்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் விமர்சகர் ஓரிரு பாரிய கேள்விகளை எழுப்பியுள்ளார். பெண் விடுதலைவாதம் ஏன் மேல் நாட்டுச்சரக்கல்ல என்று வலியுறுத்த வேண்டும் என்பது ஒரு கேள்வி. இதை வலியுறுத்துவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் இயக்கம் சார்ந்தது. 70களில் பெண்ணிலைவாதக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அடிக்கடி எழுப்பிய ஒரு வாதம் பெண்ணிலைவாதக் கருத்துக்கள் மேல்நாட்டு நாகரிகத்தை உள்ளடக்கியது அது எமது கலாச்சாரத்திற்குப் பொருந்தாது என்பது. பழமைவாதிகள், தேசியவாதிகள், அரசியல்வாதிகள் பலர் மேடைகளில் பரவலாகச் செய்த உபதேசங்களில் இதுவும் ஒன்று. பெண்ணிலைவாதம் நமது கலாச்சாரத்துக்கு உகந்ததல்ல என்ற வாதத்தை வாதப்பிரதிவாதங்களுடன் தகர்த்தெறிய வேண்டும் என நான் விரும்பினேன். இது ஒரு காலத்தின் தேவையாகவும் இயக்கத்திற்கு முக்கியமான ஒரு பணியாகவும் இருந்தது. நீதிபரிபாலனம் போன்றவை முழுக்க முழுக்க மேல்நாட்டுச்சரக்கல்ல. எமக்கென்றும் ஒரு நீதிபரிபாலனமுறை இருந்தது. ஆனால் பெண்நிலைவாதம் ''Personal'' என்ற அந்தரங்க விடையங்களையும் பரிசீலனை செய்து அவற்றில் உள்ள நியாய அநியாய அம்சங்களை பிட்டு வைக்க முன் வந்தது. பெண்ணின் உரிமைக்குரல் பல கலாச்சார அம்சங்களைத் தகர்க்கக் கூடியதாக இருந்தமையால் அதை எமது கலாசாரத்திற்கு உகந்தது அல்ல எனப் பலர் எடுத்துக் கூறினர். இதை தேசியவாத மாக்கவும் பலர் முயற்சி செய்தனர். அதைப்பல பெண்களும் உள்வாங்கிக் கொண்டனர். ஆகவேதான் அது மேலைத்தேச சரக்கல்ல என்று கூறவேண்டிய தேவை இருந்தது. எமது கீழைத்தேச வரலாற்றிலும் பெண்ணடிமைவாதத்துக்கு எதிராக குரல் கொடுத்தோர் பலரிருக்கிறார்கள் என்பதையும் எடுத்தியம்ப வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதுவே இரண்டாவது காரணம். திரு. வி. க. தொடங்கி பெரியார் வரை பெண்கள் உரிமையில் தங்களது கவனத்தைச்செலுத்தினார்கள். சிவசேகரம் எழுப்பும் இரண்டாவது பிரச்சனை மார்க்ஸிய பெண்ணிலைவாதம் பற்றியது. இப்பிரச்சனைகூட அனுபவவாயிலாகவும் பெண்ணிலைவாத இயக்கம் சார்ந்ததாகவுமே எழுந்தது. இப்பிரச்சனை முதலில் தோன்றியது இங்கிலாந்தில். மாக்ஸிய இயக்கத்துடன் இணைந்த பல பெண்கள் பெண்ணிலைவாதிகளாக விழிப்புணர்ச்சி பெற்றபின் மாக்ஸிய இயக்கத்தில் உள்ள ஆணாதிக்க சார்புகளையும் வழிமுறைகளையும் காலப்போக்கில் மிகத் துல்லியமாக உணரத் தொடங்கினர். சமதர்ம சமுதாயம் ஒன்று அமைக்கப் பட்டால் அங்கு பெண் தனது சகல உரிமைகளையும் பெற்றுவிடுவாள்

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



எனப் பல மாக்ஸியவாதிகள் எடுத்தியம்பியதை பல பெண்ணிலை வாதிகள் ஏற்கவில்லை. அவர்களது அனுபவங்கள் வேறானதாக இருந்தன. இதை The Unhappy Marriage of Marxism & Feminism–(Pluto Press 1981) என்ற புத்தகத்தில் நீண்ட பிரதிவாதங்களை அவர்கள் எடுத்து அலசி இருப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இத்தகைய மாக்ஸிய பெண்ணிலைவாத முரண்பாடுகள் வேறும் பல நாடுகளில் இந்த இரண்டு இயக்கத்தாரிடமும் ஏற்பட்டதை பல பெண்ணிலைவாதிகள் விசனத்துடன் கூறியுள்ளனர். இக்காரணங் களையிட்டே அந்த விவாதத்தையும் நான் கூறவேண்டி வந்தது. இந்த உள்ளியக் முரண்பாடு இலங்கைப் பெண்நிலைவாதிகளுக்கும் மாக்ஸியவாதிகளுக்கும் கூட ஏற்பட்டது. இதன் பரிமாணங்கள் அவர்களுக்குள் ஏற்பட்ட நேர்முகவாதங்களுடன் நின்றுவிட்டன. அவை அச்சேறவில்லை. இதையுணர்ந்த பெண்ணிலைவாதிகள் தங்களுக்கென தனியாக அமைப்புக்கள், பத்திரிகைகள்- கருத்தரங்குகள் தேவையென வலியுறுத்தத் தொடங்கினர். தேசியவாதம் மாக்ஸியவாதம் என்பவற்றை ஏற்றுக் கொண்டாலும் அவற்றினூடாக வெளிப்பட்ட ஆணாதிக்க சாயல்களை இனங்கண்டு அதை எடுத்துக் கூற முற்பட்டனர். இது பெண்நிலைவாத வரலாற்றின் ஒரு கட்டம். பெண்நிலைவாதத்தை கேள்விக்குறியாக்கிய பலர் இப்போது அதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையிலிருப்பதாக நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

செல்வி திருச்சந்திரன்,
பணிப்பாளர்,
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
கொழும்பு, இலங்கை.
(அஆஇ 16, 1993)

# செல்வி திருசசநதிரனுக்கு
# சி. சிவசேகரத்தின் பதில்

அஆஇ 15ம் இதழில் வந்த எனது விமர்சனத்துக்குச் செல்வி திருச்சந்திரனது பதிலை எமது பார்வைக்கு அனுப்பியமைக்கு நன்றி ''படைப்பாளிகள் புகழையே நாடிப் படைக்கும்போது'' என்ற சொற்றொடர் சகல படைப்பாளிகளையுங் குறிக்க அவசியமில்லை அவ்விடத்து எனது கருத்துக்கள் விமர்சனந் தொடர்பாக நம்மிடையேயுள்ள மனத்தடைகள் தொடர்பானவை. நூலாசிரியை, இப்பகுதி நூல்களது விமர்சனங்களினின்று பிறிதாக எழுதப்பட்டிருந்ததை அவதானித்திருக்கக் கூடும்.

நமது சமுதாயத்தின் சமகாலச் சீர்திருத்த சிந்தனைகளும் சமுதாயப் புரட்கிக்கான மார்க்கங்களும் கணிசமான அயற்தாக்கத்திற்கு உட்பட்டவையே. ஆசிரியை நம்மிடமும் நீதிபரிபாலனமுறையொன்று இருந்ததாகக் கூறுகிறார். நம்மிடம் வேறென்னென்வோ எல்லாம் இருந்தன. பிரச்சனை யாதெனில் நம்மிடம் இன்றுள்ள நீதிபரிபாலன முறையும் நான் குறிப்பிட்ட பிற விஷயங்களும் உள்நாட்டு உற்பத்திகளா என்பதே. அயலிருந்து வந்த இவற்றையெல்லாம் ஏற்றவர்களின் மரபும் பண்பாடும் ஏன் சில விஷயங்கட்கு மட்டுமே பிரயோகிக்கப்படவேண்டும்? பெண்ணியம் மேனாட்டுச் சரக்கென்று வாதத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படுமாயின், ஆசிரியையின் வாதம் பொய்யாகி விடாதா? அது பொய்ப்பட்டால் அவர் பெண்ணியத்தை எவ்வாறு நிலைநாட்ட முயல்வார்? வி.க. வோ பெண் ஈ.வே ராவோ தமது பெண்ணுரிமை நிலைப்பாடுகளை நமது மரபின் அடிப்படையிற்றான் வந்தடைந்தார்களா? நமது சமுதாயச் சீரழிவுக்கு மரபின் பேராலும் கலாச்சாரத்தின் பேராலும் நியாயங்கற்பிக்கப்படும் போது அச்சீரழிவை எதிர்க்குஞ் சிந்தனைகள் புறத்திலிருந்து வருவது சாத்தியமானதே. புறத்தினின்று வருவதெல்லாம் முற்றாகவே அவற்றின் அயற் தன்மையுடன் கையாளப்படுவதில்லை சாதி முறையும் பெண்ணடிமைத்தனமும் இன்னும் எத்தனையோ கொடுமைகளும் பண்பாட்டினதும் மரபினதும் பேராலேயே நிலை நிறுத்தப்படு

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



கின்றன. மரபின் வரையறைகட்குள் பெண்ணியத்தை நியாயப் படுத்த முனைவது, ஒருபுறம் நேர்மையற்ற வாதங்கட்கு வழிகோலுவது போக, மறுபுறம் மரபுவாதிகளது கைகளையே வலுப்படுத்தும். மனித சமத்துவத்தை எந்த வகையிலும் நமது மரபும் பண்பாடும் மறுக்குமேயாயின், அந்த ஒவ்வொரு வகையிலும் அவை தகர்த்தெறியப்பட வேண்டும்.

பெண்ணியம் பற்றிய மாக்ஸிய நிலைப்பாட்டையோ மாக்ஸியச் சிந்தனையாளர்களது பங்களிப்பையோ அறிவதற்கு ஆசிரியை அதிகம் முயன்றதாகத் தெரியவில்லை. நூலில் இருந்த குறைபாடு ஆசிரியையின் பதிலில் நியாயப்படுத்தப்பட்டுள்ளதே ஒழிய நிவர்த்தி செய்யப்படவில்லை. ''சமதர்ம சோஷலிஸ சமுதாயமொன்று அமைக்கப்பட்டால் அங்கு பெண் தனது சகல உரிமைகளையும் பெற்றுவிடுவாள்.'' என்பதில் என்ன தவறு உள்ளது? இதைப் பல பெண்ணிலைவாதிகள் ஏற்கவில்லை என்பது மாக்ஸிய நிலைப்பாட்டைப் பொய்ப்பித்து விடுமா? சோஷலிஸம் என்பது பாரிய சமுதாய மாற்றம்; அது ஒரு நாட் கூத்தல்ல. அரச அதிகாரம் கை மாறிய பிறகும் பழைய சிந்தனைகள் நிலைக்கும், தூக்கியெறியப்பட்ட வர்க்கத்தின் செயற்பாடு தொடரும், வர்க்கப் போராட்டம் தொடரும் பெண்ணடிமைத்தனம் உட்படச் சகல விதமான சமுதாய அநீதிகட்கு மெதிரான போராட்டங்கள் தொடராமல் முழுமையான சோஷலிஸ சமுதாயம் உருவாக முடியாது. ''தேவனின் சாம்ராச்சியம் பூமியில் நிறுவப்படும் வரை அல்லற்பட்டவர்களே பொறுமையாயிருங்கள்'' என்று மதபோதகர்கள் சொல்கிற மாதிரி ''சோஷலிஸம் வரும்வரை கையைக் கட்டிக்கொண்டிருங்கள்'' என்று எவராவது சொன்னால் அவர் மாக்ஸியவாதியாக இருக்க முடியாது. தொழிற்சங்கப் போராட்டங்கள், கொலனித்துவ ஏகாதிபத்திய முறைக்கெதிரான எழுச்சிகள், சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் போன்ற எல்லாம் சோஷலிஸம் வரும் வரை காத்திருக்கவில்லை. நானறியச், சில பெண்ணியவாதிகட்கும் மாக்ஸிய வாதிகட்குமிடையிலான முரண்பாட்டின் காரணம் அப்பெண்ணியவாதிகள் ஆண் — பெண் முரண்பாட்டை அடிப்படை முரண்பாடாகக் கொண்டு அதைப் பிற சமுதாய முரண்பாடுகளினின்று தனிமைப்படுத்த முனைந்தமையே.

ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் ஆணாதிக்க மரபினின்று முற்றாக விடுதலையடைந்தவர்களாக இருக்க முடியாது ஒருவர் மாக்ஸியக் கட்சியின் உறுப்பினராவதாலோ, ஒரு இயக்கம் மாக்ஸிய இயக்கமெனக் கருதப்படுவதாலோ, அவரோ அதுவோ



சகல பிரச்சனைகளிலும் சரியான நிலைப்பாட்டையே கொள்ளும் என்று நாம் கருத இடமில்லை. அதே வேளை, ஒரு சிலரது கருத்துக்களிலுள்ள தவறுகளோ சில 'மாக்ஸிய' ஸ்தாபனங்களின் தவறான நிலைப்பாடுகளோ மாக்ஸியத்தின் நிலைப்பாடாகிவிடா. மாக்ஸியம் நடைமுறை சாரந்தது; சரியும் தவறும் நடைமுறை மூலமே அறியப்படுவன என அது ஏற்கிறது. எனவே அங்கு எக்காலத்துக்குமான வாய்ப்பாடுகள் எதுவுமில்லை குறிப்பிட்ட சில பெண்ணிலைவாதிகள் குறிப்பிட்ட சில மாக்ஸியவாதிகளுடன் முரண்பட்டால், அவர்கள் அந்த மாக்ஸியவாதிகளது நிலைப்பாட்டை நிராகரிக்கிறார்களா அல்லது மாக்ஸியத்தை நிராகரிக்கிறார்களா? ஆசிரியை கூறும் ஆதாரங்கள் பின்னைய போக்கையே சுட்டுகின்றன.

''மாக்ஸியப் பெண்ணியம்'' என்பதைப் பெண்ணுரிமையை மறுக்கும் ஒன்றாகச் சித்தரித்து பெண்ணுரிமைக்கும் மாக்ஸியத்துக்குமிடையே சுவரெழுப்பும் முயற்சி விஷமத்தனமானது. ''சோஷலிசப் பெண்ணியம்'' மட்டும் எவ்வாறு ஆணாதிக்கத்துக்குத் துணை போகாது நிற்கிறது? மாக்ஸியத்தினின்று விலகிநின்ற சோஷலிச சக்திகள் ஒவ்வொன்றும் குறுகிய தேசியவாதம், இனவாதம், முதலாளித்துடன் சமரசம் என்ற சறுக்குப் பாதைகளில் அடிவைக்கத் தவறவில்லை. இந்த லட்சணத்தில் ''சோஷலிஸ பெண்ணியத்தின்'' நிலைப்பாடென்ன? வர்க்க சமுதாயத்தில் உற்பத்தி உறவின் அடிப்படையிலான வர்க்க முரண்பாடே அடிப்படையானது என்பதையும் வர்க்கப் போராட்டத்தையும் மறுதலிக்கவே மாக்ஸியசார்பற்ற 'சோஷலிஸம்' என்ற முகமூடி இதுநாள்வரை மாக்ஸியத்தின் எதிரிகளால் அணியப்பட்டுள்ளது. ஆசிரியை பெண்ணுரிமை பற்றிய மாக்ஸிய நிலைப்பாட்டை ஆராயாமல் ''மாக்ஸியப் பெண்ணியம்'', ''சோசலிஸப் பெண்ணியம்'' என்று எதையோ எழுதினார். அவரது பதில், மாக்ஸியப்பெண்ணியம் என அவர் எதைக் கருதுகிறார் என்பதை தெளிவுபடுத்தியுள்ளதா என்பது ஒரு முக்கியமான கேள்வி.

மாக்ஸியதுக்கு முன்னுள்ள சவால் ஒடுக்கப்பட்ட சகல மக்களையும் ஐக்கியப்படுத்துவதும் ஒடுக்கலற்ற சமுதாயத்தை நிறுவுவதுமாகும். ஒடுக்கும வர்க்கத்தின் இருப்பை (அதாவது ஒரு சமுதாய வர்க்கமாக அதன் இருப்பை) இல்லாதொழிப்பது அதன் தேவை. எனவே, ஒவ்வொரு ஒடுக்குமுறைக்குமெதிரான எழுச்சியும் ஈற்றில் மாக்ஸியத்தின் இலக்கிற்கு உடன்பாடானதே.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



பெண்ணியத்திற்கு முன்னுள்ள சவால் பாலடிப்படையிலான ஒடுக்குமுறையை இல்லாதொழிப்பது மட்டும் தானா? அவ்வாறாயின், வர்க்க, இன, சாதிய ஒடுக்கல்கள் மத்தியிலும் அது தன் இலக்கை அடைய முடியுமாயிருக்க வேண்டும். இங்கு ஒரு நியாயமான ஐயம் எழுகிறது: நாம் வேண்டுவது பாலடிப்படையில் மட்டும் ஒடுக்கலில்லாதவாறு ஒரு சுரண்டற் சமுதாயமா? வசதி படைத்த உயர், நடுத்தர வர்க்கம் பெண்ணியம் போலன்றி, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் சார்பான பெண்ணுரிமைப் போராட்டம் பிற சமுதாயப் போராட்டங்களுடன் தன்னை நெருக்கமாகப் பிணைத்துக் கொள்ளும். அதன் மூலம் பெண் விடுதலையை அது உறுதிப்படுத்தும். இதைச் செய்ய எந்த ஏட்டுக் சுரைக்காய் நிறுவனத்தினதும் ஆசியும் அங்கீகாரமும் அதற்கு அவசியமில்லை.

(அஆஇ 16, 1993)

# தீபங்கள் எரிகின்றன...*

வணக்கத்துக்குரிய மேரி பஸ்ற்றியன் அடிகளின் வாழ்க்கை வரலாற்றின் முக்கியத்துவம் அவரது சமயப்பணியையும் சமுதாயப் பணியையும் உள்ளடக்குகிறது. எனினும் அவரது படுகொலையின் அரசியற் பின்னணியும் அந்த அகால மரணம் நேர்ந்த காலமும் இன்றைய சூழலும் அவரது சமுதாயப் பணியின் முக்கியத்துவத்தையே வலியுறுத்துகின்றன.

ஒருவரது வாழ்க்கை வரலாறுகளை எழுதுவோர் அவரது ஒவ்வொரு சொல்லுக்கும் செயலுக்கும் விளக்கம் தருவது சாத்தியமில்லை. மனித வாழ்வில் நிகழும் சகலவற்றுக்கும் காரணங்களும் விளக்கங்களும் இருப்பினும், மனித அறிவு வரையறைக்குட்பட்டதென்ற காரணத்தால், பல சமயங்களில் ஊகங்களின் அடிப்படையிலேயே செயற்படுகிறோம். ஊகங்கள் தவறானானவையாக இருப்பின் விளக்கங்களும் தவறாகி விடுகின்றன. மேரி பஸ்ற்றியன் அடிகளது பிள்ளை பிராயத்தை வைத்து அவரது பிற்கால வாழ்வையும் நற்பண்புகளையும் விளக்க ஆசிரியர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் உண்மையில் மேரி பஸ்ற்றியனை ஒரு கர்ம வீரராக உருவாக்கிய சூழ்நிலைகளின் முக்கியத்துவத்தை மழுங்கடித்து விடுகின்றன. மனிதர்களின் உயரிய பண்புகளைச் சமுதாயச் சூழ்நிலைகளே உச்சப்படுத்துகின்றன. வட இலங்கையின் அரசியல் நெருக்கடியும் அதற்கு முகங்கொடுக்கும் அவசியமுமே மேரி பஸ்ற்றியனின் சிறப்பியல்புகள் விருத்திபெறவும் நடைமுறையில் வெளிப்படவும் இயலுமாக்கின. இந்த வகையில், மேரி பஸ்ற்றியனது சமுதாயப் பணி எவ்வாறு அரசியல் ஈடுபாடாகவும், தவிர்க்க முடியாதவாறு, அரசியல் நடவடிக்கையாகவும் விருத்தி அடைந்தது என்பதை நூலாசிரியர் சரிவரக் கையாளவில்லை என்பதே என் அபிப்பிராயம்.

மேரி பஸ்ற்றியனின் அரசியற் சார்பு, ஸ்தாபன ரீதியான தொடர்புகள், அவரது நிலைப்பாட்டின் சரி பிழைகள் போன்ற

---

*தீபங்கள் எரிகின்றன... (அருள் திரு. மேரி பஸ்ற்றியன் வரலாறு) நாவண்ணன், மல்வம் : சுவாமி ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் மாசி, 1988, 226—XIV.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



விஷயங்கள் எக்காரணத்தாலோ போதியளவு விரிவாகக் கையாளப் படவில்லை. துடிதுடிப்பான ஒரு குறும்புக்காரச் சிறுவனாக இருந்த மேரி பஸ்ற்றியன் ஆழ்ந்த மனிதாபிமானமும் உறுதியான மனமும் அரசியற் பிடிப்பும் செயலூக்கமும் மிக்கவராகவும் மக்களுடன் நெருங்கிப் பழகி அவர்களுடன் தன்னை ஒருவராகவே கண்டவராக வும் விருத்தியடைந்ததையும் அவரது ஈடுபாடுகளையும் ஆசிரியர் சுவைபட எழுதியுள்ளார். வேறு ஒரு சூழ்நிலையில் வேறு ஒரு நல்ல பாதிரியாரின் வரலாறாக இருந்திருந்தால் ஒருவேளை நான் முன் கூறியகுறைபாடுகள் அவசியமில்லாது போயிருக்கலாம். ஆயினும் மேரி பஸ்ற்றியன் என்கிற அரசியல்வாதியை விளக்காமல் மிருதியைச் சரி வர விளக்க இயலாத சூழ்நிலையில் இக்குறைபாடுகள் பாரியவை.

இது தவிர ஆசிரியரது பார்வையில் உள்ள சில குறைபாடுகள் என் கவனத்தை ஈர்த்தன. கத்தோலிக்கத் திருச்சபையில் சமீப காலத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளை விளக்கும்போது சிங்களப் பாதிரிமார் பொதுப்பட இனவாதக் குற்றவாளிகளாகவும் தமிழ்ப் பாதிரிமார் நியாயத்துக்காகப் போராடும் நிலையிலும் காணப்படு கின்றனர். இதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்காமல் தகவல்கள் முன்வைக்கப்படும்போது அவை தவறான கருத்துக்கட்கு ஊட்டமளிக்க இடமுண்டு. மேரி பஸ்ற்றியன் நினைவாக நடந்த இரங்கற் பலியிற் கலந்து கொள்ளாது தட்டிக்கழித்த வண. அம்புறோசியோ டி பௌலி (போப்பரசரது தூதுவர்) ஒரு ராஜ தந்திரியாகவே செயற்பட்டார் என்று நூலாசிரியர் குறைப்படுகிறார். அவர் உண்மையில் போப்பரசரது தூதுவராகச் செயற்படவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. இங்கே வண. டி பௌலி அவர் கள் யாருடைய ராஜதந்திரி என்ற கேள்வி எழுகிறது. வத்திக்கான் அதிகார பீடமும் போப்பரசரும் லத்தீன் அமெரிக்க விவகாரங்களிலும் பிலிப்பீன்ஸிலும் வேறும் பல நாடுகளின் ஒடுக்கப்பட்ட கத் தோலிக்க மக்களது போராட்டங்களிலும் எந்த வகையான நிலைப் பாட்டை எடுத்தார்கள் என்ற கேள்வியை ஆசிரியர் தனக்குட் கேட் டிருந்தால் குற்றவாளி போப்பரசரது தூதுவர் மட்டுமல்ல என்பதும் குற்றம் இன்னும் உயர்ந்த இடத்தில் இருப்பதும் தெரியவரும்.

நூலாசிரியர் இலங்கையில் கத்தோலிக்க திருச்சபை அண்மைக் காலம் வரை அரசியல் ஈடுபாடற்றதாக இருந்தது என்ற கருத்தைக் கொண்டுள்ளதுபோற் படுகிறது. கத்தோலிக்கத் திருச்சபைக்கும் யூ. என். பி. அரசியலுக்கும் இருந்துவந்த நெருக்கம் பற்றி ஆசிரியர் அறிவார் என்று நம்புகிறேன். கத்தோலிக்கத் திருச்சபையின்



அதிகார பீடத்தின் வர்க்கச் சார்பு, தேசிய இனப் பிரச்சினையின் விருத்தியின் விளைவாகத் திருச்சபையினுள் இருந்த முரண்பாடுகளை நியாயமான முறையில் கையாள முடியாத நிலைக்கு அதனைத் தள்ளி விட்டது. அரசியற் பிரச்சனைகளின் வர்க்கத் தன்மையை கவனிக்கத் தவறியதாலேயே கத்தோலிக்கத் திருச்சபையினுள் ஏற்பட்ட நெருக் கடியை ஆசிரியர் சரிவர விளக்க இயலாது போயிற்று.

நூலாசிரியர் தரும் தகவல்கள் கத்தோலிக்கத் திருச்சபைக்குள் வளர்ந்து வரும் முரண்பாடுகள் பற்றிக் கூறுவதோடு மக்கள் மத்தியிற் செயற்படும் பாதிரிமாருக்கும் மக்களிடமிருந்து ஒதுங்கிய அதிகார பீடத்தின் பிரதிநிதிகட்கும் இடையில் வளரும் முரண்பாடுகளையும் ஓரளவுக்கு அடையாளங் காட்டுகின்றன. ஆயினும் இலங்கையில் உள்ள நிலவரம் லத்தின் அமெரிக்காவிலோ பிலிப்பீன்ஸிலோ உள்ள நிலவரங்களுடன் ஒப்பிடக் கூடிய அளவுக்கு விருத்தி அடையவில்லை என்பதும் இலங்கையில் தேசிய இனப்பிரச்சனை என்ற சமுதாய முரண்பாட்டின் வர்க்கத் தன்மை இன்னும் முற்றாக வெளிப்படை யாகவில்லை என்பதும் கவனத்துக்குரியது.

மேரி பஸ்ற்றியன் அடிகளின் வரலாறு ஒவ்வொரு இலங்கையரும் அறிய வேண்டிய ஒன்று. அதை முழுமையாகத் தருவதற்காக நூலாசிரியர் நாவண்ணன் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டுக் குரியது. நூலின் சில முக்கியமான குறைபாடுகளையும் மீறி, அதன் பொருளின் முக்கியத்துவமும் ஆசிரியர் அதைச் சுவைபட வழங்கியுள்ள முறையும் தந்துள்ள பயனுள்ள தகவல்களும் இந்த நூலை ஒரு பயனுள்ள நூலாக்குகின்றன.

தாயகம், 1988



படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முறிந்த பனை

[எச்சரிக்கை

விமர்சனத்துக்கும் கண்டனத்துக்கும் வேறுபாடு தெரியாதோரின் ஆதிக்கம் மிகுந்ததொரு சூழலில் வாழ்கிறோம். நயங்கூறுவதையே விமர்சனமாக கருதப பழகிவிட்ட நமது இலக்கிய மரபில் நக்கீரரைச் சகிக்கும் மனப்பக்குவம் பாண்டியனுக்குமில்லை பரம்பொருளுக்குமில்லை என்பதை எளிதாகவே ஏற்றுக்கொண்டு, மிகவும் வரையறுக்கப்பட்ட முறையில் உலகைப் பார்க்கப் பழகிவிட்ட சமுதாயம் நமது. தங்க கிணறுகட்கு வெளியே ஒரு உலகம் இருப்பதை அறியவிரும்பாத புண்ணியவான்களுக்கு அப்பார்வையே போதுமானதெனினும், சாதி, சமயம், பாஷை, தேசம், இனம், பிரதேசம் என்ற அடிப்படையில் சரி பிழைகளைக் காணும் குறுகிய பார்வையைப் பேணுவதற்கு நமது சனங்களும் சமுதாயமும் இதுவரை கொடுத்துள்ள விலை மிகவும் அதிகம். ஆயினும், இன்னுங்கூட நமது பார்வையைச் சற்று விலாசப்படுத்தவும் நமது அனுபவங்களின்றும் மற்றவர்களினதின்றும் கற்கவும் நமக்குத் தயக்கம் மிகுதி. கற்கத் தயங்குவது போதாதென்று கற்பவர்களையும் கற்றதைப் பகிரமுனைபவர்களையும் கல்லாலடிக்கிறோம். இன எதிரி, துரோகி, ஒற்றன், சமூக விரோதி போன்ற பட்டங்களைத் தடையோ தயக்கமோ இல்லாது சூட்டி, அவற்றையே காரணமாகக் காட்டி நம்மை நாமே அழித்து வருகிறோம். நக்கீரர் இறைவனையே பகைத்த போதும் உயிர்பிழைக்க முடிந்தது. ராஜனி திராணகம இயக்கங்களைப் பகைத்த பாவத்துக்கு வழக்கோ, விசாரணையோ இல்லாமலேயே மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இது விமர்சனத்துக்குக் கிடைத்த சன்மானம் மட்டுமல்ல மற்ற விமர்சகர்கட்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையுமாகும். ஆயினும் விமர்சனங்கள் இனி ஓயும் என்ற எதிர்பார்ப்புக்குச் சவாலாக மறுபடி பிரசுரமாகியுள்ளது முறிந்த பனை.

ஏற்கனவே, நேர்மையான நடுநிலை விமர்சன நோக்கி எழுதப் பட்ட நூல் என்ற பாராட்டை இந்த நூல் பெற்றுள்ளது. ஆயினும் இந்த நூல் பற்றிய

` The Broken Palmyra : ராஜன் ஹூள், தயா சோமசுந்தரம் கே. ஸ்ரீதரன், ராஜனி திராணகம, The SriLanka Studies Institute, Claremont Ca, 91711, USA. (464 + xv ப.)



விமர்சனங்கள் அந்த விளிம்பிற்குள் நின்றுவிட முடியாது. அவ்வாறு நிற்கும் விமர்சனங்கள் இந்த நூலை அவமதிப்பன. இதை எழுதியவர்களது நோக்கத்தை அவமதிப்பன. இந்த நூலின் முக்கியத்துவத்தை எத்தகைய கடுமையான விமர்சனமும் குறைத்துவிட முடியாது என்ற உறுதியுடனேயே இதன் பாரிய குறைபாடு சிலவற்றையும் பிறழ்வுகளையும் பற்றி எழுத முற்படுகிறேன். இந்த நூல் எழுதப்பட்ட சிரமமான சூழ்நிலையை நானறிவேன். இதன் உள்ளடக்கத்தை ஒன்று திரட்டி ஒரு முழுமையான நூல் வடிவங் கொடுப்பதில் இருந்த சிக்கல்களையும் சிறிது உணர்வேன். இதை வெளியிடுவதிற் பங்கு பற்றிய ஒவ்வொருவரதும் மனத்திண்மையும் நேர்மைத் திறனும் என்னை வியக்க வைக்கின்றன. இந்தச் சாதனையை மெச்ச நாம் தயங்குவதற்கில்லை என்ற காரணத்தால் இதன் குறைபாடுகள் பற்றி அசட்டையாக இருப்பது இந்த நூலை எழுதியவர்களது நோக்கத்திற்கே முரணானது. எந்தவொரு அரசையோ கட்சியையோ இயக்கத்தையோ அடிக்கவோ, ஆதரிக்கவோ நிர்ப்பந்தமின்றி எழுதப்பட்ட இந்த நூலை அந்த வகையிலேயே விமர்சிக்க முனைகிறேன். நிறைகள் பற்றிச் சில வரிகளும் குறைகள் பற்றிய பலவும் இருப்பதனால், நிறைகள் குறைய, குறைகள் நிறைய, என்று எவரும் கருதவேண்டாம் என்ற வேண்டுகோளுடன் விமர்சனத்தை வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.]

நாலுபேர் சேர்ந்து இத்தகைய ஒரு புத்தகம் எழுதுவது லேசான காரியமில்லை. ஏனெனில் இந்த நூல் மிகவும் சர்ச்சைக்குரியதொரு விஷயம் பற்றியது. இலங்கையின் வடக்கில் விடுதலை இயக்கங்களின் எழுச்சியை அடுத்து 1990 முற்பகுதியில் இந்தியப் படைவிலகற்குச் சற்று முன்னர்வரை நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிய இந்த நூல், விடுதலைப் போராட்டத்தின் பேரிலும் அமைதி காத்தலின் பேரிலும் மக்கள் அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்ட கதையையும் ஒரு அமைதியான சமுதாயத்தின் சீரழிவின் கதையையுங் கூறுகிறது. இலங்கை அரசும் இந்திய அரசும் விடுதலை இயக்கங்களும் தம் பிரச்சாரத்தின் நோக்கங்கட்காகத் திரித்தவற்றையும் மறைத்தவற்றையும் வெளியேபோட்டு அலசி மனிதர்களது அடிப்படை உரிமைகளைப் பேணவேண்டியவர்களும் இழந்தவற்றைப் பெற உதவ முன்வந்தவர்களும், எஞ்சி இருந்தவற்றையும் பறித்த கொடுமையைக் கூறும் வரலாற்றுச் சித்திரம் இது. எல்லோருமே

படிப்பகம்

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



சொல்லவும் எழுதவும் தயங்கிய விஷயங்களைத், தங்களை எதிர் நோக்கிய பலவகையான நெருக்கடிகளையும் மீறி, இந்த நாலு பேரை எழுதத் தூண்டியது என்ன? அது எதுவாயிருப்பினும், அதுவே தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய இருண்ட சூழலின் பிரகாசமான ஒளிக்கீற்று.

இந்த நூலைத் திட்டமிடுவதிலிருந்த பலவீனங்கள் அப்பட்டமாகவே தெரிகின்றன. நூலை எழுதிய நால்வரும் வேறுபட்ட அரசியற் சமுதாயப் பார்வை உடையவர்களென நூலின் முன்னுரையிற் கூறப்பட்டுள்ளது. வடபிரதேச நிகழ்வுகள் பற்றிய அவர்களது விளக்கங்களும் வியாக்கியானங்களும் வேறுபடுவது தவிர்க்க முடியாதது. 'முறிந்த பனை' அவர்களிடையே உடன்பாடு காணக் கூடிய மனித உரிமைப் பிரச்சனைகட்கு முக்கியத்துவம் தந்தமை மூலம் நூலின் ஒருமையைப் பேணுகிறபோதும், அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் தனித்து நிற்பது போன்ற உணர்வை தவிர்க்க முடியவில்லை. வடக்கில் நடந்தவற்றை வெறும் தகவல்களாகத் தருவது அவற்றைச் சரிவர விளங்கிக்கொள்ள உதவாது என்பதால் அந்த நிகழ்வுகட்கு உரிய அரசியல் வரலாற்றுப் பின்னணி நூலின் முற்பகுதியில் தரப்பட்டுள்ளது. ஆயினும், நூலுக்கு வலிவூட்டும் நோக்குடன் எழுதப்பட்ட முதல் மூன்று அத்தியாயங்களுமே நூலின் மிகவும் வலுவீனமான பகுதிகள் எனலாம்.

வரலாற்றுப் பின்னணி என்ற தலைப்பையுடைய முதற்பாகத்தின் 186 பக்கங்களில், எண்ணி 29 பக்கங்கள் 1948 முதல் 1981 வரையிலான வரலாறு பற்றிய இரண்டு அத்தியாயங்கட்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த அத்தியாயங்கள் சுருக்கமாக எழுதப்படக்கூடுமோ இல்லையோ என்பது முக்கியமானதல்ல. சுருக்கமாக எழுதுகையில் முக்கிய அரசியல் நிகழ்வுகட்கு வழங்கப்படவேண்டிய உரிய அழுத்தம் தவறாமலும் அவசியமான விவரங்கள் விடுபடாமலும் அத்தியாயங்களை அமைப்பது அவசியம். சம்பவங்கள், முடிந்தவரை, ஒரு வாலாற்றுத் தொடர்ச்சியுடன் வாசகர்முன் வைக்கப்பட வேண்டும். இந்த நூல் இதைச் செய்யத் தவறிவிட்டது. அரைகுறையான முறையில் எழுதப்பட்ட இந்த இரண்டு அத்தியாயங்கட்கும் பதிலாக, முக்கிய அரசியல் நிகழ்வுகளைக் காலக்கிரமமான குறிப்புகளாகத் தந்திருக்கலாம் என்றே தோன்றுகிறது. அதைவிட முக்கியமாக, எழுதுவோரின் கவனயீனம், வாசகர்கள் பல விஷயங்களைத் தவறாகவே விளங்கிக் கொள்ளத் தூண்டுகின்றது. உதாரணமாக, 16ம் பக்கத்தில், 1956 சிங்களம் மட்டுமே சட்டத்தின் விளைவாகத் தமிழரசுக்கட்சி தமிழர் நலன் கோரும் பிரதம அரசியற் கட்சியாயிற்று என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும், தமிழரசுக்கட்சி 1956 இல்



நடந்த தேர்தலில் அமோக வெற்றியீட்டிய பின்னரே சிங்களமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மொழிப் பிரச்சனையின் அடிப்படையிலேயே தமிழரசுக்கட்சி எழுச்சிபெற்றது என்ற உண்மையைக் கொஞ்சம் கூடிய கவனத்துடன் எழுதியிருக்கலாம். இன்னும், அதே பக்கத்தில், 1956, '58, '77, '81, '83 இனக்கலவரங்கள் என்று அடுக்கிக்கொண்டு போகும் ஆசிரியர், '56இல் நடந்த சில்லறை வன்முறைச் சம்பவங்களை, '58 வன்முறையுடனும் அதனிலும் பன்மடங்கு வீரியத்துடன் '77இலும் அதிலும் உக்கிரமாக '83இலும் நடந்தவற்றுடன் சமன்படுத்த விரும்புகிறாரா? எல்லாவற்றிலும் முக்கியமாக, 58இல் அரசும் அரச படைகளும் நடந்துகொண்ட விதமும் '77இன் பின் நடந்துகொண்ட விதமும் எவ்வாறு வேறுபடுகின்றன. தமிழ்த்தேசியவாதத் தலைமை இலங்கை அரசியலில் தன்னை நடத்திக்கொண்ட விதம், அத்தலைமையின் பிற்போக்கான முனைப்பும் ஏகாதிபத்தியச் சார்பும் போன்ற பல முக்கிய விஷயங்கள் பற்றி ஆசிரியர்கள் போதிய அக்கறை காட்டவில்லை.

சிங்களமொழிச் சட்டம், தரப்படுத்தல் போன்ற பிரச்சனைகளில் ஆசிரியர்கள் வெறுமனே ஒரு தமிழ்-சிங்கள தேசியஇன முரண்பாட்டைவிட அதிகமாக எதையுமே தரிசிக்கத் தவறிவிட்டனர். தமிழரசுக்கட்சியினர் அதிகம் பேசவிரும்பாத சாம் பி.ஸி. பெர்ணான்டோ-செல்வநாயகம் பேச்சுவார்த்தைகள் (1960-61) பற்றி ஆசிரியர்கள் எதுவும் தெரிந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. (1961 சத்தியாக்கிரகத்தின் சரித்திரத்தை அறிய இப் பேச்சுவார்த்தைகளைப் பற்றியும் சிறிது அறிய வேண்டும்!) நவசமசமாஜக் கட்சியை 'மரபு வழி' இடதுசாரிக் கட்சிகளின்று பிரித்துக் காணும் போக்கும் இது போன்ற பிற குறைபாடான விளக்கங்களும் அரசியல் வரலாறு பற்றிய கவனயீனத்தின் விளைவுகளே.

ஓகஸ்ட்'81 முதல் யூலை'83 வரையிலான காலம் பற்றிய மூன்றாம் அத்தியாயம் பெருமளவும் 1982 மே — 1983 யூலை வரையிலான 'ஸ்ற்றடே றிவ்யூ' யாழ்ப்பாண வார ஏட்டின் செய்திக் குறிப்புகளையும் கட்டுரைகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது இதன் விளைவாக இந்த அத்தியாயம் கட்டுரையாகவும் இல்லாமல் முறையான ஒரு செய்திக் கோவையாகவுமில்லாமல் இரண்டுங் கெட்டானாக அமைந்துள்ளது. எக் காரணங்கொண்டோ, இந்த அத்தியாயமும் இதற்கு முந்திய இரண்டும், 1977 இனவாத வன்முறையின் பின்னணி, அவ்வன்முறையின்போது அரசின் நடத்தை, அதையும் மீறி யூ. என். பி. — த. ஐ. வி. மு. அரசியல்

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



சல்லாபம், 1983இல் தொண்டமானால் அம்பலப்படுத்தப்பட்ட யூ. என். பி — இ. தொ. கா. — த. ஐ. வி. மு. உடன்பாடு (1977 தேர்தல் பற்றியது), போன்ற விஷயங்களையும் அலட்சியம் செய்து விடுகின்றன. 1983இல் தான், அரசாங்கம் முதற் தடவையாக நாட்டு மக்களின் ஒரு பகுதியினருக்கு எதிரான வன்முறைக்குப் பெரிதும் உடந்தையாக இருந்தது என்று கூறும் ஆசிரியர்கள் 1977, '81இல் நடந்தது என்னவென்றே அறியமாட்டாதவர்களா? அது மட்டுமன்றித் தமிழருக்கு எதிரான அரச வன்முறை யூ. என். பி. அரசின் ஜனநாயக வெகுஜன விரோதக் கொள்கைகளின் தொடர்ச்சியே என்பதை ஆசிரியர்கள் சுட்டிக் காட்டத் தவறியமையும், தேசிய இனப் பிரச்சனையைத் தேசிய இனங்களிடையிலான முரண்பாட்டின் அடிப்படையிலேயே அவர்களும் அணுகியதாக எண்ணத் தூண்டுகிறது.

விடுதலை இயக்கங்களின் எழுச்சி பற்றிய அத்தியாயமும் 1987இல் நெருக்கடி முற்றியமை பற்றியதும் இந்தியத் தலையீடு பற்றியனவும் பல பயனுள்ள தகவல்களை முன் வைக்கின்றன. இவற்றுக்கு ஆதாரமான அறிக்கைகளும் ஆய்வுகளும் நூலின் இரண்டாம் பாகத்தில் அடங்குவன. எக்காரணங் கொண்டோ, முதற் பாகத்தின் இறுதிப் பக்கத்தில், ஸ்டாலின் ஸிற்லரைவிடப் பெரிய கொலைகாரனென்ற கருத்தும், கொர்பச்சேவ் வரவேற்கத்தக்கதொரு அரசியல் மாற்றத்தின் பிரதிநிதி என்ற தொனியும் புலனாகின்றன. இக் கருத்துக்கள் நூலின் ஆசிரியர்களிடையே மாக்ஸியச் சார்பையுடைய இருவருக்குமே உடன்பாடானவையா என்ற கேள்வியும் எனக்குள் எழுந்தது. ஸ்டாலினின் தவறுகளை வரலாற்றில் வைத்துப் பார்க்காமல், ஏகாதிபத்தியத்தின் தாராளவாத ஆதரவாளர்களின் போக்கிலேயே கருத்துக்களை முன் வைப்பது முறையல்ல என்றே கருதுகிறேன்.

நூலின் பயனுள்ள பகுதிகள் பெரும்பாலும் இரண்டாம் பாகத்திலேயே உள்ளன. இவற்றுட் பல,, முதலாம் பாகத்திற் தரப்பட்டிருக்கலாம். இவ்வாறே முதலாம் பாகத்தில் விரிவாக எழுதப்பட்ட விஷயங்கள் அங்கு சுருக்கமாகவும் அவற்றின் விவரங்கள் இரண்டாம் பாகத்திலும் தரப்பட்டிருக்கலாம். இது நூலின் திட்டமிடல் தொடர்பான ஒரு குறைபாடு. இவ்வாறான குறைபாடுகள் மிக எளிதாகத் தவிர்க்கக் கூடியனவாயினும் அதிகமாகவே காணப்படுவது வருத்தத்துக்குரியது.

வடக்கில் நடந்த வன்செயல்கள், கொடுமைகள், வஞ்சனைகள் போன்றன பற்றிய விமர்சனத்தின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளது



தவறுகள் பற்றியது. இது சிலருக்கு ஆத்திரமூட்டலாம். ஆயினும் தமிழர், இந்திய அரசினதும் இலங்கை அரசினதும் ஆயுதப் படைகளிடமிருந்தோ வேறு எவரிடமுமிருந்தோ எதிர்பார்க்கமுடியாத அன்பையும் அநுதாபத்தையும் விடுதலை இயக்கங்களிடம் எதிர்பார்ப்பது நியாயமானதே. எனவே, பிரதான இயக்கமொன்றிடம் இவ்வாறான எதிர்பார்ப்பு அவர்கட்கு அதிகமாக இருப்பதும் அது ஏமாற்றமாகும் போது மிகுந்த மனக்கொதிப்பு எழுவதும் இயல்பானவை. அந்த வகையில், விடுதலைப் புலிகள் அதிக விமர்சனத்துக்கு உள்ளானமை சரியானதேயெனினும், விடுதலைப் புலிகளை விமர்சிக்கக் கையாண்ட ஆய்வுமுறை பிற இயக்கங்களின் விஷயத்திலும் பிரயோகிக்கப்பட்டிருந்தால் அது நியாயமாக இருந்திருக்கும். உதாரணமாக, விடுதலைப் புலிகளின் சில தலைமை உறுப்பினர்களது தனிப்பட்ட குணாம்ஸங்களை ஆராய்ந்தது போன்று பிற இயக்கங்களின் முக்கியஸ்தர்களின் குணாம்ஸங்கள் ஏன் ஆராயப்படவில்லை? என்னளவில், இவ்வாறான ஆய்வுகளின் அடிப்படையில் எழும் விளக்கங்கள் மிகவும் ஆபத்தானவை. தகவல்களின் போதாமை மட்டுமன்றி ஆய்வாளர்களின் அகநிலைச் சார்பும் விஷயங்களை வசதிக்கு ஏற்றபடி விளக்கத் தூண்டலாம். இவ்வாறான விளக்கங்கள் இயக்கங்களின் வர்க்க அடிப்படையையும் சமுதாயப் பார்வையையும் அறிய அதிகம் உதவமாட்டா.

ஒரு சில இடங்களில், உதாரணமாக, விஸ்வானந்ததேவன் (தமிழீழ மக்கள் விடுதலை முன்னணித் தலைமை உறுப்பினர்) மரணந் தொடர்பான வரிகள் (ப. 150) விடுதலைப் புலிகள் அவரைக் கொன்றனர் என்று வாசகர்கள் கருதுமாறு எழுதப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் மீது ஐயம் இருப்பது ஒரு விஷயம். அதை உறுதிப்படுத்தாமல் அவர்கள்மீது குற்றஞ்சுமத்தும் வகையில் எழுதுவது இன்னொன்று. இது தவறானதும் மிகுந்த கவனயீனத்தின் விளைவானதுமாகும். குறிப்பிட்ட ஒரு இயக்கம் சில கொடுமைகளை இழைக்கத் தயங்காதது என்ற பரவலான அபிப்பிராயத்தைப் பயன்படுத்திப் பிற போட்டி இயக்கங்கள் மட்டுமன்றி அரச படைகளும் அந்நியப் படைகளும் அந்த இயக்கத்தின் மீது சந்தேகம் விழுமாறு சில காரியங்களைத் தாமே செய்யவோ செய்விக்கவோ கூடும் என்ற சாத்தியப்பாடு சில அண்மைக்கால நிகழ்ச்சிகளில் உறுதிப்பட்டுள்ளது. இது பற்றிய போதிய கணிப்பீடு இந்த நூலில் இல்லை. இந்திய 'அமைதி காக்கும்' படையின் தவறுகள் சிலவற்றை ஓரளவு அநுதாபத்துடனேயே நோக்கும் ஆசிரியர்களின் அநுதாபமான விளக்கங்களுக்கு மற்றவர்கட்கும் சிறிது அருகதை உண்டு என்றே நினைக்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



இவ்வகையில் நூலில் இடையிடையே ஏற்பட்ட நடுநிலைப் பிறழ்வுகளும் எளிதாகத் தவிர்த்திருக்கக் கூடியதே.

இந்த நூலை வாசித்து முடித்த பின்னர் என் மனதில் எழுந்த கேள்விகள் பல. இந்த நூல் அந்தத் திசைகளிற் கவனஞ் செலுத்தாமைக்கு நூலின் நோக்கம் அவற்றை உள்ளடக்கவில்லை என்பது காரணமாக இருக்கலாம். அதனால் இக் கேள்விகளின் முக்கியத்துவம் குறைந்துவிடாது. இந்தியப் படையினர் மிகவும் யோக்கியமானவர்களாக இருந்து தமிழ் மக்களின் உணர்வுகளை மதித்து நடந்திருந்தால் இலங்கை - இந்திய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல் சாத்தியமாகியிருக்குமா? அவ்வாறு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பின் இந்தியப் படைகள் தொடர்ந்தும் வடக்கு - கிழக்கில் தம் இருப்பைத் தொடர விரும்பின், அதைத் தமிழர் வரவேற்றிருப்பார்களா? அப்போது தமிழர் அதை வரவேற்பது நியாயமானதா?

லெபனானில் கிறிஸ்த்வர்களைக் காக்கப் புகுந்த சிரிய ராணுவமும், தென் லெபனானில் ஷியர் முஸ்லிம்களின் பரவலான வரவேற்பைப் பெற்ற இஸ்ரேலிய ராணுவமும், வட அயர்லாந்தில் கத்தோலிக்கரைக் காக்கப் புகுந்த பிரித்தானிய ராணுவமும் அதே மக்களது எதிர்ப்பை எவ்வாறு சம்பாதித்தன? இந்திய ராணுவம் இந்த அநுபவத்திற்கு விலக்காக அமைந்திருக்க முடியுமா? விடுதலைப் புலிகள் யூ.என்.பி. அரசுடன் சேர்ந்து இந்திய அரசை மட்டுமன்றிப் பிற தமிழ் இயக்கங்களையும் எதிர்த்து மோதினர். அது போன்ற குற்றத்தை இன்று ஈ.பி.ஆர்.எல்.எஃப்., போன்ற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் செய்ய முனையவில்லையா? இது எவ்வாறு இயலுமாயிற்று? இவ்வாறான தவறுகள் உலகின் பிறநாடுகளின் விடுதலைப் போர்களில் நிகழ்ந்துள்ளன, தவிர்க்கப்பட்டுமுள்ளன. அவற்றினின்று நாம் கற்கவேண்டிய பாடமென்ன? விடுதலைப் புலிகள் செய்த பலவேறு தவறுகளை 1989இல் ஈ பி.ஆர்.எல் எஃப் மாகாண அதிகாரம் செய்ததற்கு விளக்கமென்ன?

இலங்கை-இந்திய உடன்படிக்கை பற்றிய ஆராய்வு இல்லாது அதன் உள் நோக்கம் பற்றிய தெளிவுபடுத்தல் இல்லாது இந் நூல் எழுதப் பட்டதாலேயே பல இடங்களில் ஆசிரியர்கள் 'மரங்களைக் காண்கிறார்கள் ஆனால் வனத்தைக் தவறவிட்டு விடுகிறார்கள்'. இந்திய ராணுவத்தை இடறவைக்க விடுதலைப் புலிகள் விரித்த சூழ்ச்சிவலைகட்கும் அமைத்த அரசியற் பொறிகட்கும் தோற்றுவாய் இந்திய அரசின் ஆக்கிரமிப்பு நோக்கமே. ஒரு பலமான



இராணுவத்தை எதிர்க்கும் ஒரு இயக்கம் எந்த வகையான 'விளையாட்டு விதிகளைக்' கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கு நாம் முதலாளித்துவ ஜனநாயகப் பண்பாட்டின் ஒழுக்கநெறிகளை ஆதாரமாகக் கொள்ளமுடியுமா? இந்த நெறிகளைப் போதிக்கும் கண்ணியவான்கள் தாம் நெருக்கடிகளில் மாட்டிக் கொள்ளும்போது இதே நெறிகளைத் தூர எறியத் தயங்குவதில்லையா? ஜே.வி பி. மீதும் தமிழ் விடுதலை இயக்கங்கள் மீதும் பயங்கரவாதக் குற்றஞ் சுமத்தும் எவரும் யூ.என்.பி யின் பேரினவாத அடக்குமுறை அரசு பயங்கரவாதத்தை எதிர்க்கவே இவ்வியக்கங்கள் தமக்கு அகப்பட்ட அஸ்திரங்களைப் பயன்படுத்தின என்பதையும் மறக்கக்கூடாது.

ஜே.வி.பி.யும் விடுதலைப் புலிகளும் தமது குறுகிய அரசியற் பார்வையின் விளைவாக நண்பர்களையும் எதிரிகளையும் குழப்பிக் கொண்டனர். அரசியலை ஆயுதங்கட்குக் கீழ்ப்படுத்தினர். இரகசியமான வேலைமுறைகள் என்ற பேரில், மக்கள் அரசியலினின்று இவர்களால் ஒதுக்கப்பட்டனர். இருப்பினும், இந்தியாபற்றி இந்த இயக்கங்கள். தவறான நோக்கங்கட்காகவேனுஞ் சரியான நிலைப்பாட்டையே மேற்கொண்டன. அவர்களை அவர்களது தவறுகட்காக விமர்சிக்கவும், மக்கள் விரோதச் செயல்கட்காகத் கண்டிக்கவும் நாம் தயங்கலாகாது எனினும், பிரதான எதிரி யார் என்பதை மறந்து விமர்சனங்களையும் கண்டனங்களையும் முன்வைப்பது ஆபத்தானது. இந்த நூல் யூ என்.பி. அரசையும், அதைவிட முக்கியமாக, இந்தியா என்ற பிராந்திய வல்லரசையும் பற்றிக் கூடிய கவனங் காட்டியிருக்க வேண்டும்.

இந்திய, இலங்கை அரசுகள் விடுதலை இயக்கங்களை நிராயுதபாணிகள் ஆக்குவதிற் காட்டிய அக்கறையை அரச பயங்கரவாதம் பற்றிக் காட்டாதது ஏன்? இந்தியாவின் நலன்களைப் பேணுமாறு, ஆயினும் உடன்படிக்கையில் எழுதப்படாதது ஒத்துக் கொள்ளப்பட்ட விஷயங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்த இந்திய அரசு ஏன் மாகாண சபைகட்கு முழுமையான அதிகாரம் வழங்குவதுபற்றிக் கவலை காட்டவில்லை? விடுதலைப் புலிகளை ஒடுக்கும் காரியத்தில் மட்டுமே இரு அரசுகளும் முனைப்புடன் செயற்பட்டன. தென்னிலங்கையில் ஏற்பட்ட புதிய அரசியல் நெருக்கடியின் விளைவாகவே இந்திய வெளியேற்றம் பற்றி யூ. என். பி அரசு தன் நிலைப்பாட்டை மாற்ற நேர்ந்தது. இது தனிநபர்கள் தொடர்பான ஒரு விஷயமல்ல இவை போன்ற பிரச்சனைகள் பற்றியும் நூலிற் கூடிய கவனங் காட்டியிருக்கலாம்.

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



எவ்வாறாயினும், மக்களிடமிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டதாலேயே விடுதலை இயக்கங்கள் பல தவறுகளைச் செய்தன என்ற உண்மை இந்த நூலில் மிகவும் தெளிவாகவே சொல்லப்பட்டுள்ளது. ஒரு தேசிய விடுதலைப் போராட்டமும், சில விடுதலை இயக்கங்களும், பல போராளிகளும் எவ்வாறு சீரழிந்து, ஒரு தேசிய இனமும் ஒரு முழு நாடும் மனித உறவுகளும் எவ்வாறு சீரழிய நேர்ந்தது என்ற கதையை நேர்மையுடனும் துணிவுடனும் சொல்லும் இந்த நூலைத் திறந்த மனத்துடன் ஒவ்வொரு தமிழரும் வாசிக்க வேண்டும் இந்த நூல் எழுப்பும் நியாயமான கேள்விகட்கு நாம் தேடும் பதில்களினூடே நமது விடுதலைக்கும் விமோசனத்துக்குமான பாதையை நாம் கண்டறிய முடியும்.

பனிமலர்-3, லண்டன், 1991 ஜூலை

# ஆசிரியரின் பிற நூல்கள்

## ஏகலைவ பூமி

பதிப்பு : மார்ச் 1995.

இத்தொகுதியில் கவிதைகளில் இசைக்கப்படக்கூடிய மூன்று உள்ளன. இன்னுமொன்று சீரான மரபு சார்ந்த சந்த வடிவிலானது மற்றையவை வடிவில் மரபுடன் எளிதாக உறவு காட்ட முடியாதவை. பெண்கள் நிலை தொடர்பான கவிதைகள் புவனம் என்ற புனைபேரில்(கனடா) தாயகத்தில் வெளியானவை. அந்தப் பேர் என் அம்மாவுடையது. பெண்கள் நிலை பற்றிய கவிதைகட்கு அந்தப் புனை பேரின் தெரிவு பலவழிகளிலும் பொருத்தமானதுதான். இக்கவிதைகளுட் சர்வதேச நிலவரங்கள் தொடர்பானவை சில (நோர்வே) சுவடுகளிற் பிரசுரமானவை. இம்முறை காதற் கவிதை ஒன்றும் உள்ளது. இரண்டு வருடம் முன்பு பாரிஸிலிருந்து வந்த பாரிஸ் முரசு வார ஏட்டில் பிரசுரமான ஒரு கவிதையும் (ஒல்லாந்து) அ.ஆ.இ.வில் வந்த ஒன்றும் இங்கு உள்ளன. நான் விரும்பியதை விடக் குறைவாகவே தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகத்தில் எழுத முடிந்தது. இத் தொகுதியின் இரண்டு கவிதைகளை மட்டுமே அதிற் பிரசுரமாயின.

— சிவசேகரம்

## நதிக்கரை மூங்கில்

இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 1995

கவிஞர் சிவசேகரத்தின் முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். அதன் நயப்புக் கருதி மீண்டும் இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது.

படிப்பகம்

புது வரலாறும் நாமே படைப்போம். இசைப்பா அரங்கின் ஒலிப்பேழை வெளியீட்டில் இசையமைப்பாளர் கண்ணனின் இசை மெட்டில் சித்திரையில் மாவலி, மாவலியின் மார்கழியில், ஓரிரவு, ஹிற்லர் டயறிகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

'பாட்டன் பரம்பரை' என்ற கவிதை, கவி உரை வீச்சு—இசைப்பா—அரங்க நிகழ்வு ஆக முப்பரிமாணப் பரிசோதனை நிகழ்வாக காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் அரங்கேறியது.

## செப்பனிட்ட படிமங்கள்

பதிப்பு : பெப்ரவரி 1988.

கவிஞர் சிவசேகரத்தின் இரண்டாவது கவிதைத் தொகுதி இது. இவர் தனது கவிதைகளைப் பற்றி முன்னுரையில் பேசுவதுதான் என்ன? கேட்போமா?

என் கவிதைகள், அடிப்படையில், தேடல் முயற்சிகளே. என்னையும் என் சூழலையும் அறியும் தேவையின் காரணமாக மேற்கொள்ளப்படும் தேடலில் மனதில் இடறும் எண்ணங்களே கவிதை வடிவம் பெறுகின்றன. புதிர் போடுவதோ படிப்பவர்களைக் குழப்புவதோ என் நோக்கமில்லை. சில சமயங்களில் சில நிகழ்வுகள் என் மனதில் ஏற்படுத்தும் பாதிப்புக்களைப் பட்டும் படாது கூறிவிட்டு மிகுதியை வாசிப்பவரின் பொறுப்பில் விட்டு விடுகிறேன்.

## தேவி எழுந்தாள்

பதிப்பு : நவம்பர் 1991.

இதில் உள்ள கவிதைகளில் பெருவாரியானவை தாயகம், புதிய பூமியிலும் ஏனையவை ஒல்லாந்து — அ. ஆ. இ, ஜெர்மனி—தூண்டில், புதுமை, பிரான்ஸ் — ஓசை, சுவிஸ்—மனிதம், நேர்ர்வை— சுவடுகள், சக்தி, இங்கிலாந்து — பனிமலர் ஆகிய ஏடுகளிலும் வெளிவந்தவையாகும்.

சாதிவெறி, இனவெறி, அமைதி காக்கும் வெறி, அரசியல் வெறி ஆகியவற்றின் அனர்த்தங்களைச் சாடும் இவரது கவிதைகள், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டங்களைப் பற்றியும், தியாகிகளைப் பற்றியும் பாடுகின்றன.

## பணிதல் மறந்தவர்

ஒடுக்கு முறைக்கு எதிரான
மூன்றாம் உலகக் கவிதைகள்

பதிப்பு : ஓகஸ்ற் 1993.

இத் தொகுதியில் உள்ள பெருவாரியான கவிதைகள் இன ஒடுக்கலுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலுக்கும் — ஒடுக்குதலுக்கும் உட்பட்ட எந்தச் சமுதாயத்தினரும் எளிதாக உறவு கொள்ளக் கூடியவையாகும்.

நாட்டுக்குழைத்திடவும், நலம் ஓங்கிடுமாறு வருந்திடவும் 'போரிட நின்றிடும்போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞான'த்தைக் கண்டிடவும் பயன்படதக்க வகையில் பல்நாட்டுக் கவிஞர்களின் வாழும் கவிதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மனித வரலாற்றில் 'பணிதல் மறந்தவர்' பலரது வாழ்வுப் பணிகளே மாற்றுப் பண்பாட்டு நெறிகளாக மாறி வருகின்றன.

## தமிழும் அயலும்

பதிப்பு : ஜூன் 1993.

சமூக வளர்ச்சி எப்படி பல்வேறு காலகட்டங்களிலும் பரிணாமம் பெற்று மாற்றமடைந்து வளர்ந்து வந்திருக்கிறதோ அதே போலவே மொழியும் நீண்ட வரலாற்றுக் கால கட்டங்களில் சமூக மாற்றம் — சமூகத் தேவைக்கு ஏற்ப பல்வேறு மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வந்திருக்கிறது.

மொழி அதன் தேவைக்கேற்ப மாற்றங்களை ஏற்பது மொழியின் வளர்ச்சிக்கும் அந்த மொழியைப் பேசுகின்ற சமூகத்தின் வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.

இன்று உலகின் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களின் தொடர்புகளும் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு அதிகரித்து வருகின்றது. தமிழர்கள் பல நாடுகளுக்கும் சென்று குடியேறி வாழ்தலுடன் தொடர்பான சமூக மாற்றங்களைக் கிரகித்து வெளிப்படுத்த வேண்டிய தேவையும் தமிழ் மொழிக்குண்டு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மரபும் மாக்ஸியவாதிகளும்

பதிப்பு : ஓகஸ்ற் 1989

நமது சமுதாய சீரழிவின் விளைவாக, போலித்தனமான புத்திஜீவி மனோபாவம் நமது மத்தியதர வர்க்கத்தினர் நடுவே மலிந்துள்ளதால் மாக்ஸியம் பற்றி ஆறாவது குருட னுடைய வர்ணனைகளை நாம் அடிக்கடி கேட்க நேருகிறது. சில வேளைகளில் அதற்குப் பதிலளிக்க வேண்டிய தேவை நமக்கு ஏற்படுகிறது. மாக்ஸியம் பற்றிய எல்லாப் பொய்ப் பிரச்சாரங்கட்கும் பதில் எழுதிக் கொண்டிருக்க நமக்கு அவகாசமில்லை. ஆயினும் சில முக்கியமான விஷயங்களைப் பற்றி மாக்ஸியத்தின் நிலைப்பாட்டை விளக்குவது அவசிய மாகிறது.

இக்கட்டுரைகள் மாக்ஸியத்தின் மீது சேறு வீசும் முயற்சிகளை முறியடிக்க ஒரு சிறுபங்கையெனும் அளிக்கும்.

படிப்பகம்

விமர்சனப்பணியில் முன்னணியில் நிற்கும் வெகுசிலரில் சிவசேகரமும் ஒருவர். அவரது *விமர்சனங்களில் நாம் பல படைப்பாளரின் படைப்புக்களை படிக்கலாம். விவாதிக்கலாம். இதுவே சிவசேகரம் அவர்களின் முதலாவது விமர்சன நூலாகும்.

மரணத்துள் வாழ்வோம், அது அவர்கள், மரண நனவுகள், எலும்புக்கூடுகளின் ஊர்வலம், சிவரமணியின் கவிதைகள், மறையாத மறுபாதி, முகம்கொள், காகம் கலைத்த கனவு, உலா, அமைப்பியல்வாதமும் தமிழ் இலக்கியமும் யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல், தீபங்கள் எரிகின்றன, முறிந்த பனை ஆகிய நூல்கள் விவாதத்துக்குளுள்ளாகின்றன.

தர்மு சிவராமு, டானியல், சுந்தரராமசாமி, காசி ஆனந்தன் ஆகியோரது படைப்புகள் பற்றிப் பேசப்படுகின்றன.

இருத்தலியல்வாதம் பற்றிய சண்டை நடக்கிறது. சேரன், எஸ். வி. ராஜதுரை, செல்வி. திருச்சந்திரன் ஆகியோரின் பதிற்குறிப்புகளும் உள்ளடக்கப் பட்டுள்ளன.

தேசிய கலை இலக்கிய பேரவை

சவுத் ஏசியன் புக்ஸ்